ஸ்ரீவில்லிபுத்தூர்

ஆசிரியர் :

இரா. இரகுநாதன்

பதிப்பாசிரியர் :

முனைவர் சீதாராம் குருமூர்த்தி இஆப.,

முதன்மை ஆணையர்

வெளியீடு:

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008

2008

BIBLIOGRAPHICAL DATA

Title	:	SRI VILLIPUTHUR
Author	:	R. Raghunathan
Copy right	:	T.N. State Dept. of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No	:	195
No. of Pages	:	viii + 128
Type Point	:	11 pt
Paper used	:	80 GSM Maplitho
Typesetter	:	**Pavai Printers (P) Ltd.,** #6 (142), Jani Jan Khan Road, Royapettah, Chennai - 600 014. Ph: 28482441, 28482973
Printer	:	**TAMCOS** Royapettah, Chennai - 600 014.
Publisher	:	**State Dept. of Archaeology** Tamil Valarchi Valaagam Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	**Rs. 110/-**

பதிப்புரை

ஒரு நாட்டின் நாகரிகம், பண்பாடு, கலை, மொழி என இவற்றைத் தொகுத்துப் பார்ப்பது வரலாறு. நேற்று வரை வாழ்ந்த மக்கள் திறத்தை அறிந்து, மேம்பாடு செய்து நாளைய வாழ்க்கையைத் தொடர நமக்கு வழிகாட்டியாய் அமைவது வரலாறு. எனவே இந்த வரலாறு இளைய தலைமுறைகள் மூலம் காப்பாற்றப்பட்டு எதிர்காலத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்ற சீரிய நோக்கில் தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை பல சிறப்பான பணிகளை ஆற்றி வருகின்றது. கல்வெட்டு, தொல்லியல், நினைவுச் சின்னங்கள் பாதுகாப்பு, பண்டையப் பொருட்கள் பாதுகாப்பு எனப் பல்வேறு பணிகள் செய்வதோடு முதுகலைப் பட்டம் பெற்ற மாணவர்கட்கு ஓராண்டு கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் முதுநிலைப் பட்டயப் பயிற்சியினையும் அளித்து வருகிறது. அம்மாணவர்கள் தம் பயிற்சியின் இறுதியில் ஒரு கோயிலைப் பற்றி ஆய்வு செய்து ஆய்வேடு சமர்ப்பித்தல் வேண்டும். பொதுவான செய்திகளைத் தொகுத்தளிக்கும் ஆய்வேடாக இல்லாமல் வரலாற்றுக்கு உறுதுணையாயுள்ள அடிப்படைத் தரவுகளான கல்வெட்டு, கட்டடக்கலை, சிற்பக்கலை, காசுகள், தொல்பொருட்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில் ஒன்றினை ஆய்வு செய்து ஆய்வேடு சமர்ப்பிக்கப்படுகின்றன. துறை அவற்றை நூலாக்கம் செய்து வெளியிடும் பணி யினைத் தொடர்ந்து செய்து வருகின்றது. இவை வரலாற்று ஆய்வு மாணவர்களுக்கு அடிப்படைத் தரவுகளையும், வரலாற்று அறிஞர்க்குச் சிறந்த சான்றுகளையும், பொதுமக்களுக்கு பல புதிய செய்திகளையும் தருகின்றன.

அவ்வகையில் ''ஸ்ரீவில்லிபுத்தூர்'' கோயில் வரலாற்று நூல் இப்போது வெளியிடப்படுகிறது. ஏராளமான வரலாற்றுச் செய்திகளை மிகச் சிறப்பாக தொகுத்து அருமையாகத் தந்துள்ள திரு. இரா. இரகுநாதன் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர். அனைத்துச் செய்திகளையும் சிறப்பாக தொகுத்துள்ளார். அவருக்கு என் வாழ்த்துகள்.

விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும் என்று அறிந்து நூலைச் சிறப்பாகச் செப்பம் செய்து நூலாக்கத்திற்கான அனைத்துப் பணிகளையும் செய்த கல்வெட்டாய்வாளர் அர. வசந்தகல்யாணி அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

நூலுக்கான அழகிய படங்களையும், அட்டைப்படங்களையும் வடிவமைத்த நிழற்படமெடுப்பவர் திரு. மு.த. ஸ்ரீதரன் அவர்களுக்கு என் வாழ்த்துகள்.

இந்நூலினை ஆய்வு மாணாக்கர் முதல் ஆன்மீகவாதிகள் வரை அனைவரும் படித்துத் தமிழக வரலாற்றின் வளந்துய்க்க வேண்டும் என்பதே என் அவா.

சென்னை - 8
10-01-2008

சீதாராம் குருமூர்த்தி
முதன்மை ஆணையர்

முன்னுரை

வரலாறு, சமயம், சமுதாயம், பண்பாடு ஆகிய எல்லாவற்றிலும் செழிப்புற்றுக் காலங்காலமாக வளர்ந்துவரும் ஊர் ஸ்ரீவில்லிபுத்தூர் என அழைக்கப்படும் திருவில்லி புத்தூர் ஆகும். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து இராமநாதபுரத்திற்கு மாறித் தற்போது விருதுநகர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஊர்.

இவ்வூர் பெரியாழ்வார் வாழ்ந்த ஊர். கோதை பிறந்த ஊர். சங்க காலத்தில் மல்லி நாட்டின் ஒரு பகுதியாக இருந்த இவ்வூர், புதியதாகக் குடியிருப்புகள் எழுந்தவுடன், புத்தூர் எனப் பெயர் பெற்று வளர்ந்து உள்ள ஊர்.

அருள்மிகு வடபத்ர சயனர் திருக்கோயிலின் இராஜகோபுரமே தமிழ்நாடு அரசின் அரசு இலச்சினையில் பதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது பெருமைக்குரிய ஒன்றாகும். மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்திற்கு அருகில் அமைந்து எத்தனையோ மகான்கள் வந்து கால் பதித்த ஊர்.

தொல்லியல் துறையின் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் முதுநிலைப் பட்டயப் படிப்புக்காக 1978-79-ஆம் ஆண்டுகளில் கையெழுத்துப் பிரதியாகச் சமர்ப்பிக்கப் பட்ட தேர்வுத்தாள் தற்போது சேர்க்க வேண்டியவை சேர்த்தும், நீக்க வேண்டியவை நீக்கியும் திருத்தம் பெற்றுப் புத்தகமாக அச்சில் வெளிவருகிறது.

தமிழ்நாடு தேர்வாணையக் குழுவின் மூலம் நிர்வாக அதிகாரி பணிக்கு விண்ணப் பித்தபோது, எனது பணி நியமனத்திற்குத் தொல்லியல் துறை பட்டயம் மற்றும் பயிற்சி துணை நின்றது. அதே பயிற்சி திருக்கோயில்கள் பற்றிய விளக்கங்கள் கூறும்போது தற்போது கூடத் துணைபுரிவது கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயின்ற பாடங்களும் கற்ற கல்வியும் ஆகும் என்றால் அது மிகையில்லை.

இந்த நூலின் கையெழுத்துப் பிரதி எழுதும்போது 94 கல்வெட்டுகளில் ஒன்று மட்டுமே வெளியிடப்பட்டிருந்தது. மற்ற அனைத்தும் குறிப்புகளே ஆகும். இக்கோயிற் கல்வெட்டுகள் அனைத்துமே நேரில் படிக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டவையாகும்.

இப்புத்தகத்தினை வெளியிடும் தொல்லியல் துறையின் முதன்மை ஆணையர் முனைவர் சீதாராம் குருமூர்த்தி இ.ஆ.ப. அவர்களுக்கு நான் என்றென்றும் நன்றியுடைய வனாவேன்.

கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் பயின்றபொழுது எனக்கு வழிகாட்டிய ஆசான்களுக்கும், கற்க உதவிய அதன் இயக்குநர் முதல் இறுதி ஊழியர் வரை,

பலவிதங்களில் எனக்கு உதவி இருக்கின்றனர். நூல் தொகுக்கும்போது களப்பணியில் தகவல் தெரிவித்த ஊரார், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் முகம் தெரிந்த தெரியாத பலருக்கும் இவ்விடத்தில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறையின் மூலம் என்னால் என் தேர்வுக்காகத் தொகுத்து எழுதிச் சமர்ப்பிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதியினைச் சிறப்பான முறையில் தொகுத்துச் செப்பம் செய்து நூல் வடிவில் கொணர்வதற்கு அனைத்து பணிகளையும் செய்த முனைவர் சு. இராசகோபால் பதிவு அலுவலர், திருமதி அர. வசந்த கல்யாணி சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர் ஆகியோருக்கு எனது நன்றியினை உரித்தாக்கு கிறேன். நூலின் அட்டைப்படம் மற்றும் நிழற்படங்களை வடிவமைத்தளித்த திரு. மு.த. ஸ்ரீதரன் நிழற்படக்காரர் அவர்களுக்கும் என் நன்றி.

இரா. இரகுநாதன்
செயல் அலுவலர்
அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில்
பெசன்ட் நகர், சென்னை - 90.

உள்ளே ....

		பக்கம்
	பதிப்புரை	iii
	முன்னுரை	v
1.	ஸ்ரீவில்லிபுத்தூர் - ஓர் அறிமுகம்	1
2.	கல்வெட்டும் வரலாறும்	7
3.	ஊரும் கோயிலும்	12
4.	அரசியல் வரலாறு	21
5.	கொடைகள்	25
6.	விழாக்கள்	34
7.	கவின்மிகு கலைகள்	47
	அ. சிற்பக்கலை	
	ஆ. செப்புத் திருமேனிகள்	
	இ. கட்டடக்கலை	
	ஈ. ஓவியக்கலை	
8.	அரையர் சேவை	85
9.	கிளிக்கட்டு	93
10.	விஷ்ணுசித்தர்	95
11.	சூடிக்கொடுத்த சுடர்க்கொடி	100
12.	கல்வெட்டு வாசகங்கள்	106
	அ. கல்வெட்டுகள்	
	ஆ. நாட்டுப்புறப் பாடல்கள்	
13.	துணைநூற் பட்டியல்	124

1. ஸ்ரீவில்லிபுத்தூர் - அறிமுகம்

இன்றைக்கு சுமார் 2000 ஆண்டுக்கால வரலாற்றைத் தன்னகத்தேயழுத்திக் கொண்டு, மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் அமைந்திருக்கும் ஊராக இலங்குகின்றது. பூகோளப் படம் இதன் இடத்தை வடக்கு அட்ச ரேகை 9' 30° யிலும் கிழக்கு ரேகை 77' 31° என்றும் குறிப்பதைக் காண்கிறோம். மதுரையிலிருந்து இராஜபாளையம் செல்லும் பாதையில் சுமார் 75 கி.மீ. தொலைவில் ஒரு வட்டத்தின் தலைமையகமாய் இராமநாதபுரத்தினைச் சார்ந்த ஓர் ஊராக வைணவத் திருத்தலங்களில் நூற்றெட்டு திவ்வியதேசங்களில் ஒன்றாக ஸ்ரீவில்லிபுத்தூர் அமைந்துள்ளது.

இது விஷ்ணுசித்தன் என்றழைக்கப்பட்ட பெரியாழ்வாரைப் பெற்ற தலம். மல்லி நாடாண்ட மடமயிலாம் கோதையினைத் தமிழிற்கு, தமிழகத்திற்கு, வைணவத்திற்கு ஈந்த ஊர். சைவத் திருமடங்களுள் ஒன்றாக விளங்கும் தருமபுர ஆதீனத் தோற்றகர்த்தா குருஞானசம்பந்தரைப் பெற்ற ஊர். 'மாபாரதம்' தமிழ்ப்படுத்திய வில்லிபுத்தூராரின் உண்மைப் பெயர் தெரியாத அளவிற்கு ஒன்றவைத்தவூர். நாயக்க வம்ச நடுவரசன் திருமலை நாயக்கரின் திருக்கரத்தினால் பல திருப்பணிகளைப் பெற்ற ஊர். சங்க காலம் முதல் இன்று வரை தரமான இலக்கியப் பாடல்களைப் பெற்ற ஊர். கோச்சடையன் மாறன் என்று அழைக்கப்படும் 10ஆம் நூற்றாண்டு பாண்டியன் இராஜசிம்மன் முதல் தொடர்ந்தும், இடைவிட்டும் பல மன்னர்களின் கல்வெட்டுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள ஊர்.

கலை, அரசியல், வரலாறு, சமயம் எனப் பல பரிமாணங்களைத் தன்னகத்தே கொண்டு திகழும் ஸ்ரீவில்லிபுத்தூரைப் பற்றிய செய்திகளைப் பின்வரும் பகுதிகள் ஆய்வு நோக்கிலும், வரலாற்றுப் பின்புலத்திலும் ஆய்கின்றன.

1. பெருங்கற் சின்னங்கள்

பலவகை ஈமச்சின்னங்களில் ஸ்ரீவில்லிபுத்தூரினின்றும் மதுரைக்கு வரும் பாதையில் சிறிது தூரத்தில் சுமார் 1 கி.மீ. தொலைவில் "வடமலைக் குறிச்சி கண்மாய்" என்பது உள்ளது. அந்தக் கண்மாய் தாண்டிய சிறிது தூரத்தில் இந்தக் கற்கிடைகளும் முதுமக்கள் தாழியாகிய ஈமச்சின்னங்களும் உள்ளன.இவை மதுரை செல்லும் முதன்மைச் சாலையின் இருபுறமும் காணப்படுகின்றன.

முதுமக்கள் சாடிகளைப் பொறுத்தவரை பல சாடிகள் பூமிக்கு மேற்பகுதியிலேயே தெரிகின்றன. உடைந்த பல துண்டுகள் மேற்பகுதியில் காணப்படுகின்றன. கற்கிடைகள் பல ஒரே வட்டமாகக் காணப்படாமல் கலைந்து காணப்படுகின்றன. இவை மலையடி வாரத்திலிருந்து தார்ச்சாலை வரை சுமார் ஒரு 1.5 கி.மீ. தொலைவிற்கு விரிந்து காணப்பட்டாலும் பல கற்கிடைகள் சிதைக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

இங்கு சேகரிக்கப்பட்ட பல பொருட்களில் சில வகைகள் மட்டும் குறிப்பிடும்படி உள்ளன. தாழியின் மேலோடு சுமார் 1.5 செ.மீ. திண்ணம் உள்ளது. இவற்றின் கழுத்துப் பகுதியில் தாழி செய்து ஈரமாக இருக்கும்போதே கைகளினால் அழுத்தித் தங்கள் விரல்களின் பதிவுகளை வரிசையாக வைத்து உள்ளனர். மேலும், கருப்பு சிவப்பும் பளபளப்புத் தன்மையும் உள்ள மெலிதான பானை ஓடுகள் கருப்பான சில பானை ஓடுகள், காணப்படுகின்றன. விளிம்பு மேலும் சற்றுத் தடிப்பாக உள்ள தாழியின் மேற்பகுதி தந்த ஊசி ஆகிய பொருட்களும் கிடைத்து உள்ளன. இந்த ஈமச் சின்னங்கள் காலப் பகுப்பில் கற்காலம் முடிந்து உலோக காலம் துவங்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை. தமிழகத்தில் கி.மு.800 முதல் கி.பி. 100 முடிய உள்ள காலத்தில் இவ்வகை ஈமச் சின்னங்கள் இருப்பதாய்க் கணிக்கப்பட்டுள்ளது.

2. நரிப்பாறை (சமணர் படுக்கைகள்)

ஸ்ரீவில்லிபுத்தூர் சமய வரலாற்றுக்கு அணி சேர்க்கும் வகையில், சமண சமயத்தினர் கால்கொண்டதற்கு அடையாளமாக நிற்குமிடம் இந்த நரிப்பாறை ஆகும். இது ஸ்ரீவில்லிபுத்தூரின் மேற்கே மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் திருவண்ணா மலைக்கு அருகில் ஊரிலிருந்து ஒரு 1/2 கி.மீ. தொலைவில் உள்ளது. இதற்கு ஏன் "நரிப்பாறை" என்ற பெயர் வந்தது என்பது தெரியவில்லை.

இச்சிறுகுன்றின் மேற்குப்புறம் வடக்கிலிருந்து தெற்காக மூன்று குகைகள் உள்ளன. இவை தொடர்ந்து ஒன்றுடன் ஒன்று இணைந்தன போலவே உள்ளன. மேலே கவிழ்ந்து உள்ள பாறைகளுக்கும் கீழே உள்ள பாறைகளுக்கும் நடுவில் சந்து போன்ற பாறைப்பகுதிகள் காணப்படுகின்றது. இவை திருப்பரங்குன்றம், புகளூர் ஆகிய இடங்களில் உள்ள பாறையின் உயரங்களைப் போலவே உள்ளன.[1]

நடுக் குகையின் வெளிப்புறம் சற்று உயரமாகவே உள்ளது. உள்ளே போகப்போக சிப்பி ஒன்று கவிழ்க்கப்பட்டதுபோல குழிந்து செல்லுகின்றது. இங்கு சமணப் படுக்கைகள் இருந்து அவை சிதைக்கப்பட்டுள்ளன. ஒரு சிறு சலதாரை போன்ற அமைப்பின் மூலம், உள்ளே வரும் கசிவுகளை வெளியேற்ற, சிறிய கால்வாய் வெட்டப்பட்டு உள்ளது. இங்கு இராமானுஜர் சிலை ஒன்றும், சில நாகங்களும் உள்ளன.

வடபுற மூன்றாவது குகை குறிப்பிடத் தக்க தன்மைகள் இல்லாமல் சாதாரணமாக உள்ளது. இவ்விடத்தில் மூன்று படுக்கைக்கள் காணப்படுகின்றன . படுக்கை 148 செ.மீ உயரமும் 38 செ.மீ. அகலமும் உடையது. தலைப்பகுதி தலையணை போல் சற்று மேடாக ஆக்கப்பட்டுள்ளது.

இவற்றில் கல்வெட்டுகள் ஏதும் காணப்படவில்லை. கல்வெட்டு எதுவும் இல்லாத இதனைப் போன்ற சமணப் படுக்கைகள் தமிழ்நாட்டின் சங்கரன் கோயில், சுக்காலியூர், கீழக்குயில்குடி, சங்கரமலை, சென்னாக்குன்று இராமநாதபுரத்துத் திருமலை தாயமங்கலம் முதலான பல இடங்களில் காணப்படுகின்றன.

"நரி" என்னும் சொல்லே சமணர்களுடன் தொடர்புடையது. சீவகசிந்தாமணி பாடிய சமணர் திருத்தக்கதேவர் நரிவிருத்தம் என்ற நூல் ஒன்று பாடியுள்ளார். இந்நரி சமணருடன் தொடர்புடையது என்று மட்டும் உணர முடிகிறது. சங்க காலத்து நரி வெருவுத் தலையாரையும் சமணர் என்பர்.

ஆக சமணருடன் உள்ள தொடர்பால் இப்பாறை நரிப்பாறை என்று அழைக்கப் பட்டதில் வியப்பு ஒன்றுமில்லை.

திருப்பரங்குன்றம் போன்ற பகுதிகளில் கல்வெட்டுடன் கூடிய 'சமணர் படுக்கை கள்' காணைக் கிடக்கின்றன. இவை கி.மு. 200–300 ஆண்டுகட்கு முற்பட்டவை என்பர். எனவே. நரிப்பாறைப் படுக்கைகளும் கி.மு. 2, 3-ஆம் நூற்றாண்டு எனக் கருதலாம்.

3. கோயில்கள் :

கோயில்களைப் பொறுத்தவரை இவ்வூரில் குறிப்பிடத்தக்க, வரலாற்றுச் சிறப்பு, சிற்பக் கலையும் விழாக்களும் மலிந்த கோயில்கள் நான்காகும். அவை

1) பெருமாள் கோயில் என்னும் வடபத்ரசாயி கோயில் என்றும் வழங்கப்படும் வடபெருங்கோயில், 2) ஆண்டாள் என்றும் சூடிக் கொடுத்த நாச்சியார் என்றும் வழங்கும் கோதை கோயில் 3) மடவார்விளாகம் என்றழைக்கப் படும் வைத்தியநாத சுவாமி திருக்கோவில் 4) கிருஷ்ணன் கோயில் என்பவை முக்கியமானவையாகும்.

4. வீதிகள்:

ஸ்ரீவில்லிபுத்தூரின் நகரமைப்பு பெரும்பாலும் பெருமாள் கோயிலையும் ஆண்டாள் கோயிலையும் சுற்றியமைந்த அமைப்பாகவே காணப்படுகிறது. பெருமாள் கோயிலின் முன்னால் கீழ்மாட வீதியும், இடப்புறம் நாச்சியார் சந்நிதித் தெருவும் (இது தெற்கு மாட வீதியாக இருந்திருக்கும்), பின்னால் மேற்குமாட வீதியும், வலப்புறம் கந்தடையார் என்ற வைணவர்கள் அதிகம் வதிந்த வைணவக் கந்தடையார் தெருவும் காணப்படுகின்றன.

ஒரு கல்வெட்டில் (சகம் 1473) "வடபெருங் கோயிலுடையான் மாடத் திருவீதி யிலே வடக்குத் திருவீதியிலே "(570 /1926) என்ற குறிப்பு காணப்படுகிறது. இதிலிருந்து இன்று வடபுறமுள்ள கந்தாடையார் வீதி என்ற பெயர் 16ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என்பது புலனாகிறது.

ஆண்டாள் கோயிலைச் சுற்றிலும் சந்நிதித் தெரு தவிர்த்து மேல், தென், வடக்கு ரத வீதிகள் அமைந்துள்ளன. கீழ், தென், மேல், வடக்கு ரத வீதிகள் என்ற பெயரில் இவ்விரண்டு கோயில்களையும் மேற்கண்ட வீதிகளையும் சுற்றிச் செல்கின்றன. "கீழச் சாத்தாத வீதி" என்னும் சாத்தாணிகளின் வீதி தெற்கு ரத வீதியில் எதிரில் உள்ளது. "மங்கம்மாள் சாலை" என்று வழங்கப்படும் கீழ மாடவீதி சிவன் கோயிலின் முன்னாலே செல்கிறது. இக்கோயிலைச் சுற்றி மாட வீதிகளும் அமைந்துள்ளன. வாழைக் குளத்தெரு

என்பது கல்வெட்டுகளில் வாழைக்குளப்பற்று என்ற பெயரில் வழங்கப்பட்டுள்ளது. (535 /1926)

5. குளங்கள்

ஸ்ரீவில்லிபுத்தூர் மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கு அடிவாரத்தில் உள்ள ஊராகும். அதனால் மழை மறைவுப் பிரதேசமாக உள்ளது. ஆண்டில் சில காலங்கள் வறட்சி நிலவுகிறது. இவ்வறட்சி நிலை நீங்கப் பல குளங்களும் கண்மாய்களும் ஊரைச் சுற்றி அமைந்துள்ளன.

ஊரின் வடகிழக்கில் செங்குளம்[2] அத்திகுளம் செங்குளம்[3] தென்கிழக்கில் ராஜகுள ராயப்பேரி கண்மாய், திருப்பாற்கடல் குளம், தெற்மேற்கில் பெரிய குளம் எனப்படும் கண்மாய், ஆகியவையும் வடமலைக் குறிச்சிக் கண்மாய், மொட்டப்பித்தான் கண்மாய் ஆகியயையும் உள்ளன.

பராங்குசப் பேரேரி : -

இவ்வூரின் கல்வெட்டுகளில் பராங்குசப் பேரேரி என்ற ஏரி ஒன்று குறிக்கப் படுகிறது. (526, 528/ 1926) ஸ்ரீ வில்லிபுத்தூரில் உள்ள பெரிய ஏரிகளில் இதுவே பெரியதும், தொன்மையானது மாகும். இதற்குத் துணைநிற்பது போல இன்றும் இவ்வூரில் பெரிய கண்மாய் என்றழைக்கப்படும் இக்கண்மாயினைச் சுற்றிலும் உள்ள இடங்களில் பல சூலக் கற்களும், ஆழிக்கற் களும் நிலமளந்து எல்லையிட்டதைக் குறிக்கும் அடையாளங்களாக நிற்கின்றன. இதன் கரை ஓரத்தில் பெரிய தூம்பு ஒன்று இரு தூண்கள் போல் நிற்கிறது. இத்தூம்புகளும் கற்களும் இதன் விஸ்வரூபப் பரப்பும் இதனைப் பராங்குசப் பேரேரி என்று சொல்லாமல் வலியுறுத்துகின்றனவோ என எண்ண வைக்கின்றன. இவ்வேரி பாண்டியன் "அரிகேசரி பராங்குச மாறவர்மன்" பெயரில் ஏற்பட்டதாக இருக்கலாம்.

திருமுக்குளம்

இது கங்கை, யமுனை, சரசுவதி ஆகிய நதிகளின் சங்கமத்தால் உருவான தாகவும், சம்பகாருண்ய முனிவர்களுக்குத் துன்பமிழைத்த "காலநேமியை" அழித்த சக்கரத்தாழ்வார் நீராடித் தன் பாவம் போக்கியதாகவும் கூறுகின்றன. பாண்டியன் குலசேகரதேவனின் கல்வெட்டு ஒன்று, திருமுக்குளத்தில் உள்ள பெருங்குழிக்கல் என்பதிலிருந்து ஒரு சின்னக் கால்வாய் சென்றதைக் குறிக்கிறது. (543/ 1926) இந்தப் பெருங்குழிக்கல் என்பது இக்குளத்தின் நடுவில் இன்றும் காணப்படும். குழியான கற்களால் கட்டப்பட்ட பகுதியாக இருக்கலாம். இதனைச் சுற்றிலும் உள்ள நான்கு வீதிகளும் இதன் பெயராலேயே '**முக்குள வீதி** 'என்று அழைக்கப்படுகின்றன. இங்குதான் ஆண்டாளின் மார்கழி மாத எண்ணெய்க் காப்பு உற்சவம் நிகழ்கிறது..

திருப்பாற்கடல்

இப்பெயரில் இங்கு ஒரு குளம் உள்ளது. இதனில் பெரும்பாலும் நீர் இருக்காதாம். வறண்டுதான் இருக்குமாம். இக்குளத்தின் நடுவில் காணப்படும் சில சதுரமான அமைப்பு கள் கட்டடத்தின் பகுதியைப் போல் உள்ளன. இங்கே ஏதோ புதையுண்ட நகரம் இருப்பதாக இவ்வூர் மக்கள் கருதுகின்றனர். இதனில் ஏதோ அஸ்திவாரம் போன்ற சில அமைப்புகள் சதுரம் சதுரமாகக் காணப்படுகின்றன. இவை 53 செ.மீ. முதல் 156 செ.மீ. வரை அகலம் உள்ளவையாக உள்ளன.

வடமலைக்குறிச்சிக் கண்மாய் என்னும் கண்மாயின் அருகில்தான் முதுமக்கள் தாழிகளும், பெருங்கற்சின்னங்களும் உள்ளன

இதைத் தவிர கல்வெட்டில் கங்கை கொண்டானில் உள்ள 'பழிபொறுத்தான் குளம்' என்பதும் குறிக்கப்படுகிறது.(537/1926) மேலும், கீழைச் சுள்ளிக்குளம் என்பதை யும் கல்வெட்டுகள் குறிக்கின்றன (547 & 548/1926).

6. கத்தோலிக்க லூத்தரன் தேவாலயம்

சைவமும் சமணமும் வைணவமும் தழைத்தோங்கிய ஸ்ரீவில்லிபுத்தூரில் கிறித்துவ மதமும் தனது கால்களை ஒரு நூற்றாண்டுக்கு முன்பே தடம் பதிக்கத் தொடங்கிவிட்டது. அதற்குச் சான்றாக இன்று சுமார் 100 ஆண்டினை நெருங்கிக் கொண்டிருக்கும் கத்தோலிக்க லூத்தரன் தேவாலயம் சான்றாக நிற்கிறது. இது 1870ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

தொடக்க காலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் தேவாலயம் பாளையங்கோட்டை சர்ச்சுக்கு அடங்கியதாக இருந்தது. பின்னர் 1906ல் Fr.J.Mahe S.J. என்பவர் இதற்கு உள்ளடங்கிய கிறிஸ்துவ வட்டங்களைத் தனியாகப் பிரித்தார்.

தற்காலத்தில் மதுரை பிஷப்பின் நேரடி ஆளுகை மாவட்டத்தின்கீழ் இருக்கிறது. Francis Zavier 1540ல் தூத்துக்குடி வந்தார். பின்னர் கோட்டாற்றிலும் கன்னியாகுமரி யிலும் மதத்தினை நிறுவினார். சுமார் 1800 வாக்கில் ஸ்ரீவில்லிபுத்தூரைப் பொறுத்தவரை கிறித்துவம் தலையெடுத்து இருக்கலாம்.

இவ்வூரில் சுமார் 2300 கிறித்துவர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் மதம் மாற்றப்பட்டவர்களே. ஜூன் மாதம் இவர்களுக்கான திருவிழா நடைபெறுகிறது. அன்று "இயேசுவின் புனித இதய நாள் திருவிழா" (Sacred Heart of jesus) என்றழைக்கப் படுகிறது. கொடியேற்றி 9 நாள் திருவிழா நடந்து 10ம் நாள் தேர்ப் பல்லக்கும், ஊர்வலமும் நடக்கின்றது. இந்த தேவாலயம் பெண்களுக் கான உயர்நிலைப்பள்ளி, 2) அனாதைகள் ஆசிரம், 3) கைத்தொழில் வகுப்புகள் ஆகியவற்றையும் நடத்தி வருகிறது.

7. பென்னிங்டன் நூல் நிலையம்

1875ஆம் ஆண்டு, பழம் பெருமையும், வரலாற்றுப் பின்னணியும், சைவமும் ணைவமும் சமணமும் தழைத்தோங்கிய ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு நூல் நிலையம்

நிறுவப் பெற்றது. அந்நாளைய தாசில்தார் திரு. T. சரவண முத்துப்பிள்ளை, வத்தறா யிருப்பில் இருந்த சுப்பராய ஐயர், ஆற்காடு ராமச்சந்திரராவ் போன்றோரின் நன்முயற்சியால் இந்நூலகம் துவங்கப்பட்டது. அந்நாட்களில் திருநெல்வேலி மாவட்டத்துக் கலெக்டராக திரு. J.B. பென்னிங்டன் I.C.S. என்பவர் இருந்தார். அவர் பெயரால் இந்நூல் நிலையமும் பெண்களுக்கான 'எலிமெண்டரி ஸ்கூல்' ஒன்றும் துவக்கப்பட்டது.

சிறிய இடம் வாங்கி அங்கு கட்டப்பட்ட சில கடைகளின் வருவாயைக் கொண்டு சிறிய அளவில் நூல் நிலையம் துவங்கப்பட்டது. இதில் சமஸ்கிருத பாடசாலை ஒன்றும் நடத்தப்பட்டு வந்தது. இதற்கென இருந்த என்ற மிகப் பழைய நிலையிலிருந்த கட்டடங்கள் தற்காலத்தில் நீக்கப்பட்டுப் புதியதாகக் கட்டப்பட்டுள்ளன.

தமிழ்ப் புத்ததங்களில் 4000க்குமேலும், மற்ற புத்தகங்கள் சேர்த்து மொத்தம் 12000 புத்தகங்களும் உள்ளன. 38 தமிழ், ஆங்கில (சில வெளி மாநிலத்தவை) நாள், வார, மாத இதழ்களும் வரவழைக்கப்படுகின்றன. 1935ஆம் ஆண்டில் பதிக்கப்பட்ட Penni's Encyclopaedia, 1933ல் " Letters and Journals of Land Byron" 1879ஆம் ஆண்டில் பதிப்பிடப்பட்ட "The Indian Empire" Vol I 1836-37ல் Late Revered J.P.Rottler D.Ph என்பவரால் தொகுக்கப்பட்ட " A Dictionary of Tamil & English" போன்ற 100 வருடங்கட்கு முற்பட்ட புத்தகங்கள் முதல் நேற்றைய முக்கியமான புத்தகங்கள் வரை உள்ளன.[4] தனிப்பட்ட முறையில் இயங்கும் 100 வருடத்திற்கு முற்பட்ட பழைமையான நூலகம் தமிழ்நாட்டிலேயே இது ஒன்றுதான் என்று கூறலாம்.

அடிக்குறிப்புகள்:

1. தெற்குப்புற முதல் குகை சுவர் வைத்துக் கட்டப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றது. அதன் உட்புறம் காண முடியாத நிலை உள்ளது..
2. Revenue Survey No. 228 B
3. Revenue Survey No. 223 A
4. மேற்கண்ட தகவல்கள் இராமநாதபுரம் அரசிதழி (Ramanathapuram Gazettier) லிருந்தும், நூலகர் செல்வி. ஏ.பங்கஜம் அவர்கள் கொடுத்த தகவல்களிலிருந்தும், அந்த நூலகத்தின் ஆரம்ப கால நடவடிக்கை Minutes bookலிருந்து தொகுக்கப்பட்டன.

2. கல்வெட்டும் வரலாறும்

கல்வெட்டுகள் – ஒரு பொதுப்பார்வை

கல்வெட்டுகள் என்னும் சொல் இங்கு கல்லில் வெட்டப்படும் எழுத்துகளை மட்டும் கொள்ளாது ஓவியங்கள், செப்புத்தகடு, இரும்பு வளையம், பாத்திரங்கள் ஆகியவற்றில் எழுதப் பட்டுள்ள எழுத்துகளையும் குறிக்கும் வகையில் கையாளப்பட்டுள்ளது.. இவ்வூரில் கல்வெட்டுகள் வடபத்ரசயனர் கோயில், ஆண்டாள் கோயில், வைத்தியநாதசாமி கோயில், கிருஷ்ணன் கோயில், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் முன்னாள் உள்ள சூலக்கல், பெரிய தேரில் வடம் கோக்கும் வளையம், தேர்க்கலசம், கொடிக்கம்பம், ஓவியங்கள் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கைகளில் இவ்வூர் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் ஆண்டறிக்கை 1926ல் 78 கல்வெட்டுக் குறிப்பும் (A.R.E.1926 Nos 517-596) 1965ல் ஒரு கல்வெட்டுக் குறிப்பும் (A.R.E. 1926 – Nos) வெளியாகியுள்ளன. தென்னிந்தியக் கல்வெட்டு அறிக்கையில் ஒரு கல்வெட்டு முழுமையும் பதிக்கப்பட்டுள்ளது (S.I.I. Vol XIV No 91). திருவாங்கூர் தொல்பொருள் ஆய்வுத்துறை வரிசையில் இரண்டு கல்வெட்டுகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன (T.A.S. Vol Ix (1941) மற்றும் இந்த ஸ்ரீவில்லி புத்தூர் பற்றித் திருமலை நாயக்கர் கொடுத்த பட்டயம் ஒன்றும் கிடைத்துள்ளது. (3 of 1106, 4 of 1106 pages 35, 36)

கல்வெட்டுகளின் பொது நிலைகள்

வடபத்ரசாயி கோயிலில் உள்ள கல்வெட்டுகள் நன்றாக சிமெண்ட் பூசப்பட்டு அரைகுறையாகத் தெரியும்வண்ணம் உள்ளன. ஆண்டாள் கோயிலில் உள்ள மற்ற கல்வெட்டுகள் நன்றாக இருந்தாலும் மணிமண்டபம் என்று அழைக்கப்படும் பகுதியில் உள்ள கல்வெட்டுகள் சுமார் அரை அங்குலத்திற்கு சுண்ணாம்பு பூசப்பட்டுள்ளது. வைத்தியநாத சுவாமி கோயிலில் வெற்றுத் தேவகோஷ்டங்கள் இருந்த இடங்களில் எல்லாம் லிங்கோத்பவரும், துர்க்கையும், தட்சிணாமூர்த்தியும் எழுந்தருளிவிக்கப் பட்டுக் கல்வெட்டுகள் படிப்பதற்கு இயலாவகையில் உள்ளன.

கிருஷ்ணன் கோயிலில் உள்ள கல்வெட்டுகள் சுண்ணாம்பு அடிக்கப்பட்டும், தற்காலத்திய புணருத்தாரணத்திற்குப் பிறகு படிக்க முடியாத நிலையில் சிமெண்ட் பூசப்பட்டும் உள்ளன. ஆண்டாள் கோயிலின் கோபுரத்தின் அருகிலும் பக்கங்களிலும் குறிக்கப்பட்டுள்ள 5 துண்டுக் கல்வெட்டுகளைக் காண முடியவில்லை .

இடம் மாறிய கல்வெட்டு

வடபத்ரசாயி சந்நிதியிலேயே (கோயிலில்) இன்று சேனை முதலியார் சந்நிதி காணப்படுகிறது. அதனில் அவர் சுதை உருவமாகக் காட்சி அளிக்கின்றார். ஆனால் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியனின் காலத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று சேனை முதலியார் சந்நிதிஒன்று, தனியாக இருந்ததையும் அதனில் உள்ள கல்வெட்டு புறச்சாந்தனையால் மறைந்தபடியால் அதனைப் படியெடுத்து இங்கு வெட்டிய செய்தியினையும் குறிக்கின்றது[1].

கல்வெட்டும் சாட்சியே!

வீரப்ப நாயக்கர் காலத்தில் ஆண்டாள் கோயிலுக்கும், படிக்காசுவைத்தருளிய நாயனார் கோயிலுக்கும் நில எல்லையில் தகராறு வருகிறது. (A.R.E. 582/1926) நில எல்லையை நிர்ணயிக்க அவர்கள் புதுமுறையைக் கையாளுகின்றனர். அந்தச் சீர்மையில் நடுவுநிலை பிறழாதவர்களை அழைக்கின்றனர். கோயிலார்கள் சொன்னதை யெல்லாம் ஒருசேரப் பார்க்கின்றனர். இரண்டு கோயிலாரின் ஞாபகங்கள், கணக்குகள் ஆகியவற்றினை ஆராய்ந்து கணக்குகளை முத்திரையிட்டு வைத்துக் கொள்ளுகின் றனர். பின்னர் அவற்றின் அடிப்படையில் இன்னாருக்கு இவையே எல்லை என்று கூறிய நிலையினைப் பார்க்கிறோம். "..... எல்லை என்று சொல்லுகையில் அவர்கள் கல்வெட்டுப் படித்தும், கணக்கின் படிக்கும், தங்களும் அவர்களும் உண்டான ஞாபகங்கள், விசாரித்த யிடத்திலும் நாலு வகையிலும்....." பின்னர் இரண்டு திறத்து ஊராரையும் அழைத்து நாங்கள் சொல்வதைக் கேட்க வேண்டும் என்றும் கூறிவிட்டு, 1) கல்வெட்டு, 2) கணக்குகள், 3) நீதிபதிகளின் நினைவுகள் 4) விசாரணை ஆகிய 4 முறைகளிலும் ஆராய்ந்து தீர்ப்பு வழங்கியுள்ளார். குடியுரிமை விசாரணை முறையில் (Civil Procedure Code) விசாரித்துத் தீர்ப்பு வழங்கியதையே நமக்குத் தெளி வாக்குகிறது.

கல்வெட்டில் இலக்கியம் :

உறங்காவில்லி தாசனான மாவலி வாணாதிராஜன் கல்வெட்டு ஒன்று இங்கு உள்ளது. (A.R.E.577/1926) இவன் சகாப்தம் 1375ஆம் ஆண்டு, மீன மாதம் ஏகாதசி, புதன், உத்தர நட்சத்திரத்தில் இக்கல்வெட்டை வெட்டிக் கொடுத்துள்ளான். திடியன் என்னும் திருவரங்க நல்லூர் முட்டநாட்டுப் பகுதியில் உள்ளது. மதுரை மண்டலத்தினைச் சார்ந்தது. இவனது ஆட்சிக்கு உட்பட்டது. அதனை சூடிக் கொடுத்த நாச்சியாரின் அடுக்களைப்புறச் சிலவுக்காகக் கொடுக்கிறான். அப்படிக் கொடுக்கும்போது ஆண்டாளுக் கும் கண்ணனின் அர்ச்சாரூபமான ரங்கநாதனுக்கும் உள்ள தொடர்பைக் காட்ட வேண்டுமென நினைத்திருப்பான் போலும். அதற்காக ஆண்டாள், பெரியாழ்வார் பாசுரங்களிலிருந்து பல முக்கியமான வரிகளை எல்லாம் கல்வெட்டில் வெட்டி எடுத்தாண்டு இருக்கிறான். சில இடங்களில் சில தொடர்கள், சில இடங்களில் சில வரிகள், சில இடங்களில் முழுப் பாடல்கள் எனக் கையாளப்படுகின்றன.

பெரும்பாலும் 7, 10, 13ம் திருமொழிகளிலிருந்து வரிகளும், தொடர்களும், பாடலும் எடுத்துக் கையாளப்பட்டுள்ளது எண்ணத்தக்கது. நடுவில் 'என்றும்' என்ற தொடர் இணைப்பு வேண்டி பயன்படுத்தப்பட்டுள்ளது. நாச்சியார் திருமொழியில் 11ம் திருமொழி யில் உள்ள எட்டாம் பாடல் முழுவதுமாகவும் கையாளப்பட்டுள்ளது.

இவ்வாறு கூறப்பட்டுள்ள கல்வெட்டு "நல்லார்கள் வாழும் நளிரரங்கப் பெருநகருள், நம் வீட்டில் சேரனை வென்றான் மண்டபத்து சுந்தர பாண்டியன் பந்தற்கீழ் அரிய ராயன் கட்டிலிலிருந்து பலரும் கேட்கக் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. மேலும், இது ''ஸ்ரீ ஜந் ஸ்ரீரங்கநாதஸ ஸாஸனம் ஸாஸ்வதம் உள'' என்று குறிக்கப்படுவதால் அநேகமாக இம்மன்னன் திருவரங்கத்தில் இருந்தோ அல்லது வில்லிபுத்தூரில் இப்படிப் பெயர் கொண்ட ஒரு பகுதியிலிருந்தோ இவற்றைக் கொடுத்து இருக்க வேண்டும் என எண்ண வேண்டியுள்ளது.

கல்வெட்டுகளும் மன்னர்களும்:-

இத்தலைப்பின்கீழ் மன்னர்களின் பெயரையும் ஆட்சி ஆண்டையும் தொகுப்பு களையும் பட்டியலிடப்படுகிறது.

குலம்	மன்னர்	கல்வெட்டுகள்	ஆட்சி யாண்டு	வரலாற்று ஆண்டு (உத்தேசமாக)	குறிப்பு
1) முற்காலப் பாண்டியர்	கோச்சடையன் மாறன் (ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன்)	1	2ன் எதிர் 5	சுமார் கி.பி.822	ARE 285/1966
2) "	சோழன் தலைகொண்ட கோவீர பாண்டியன்	1	13ன் எதிர் 1	சுமார் கி.பி.960	ARE 548/1926
3) சோழன்	முதற்குலோத்துங்கன்	1	38வது	கி.பி. 1108	ARE 551/1926
4) பிற்காலப் பாண்டியன்	மாறவர்மன் விக்கிரம பாண்டியன்	1	11வது	கி.பி. 1180–90 அல்லது கி.பி. 1268–81	ARE 550/1926
5) "	ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் I	2	3,5 வது	கி.பி. 1190–1218	ARE 522,552/ 1926
6) "	மாறவர்மன் சுந்தர பாண்டியன் I	11	2.3.15.16. 20 வது	கி.பி.1216–1238	ARE 528,541, 542, 546,547, 549 554-58/1926
7) "	மாறவர்மன் குலசேகரன் I	2	23, 27வது	கி.பி.1268–1311	ARE 533,526/ 1426
8) "	ஜடாவர்மன் வீரபாண்டியன்	4	2+17, 2+18	கி.பி.1297–1342	ARE 518, 519, 520, 523/1926
9) "	ஜடாவர்ம பராக்கிரம பாண்டியன்	1	32வது	கி.பி.1315–47	ARE 527/1926
10 "	ஜடாவர்மன் பராக்கிரம பாண்டியன் ஆகிய ஸ்ரீவல்லபதேவன்	1	–	சகம் 1356 (கி.பி. 1434)	ARE 529/1926

குலம்	மன்னர்	கல்வெட்டுகள்	ஆட்சி யாண்டு	வரலாற்று ஆண்டு (உத்தேசமாக)	குறிப்பு
11) பிற்காலப் பாண்டியன்	ஜடாவர்மன் குலசேகர பாண்டியன்	2	–	சகம் 1395 (கி.பி. 1473)	ARE 563, 564/ 1926
12) "	அழகன் பெருமாள் பராமக்கிரம பாண்டியன்	3	2+12	சகம் 1403 ,1396 (கி.பி. 1474)	ARE 565, 566, 567/1926
13) "	பிற்காலப் பாண்டியர் (இறந்த காலம் எடுத்த பெருமாள்)	7(8)	–, 11, 20+1, 2+15, 2+1	சகம் 1456, 1483, 1469, 1458, 1468	ARE 524,531, 535+536, 537, 538 561, 580 /1926
14) "	அதிவீரராம பராக்கிரம பாண்டியன்	2	10	சகம் 1493 (கி.பி. 1571)	ARE 591, 592/ 1926
15) "	திருநெல்வேலிப் பெருமாள்	1	–	சகம் 1473	ARE 570/1926
16) வாணாதி ராயர்	மதுராபுரிமா நாயகன் திருமாலிருஞ்சோலை நின்றான்	1	–	சகம் 1350	ARE 572/1926
17) "	உறங்காவில்லிதாசன்	2	–	சகம் 1375, 1398	ARE 573, 577/ 1926
18) "	திருமாலிருஞ்சோலை நின்றான்	1	–	சகம் 1399 (கி.பி. 1477)	ARE 578/1926
19) "	சார்வபௌம சுந்தரத் தோளுடையான்	3	–		ARE 568,583, 584/1926
20) விஜய நகர்	சதாசிவ மகாராயர்	2	–	சகம் 1472	ARE 571, 579/ (கி.பி. 1550)1926
21) "	சாளுவ நரசிம்ம ராஜ உடையார்	1	–	சகம் 1375 (கி.பி.)	ARE 575/1926
22) "	–	1	–	சகம் 1481 (கி.பி. 1559)	ARE 585/1926
23) திருவி தாங்கூர்	சங்கரநாராயண, வென்று மன்னகொண்ட பூதலவீர, வீரமார்த்தாண்ட மூத்த திருப்பாப்பூர்	2	–	கொல்லம் 709 (கி.பி. 1533)	T.A,S. Vol !X 384/1106
24) மதுரை நாயக்கர்	வீரப்ப நாயக்கர்	2	–	(கி.பி. 1572 – 1595)	ARE 582, 586/ 1926
25) "	விஸ்வநாத நாயக்கர்	1	–	(கி.பி. 1529– 1564)	ARE 593/1926
26	முத்து வீரப்ப நாயக்கர்	1	–	(கி.பி. 1682– 1689)	ARE 594/1926
27)	திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான்	9			
28) பெயரில் லாதவை	–	10	–	–	

அடிக்குறிப்புகள்:

1. ..... செய்தருளின திருமுகப்படி கல்வெட்டு, சேனை முதலியார் கோயில் மேற்கு [illegible]த்தியில் வெட்டின கல்வெட்டு புறச் சாஸனையிலே மறைகியால் இது படியெடுத்துக் கல்வெட்டினபடி ....."

3. ஊரும் கோயிலும்

ஊர்:

திரு வில்லிபுத்தூர் இப்பெயர் வரக் காரணமென்ன? பண்டு அழைக்கப்பட்ட விதமென்ன? முறையென்ன? மாறிய காரணமென்ன? இன்றைய நிலையென்ன? என்பதைப் பெரியாழ்வார் பாடல்கள், ஆண்டாள் பாசுரங்கள், கல்வெட்டுகள், திருமலை நாயக்கரின் செப்பேடு, தற்கால விளம்பரப் பலகைகள், மக்களின் பேச்சு வழக்குகள் ஆகியவற்றைக் கொண்டு ஆய்கிறது இப்பகுதி.

பாடல்களில்:

பெரியாழ்வார்–ஆண்டாள் பாடல்களிலேயே ஸ்ரீவில்லிபுத்தூர் பற்றிய பழமையான தகவல்கள் கிடைக்கின்றன. ஊர்ப்பெயர்களைப் பொறுத்தவரை இவர்கள் கீழ்க்காணும் சொற்களையே கையாள்கின்றனர்.

வில்லிபுத்தூர்	1 : 1 : 10,	தென்புதுவை	1 : 7 : 11,	புதுவை	2 : 2 : 6,
ஒளிபுத்தூர்	2 : 2 : 10,	தொல் புதுவை	4 : 2 : 11,	புத்தூர்	4 : 10 : 10
தண்புதுவை	3:8:10,	குளிர் புதுவை	4:4:11,	வண் புதுவை	7.10

கல்வெட்டுகளில்:

காலத்தால் முற்பட்ட கல்வெட்டாகிய 'சடையன் மாறன்' கல்வெட்டில் வில்லி புத்தூர் என்ற வடிவமே காணப்படுகிறது.(A.R.E. 285/1965-66) அதற்கடுத்தடுத்த கல்வெட்டுகளில் 'வில்லிபுத்தூர்' என்றும், 'சீவில்லிபுத்தூர்' என்றும் காணப்படுகிறது. திருமலை நாயக்கரின் செப்பேடு ஒன்று சிறீவில்லிபுத்தூர் என்று குறிக்கின்றது.

தற்கால விளம்பரப் பலகைகளில் 'ஸ்ரீவில்லிபுத்தூர்', 'ஸ்ரீவில்லிபுதூர்', 'திருவில்லிபுத்தூர்' என்னும் வடிவங்களைக் காண்கிறோம். தற்போது தமிழ்ப்படுத்தப்பட்டு திருவில்லிபுத்தூர் என்ற பெயர் வழக்கில் உள்ளது.

வில்லிபுத்தூர் 'வில்லி' என்னும் வேடனால் உண்டாக்கப்பட்ட வடிவம் என்கிறது தலமகாத்மியம்.[1] "வில்லி" என்பதற்கு மன்மதன், காண்டீபன் வில்லினை உடையோன் எனப்பொருள் கூறுகிறது "ஞானார்த்த தீபிகை" வில்லிகள் என்பது வில்லினைக் கையாளுபவர்களைக் குறிக்கும். வில்வல்லார் – வில்லி எனப்படுவர். ஸ்ரீவில்லிபுத்தூர் மலை அடுத்த காடும் காடு சார்ந்த இடம் என்பதும் காட்டினில் இருப்பவர்கள் வேடர்கள் வேடர்களின் ஆயுதம் 'வில்' என்பதும் கருதத் தக்கவை. புத்தூர் என்பது புதிய ஊர் என்று பொருள்படும். எனினும் பெரியாழ்வார் தொல்புதுவை என்று குறிப்பது குறிப்பிடத் தக்கது. மற்ற சொல்லாட்சிகளின் முன்னுள்ள வண், தண், குளிர் என்பவை முன்னடையாகவும் சிறப்புச் சொற்களாகவும் தென் புதுவை என்பது திசையைக் குறிக்க வழங்க

யிருக்கலாம். புதுவை என்பது 18ஆம் நூற்றாண்டின் சிவன் கோயில் ஓவியங்களில் கூட குறிக்கப்படுகிறது. இதுவும் புத்தூர் போலவே 'புது' என்னும் சொல்லிலிருந்து பிறந்து இருக்கிறது. இது புத்தூர் என்னும் அமைப்பிலேயே அமையும். பெரியாழ்வார் 'தொல் புதுவை' என அழைக்கிறார்.

இதனைத் 'தென் புதுவை' என்றும் அழைக்கிறார். தெற்கின்கண் உள்ள ஒரு ஊரைத் தென்புதுவை என்று அழைத்து இருக்கலாம் என்றாலும், ஏதோ ஒரு காரணம் உள்ளதாக எண்ணத் தோன்றுகிறது.

வடமலைக்குறிச்சி கண்மாய்க்கு அருகில் மக்கள் வாழ்ந்த பெருங்கற்சின்னங்கள் இருப்பதைக் காண்கிறோம். நீர்வசதி போன்ற இயற்கையாய் அமைந்த கண்மாய் அருகில் ஒரு கிராம அமைப்பு இருந்து பின்னர் சுமார் கி.பி.600–700 காலக்கட்டத்தில் புதிய ஊர் ஒன்று இப்பகுதியில் உருவாகி அமைந்து பழைய ஊருக்கு அருகில் உள்ள புத்தூர், வில்லிகளால் உருவாக்கப்பட்ட அல்லது வல்லவர்களால் உருவாக்கப்பட்ட ஊர் என்னும் பெயரில் தென்புதுவை என அழைக்கப்பட்டிருக்கும் என ஊகிக்கலாம். அல்லது மல்லி நாடு என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படும் ஊர் பழமையானதாக, இப்பகுதியில் புதிய ஊர் தோன்றி நிலைபெற்று சிறப்புற்றதால் புத்தூர் எனவும் பெயர் பெற்று இருக்கலாம்.

புத்தூர்– புற்றூர் :

புத்தூர் புற்றூர் என்பது தான்சரி. புற்றுகள் நிறைந்த பகுதி என்கின்றனர் ஊராரில் சிலர். ஆனால் இது சரியான கூற்றாக இல்லை. கல்வெட்டுகள் அனைத்திலும் புத்தூர் என்றே குறிக்கப்படுகிறது. ஒழிய வேறுபொருளில் குறிக்கப்படவில்லை. புதியதாக அமைந்த ஊர் புத்தூர் என்னும் பொருளில் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஸ்ரீ

பெரியாழ்வார் ஆண்டாள் காலம் 8 அல்லது 9ஆம் நூற்றாண்டு ஆகும்.[2] ஸ்ரீ மாற. ஸ்ரீவல்லபன் காலத்தில் வாழ்ந்தவர்கள். இக்காலத்தில் வடமொழிச் செல்வாக்கின் காரணத்தினால் ஸ்ரீ என்னும் சொல் தமிழில் நுழைவதைக் காண்கிறாம். மேற்குறித்த மன்னன் பெயரே அதற்குச் சான்றாகும்.

அடுத்து வரும் கல்வெட்டுகளில் சடையன் மாறன் கல்வெட்டில் வில்லிபுத்தூர் என்றே குறிக்கப்படுகிறது. இவன் காலம் 900 முதல் 920 வரை எனக் கொண்டால் இவன் காலத்தில் கல்வெட்டுகள் வில்லிபுத்தூர் என்றிருந்தது. இவன் மகன் காலத்தில் 'ஸ்ரீ' என்னும் அடைபெறுகிறது. காரணம் முன்னால் வாழ்ந்த பெரியாழ்வார், ஆண்டாள் என்னும் இரண்டு வைணவ அடியார்களை உலகிற்கு தமிழகத்திற்கு, தமிழிற்கு, வைணவத்திற்கு ஈந்த சிறப்புக் கருதி இப்பெயர் பெற்று இருக்கலாம். 'ஸ்ரீ' என்னும் அடை சேர்ந்து ஸ்ரீவில்லிபுத்தூராக மாறியிருக்கலாம்.

விக்கிரமசோழச் சதுர்வேதிமங்கலம்

ஸ்ரீவில்லிபுத்தூர் என்ற பெயர் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் (கி.பி. 1108) "ராஜ ராஜப் பாண்டி நாட்டு, மதுராந்தக வளநாட்டு, மல்லி நாட்டு, விக்கிரம சோழச் சருப்பேதி மங்கலத்து" என்றே குறிக்கப்படும் தன்மையினைக் காண்கிறோம்.

அடுத்து எந்தக் காலத்தில் குறிப்பாக அப்பெயர் மாறியது என்பது உணருமாறு இல்லை. ஆனால் அடுத்த சில ஆண்டுகளில் பாண்டியர் தலையெடுக்க ஆரம்பித்த வுடனே இது ஸ்ரீவில்லிபுத்தூராக மாற்றம் பெற்றிருக்கலாம் என எண்ணுவதில் தவறில்லை.

நாடுகளில்

முற்காலப் பாண்டியராட்சியில் பாண்டி மண்டலத்திலிருந்த மல்லிநாட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் பிற்காலப் பாண்டியராட்சியில் அதே உட்பிரிவிற்குள் அகப்பட்டு உள்ளது. ஆனால், சோழராட்சியில் ராஜராஜப் பாண்டி நாட்டு மதுராந்தக வளநாட்டு, மல்லி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூராக உள்ளது (551/1926) மதுரை நாயக்கர் ஆட்சிக்குப் பின் ஸ்ரீவில்லி புத்தூர் ஸ்ரீவில்லிபுத்தூர்சீர்மை என்றாகி ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்க நிலையில் திருநெல்வேலி மாவட்டத்துடன் இருந்த இவ்வூர் இராமநாதபுரம் மாவட்டம் உருவான போது அத்துடன் இணைக்கப்பட்டது.

வடபெருங் கோயிலுடையான்

இன்றைக்கு 'வடபத்ர சாயி', வடபத்ர சயனர் என்றெல்லாம் அழைக்கப்படும் கோயில் சம்பகாருண்ய மகரிஷிகளுக்குத் துன்பம் கொடுத்த கால நேமியை தனது சக்கராயுதத்தை ஏவி அழித்தார் திருமால். காலநேமியை அழித்தபிறகு சக்கரத்தாழ்வார் தனது ரத்தக்கரை நீங்கத் திருமுக்குளத்தில் மூழ்கினார். தேவர்களும் முனிவர்களும் வணங்கினர். அவர்களின் வேண்டுகோளின்படி, அம்முக்குளத்தின் அடியிலேயே இரத்னகசிதமான விமலாக்ருதி விமானத்தில் ஆதிசேஷனைத் தமது படுக்கையாகக் கொண்டு உபய நாச்சியார்களுடன் சனகாதி முனிவர்களால் வணங்கப்படும் நிலையில் தோன்றினார் எனவும், அவரே 'வடபத்ர சாயி' என்பதும் புராண வரலாறு.

பெரியாழ்வார் தம் பாடல்களில் இங்கிருக்கும் ஆண்டவன் இருந்த கோயிலைச்

மின்னனைய நுண்ணிடையார் விரிகுழல்மேல் நுழைந்தவண்டு
இன்னிசைக்கும் வில்லிபுத்தூரினி தமர்ந்தாய்

என்று (பெரியாழ்வார் திருமொழி 2:2:6) அமர்ந்தாய் என்னும் பொதுப் பொருளிலிலேயே குறித்து உள்ளார். வேறு எந்தக் கோலத்தையும் சுட்டவில்லை.

கல்வெட்டுகளில்

சோழன் தலை கொண்ட கோவீர பாண்டியனின் கல்வெட்டில் (S.I.I. Vol XIV 9) ஜல சயனத்துக் கிடந்தருளின பரமசுவாமி என்று குறிக்கப்படுகிறார். பின்னால் வரும் கல்வெட்டுகளில் எல்லாம், 'வடபெருங்கோயில் பள்ளிகொண்டருளிய பரமஸ்வாமி' என்றும், 'வடபெருங் கோயிலுடையான்' என்றுமே அழைத்தலைக் காண்கிறோம் (533/1926). 16ஆம் நூற்றாண்டின் எழுத்தமைதியில் அமைந்த கோபுரத்தில் உள்ள பாடல், "வடபெருங் கோயில் மணிவண்ணனார்" என்றே குறிக்கிறது (560/1926). கி.பி. 1700ம் ஆண்டின் துவஜஸ்தம்பத்தில் உள்ள கல்வெட்டும், அதன் மேல் உள்ள தாமிரத் தகட்டில் உள்ள எழுத்துகளும் வடபத்ரசாகி, வடபத்ரசாயி என்று அழைக்கின்றன. (559/1926)

ஆக 10ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் மூலம் அவர் பள்ளி கொண்ட நிலையை ஜலசயனத்துக் கிடந்தருளின பரமசுவாமி என்று குறிக்கிறது. பின்னர் ஊரினில் உள்ள மற்ற கோயில்களுடன் ஒப்பிட்டு 'வடபெருங்கோயில் பள்ளிகொண்டருளிய பரமசுவாமிகள்' என்று அழைக்கப்படும் தன்மையைக் காண்கிறோம். பெருங் கோயில் என்பது கோயிலின் தன்மையினையும், அவர் பள்ளி கொண்டுள்ள நிலையினையும் 'வட' என்பது திசையைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

16ம் நூற்றாண்டு வரையிலும் 'வடபெருங்கோயில்' என அழைக்கப்படுத் தன்மையினையும், இறைவன் மணிவண்ணனார் எனக் குறிக்கப்படும் தன்மையினையும் காண்கிறோம் .

கி.பி. 1700ம் ஆண்டிலேயே 'வடபத்ரசாயி' என்று குறிக்கப்படும் தன்மை யினையும் காண்கிறோம். வடபத்ரம் என்பது ஆலமரத்தைக் குறிக்கும். வட ஆல மரத்தின் அடியில் கிடந்ததால் வடபத்ரத்தின்கீழ் சயனித்தவர் என்னும் பொருளில் வழங்கப் பட்டு இருக்கலாம்.

'வடபத்ர சாயி' என்னும் புராண மரபு தல புராணங்கள் தோன்றிய காலத்தினிலேயே உள்ளதைக் காண்கிறோம்.

தல புராணங்களும் 15 அல்லது 16ஆம் நூற்றாண்டில் தோன்றிப் பெருவழக்கில் வந்தன. இக்கோயிலின் உட்புறப்பகுதி 16ஆம் நூற்றாண்டில்தான் புதுப்பிக்கப்பட்டிருப் பதாலும், அக்கால தல புராணங்கள் மிகுந்ததாலும், வடபத்ரசாயி என்னும் மாற்றம் 16ம் நூற்றாண்டிலேயே தோன்றியுள்ளது என்பது தெளிவாகிறது.

பகவதி விண்ணகரம்

இன்றைக்கு ஆண்டாள் கோயில் என்றழைக்கப்படும் கோயில் கல்வெட்டுகளில் அனைத்திலுமே சூடிக் கொடுத்தருளிய நாச்சியார் கோயில் என்ற பெயரில் அழைக்கப் பட்டுள்ளது.. பெருமாள் கோயில் கல்வெட்டுகள் சிலவற்றில் சூடிக் கொடுத்தருளிய நாச்சியார் என்றே குறிக்கப்படுகிறது. இவற்றுள் காலத்தால் முற்பட்ட கல்வெட்டு சுமார் கி.பி. 1291ம் ஆண்டினைச் சார்ந்ததாகும். (533/1926)

சோணாடு கொண்டு வழங்கியருளிய சுந்தர பாண்டியன் கல்வெட்டுகளில் "பகவதி விண்ணகரம் என்ற ஒரு கோயில் குறிக்கப்படுகிறது. இந்த விண்ணக்கரம் எது? இதன் தற்போது பெயரும் வடிவமும் என்ன என அறிய வேண்டும்.

'விண்ணகரம்' என்பது விஷ்ணு ஆலயம் எனப் பொருள் கொள்ளப்படும். 'பகவதி என்பது பெண் தெய்வத்தின் பெயர். இன்றும் பெண் தெய்வத்திற்குக் கேரளாவில் வழங்கிவரும் பெயராக உள்ளது. இந்த பகவதி என்னும் பெயர் ஸ்ரீவில்லிபுத்தூரைப் பொறுத்தவரை கேரளாவின் தாக்கமாக வழங்கியிருக்கலாம்.

பகவதிவிண்ணகரம் என்ற பெயர் உடைய கோயிலோ பகவதி வழிபாடு தொடர் புடைய கோயிலோ இன்று இவ்வூரில் இல்லை. பகவதி விண்ணகரம் பற்றி ஸ்ரீவில்லி புத்தூரில் உள்ள 1218ஆம் ஆண்டினைச் சார்ந்த திரிபுவனச் சக்ரவர்த்தி (சோணாடு கொண்டருளிய சுந்தர பாண்டியன் கல்வெட்டு என்பது உய்த்து உணரப்படுகிறது.) கோனேரின்மை கொண்டான் எனத் தொடங்கும் கல்வெட்டு, " சங்கர நாராயண ஸ்ரீகண்ட பட்ட வாஜபேயாஜியார் இவ்வூர் திருமேற் கோயிலாக உகந்து அருளுவித்த பகவதி விண்ணகர ஆழ்வார் கோயிலுக்கும்" என்று குறிக்கின்றது.

'திருமேற்கோவில்' என்பது மேற்கே எடுக்கப்பட்ட கோயில் எனப் பொருள்படும். இன்று மக்கள் நாச்சியார் கோயிலை (ஆண்டாள்) மேலக்கோயில் என்றழைக்கின்றனர். "மேலக் கோயில் நடை சாத்தியாச்சா" என்று வினவும் வழக்கும் உள்ளது.

பகவதி என்னும் பெயர் துர்க்கைக்கு உண்டு. ஸ்ரீவில்லிபுத்தூரில் துர்க்கைக் கோயிலோ, காமக்கோட்டங்களோ இருந்ததற்கான எந்தச் சான்றும், இல்லை என்பது எண்ணத் தக்கது. சொற்களஞ்சியம் பகவதிக்கு துர்க்கை, தருமதேவதை, பார்வதி தாம்ரபரணி (ஆறு) என்னும் பெயர்களைச் சுட்டுகிறது.

தாய்த் தெய்வ வழிபாட்டில்

தாய்த் தெய்வ வணக்கத்தில் பாவை நோன்பு என்பது ஒன்றாகும். பாவை என்பது கன்னித்தெய்வம் என்று தெரிகிறது. இக்கன்னியர்கள் தொழும் தெய்வம் காத்யாயினி. காத்யாயினி விரதம் இருப்பதனையே பாவை நோன்பு என்பர்.

"ஸ்ரீமத் பாகவதம் – தஸமஸ்கந்தம் 2ஆம் அத்தியாயத்தினையும் பெரியவாச்சான் பிள்ளை உரையையும் நோக்கும் போது, நாடு வளங்குன்றியபோது மழை பெய்யவும், உத்தம நாயகர்களையடைந்து இம்மைநலமெய்தவும், வேண்டி கன்னியர் காத்யாயனி தேவியை நோக்கி மார்கழி மாதம் முழுவதும் நோற்பதும் இதன் பொருட்டு அவர்கள் வைகறையில் எழுந்திருந்து ஒருவரை ஒருவர் எழுப்பிச் சென்று நதிதீரமடைந்து நீராடி தேவியின் பிரதிமை ஒன்றைச் செய்து தத்தம் இஹா பீஷ்டங்கள் நிறைவேற பூஜிப்பதும் பண்டை மரபு என்பது பெறப்படுகிறது. கண்ணனைத் தம் நாயகனாக அடைவதற்கும் கோபியர் காத்யாயனி தேவியை ஆராதித்துப் போந்தச் செய்தியை பாகவதத்தார் பிரசித்தமாயிருக்கும்போது அக்கோபியர் விஷயத்தை ஆண்டாளும் கொண்டு கூறினர் எனின் அதனால் இழுக்குளதாமோ?" என்கிறார் மு. ராகவையங்கார்.[3] ஆண்டாள் பாவை

நோன்பு என்னும் காத்யாயனி விரத்தினைக். கைக்கொண்டு வாழ்ந்தவள். இந்தக் காத்யாயனி விரதம் பகவதி வழிபாட்டை ஒத்ததாகும். இந்த பகவதி வழிபாட்டினைக் கொண்டாடிய ஆண்டாளும் பகவதியாக மாற்றப்பட்டிருக்கலாம்.

பூரம்

ஆண்டாளின் திருநட்சத்திரம் பூரமாகும். இதனைத் திருவாடிப்பூரத்துச் செகத் துதித்தாள் என்கிறது. சொற்களஞ்சியம் பகவதி நாளைப் 'பூர' நாள் என்று குறிக்கிறது. ஆக பூர நாளில் பிறந்த ஆண்டாளை பகவதி நாளில் பிறந்தவள் என்றும் சொல்வதில் தவறு இல்லை. இன்றும் நட்சத்திரங்களின் பெயர்களைக் கொண்டு பரணி, ரேவதி, ரோகிணி போன்று பெண்களின் பெயர்கள் வழங்குவதைக் காணலாம். கோயிலைக் கட்டும்போது பூர நாளில் பிறந்த அவளது நட்சத்திரத்தினைத் தலைமையாகக் கொண்டு பகவதி – பூரம் – விண்ணகரம் என்று பெயர் வழங்கியிருக்கலாம்.

ஆண்டாள் கோயில்

ஆண்டாளுக்கு இன்று ஸ்ரீவில்லிபுத்தூரில் இருக்கும் 15–16ஆம் நூற்றாண்டுக் கோயிலுக்கு முன்னதாக ஸ்ரீரங்கத்தில் கோயில் இருந்து இருக்கிறது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. மலைநாட்டில் உள்ளவன் வெங்கூர் ஸ்ரீராமபட்ட வாஜபேயாஜி என்பவன் ஸ்ரீகாரியம் பார்க்கும் போது சூடிக் கொடுத்தாள் என்னும் பெயரில் நந்தவனம் வைக்கப்பெற்றதை முதலாம் குலோத்துங்கனின் ஸ்ரீரங்கம் கல்வெட்டு ஒன்று குறிக்கிறது (ARE 119/1938-39).

நமக்கு ஸ்ரீவில்லிபுத்தூரைப் பொறுத்த அளவில் சூடிக்கொடுத்தருளிய நாச்சியார் என்னும் பெயர் சுமார் 1291ல் முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்திலேயே கிடைக்கின்றது. இதன்பின் வரும் கல்வெட்டுகள் எல்லாவற்றிலும் சூடிக் கொடுத்த நாச்சியார் என்றே பெயர் காணப்படுகிறது. 8–9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, மறைந்து, தெய்வமாக்கப்பட்டவள் 13ம் நூற்றாண்டில்தான் கல்வெட்டில் இடம் பெறுகிறாள் என்றால் அதுவரை ஸ்ரீவில்லிபுத்தூரில் அவள் புகழ் பரவாமலிருந்திருக்காது. ஸ்ரீரங்கத்தில் புகழ் பரவிய நிலையில் இருப்பவள் ஸ்ரீவில்லிபுத்தூரில் பரவாமல் இருப்பாளா?

விண்ணகரம் என்பது ஏன்?

பெருமாள் கோயிலுக்கே **விண்ணகரம்** என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க இந்த பகவதி என்ற பெண் தெய்வக் கோயிலை விண்ணகரம் என்று ஏன் அழைத்தனர்? ஸ்ரீவில்லிபுத்தூரில் வாழ்ந்து அரங்கன் கைப்பிடிக்க வேண்டுமென்று எண்ணியவள் (கைப்பிடித்தவள் என்கிறது குருபரம்பரை) 200, 300 ஆண்டுகளுக்குப் பிறகு கைப்பிடித்தவளாகவே ஆக்கப்பட்டு ஆண்டாள் – அரங்கர் இருவரும் இணைந்த ஒரு கோயில் எழுப்பினர். அது காமக்கோட்டம் போலல்லாமல் நாச்சியாருக்கு முதன்மை கொடுத்த விண்ணகரமாகக் கட்டப்பட்டது என்று எண்ண வேண்டியுள்ளது. இன்றும் ஆண்டாள் கோயிலில் ராஜமன்னார் எனப்படும் ரங்கமன்னர் மத்தியில் இருக்கிறார்.

ஆயினும் வலப்புறம் மணக்கோலத்து நிற்கும் ஆள்டாளுக்கே முக்கியத்துவம் கொடுத்து நாச்சியார் கோயில் என அழைக்கப்படுகிறது.

பகவதி விண்ணகர் பெயர் மறைவு ஏன்?

சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் காலத்திற்குப் பின் எந்தக் கல்வெட்டிலும் இப்பெயர் காணப்படுமாறு இல்லை. மாறாக மாறவர்மன் குலசேகரனின் (1268–1311) கல்வெட்டு முதல் சூடிக் கொடுத்த நாச்சியார் கோயில் என்றே குறிக்கப் படுகின்றது. பகவதி விண்ணகர் என்ற பெயர் மக்களின் மனதில் நிலைக்காத காரணம் என்னவென்று விளங்கவில்லை. ஒருவேளை "சூடிக்கொடுத்தாள்" என்னும் பெயர் தாக்கத்தின் காரணமாக வழக்கிழந்து இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது எப்படியோ, சுமார் கி.பி. 1218ல்கட்டப்பட்ட பகவதி விண்ணகரம் 1281ல் சூடிக் கொடுத்த நாச்சியார் கோயிலாக மாறிவிட்டது.

மனித குலத்தில் வாழ்ந்த ஒரு பெண்ணிற்குக் கோயில் எடுக்கப்பட்டது. மக்களால் அது போற்றப்பட நினைத்த வாஜபோஜியார் பகவதி என்ற பெயர் பெண்ணின் கோயிலுக்கு முதன்மை கொடுத்து வழங்கி இருக்கலாம். எனினும் காலப் போக்கில் மக்களின் மனதில் அதற்கு மேல் பக்தி பிரவாகித்து சூடிக் கொடுத்தாள் என்னும் மனிதப் பெண்ணின் சிறப்புப் பெயரையே சூட்டி அதனையே நிலைபெறச் செய்து விட்டார்கள். வழிபாடு செய்த பெண்ணிற்கு எடுத்த விண்ணகரம் என்ற பெயர்.

பகவதி ஆகிய கொற்றவைக்கும், துர்க்கைக்கும் கிளியும் பந்தும் சேர்த்துக் கூறும் மரபு சிலம்பிலும் பிற தமிழ் நூல்களிலும் உள்ளது என்கிறார் P.L. சாமி.[4] இன்றும் ஆண்டாளின் கையில் இலையால் கட்டப்பட்ட 'பச்சைக்கிளி' ஒன்று கொடுக்கப் படுகிறது.

அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில்
படிக்காசு வைத்தருளிய நாயனார்

நாயன்மார்களால் பாடப்படாத, மகுடாகமத்தினைப்பின்பற்றும் இக்கோயில் திருக்கற்றளீஸ்வரம் என 10ம் நூற்றாண்டினைச் சார்ந்த சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் கல்வெட்டில் உள்ளது. (S.I.I. Vol XIV – No. 91) இக்காலத்திற்குப் பின்னால் வரும் கல்வெட்டுகள் சிலவும் இதனைத் திருக்கற்றளியீஸ்வரமுடையார் எனக் குறிக்கின்றன.

இவற்றிற்குப் பின்னர் ஜடாவர்மன் வீரபாண்டியனின் (1296–1342) 20ஆம் ஆட்சியாண்டைச் சார்ந்த கல்வெட்டு ஒன்றில் "திருமல்லி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் உடையார் திருக்கற்றளீஸ்வர முடைய நாயனார் படிக்காசு வைத்தருளிய நாயனார் கோயில்" என்ற குறிப்பு வருகிறது. அதைத் தொடர்ந்து படிக்காசு வைத்த நாயனார் என்பதும், திருக்கற்றளீஸ்வரர் என்பதும் குறிப்பிடப்பட்டுப் புராணத்தில் படிக்காசு வைத்த நாயனார் என்பதே நிலை பெற்றிருக்கும் தன்மையைக் காண்கிறோம். திருக்கற்றளீஸ்வரம்

என்ற பெயர் நன்கு பரவியிருந்தும் படிக்காசு வைத்த நாயனார் என்ற மாற்றம் பெற்றுள்ளது. ஏன் ஏற்பட்டது என்பது சிந்திக்க வேண்டி உள்ளது. இம்மாற்றம் பெற ஆரம்பித்த காலத்தில் பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் மாக்கதை பரவத் தொடங்கிவிட்டது. அதனில் இறைவன் அடியார்களிடத்துப் புரிந்த பல திருவிளையாடல் கள் சுட்டப்படுகின்றன. அதனில் ஒன்று, அப்பருக்கும் சம்பந்தருக்கும் படியில் காசு வைத்து, மடத்தில் சோறு போடும் சிறந்த தொண்டினைத் தொடர்ந்து செய்ய அருள் காட்டிய திருவிளையாடலாகும். இது திருவீழிமிழலையில் நடந்தது. இக்கருத்தின் அடிப்படையில் இங்கும் அந்தப் பெயர் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

தல வரலாறு

16ம் நூற்றாண்டிற்குப் பிறகு தோன்றிய தல வரலாறு நாகநம்பி என்னும் பக்தர் மெலிந்த உடல் வருத்தம் பாராது பஞ்ச காலத்திலும் ஆறு காலமும் பூஜித்ததாகவும், ஒருநாள் திருமஞ்சனக் குடம் சுமக்க முடியாத அளவிற்குக் கீழே விழ, சிவன் தோன்றி, "படியிலே ஒரு காசு வைப்பேன். அக்காசு கொண்டு காசுவாசியிடம் கொடுத்துப் பசி போக்கிக் கொள்" என்று சொன்னதாகவும், காசுவாசி சரியான வட்டி தராமல் ஏமாற்றிய தாகவும், இறைவன் ஒருநாள் அவன் கனவில் தோன்றியதுடன் நில்லாமல் நேரில் வந்து பாடம் புகட்டியதாகவும் குறிப்பிடுகிறது. அதனால் படிக்காசு நாயனார் எனப் பெயர் வந்ததாகக் கூறுகின்றது.

படிக்காசு வைத்த நாயனாராக இருந்த இவர் இன்று வைத்தியநாதராக மாறியது எக்காரணத்தால் என்பது தெரியவில்லை.

இன்றைக்குக் கருவறையின் பின்புறத்தில் திருச்சுற்றுமாளிகையில் ஒரு ஜுரதேவர் நிர்மாணிக்கப்பட்டு பூஜை செய்யப்படுகிறது. சிற்ப அமைதி 15ஆம் நூற்றாண்டின் சிற்ப அமைதியினை உடையது. ஜுரதேவருக்குத் தலையில் மிளகை அரைத்துப் பூசுவதும் அதனை மக்கள் உண்டால் தங்களது வினைகள் தீரும் என்று எண்ணும் வழக்கம் உண்டென்றும் அறிகிறோம்.

அதன்படி இச்சிலையிலும் மிளகை அரைத்துப் பூசியுள்ள நிலையினையும், மிளகுப் பற்றை நோய் நீக்க வேண்டிச் சிலர் அதனைக் கேட்டு வாங்கிச் செல்வதும் உண்டு என்கிறார் குருக்கள். மேலும், அவருக்கு எனத் தனிப் பூசைகள் நிகழ்வதும் உண்டு என்கிறார். ஜுரதேவர் கருவறையின் நேர் பின்னால் அமைக்கப்பட்டுள்ளதாலும், அவருக்கு நோய் நீக்கும் சக்தி இருப்பதாக நம்பி, வைத்தியநாதர் என ஜுர தேவரை அழைத்து அப்பெயரே கருவறைத் தெய்வத்திற்கு வந்து இருக்க வேண்டும் என்று கருதலாம்.

ஸ்தலபுராணம் பல இடங்களில் வைத்தியம் பார்த்த நிகழ்ச்சியினைக் குறிப்பதால், இப்பெயர் 17ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டது என உணர்கிறோம்.

படிக்காசு வைச்சான் பட்டி

ஸ்ரீவில்லிபுத்துருக்கு அருகில் 'படிக்காசு வைத்தான் பட்டி' என்ற கிராமம் உள்ளது. இவ்வூரே சிவன் கோயிலுக்குத் திருநாமத்துக் காணியாக நிலம் அளிக்கப்பட்ட

இடமாகும். இன்றளவும் இவ்வூரில் உள்ள நிலங்கள் இந்த சிவன் கோயிலுக்கு உரித்தாய் உள்ளனவாம்.

ஜடாவர்மன் வீரபாண்டியன் காலத்தில் சுமார் பூலித்தேவன் (கி.பி. 1316) இவ்வூர் 'கொற்ற மங்கலமான திருக்கற்றளீஸ்வர நல்லூர்' என வழங்கப்பட்டுள்ளது. (518/1926) ஆனால், அதே காலத்தில் இறைவன் படிக்காசு வைத்த நாயனார் என்ற பெயர் பெற்று உள்ளமையையும் அறிகிறோம். திருமல்லி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் உடையார் திருக் கற்றளீஸ்வரம் உடைய நாயனார் படிக்காசு வைத்தருளிய நாயனார் கோயிலில் பதியான மூலப்பட்டுடைய... கள் தேவகன்மிகளுக்கும் ஸ்ரீமாஹேஸ்வர கண்காணிகளுக்கும் வெண்பைக்குடி நாட்டுக் கொற்றமங்கலமான திருக்கற்றளீஸ்வர நல்லூர் என்பவை கல்வெட்டு வரிகள்.

சுமார் 1346ம் ஆண்டுக்குச் சரியான சடையவர்மன் பராக்கிரம பாண்டியனின் கல்வெட்டில் இவ்வூர், "வித்தியாதர நல்லூரான படிக்காசு வைத்த நல்லூரில் பழந்தேவதானம் திருவிடையாட்டம்" என்று குறிக்கிறது.(527/ 1926) கொற்றமங்கல திருக்கற்றளீஸ்வர நல்லூர், வித்யாதர நல்லூரான படிக்காசு வைத்த நல்லூர் என மாற்றம் பெற்றுள்ளது.

அடிக்குறிப்புகள்:

1. பக்கம் 13: வில்லியனால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டதால் வில்லிபுத்தூர் என்று வழங்கப் படுகிறது. (ஸ்ரீவில்லிபுத்தூர் தல மகாத்மியம்)
2. ஆராய்ச்சித் தொகுதி - மு. இராகவையங்கார்.
3. ஆராய்ச்சித் தொகுதி மு. இராகவையங்கார், பக். 188
3. ஆராய்ச்சி - மலர் 3 இதழ் 2 - பக். 222.

4. அரசியல் வரலாறு

சங்க காலத்தில் புறநானூற்றுப் பாடல் 177-ல் காரியாதி மல்லிகிழான் என்பவன் குறிப்பிடப்படுகிறான். ஸ்ரீவில்லிபுத்தூர்க் கல்வெட்டுகளில் மல்லிநாட்டு பிரம்மதேயம் ஸ்ரீவில்லிபுத்தூர் என்று குறிப்பிடப்படுகிறது.

இன்று ஸ்ரீவில்லிபுத்தூர் அருகில் மல்லி என்ற சிறு ஊர் உள்ளது. மல்லி என்பது தஞ்சைப் பகுதியில் உள்ள மல்லியம் என்று உ.வே. சாமிநாதய்யர் குறிப்பிடுகின்றார். ஔவை துரைசாமி பிள்ளை தனது புறநானூற்று உரையில் 'மல்லி' ராமநாதபுர மாவட்டத்தில் உள்ளது என்று குறிக்கின்றார். பல்லவர் காலத்துக்கு முற்பட்ட ஊர்களின் சொற்பட்டியல் தயாரித்த திரு.சுப்ரமணியம் அவர்களும் இராமநாதபுர மாவட்டத்தில் உள்ளதாக ஊகிக்கின்றார்.

சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் "குடநாடு" என்பதும் 'குடநாட்டு எயினர்' என்பதும் மேற்கு என்னும் பொருளில் வழங்குவதாகும். காட்டு நிலத்தைச் சார்ந்தது 'வெய்ம்மான்' என்னும் காட்டுமான். காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை ஆகும். இம்முல்லை நிலத்தில் வாழ்ந்த மான்களைப் பிடித்துத் தந்தவர் எயினர் எனப்படுவர். இன்றும் இவ்வில்லிபுத்தூர், மலையைச் சார்ந்து உள்ள காட்டு நிலமாகிய முல்லை நிலத்தினைச் சார்ந்ததாகும். இவ்வூருக்கு அவ்வப்போது வரும் பழையரே இப்பாட்டின்கண் கூறப்படும் குடவராக இருக்கலாம். இப்பழையரே பனியர் என இந்நாட்டடவரால் வழங்கப்படுகின்றனர் எனக் கூறப்படும் ஔவை. சு.துரைசாமிப் பிள்ளையின் கூற்றும் சரியாகும். (புறம் 177 உரை). எவ்வாறாயினும் மலைநாட்டைச்சேர்ந்த மல்லிகிழானைப் பாடியிருப்பதால் இம்மலை நாட்டைச் சார்ந்த இந்த மல்லியே அது என்பது உணரப்படும். மல்லிநாதர் என்பவர் சமண தீர்த்தங்கரர் 24 பேரில் 19வது தீர்த்தங்கரர் ஆவார். இவரது பெயரில் மல்லி என்ற நாட்டுப் பெயர் ஏற்பட்டிருக்கலாம். நரிப்பாறைப் பகுதி சமணப் படுக்கைகளும் இங்கு சேர்ந்து கருதத்தக்கவை.

முற்காலப் பாண்டியர் காலத்தில்:

முற்காலப் பாண்டியர் ஆட்சி தென் தமிழகம் முழுதும் பரவியிருந்தது. கடுங்கோன் முதல் வந்த அரசர்கள் தென்பகுதியைத் தங்கள் ஆட்சியில் தக்க வைத்திருந்தனர். அவர்களது ஆட்சியில் ஸ்ரீவில்லிபுத்தூரும் அடங்கியிருந்தது. ஸ்ரீவில்லிபுத்தூரில் கோச்சடை மாறனின் கல்வெட்டு ஒன்றுள்ளது. (இ.க.ஆ. அறிக்கை 285/1966) இதில் பராங்குசப் பேரேரியும், ஆன்மர் நாட்டுக்கிழான் பேரால் ஏற்படுத்தப்பட்ட அருளாக்கி மடை, அருளாக்கி கால் ஆகியவையும் குறிப்பிடப்படுகின்றன. இக்கல்வெட்டு முற்காலப் பாண்டியன் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் காலம் என்றும் இரண்டாம் இராஜசிம்மன் காலம் என்றும் கருதப்படுகின்றது. இதில் பராங்குசப் பேரேரி என்று பாண்டிய மன்னன் பேரில் ஓர் ஏரி

குறிப்பிடப்படுவதும் அரசியல் அதிகாரி பேரில் மடை கால் முதலியவை குறிப்பிடப் படுவதும் பாண்டியர் கால நீர்ப்பாசன வசதிகள், ஏற்பாடுகளையும் நன்கு விளக்குகின்றன. மேலும் சோழன் தலை கொண்ட கோவீரபாண்டியனது கல்வெட்டும் இங்கு காணக் கிடைக்கின்றது. (தெ.இ.க. தொகுதி XIV எண் 91) இவ்விரு கல்வெட்டுகளிலும் ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைந்திருந்த மகாசபை மேற்கொண்ட செயல்முறைகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

சோழராட்சியில்

முதலாம் பராந்தகன் (கி.பி. 907-954) மதுரையும், ஈழமும் வெற்றிகொண்டவன். அவன் காலத்தில் பாண்டியராட்சி நிலைகுலைந்தது. அவனைத் தொடர்ந்து சோழராட்சி பாண்டியப் பகுதியில் நிலைத்தது எனினும் அவ்வப்போது பாண்டியமன்னர்களின் வழிவந்தவர்கள் எழுச்சி பெற முயன்று கொண்டே இருந்தனர். சோழர் ஒவ்வொருவரும் பாண்டியரை வெற்றி கண்டதாகக் கூறிக் கொள்வதே இதற்குச் சான்றாகும்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் சோழர் காலக் கல்வெட்டுகள் அதிகம் இல்லை. குலோத்துங்க சோழனின் 38வது ஆட்சியாண்டுக் கல்வெட்டு மட்டுமே உள்ளது. எனினும் அதில் "ராஜராஜ டாண்டி நாட்டு மதுராந்தக வளநாட்டு மல்லிநாட்டு விக்கிரமசோழ சதுர்வேதி மங்கலமாகிய ஸ்ரீவில்லிபுத்தூர்" என்று வரும் குறிப்பிலிருந்து இராஜராஜன், மதுராந்தகன் விக்கிரமசோழன் ஆகிய சோழ மன்னர்களது ஆட்சிக்கவனம் ஸ்ரீவில்லிபுத்தூரில் பதிந் திருத்ததை நாம் உணர்கிறோம். அவர்களது காலங்களில் நாட்டுப் பிரிவுகளும் சதுர்வேதி மங்கல அமைப்புகளும் ஸ்ரீவில்லிபுத்தூரில் அமைக்கப்பட்டதையும் அறிகிறோம்.

பிற்காலத்தில்

பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகள் நிறைய உள்ளன. [அம்மன்னர்களது பெயர்களும் எத்தனை கல்வெட்டுகள் என்பதும் ஏற்கெனவே தொகுத்துக் கொடுக்கப் பட்டுள்ளன.] குலசேகர பாண்டியன் (கி.பி. 1132–1166) காலத்தில் நிகழ்ந்த தாயாதிச் சண்டை யில் பாண்டியர்களுக்காக இலங்கை மன்னர்களும், சோழர்களும் எதிர்த்துக் கொண் டுள்ளனர். இவர்களால் பாண்டி மண்டலத்தில் ஒரு உள்நாட்டுப் போராக அது நடந்தது. அதில் ஸ்ரீவில்லிபுத்தூரிலும் ஒரு போர் நிகழ்ந்ததாக அறிகின்றோம்.[1]

மகாபலிவாணராயர்கள் ஆட்சியில் பல மன்னர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். இவர்களது காலத்தில் பல கட்டடப் பகுதிகள் ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில்களில் உண்டாயின. சிறந்த வைணவர்களாக, ஆண்டாளிடம் ஈடுபாடு கொண்டவர்களாக இவர்கள் விளங்கியுள்ளனர். இவர்கள் திருமாலிருஞ்சோலை என்னும் அழகர் மலையைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்தவர்கள். இங்கு காணப்படும் மன்னர்கள் 'இராஜமீசர் கண்டன்', 'மதியாத மன்னர் மணவாளன்' 'சமர கோலாகலன்', 'வீர அஞ்சுகன்', 'புவனேகவீரன்'. 'பூபால கோபாலன்', 'பட்டமானங் காத்தான்' என்ற சிறப்புப் பெயர்களுடன் குறிப்பிடப்படுகின்றனர். திருமாலிருஞ் சோலை நின்றானான மாவலி வாணாதிராயன், சுந்தரத்தோளுடையானாகிய வாணாதிராயன், உறங்காவில்லி தாசனாகிய வாணாதிராயன் என்ற பெயர்களிலும் மன்னர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரில் கொடைகளும், பணிகளும் செய்து சிறப்புப் பெற்றுள்ளனர்.

கி.பி. 1476 முதல் 1548 முடிய ஆண்ட சர்வபௌமன் சுந்தரத் தோளுடையான் மகாவலி வாணாதிராயன் என்பவன் ஆண்டாள் கோயிலின் 3 பாகங்களையும் பிரித்துக் கட்டி புதுப்பித்து உள்ளான். இதனைக் குறிக்கும் கல்வெட்டுகள் 3 உள்ளன. (ARE. 568, 583, 584/1926).

விஜயநகரப் பேரரசர்களில் சதாசிவராயரின் கல்வெட்டுகள் கி.பி. 1550ஐச் சார்ந்தவை இரண்டுள்ளன. இவை சூடிக் கொடுத்த நாச்சியாருக்கு விஜயநகர அரசியல் தலைவர்கள் செய்த நிவந்தத்தைக் குறிக்கின்றன. திருவாங்கூர் மன்னர் 'பூதலவீர உதயமாத்தாண்டவர்மன் திருப்பாப்பூர் மூத்த திருவடி' என்பவர் ஸ்ரீவில்லிப்புத்தூர் சூடிக்கொடுத்த நாச்சியாருக்கு கொடைகள் வழங்கியமையும், அவர் கொண்டிருந்த பற்றும் இங்குள்ள கல்வெட்டுகளால் தெரிய வருகின்றன.

திருமலை நாயக்கரும் ஸ்ரீ வில்லிபுத்தூரும்

திருமலை நாயக்கர் ஸ்ரீ வில்லிபுத்தூர் நாச்சியார் மீது மிக்க பற்றுக் கொண்டவர். அங்கு வந்தால் தங்குவதற்கென ஒரு மாளிகை அமைத்துள்ளார். இவரது திருவுருவச் சிலைகள் இங்கு மூன்று இடங்களில் உள்ளன. 1) வைத்தியநாத சுவாமி கோயில் கல்யாண மண்டபம், 2) ஆண்டாள் கோயில் வெள்ளிக்கிழமை கொறடு, 3) நாடக சாலைத் தெரு வசந்த மண்டபம் ஆகிய பகுதிகளில் உள்ளன. இன்றும் ஆண்டாள் கோயில் தேர் நிலை சேர்ந்தவுடன் திருமலை நாயக்கர் சிலைக்குப் பரிவட்டம் கட்டப்படுகிறது. அவர் விடுத்த கட்டளைகளின் சார்பாக இன்று பரிவட்ட மரியாதை செலுத்துவதாகக் கோயில் அர்ச்சகர்கள் சொல்கிறார்கள். திருமலை நாயக்கர் மூவரைய தேவனுக்குக் கொடுத்த பட்டயம் ஒன்று வத்திறாயிருப்பில் உள்ளது. அதனில் அவர் கொடுத்த நிலம் வீரத் திற்காகக் கொடுத்தது சுட்டப்படுகிறது.

கட்டபொம்மன் – பூலித்தேவன் – பாளையக்காரர் ஆட்சியில்

நாயக்கர் ஆட்சிக் காலங்களில் பாளையங்களாகப் பிரிக்கப்பட்ட பாண்டி நாட்டில் திருநெல்வேலிப் பகுதியில் நாயக்கர் காலப் பாளையக்காரர்கள். இவர்கள் மேற்குப் பிரிவினைச் சார்ந்தவர்கள் (Western Bloc) கிழக்குப் பிரிவினைச் சார்ந்தவர்கள் (Eastern Bloc) என இரண்டு பிரிவுகளாக இருந்தனர். மேற்குப் பிரிவுப் பாளையக்காரர்கள் பூலித் தேவனின் கீழ்ப்படிந்து அவன் சொற்படி நடந்து வந்தனர். அதேபோல் கீழ்ப்பிரிவு பாளையக்காரர்கள் நாயக்க மரபைச் சார்ந்து கட்டபொம்மனின் ஆட்சியின்கீழ் இருந்தனர். கர்னல் ஹெரான் என்பவரை மாநில ஆங்கிலேய அரசு மறவர்களுடன் நட்புறவு வைத்துக் கொள்ள வேண்டாம் என்றும் தேவையானால் தக்க படைபலம் கொண்டு தாக்கிப் பணத்தை வசூலிக்கும்படியும் கட்டளையிட்டு அனுப்புகிறது. வரிவசூல் செய்ய நவாப் முஸஃபர்கான் படையுடன் மார்ச் 25, 1755 திருநெல்வேலிக்கு கர்னல் வருகை தருகிறார். வரும்போது பல பாளையக்காரர்கள் தங்களின் அடிமைத்தனத்தைப் பறைசாற்றும் வகையில் தாங்கள் திறைப்பணத்தைக் கொடுப்பதாக நேரிலும் சொல்லி யிருக்கின்றனர். சிலர் தங்களின் பிரதிநிதிகளையும் அனுப்பி அடிபணிவதை அமைதியாகச் சொல்லி விடுகின்றனர்.

பூலித்தேவனும் வீரபாண்டியனும் தங்களின் படைகளின் சார்பாகப் புரட்சிக் கொடி உயர்த்தியதை அறிகிறோம்.[1]

ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோட்டையில் தாக்குதல்

தங்களை நவாப் ஆளுவதை விரும்பாததைக் காட்ட பூலித்தேவன் விரும்பினான். அக்காலங்களில் ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோட்டை முபாஃஸ்கானின் கீழ் இருந்த அவன் மருமகன் அப்துல் மாலிகான் என்பவனின் பராமரிப்பில் இருந்தது. இதனை வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்ட பூலித்தேவன் ஸ்ரீவில்லிபுத்தூர் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றினான்.

கி.பி. 1775ல் கர்நாடக முஸ்லீம்களின் ஆட்சி முகம்மது அலியின் மகன் அமீரூஸ் உமராவின்கீழ் இருந்து வந்தபோது பாளையக்காரர்கள் வரி செலுத்தாமல் சாக்குப் போக்குக் காட்ட ஆரம்பித்தனர்.

சிவகிரி வன்னியர் கட்டபொம்மனுடன் இணைந்து கொண்டு அவர்களுக்குத் தொல்லைகள் கொடுப்பதில் ஈடுபட்டனர். ஆனால் மீண்டும் சில நாள்கள் கழித்து சிவகிரி வரகுண ராம வன்னியர் ஜேம்ஸ் எடிஸ்ட்ன் தலைமையில் இருந்த ஸ்ரீவில்லிபுத்தூரைக் கைப்பற்றினார் என்ற செய்திகள் கிடைக்கின்றன. (இச்செய்திகள் H.S. Pate அவர்களால் எழுதப்பெற்று 1917ல் வெளியிடப்பட்ட Thirunelveli District Gazettier ல் பதியப் பட்டுள்ளது.)

அடிக்குறிப்புகள்:

1. பாண்டியர் வரலாறு - தி.வை. சதாசிவப் பண்டாரத்தார்.

5. கொடைகள்

கல்வெட்டுகளில் அந்தணர்

இவர்களுக்கு 'மறைவாணர்', 'வேதம் வல்லார்' என்னும் அடைமொழிகளும் உண்டு.

" திருவில் பொறி மறைவாணன் பட்டர்பிரான்" (பெரி. திருமொழி. 4:1:10)

" செஞ்சொல் மறையவர் சேர் புதுவைப் பட்டன்" (பெரி. திருமொழி. 1:4:10)

போன்ற பெரியாழ்வாரின் குறிப்புகள் இதனை உணர்த்துகின்றன. ஸ்ரீவில்லிபுத்தூர்க் கல்வெட்டு களில் காலத்தால் முந்தைய கல்வெட்டான சுமார் பத்தாம் நூற்றாண்டின் சடையன் மாறன் கல்வெட்டில் வில்லிபுத்தூர் மஹா ஸபையினர் குறிக்கப்படுகின்றனர். பிராம்மணர்கள் நிரம்பிய கிராமங்களில் குறிப்பாகச் சர்வமானியமாக வரியில்லாமல் அமைக்கப்பட்ட கிராமங்களில் அமைந்த குழுக்களுக்குச் சபை என்றே பெயர் வழங்கப்பட்டது .

பிரம்மதேயம்

அந்தணர்களுக்கு கொடுக்கப்படும் நிலங்கள் பிரம்மதேயம் என்று அழைக்கப் படும். என்கிறார் இரா. நாகசாமி.[1] சோழன் தலை கொண்ட வீரபாண்டியனின் கல்வெட்டில், (S.I.I. Vol XIV No. 91) மல்லிநாட்டு பிரம்மதேயம் வில்லிபுத்தூர் மகா ஸபையோம்" என்று அழைக்கப்படுகிறது. ஆக இவ்வூர் பிரம்மதேயத்தின் மகாசபை என்ற நிலையினைக் காண்கிறோம்.

சதுர்வேதி மங்கலம்

இவ்வில்லிபுத்தூர் சோழராட்சியில் சதுர்வேதிமங்கலமாக மாறிய நிலையைக் குலோத்துங்கனின் 38வது ஆண்டுக் கல்வெட்டு குறிக்கிறது. (இ.க.ஆ.அ. 551/1926)

" ராஜராஜ பாண்டி நாட்டு மதுராந்தக வளநாட்டு மல்லி நாட்டு விக்கிரம சோழச் சருப்பேதி மங்கலத்து வட பெருங்கோயில் ..." என்று அழைக்கப்படுகிறது. நான்கு வேதம் ஓதும் சதுர்வேத பிராம்மணர்களும் இவ்வூரிலிருந்த தன்மையைக் காண்கிறோம்.

பின்னரும் அந்தணர் சிறப்புப் பெற்றிருந்த தன்மையை ஸ்ரீவில்லிபுத்தூர் சங்கர நாராயண ஸ்ரீகண்ட பட்ட வாஜபேயாஜி என்பவன் பகவதி விண்ணகரமாம் ஆண்டாள் கோயிலில் எடுத்த செய்தி மூலம் அறியலாம்.

தற்காலத்தும் கோயிலைப் பொறுத்த வரை பிராம்மணரும், சாத்தாத ஸ்ரீவைணவர் களும், ஊரைப் பொறுத்தவரை சிறுபான்மையும் பிராம்மணர் இருக்கும் தன்மையை

யையும் காண்கிறோம். மற்ற சமுதாயங்கள் பற்றிப் பெரும்பாலும் கல்வெட்டுகள் மூலம் உணர முடியவில்லை என்றாலும், தற்காலத்துப் பிள்ளைமாரும், மறவரும், நாயுடுகளும், பறையர் பள்ளர், போன்றோரும், கிருஸ்துவ முஸ்லீம்களும் கலந்து வாழும் இவ்வூரில் தன்மையைக் காண்கிறோம்.

கல்வெட்டுகள் தரும் மரபுகளும் நம்பிக்கைகளும்

சந்திபூசை

'சந்திபூஜை செய்தல்' என்ற மரபு இவ்வூர்க் கல்வெட்டுகளில் சிறக்கக் காணப் படுகிறது. ஸ்ரீவல்லப பாண்டியன் பெயரால் 2 சந்தி பூசைகளும் (521, 525/1926) வீரபாண்டியன் (1296–1342) பெயரால் ஒரு சந்தியும் (520/1926) பராக்கிரம பாண்டியன் (1315–47) பேரால் ஒரு சந்தியும் (527/1926) நிகழ்த்தப்பட்டுள்ளன. திருவாங்கூர் மன்னன் கி.பி. 1534ல் தன் பெயரால் சூடிக்கொடுத்த நாச்சியாருக்கு சந்தி பூசை ஏற்பாடு செய்துள்ளான். ஸ்ரீவல்லபன் சந்தியில் அமுதுபடி சாத்துப்படிக்கான வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு வல்லபன் சந்தி ஸ்ரீ வல்லபதேவனின் காலத்திலும் மற்றொன்று வீரபாண்டியன் காலத்திலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வீரபாண்டியன் பெயரால் ஏற்படுத்தப் பட்ட சந்தியில் நாள்தோறும் அமுதுபடியோடு கறியமுது, திருப்பரிவட்டம் திருமாலை, இலையமுது, எண்ணெய்க்காப்பு ஆகிய சாத்துப்படிகளுக்கும் வழிவகை செய்யப்பட் டுள்ளன. வீரபாண்டியன் வடவாரி நாட்டுப் பைம்பொழிலில் இருந்தவாறு இந்தச் சந்தியை ஏற்படுத்தி ஆணை பிறப்பித்துள்ளான். பராக்கிரம பாண்டியன் தனது பெயரால் சந்தி ஏற்படுத்த ஆணை பிறப்பித்ததாகவே கல்வெட்டில் குறிப்பிடுகின்றான். பொதுவாக மன்னர்களது பெயரால் ஏற்பட்ட சந்திகள் அரசர்களாலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதையும், அவை பொதுவாக அமுதுபடி சாத்துபடி ஆகியவற்றிற்காக ஏற்படுத்தப் பட்டுள்ளன என்றும் அறிகிறோம்.

உண்பித்தல்

நாடுகளுக்குள்ளும் மக்களுக்குள்ளும் ஊர்களுக்குள்ளும் இன்றுபோல் அன்று தொடர்பில்லாத காலமாகும். ஆக விருந்து (புதுமை–புதியவர் என்பது பொருள்) புரத்தல் என்பது மக்களிடம் ஒரு நல் வழக்கமாக இருந்து வந்துள்ளது. ஊரை நம்பி ஆண்டாளை தரிசிக்க வருபவர்களுக்கு உணவளித்தல் என்பது ஸ்ரீவில்லிபுத்தூரைப் பொறுத்தவரை பழக்கமாக இருந்து உள்ளது. சிறப்பாக பிராமணர்களுக்கு உணவளித்ததைப் பற்றியே பல கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. 'வீரமார்த்தாண்டன் மடம்' என்ற பெயரில் திருவாங் கூர் மன்னன் மடம் ஒன்று நிறுவி 33 பிராமணர்களுக்கு உணவளித்ததையும் (T.A.S. Vol IX No. 3& 4 of 1106) தினமும் 12 பிராமணர்களுக்கு உணவளிக்க ஜடாவர்மன் வீரபாண்டியன் காலத்தில் செங்குடி நாட்டு வெய்யூர் நல்லமன் கொடை கொடுத்ததையும் (A.R.E. 581/1926) புனர்வசு நட்சத்திரத்தில் பிறந்த பெருமாள் வல்லபதேவன் என்பவன் ஒரு மடத்தில் 24 வைணவர்களுக்கென உணவளித்ததையும் (A.R.E.531/1926) கல்வெட்டுகள் குறிக்கின்றன.

உத்தான துவாதசி

ஏகாதசியில் விரதம் காப்பதும் மறுநாள் சூரியோதயத்தில் உணவுண்பதும், உணவளிப்பதும் வைணவர்களிடையே வழக்கமாக உள்ளதாகும். அதற்குத் துணையாக உணவு அந்நாளில் அளிக்கப்பட்டதனை ஒரு கல்வெட்டு சுட்டுகிறது. (571/1926) இது வீரப் பிரதாப சதாசிவ மகாராயரின் 1550 ஆண்டுக் கல்வெட்டு ஹரிதளப் பிரிய அப்பராசா என்பவரின் மனைவிக்கு (பசவம்ம தேவியார்) புண்ணியமாக இக்கட்டளை நிறைவேற்றப் பட்டதாகக் குறிக்கப்படுகிறது. இதற்காக பெற்றாரேந்தல் என்னும் கிராமத்தினைத் தானமாக அளித்து உள்ளனர். அதன்மூலம் வருவாயில் இருந்து தினமும் 5 தளிகையும் 25 அமுதுபடியும், அதற்கு 3 தயிரமுதும் நெய்யமுது, கறியமுது வகை 2, பச்சடி 2, உப்பு, மிளகு, கடுகு, சுக்கு, ஏலம், ஆகியவற்றுடன் இலையமுது 15, அடைக்காயமுது 10 ஆகியவைக்கும் சாத்துப்படிக்கும் இவை கொடுக்கப்பட்டுள்ளன.

அடுக்களைப் புறங்கள்

இறைவனை தரிசிக்க வருவோருக்கும், திருக்கோயில் பணிபுரியும் பணியாளர் களுக்கும் என இறைவனுக்காக ஆக்கப்பட்ட உணவு படைக்கப்பட்டு வழங்கப்படும் வழக்கம் உண்டு. இறைவனின் திருமடைப்பள்ளியில் தயார் செய்யப்படுவதற்காக வழங்கப்பட்ட நிலங்கள் அடுக்களைப் புறங்கள் எனப்படும்.

ஒரு கல்வெட்டு குலசேகரச் சதுர்வேதி மங்கலம் என்பதன் பகுதியை அடுக்களைப் புறமாக விட்டதைக் குறிக்க, மற்றொன்று குலசேகரதேவனின் கல்வெட்டு முன்பு கொடுத்ததைக் கீழ்க்கண்டவாறு சேர்த்துக் கொடுத்ததைக் குறிக்கிறது.

"..... இன்னிலம் ஒரு மாவும் நம்முடைய செல[வுக்கு] குடுக்க வேணுமென்று நம் குமாரன் குலசேகரதேவன் நம்முடன் சொல்லுகையில் நம்முட அடுக்களைப் புறத் தோடே சேத்து ஒருமாவும் ....." (563/1926) எனக் குறிப்பிடப்படுகிறது. 1453ம் வருடம் உறங்கா வில்லிதாசன் ஆன மகாபலி வாணாதிராயன் என்பவன் 'திடியன்' என்னும் திருவரங்க நல்லூரினை அடுக்களைப் புறமாகக் கொடுத்ததைக் குறிக்கிறது.

இப்படிக் கொடுக்கப்பட்டு உணவாக்கப்படுபவை கல உணவு என்று அழைக்கப்படும்.

இந்தக் கல உணவு கோயில் அலுவலர்களுக்குக் கொடுக்கப்பட்டதனை,

"நம் கலச்சோற்றில் நாழி அரிசிச் சோறும் பெற்று" என்று குறிக்கப்படுவதைக் காண்கிறோம். (564/1926) இது உள்வாசல் காப்பவனுக்குக் கொடுக்கப்பட்டது. மேலும் மேலெழுத்து (565/1926) மண்டபக் கணக்கு(570/1926) திருமுகவெழுத்து (580/1926) போன்றோர் கலச்சோறு பெற்ற செய்தியினைக் கல்வெட்டுகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

புண்ணியமாகட்டும் .....!

பலர் தங்களுக்கும் தங்களைச் சார்ந்தவர்கட்கும் இருக்கும் குறைகள் தீர வேண்டும் என்று வேண்டிக் கொள்வதைப் போல, தங்களைச் சார்ந்தவர்கட்கும்,

தங்களுக்கும் நல்லவை நடக்க வேண்டும் என்னும் நம்பிக்கையின் அடிப்படையில் இறைவனை வேண்டி பல நல்லவை நிகழ்ந்துள்ள தன்மையைக் கல்வெட்டுகள் மூலம் நாம் உணர முடிகிறது.

திருத்தேரும் கொடிமரமும் புண்ணியமாக அமைக்கப்பட்டதை கொடிமரக் கல்வெட்டு "சகாப்தம் [illegible]மேல் சொல்லா நின்ற விஷு [illegible] ஆவணி மீ உயச: க[ர்]த்தாக்களுக்கு புண்ணியமாக வடபத்திரசாகி கொடிமரம், திருத்தேர் பிரதிஷ்டை கால குட்டியா பிள்ளை குமாரன் திருஞானசம்பந்த பிள்ளை உபயம்" என்று குறிப்பிடுகிறது. (559/1926) கொடி மரத்தில் போர்த்தப்பட்டுள்ள பித்தளைத்தகட்டில்,

" சஹாப்தம் கொல்லம் விஷு வருடம் ஆவணி யஅ உ கருத்தாக்களுக்கு புண்ணியமாக வடபத்திர சாயிக்கு கொடி மரம் பிரதிஷ்டை காலகுட்டியா பிள்ளைமகன் திருஞான சம்பந்தம் பிள்ளை உபயம்" என்று கல்வெட்டு உள்ளது.

திருவேங்கட சமுத்திரம் என்ற ஊரைக் கிருஷ்ணப்ப நாயக்கர் புண்ணியத்திற் காகக் கொடுத்ததைக் குறிக்கிறது ஒரு கல்வெட்டு (593/1926). இது விஸ்வநாத நாயக்கரால் தான இறையிலியாகக் கொடுக்கப்பட்டு உள்ளது. வீரப்பநாயக்கர் புண்ணியத்திற்காக கிருஷ்ணன் கோயில் கட்டப்பட்டு வேம்பு நாட்டு வேப்பங்குளம் கொடுக்கப்பட்டதைக் கல்வெட்டு ஒன்று குறிக்கிறது. (591/1926).

தலக்காவல் முறை

'காவல்முறை' என்பது கோயில், கிராமம், ஒரு குறிப்பிட்ட ஆளுகைப்பகுதி, ஊர், நிலம், மக்கள் போன்றவற்றைக் காவல் காப்பதற்குப் பயன்படுத்துகின்ற சொல்.

நமக்குத தொன்மை இலக்கியங்களாய்க் கிடைத்துள்ள சங்க இலக்கியங்களுள், புறநானூறு 37ம் பாடல் ஊர் காப்பவர் பற்றிக் குறிப்பிடுகிறது .

காவல்முறை நான்கு வகைப்படும் என்பர். அவை 1) அரசு காவல், 2) நாடு காவல் 3) தேச காவல், 4) தல காவல் என்பன. ஆனால் இதற்குப் முந்தைய காலக் காவல்முறையை ஆய்ந்த நடனகாசிநாதன் (DAMILICA) அவர்கள் சோழ பாண்டியரின் கல்வெட்டுகளில் பாடிகாவல், பெரும்பாடிகாவல், நாடு காவல் ஆகியவற்றைக் குறிப்பிடு கிறது என்றும், விஜயநகரர் காலக் காவல் முறை பாடிகாவல், அரசு சுவந்திரம் ஆகிய வற்றைக் குறிக்கிறது என்றும் கூறியுள்ளார்.

இங்கு கிடைக்கும் கல்வெட்டுகள் தலக் காவல்முறையைச் சுட்டுவனவாக உள்ளன. இவற்றில் பெரும்பாலும் கோயிலைக் காவல் காப்பது கோயில் நிலங்களை நிர்வகிப்பது என்னும் முறையில்தான் அமைந்துள்ளன.

உள்வாசல் காவல் :

இன்றைக்கு ஆண்டாள் கோயிலும் வடபத்ரசாயி கோயிலும் பகலில் சாத்தாணிகள் இருவர் காவல் காக்கின்றனர். முன்னால் காவல் காப்பவர் பொன்வாசல் என்றும் அழைக்கப்படுகின்றார். இரவில் உள்வாசல் அடைக்கப்பட்ட பிறகு வெளிவாசலையும் மற்ற பகுதிகளையும் வேற்று இனத்தவர் இருவர் காவல் காக்கின்றனர். வைத்தியநாதசாமி

கோவிலில் "இரண்டு பேர் மெய்க்காவல் என்ற முறையில் இருவர் காவல் காக்கின் றனர். ஆண்டாள் கோயிற் கல்வெட்டில் (564/1926) கி.பி. 1473ஆம் ஆண்டினைச் சார்ந்த சடையவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் உள்வாசல் காக்க ஒரு காவலனை நியமிக்கிறான். அதற்காக 2 மா நிலம் நிவந்தமளிக்கிறான். தன் கலச்சோற்றில் நாழி அரிசிச் சோறும், மாதம் ஒன்றுக்கு ஒரு பணமும் ஒரு கோட்டை நெல்லும் அளிக்கிறான் என்று கூறப்பட்டுள்ளது. இந்த உள்வாசலே இன்று சாத்தாணிகளால் காவல் காக்கப்படுகிறது.

இக்கல்வெட்டு "நங்குமாரன் குலசேகரதேவனுக்கு யாண்டு யிர[ண்டாவதி] னெதிர் நாற்பத்திரண்டாவது . . . . நங்குமாரன் குலசேகரதேவன் மகன் பராக்கிரம பாண்டியதேவனுக்கு தன்னை நம் வீட்டில் உள்ளால் வாசல் காக்கும் படியும் கற்பித்து" எனக் கூறுகிறது.

இப்பராக்கிரம பாண்டியன் கி.பி. 1473 முதல் 1506 வரை ஆண்டிருக்கிறான். இவன் தந்தை குலசேகர தேவன் என்பவன் கி.பி. 1429 முதல் 1473 வரை ஆண்டுள்ளான். அதே பராக்கிரம பாண்டியன் தந்தை குலசேகரன் தானா இதைக் கொடுத்துள்ளான் என எண்ணலாமா? அப்படியானால் மன்னன் மகன் வாசல் காப்பானா? என்பது வியப்பாக உள்ளது.

இதே அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன் கல்வெட்டு ஒன்றில் நிலம், வீட்டு மனை, வேறு சில சுதந்திரம் கொடுத்து ஒரு பிராம்மணர் கோயில் மேலெழுத் தாக நியமிக்கப்படுகிறான். இப்பதவி மேலாளர் அல்லது அதிகாரம் பெற்ற நபர் போன்ற தாகும். மண்டபக் கணக்கு (570/1926) திருமுகவெழுத்து (580/1926) போன்ற பணி யாளர்கள் நியமிக்கப்பட்டதையும் குறிக்கிறது. தலக்காவல் முறையில் நியமனம் செய்யும் போது நிலம், மனை, வீடு போன்றவற்றை இறைவன் பெயருக்குக் கொடுத்து இறைவன் உத்தரவாக இடும் போக்கும் கல்வெட்டில் காணப்படுகிறது. அவ்வாறு நிரந்தரமாக இறைவன் பெயருக்குக் கொடுக்கும்போது அடுத்தடுத்து பணிபுரிய வருபவர்களுக்கு உதவும் என்ற நோக்கமாக இருக்கலாம்.

திருப்பணிகளும் சீர்குலைவுகளும்

கல்வெட்டுகள் வாயிலாகப் பல காலங்களில் நிகழ்ந்த திருப்பணிகளும் திருப்பணி களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடுகளும் நமக்குத் தெரியவருகின்றன.

பகவதி விண்ணகரம் பாணர்கள் காலத்தில் நாச்சியார் கோயிலாக மாற்றம் பெற்றதை ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. எம்மண்டலமுங் கொண்டருளின ஸ்ரீகுலசேகர தேவனின் சிவன் கோயில் கல்வெட்டு ஒன்று,

> " இவ்வூர் ஸ்ரீ பராங்குசப் பேரேரியில் இந்நாயனார் தேவதானமான நிலத்திலே இக்கோயிலுக்குத் திருப்பணிப்புறமாக இருபத்தேழாவது யாண்டு முதல் ....." (526/1926)

எனத் திருப்பணிக்கு நிலங்கள் விட்டதைக் குறிக்கிறது.

சேனைமுதலியார் சாவகாச அந்தராளப் பித்தியிலே இருந்த கல்வெட்டு புறச் சாந்தனையிலே மறைகியால் அதனைப் படியெடுத்து வெட்டியதைக் குறிக்கின்றது ஒரு கல்வெட்டு (533/1926). 1547ஆம் ஆண்டின் குலசேகர தேவனின் கல்வெட்டு ஒன்று ஒவ்வோர் ஆண்டும் நிகழும் வருடாந்திரத் திருப்பணிகளுக்காக கங்கைகொண்டானில் நிலங்கள் அளித்ததைக் குறிக்கிறது (537/1926)

இவற்றைத் தவிர 15ம் நூற்றாண்டின் எழுத்தமைதியுடைய கல்வெட்டு ஒன்று சிவன் கோயிலில் உள்ள நாச்சியாரைக் குறிக்கிறது. ஆனால் இன்றுள்ள தேவியார் சந்நிதி 16ம் நூற்றாண்டுக் கட்டடக் கலைப்பாணியில் உள்ளதையும், அதன் கல்வெட்டுகள் மதிற்சுவர்களில் துண்டுகளாக இருப்பதையும் தன்மையையும் காணும்போது ஏதோ சீர்குலைவு ஏற்பட்டுத் திருப்பணி நிகழ்ந்துள்ளதை உணர முடிகிறது.

மறை அழிந்தது:

ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள ஒரு கல்வெட்டு பிரம்மதேய ஊரில் மறை அழிந்து போனதையும் மீண்டும் நிறுவப்பட்டு "சேரனை வென்ற பாண்டியன் சதுர்வேதி மங்கலம்" என்று நாமகரணமிடப்பட்டதையும் குறிக்கிறது (533/1926)

"திருமல்லி நாட்டு பிரம்மதேயம் ஸ்ரீவில்லிபுத்தூர் ப்ராஹ்மணர் பேரையூர் பரமபடுகை இவ்வூர் ஸம்ஹரித்து வேதமும் சாஸ்த்ரமும் போய் பாத்யாதாக" என்கிறது அக்கல்வெட்டு.

எனவே மன்னன் அந்த பிரம்மதேயத்தினை மாற்றியமைத்து 108 சதுர்வேதி களுக்கும் வேதவிருத்தியாக பங்கு 4, ஸ்ரீ ராமாயண விருத்தியாக பங்கு 1, மகாபாரத விருத்தியாக பங்கு 1, ஜோதிஷ விருத்தி பங்கு 1, வைத்ய விருத்தி பங்கு 1, பணிசை விருத்தி பங்கு 6 ஆக 122 விருத்திகள் ஏற்படுத்தி, வடபெருங் கோயிலுடையானுக்கும், சூடிக் கொடுத்தருளிய நாச்சியாருக்கும், பெரியாழ்வாருக்கும், திருவிடையாட்டமாக்கிக் கொடுத்ததனைக் கல்வெட்டால் அறிகின்றோம்.

நிலத்தகராறு

ஆண்டாள் கோயிலுக்கும், சிவன் கோயிலுக்கும் கி.பி. 1556ஆம் ஆண்டு நில எல்லை தொடர்பாகத் தகராறு வர அதனை "...என்று சொல்லுகையில் அவர்கள் கல்வெட்டுப் படித்தும் கணக்கின் படிக்கும் அவர்களுமுண்டான ஞாபகங்களும், விசாரித்த யிடத்திலும் நாலுவகையிலும் கண்டவற்....." (582/1926) என்று கூறித் தீர்த்து வைத்ததனைச் சுட்டுகிறது. தீர்த்து வைப்பதற்குக் கல்வெட்டுச் சான்று பயனானமையும் இங்கு எண்ணத்தக்கது.

வரிவிலக்கும் கட்டுப்பாடும்

வீரப்ப நாயக்கன் சவரத் தொழிலாளிகளுக்கு வரிவிலக்கு அளித்ததனை ஒரு கல்வெட்டு (586/1926) குறிப்பிடுகிறது. இது அவர்களின் சேவைக்காகவா என்பதை

உணர முடியவில்லை. ஒரு கல்வெட்டு (588/1926) பறையர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகளைக் குறிக்கின்றது. கிருஷ்ணன் கோயில் கல்வெட்டு (594/1926) வண்ணார்களுக்கு அளிக்கப்பட்ட மான்யத்தைக் குறிக்கின்றது.

மிகும் மேளம்

மேளக்காரர்களின் உதவி திருவிழா சமயங்களில் மிகுந்த தேவையாக இருந்த தனால் அவர்களின் குழுவில் 45 பேர் இருந்ததை 50 பேராக உயர்த்தியதை ஒரு கல்வெட்டு குறிக்கிறது. 50 பேர் முன்பு இருந்த கோயிலில் இன்று, குறைவாக இருப்பதும் காலப்போக்கில் ஏற்படும் சமுதாய மாற்றத்தை உணர்த்துகிறது.

மற்றொரு கல்வெட்டு கோயில் பணத்திலிருந்து வாங்கும் இலுப்பை எண்ணெய், நெய் போன்றவை கோயில் காரியம் தவிர பிற காரியத்துக்குப் பயன்படுத்தக்கூடாது என்று கி.பி.1657ல் காங்கேயன் வெளியிட்ட உத்தரவைக் குறிப்பிடுகிறது. (589/1926)

இறைவன் பெயரில்

மன்னன் நேரடியாகவே கொடை கொடுத்து உள்ளான். ஆனால் அதனை அவன் கொடுத்ததாகச் சொல்ல விரும்பவில்லை. அக்கோயிலில் குடி கொண்டிருக்கும் ஆண்டவன் கொடுத்ததாகச் சொல்லுகின்றான். கடவுளரே கொடுத்தால் யாருக்குக் கொடுப்பார்? அடியாருக்குக் கொடுப்பார். அம்முறையில் அமைந்து உள்ளன சில கல்வெட்டுகள்.

"திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன்" என்பது மரபு. ஆகவே – கடவுளின்– மகேசனின் பிரதிநிதியாகிய மன்னன் தான் கொடுக்கும் கொடையை அம்மகேசனின் பெயரிலேயே செய்துவிட எண்ணியிருக்கலாம்.

'கோதாய சாசனம்' என்றும், (564, 580/1926) 'வேங்கட நாதஸ்ய சாசனம்' என்றும், (574/1926) 'ரெங்க ராஜஸ்ய சாசனம்' என்றும், (563 /1926) 'ரெங்க நாதஸ்ய சாசனம்' (577/1926) என்றும், வடமொழி ஸ்லோக அமைப்பில் யார் கொடுத்தார்கள் என்பது தெரிய அமைக்கப் பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகளில் சக வருடங்கள் குறிக்கப்பட்டுள்ளன. கடவுளர் ஒரு மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும் போது கொடுக்கப்பட்ட தானம் என்பதையும் இவை குறிக்கின்றன.

"சேரனை வென்றான் மண்டபத்து சுந்தர பாண்டியன் பந்தற்கீழ் அரியராயன் கட்டிலிலிருந்து கொடை கொடுத்ததை ஒரு கல்வெட்டு குறிக்கிறது. (577/1926)

"நம் வீட்டில், (கோதை வீட்டில்) முத்துடைத்தாம நிரைதாழ்ந்த பந்தற்கீழ் அழகிய மணவாளன் பள்ளிக் கட்டிலில் இருந்து" கொடுத்ததை மற்றொன்று குறிக்கின்றது. (580/1926)

"சுந்தர பாண்டியன் மண்டபத்து வேம்பூருடையான் பீடத்து குலசேகரன் முத்தின் பந்தற்கீழ் இருந்து நம் சடகோபன் பாட்டுச் கேளா நிற்க" என்று வேறொன்று குறிக்கிறது (289 /1965–66) இதே போல, திருக்கண்ணபுரத்தில் உள்ள ஒரு கல்வெட்டும் சடகோபன் (நம்மாழ்வார்) பாட்டுக் கேட்டு நின்ற தன்மையைச் சுட்டுகின்றது.

இவை கடவுளர் கொடுப்பது போல் வெட்டப்பட்டுள்ளதால். மன்னப் பெயரும் வர வேண்டும் என்ற காரணத்தினால், அவன் பெயரைச் சொல்வது ஒரு மரபாக உள்ளது. அம்மரபில் கடவுள் மன்னனைத் தோழன் என்று அழைத்தல் உண்டு.

ஸ்ரீவில்லிபுத்தூர்க் கல்வெட்டுகளில், "நங்குமாரன் குலசேகர தேவனுக்கு" (563/1926) "நங்குமாரன் திருநெல்வேலிப் பெருமாள்" (570/1926) "உறங்காவில்லிதாசன் ஆன மகாபலி வாணாத ராயர் சீர்மை ஆன (577/1926). "நம்குமாரன் பராசர பராக்கிரம பாண்டிய தேவன் ஆளான அச்சுதராய முதலியாரும்" என்ற முறையில் மன்னர்களது பெயர்கள் கையாளப்பட்டுள்ளன.

இறைவனே கொடுத்த கொடையாயக் குறிக்கும் கல்வெட்டுகள் ஸ்ரீவில்லிபுத்தூரில் கி.பி.1423, 1453, 1473, 1556, 1561 ஆகிய ஆண்டுகளில் பொறிக்கப்பட்டவை. இவை முன்னதாகக் குறிப்பிட்டபடி குலசேகரன், திருநெல்வேலிப் பெருமாள், பராக்கிரம பாண்டியன், உறங்காவில்லி தாச மகாபலி வாணராயன் ஆகிய மன்னர்கள் தாங்கள் கொடுத்தது என்றில்லாமல் இறைவனே கொடுத்ததாகச் சாசனங்களைச் சிறப்புப் பெறச் செய்தவை. இவை குறிப்பிடும் நிவந்தங்கள் இரு வகையானவை. ஒன்று அடுக்களைப்புற ஏற்பாடு, மற்றொன்று திருவாசல் காவல், திருமேலெழுத்து, மண்டபக் கணக்கு ஆகிய ஊழியர்களை நியமித்ததாகும்.

இக்கல்வெட்டுகளில் சொல்லாட்சிகள் இறைவனே பேசுவது போல அமைக்கப் பட்டுள்ளன. குலசேகரன் காலக் கல்வெட்டில் ஸ்ரீ கிருஷ்ணபட்டனுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் ஏற்கெனவே இறைவனுக்கு அடுக்களைப்புறமாக விட்ட நிலத்தோடு சேர்த்து அரசன் இறையிலியாக்க நினைக்கின்றான். கல்வெட்டு இறைவன் ரங்கநாதரே கொடுத்தது என்பது போல் சொற்களும் வாக்கியங்களும் கீழ்வருமாறு கையாளப் படுகின்றன.

"குடுத்த நிலம் ஒருமா இந்நிலம் ஒரு மாவும் நம்முடைய அடுக்களைப் புறத்தோடே சேர்த்துவிட்டு நம்முடைய செலவுக்கு குடுக்க வேணுமென்று நங்குமாரன் குலசேகரன் நம்முடன் சொல்லுகையில் நம்முடைய அடுக்களைப் புறத்தோடே சேத்து இந்நிலம் ஒரு மாவும் தான இறையிலியாகக் கையாளும்படி கற்பித்த அளவு" (563/1926)

இதே போல பராக்கிரம பண்டியன் விடுத்த ஓலைப்படி உலகுடைய பெருமாளுக்கு திருமுகவெழுத்துக் காணியாட்சியும் அதற்காக நிலமும் மனையும் கொடுக்க வேண்டும். அதனை இறைவனே தருவதாக வரும் கல்வெட்டு கீழ்க்காணும் அமைப்பில் உள்ளது.

"வில்லிப்புத்தூரில் நம்வீட்டில் முத்துடைத்தாம நிறை தாழ்ந்த பந்தல்கீழ் அழகியமணவாளன் பள்ளிக் கட்டிலில் இருந்து நாமும் நம் வடபெருங்கோயில் பள்ளி கொண்டருளிய பரமசுவாமிகளும் நம் அடியாருக்கு ஓலக்கம் கொடுத்து இருக்கச் செய்தே . . . ." அனைத்துக் கொத்தில் உள்ளாரும் நங்குமாரன் பராக்கிரம பாண்டிய தேவன் ஆளான அச்சுதராய முதலியாரும் நம்முடன் சொல்லுகையில்"..... உலகுடைய பெருமாளுக்கு திருமுகவெழுத்துக்கு காணியாட்சை குடுக்கச் சொல்லி நங்குமாரன் பராக்கிரம பாண்டியதேவன் ஓலை வருகையில், நாங்குடுக்கக் கற்பித்த இறையிலி யாகக் கொடுத்த நிலம் ஒரு மாவும்" (580/1926)

இதுபோல சொற்களும் வாக்கியங்களும் இறைவனது பெயரில் வரும் வண்ணம் அமைக்கப்பட்டிருப்பது சிறப்பாகும். எனினும் இக்கல்வெட்டுகளில் மன்னனின் ஆட்சியாண்டுகள் குறிப்பிடப்படுவதும்,இறுதியில் ஓலை, சாசனம் எழுதியவர்கள் கையெழுத்திடுவதும் ஓர் இறைவன் கொடுக்கும் கொடை மற்ற தெய்வங்களாகிய சந்திரன் சூரியன் உள்ளளவும் நிலைக்க வேண்டுமென்று குறிப்பதும் சாசன வழக்காறு களின் நீரோட்டத்திலேயே அமைக்கப்பட்டதை நன்குணர்த்துகின்றன.

திவ்யபிரபந்தச் சொல்லாட்சிகள்

இறைவன் கொடுத்ததாக உள்ள மற்றொரு கல்வெட்டில் இறைவனைத் துதிக்கப் பாடப்பட்ட திவ்யப்பிரபந்தச் சொற்றொடர்கள் மிகுந்து காணப்படுகின்றன. இக் கல்வெட்டில் (577/1926) பெரியாழ்வார் திருமொழியி லிருந்தும், நாச்சியார் பாடல்களி லிருந்தும் சில அடிகளையும், தொடர்புகளையும், பாடல்களையும் அப்படியே எடுத்துக் கையாண்டுள்ளனர். இக்கல்வெட்டு உறங்காவில்லிதாச மாவலி வாணராயன் காலத்தது ஆகும். கி.பி. 1453ல் வெட்டப்பட்டது. இதில் காணப்படும் அடிகள் நாச்சியார் திருமொழி யில் 1 :10, 13: 8, 10: 3, 11 : 8, 11 : 9, 11 : 10 ஆகிய பாடல்களிலும் பெரியாழ்வார் திருமொழி யில் 4, 9, 6 ஆகிய பாடல்களிலும் காணப்படுபவையாகும்.

"பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும்
புதுவையர் கோன் விஷ்ணுசித்தன் கோதை"
" நல்லார்கள் வாழும் நனியரங்கப் பெருநகருள் "
" புண்ணிற் புளிப்பெய்தாற் போலவும்"
"புறம் போல் உள்ளுங்கரியான் "

இப்படி இறைவனது பெயரில் கல்வெட்டு வெட்டுவதும், இறைவன் புகழ்பாடும் பாடல்களையும் அடிகளையும் கல்வெட்டில் நிறையச் சேர்ப்பதும் அன்றைய மன்னர்களின் பக்திப் பெருக்குக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளன.

---

1. யாவரும் கேளிர், பக். 288

6. விழாக்கள்

விழவுடையணி நாட்கள்

விழாக்கள் பண்டு தொட்டு மனிதனுடன் ஒட்டிப் பிறந்தவை. அந்த விழாக்கள் ஸ்ரீவில்லிபுத்தூரில் இன்றுள்ள நிலையிலிருந்து மாறுபட்டுக் கல்வெட்டுகளில் எவ்வாறு உள்ளன என வரலாற்று ரீதியாகக் கொடுத்தல் வேண்டி இன்றுள்ள விழாக்களை வரிசை யாகக் கூறி இடையே வரும் கல்வெட்டுச் செய்திகளை இணைத்துத் தரப்படுகின்றது.

விழாக்கள் இரண்டு வகைப்படும். அவை 1) நாள்தோறும் நிகழும் பூசைகள், 2) ஓர் ஆண்டில் ஒரு குறிப்பிட்ட நாளில் வந்து செல்லும் விழாக்கள் என்பவையாகும். இவை வைணவக் கோயில் ஒட்டியும், சிவன் கோயில் ஒட்டியும் நிகழ்ந்தன. ஆண்டாள் கோயிலிலும் பெருமாள் கோயிலிலும் விழாக்கள் ஒன்றாக இணைந்தே நிகழ்வதால் அவை இரண்டையும் ஒன்றாக இணைத்தே சொல்லலாம். சித்திரை மாதந் தொடங்கிப் பங்குனியில் திருக்கல்யாணத்துடன் முடிவது வரை இங்கு விளக்கப்படுகின்றன.

நித்தியப் பூசைகள்

வைகானச ஆகமத்தைப் பின்பற்றும் இத்திருக்கோயிலில் நாள்தோறும் ஆறு காலப் பூசை நடைபெறுகிறது. விஸ்வரூபம் என்பது காலை 6.30–7.00 மணிக்குள் நிகழும் ஒன்றாகும். காலை சந்நிதி திறக்கப்பட்டவுடன் ஏகாந்த திருமஞ்சனம் (ஏகாந்த திருமஞ்சனம் என்பது நீர்விட்டு அபிஷேகம் பண்ணாமல் நீரினைத் தெளித்து அபிஷேகம் செய்வதாக பாவிப்பது ஆகும். அது நடந்து தீபாராதனை முடிந்தபிறகு பிரசாதங்கள் அனைவருக்கும் கோஷ்டியாக வழங்கல் முறையாகும். இதனை அடுத்துக் காலை 7.30 – 8.00க்குள் காலைச் சந்தி நிகழ்கிறது. உற்சவர்களுக்குத் திருமஞ்சனம் நடந்து அர்ச்சனை, தீபாராதனை போன்றவை நிகழ்கின்றன. இந்தக் காலச்சந்திக்கு விட்ட கட்டளையை ஒரு கல்வெட்டு குறிக்கின்றது. இது வீரபாண்டியன் சந்தி என அழைக்கப்பட்டது.

"நாச்சியார்க்கு நம்பேரால் உஷா பூசையாக நடக்கக் கற்பித்த வீரபாண்டியன் சந்திக்கு ஸ்ரீ நாளொன்றுக்கு அமுதுபடி"க்கு 10 மா நிலம் தானம் கொடுக்கப்பட்டதாக அறிகின்றோம் (569/ 1926).

"பூர்ண பாத்திரம் " என்னும் நித்திய வழிபாடு பகல் 10 மணியிலிருந்து 12 மணிக்குள் நிகழ்கின்றது. பின்னர் நடையடைக்கப்படுகிறது. மீண்டும் மாலை 4 மணி சுமாருக்கு நடை திறக்கப்பட்டு சாயரட்சை ஆராதனம் நிகழ்கின்றது. இது சுமார் 6.30 மணியிலிருந்து 7.30 க்குள் நிகழ்கிறது. இரவு 7.30 லிருந்து 9 மணிக்குள் அத்தாளம் என்னும் பூசை நடைபெறுகிறது. உடனடியாக அரவணைத் தளிகை நடந்து நடை அடைக்கப் படுகின்றது.

சுமார் 1553ம் ஆண்டு சாளுவ நரசிம்மராஜ உடையார் காலத்தில் நாச்சியார் கோயிலில் நித்ய நைவேத்யங்களுக்கும் விசேஷ உத்சவத்துக்கும் நிலமளிக்கப்பட்ட செய்தி சொல்லப்படுகிறது (575/ 1926). கி.பி. 1557ம் ராமராஜவிட்டல தேவ மகாராசரின் அதிகாரிகளான பசவன நாயக்கர் திம்மப்ப நாயக்கர் கேள்வி மகமையில் திருவந்திக் காப்பு உற்சவத்தின் போது கற்பூரம் சார்த்துவதற்குக் கொடுக்கப்பட்ட செய்தியையும் ஒரு கல்வெட்டு சுட்டுகிறது. (585/ 1926) சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியன் கல்வெட்டில் பழைய நாச்சியார் கோயிலான பகவதி விண்ணகர ஆழ்வார்க்கு நித்ய நியம பூசைகளுக்குக் கட்டளைகள் விட்ட நிலத்தினைக் கல்வெட்டுகள் சுட்டுகின்றன. இக்கட்டளை விட்ட சங்கர நாராயண ஸ்ரீகண்ட வாஜ பேயா ஜீயாரே அக்கோயிலை எடுப்பித்தவர் ஆவார். (546, 547/ 1926)

திருவாங்கூர் மன்னனான சங்கர நாராயண வென்று மண் கொண்ட பூதல வீர வீர உதைய மார்த்தாண்ட வர்மன் திருக்குறுங்குடி அருகினில் உள்ள வள்ளியூர் சிவ பிராம்மணன் சைவ சிகாமணி பட்டன் வீட்டில் இருந்தபோது, ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிருக்கும் நாச்சியார் சூடிக் கொடுத்தருளிய நாச்சியார்க்கு வீரமார்த்தாண்டன் சந்திக்கும் ஒவ்வொரு மாதமும் ஸ்வாதி திருநாளிற்கு திருமஞ்சனம் நடத்தி எழுந்தருளும் வகைக்கும் நிலம் தானம் அளித்துள்ளான். (TAS Vol IX 3 & 4 of 1106)

கி.பி. 1543ஆம் ஆண்டு ஜடாவர்மன் பெருமாள் குலசேகர தேவன் தன் பிறந்த நாளான திருவோண நாளில், வடபெருங் கோயில் பள்ளி கொண்டருளிய பரமசாமிகள் திருமஞ்சனத்துக்கும், திருவீதியெழுந்தருளுவதற்கும், தேங்காய்த் தண்ணீர் அஞ்சனத் துக்கும் தேங்காய் 1ம் நெய்யமுது உழக்கும், பரிவட்டத்துக்கு சேலை இரண்டும், இலையமுது 300, அடைக்காய் 200 சிறப்பு அமுதுபடி 12, கறியமுது 500, உப்பமுது 4, மிளகமுது 2, நெய்யமுது நாநாழி, தயிரமுது, பழவமுது, திருவீதியில் எழுந்தருளும் சாத்துப்படி திரவியம் பந்தத்துக்கு நெய் 4 மரக்கால் ஆகியவை மாதந்தோறும் நடக்க வேண்டுமெனவும், பட்டியலிட்டுக் கொடுத்துள்ளான். அதற்காக நிலங்கள் அளித்த செய்தி யையும் கல்வெட்டு குறிக்கிறது. (535/ 1926)

மாதத் தொடர் திருவிழாக்கள்

இத்தலைப்பில் இன்று நடக்கும் மாத திருவிழாவின் பட்டியல்களும் விபரங்களும் ஆங்காங்கே கல்வெட்டுச் சான்றுடன் தொகுக்கப்படுகின்றன.

பூச்சாத்து உற்சவம்

சித்திரை மாதம் நடைபெறும் இந்த வசந்த உத்சவம், நீராழி மண்டபத்தில் நிகழ்கிறது. வெய்யிற் காலமானதலால், நீராழி மண்டபத்தில் பல பூக்களும் நடுவில் ஆண்டாளும் ரெங்கமன்னாரும் காட்சி அளிக்க 10ம் நாள் சித்திராப் பௌர்ணமி அன்று இவ்விழா நிறைவுறும். இந்நாள்களில் ஆண்டாளுக்கு வெள்ளுடை அணிவித்து, சந்தனக் காப்பு இடப்படும் தினமும் அரையர் சாத்துமுறை நிகழ்வுறும். சாத்துமுறை என்பது இறைவனின் பேரில் பாடப்பட்ட பாடல்களை சார்த்துதல் எனப்படும். அதனைப் பாடி

அபிநயித்துக் காட்டுவர். 10ம் நாள் சேஷ வாகனத்தில் ஆண்டாளும் குதிரை வாகனத்தில் மன்னரும் எழுந்தருளித் திருவீதி வலம் வந்து வையாளி நடைபெறும்.

"வையாளி" என்பது வைணவ சம்பிரதாயக் கோயிற் சடங்குகளின் ஒன்று. இவ்வையாளி ஒவ்வோர் ஊரிலும் கிடைக்கும் இட அகலத்தினையும் நேரத்தினையும் பொறுத்து நிகழ்கிறது.

ஆண்டாள் ஓரிடத்தில் நின்றிருக்க, வசந்த காலத்தில் மகிழ்வு தாங்காத– பங்குனி யில் திருமணம் முடித்துக் கொண்டவர் – மன்னார் வேகவேகமாக ஓடிச்சென்று மீண்டும் பழையபடி அவ்விடத்திற்கு வேகவேகமாக ஓடிவருவார். இவ்வாறு 3 முறை ஓட்டம் நடைபெறும். முடிந்த பின்னால் மீண்டும் சந்நிதி யடைவார்.

ஸ்ரீரங்கத்திலும் இவ்வையாளி முறை இறைவனை அசைத்து அசைத்துத் தூக்கிச் செல்வதன் மூலம் நிகழ்கிறது. ஸ்ரீரங்க ஓவியத்தில் இறை உலாச் செல்லும்போது முன்னதாகக் குதிரைகள் ஆடிக்கொண்டு செல்கின்றன. இதனை வையாளி முறை என்றும் போசளர்கலை தமிழகத்தில் அவர்களது ஆட்சியின் பலனாக நுழைந்தது என்றும் கூறுவர். பின் குதிரைகள் ஆடுவது மாறிப் பல்லக்கு அல்லது இறைவனைச் சுமப்போர் ஆடுவதாக இன்று நிகழ்கிறது. (South Indian Studies II)

உடையவர் உத்சவமும் இம்மாதத்திலேயே திருவாதிரையில் முடிவுறுமாறு சந்நிதியில் நிகழ்வுறும்.

கோதாஸ்துதி உத்ஸவம் அல்லது பால் மாங்காய் உத்ஸசம்

இது வைகாசி மாதம் நிகழ்வுறும் ஓர் உற்சவமாகும். சித்திரை மாதத்தில் பூவாக இருந்தவை இக்காலத்தில் பூம்பிஞ்சுகளாக இருக்கும். அவற்றை இறைவனுக்குப் படைப்பதால் "பால்மாங்காய் உற்சவம்" என மாங்காய்க்குச் சிறப்பு கொடுத்து சொல்லப் படுகிறது.

நாடக சாலைத் தெருவில் உள்ள வசந்த மண்டபத்தில் ஆண்டாளும் ரெங்க மன்னாரும் எழுந்தருளியிருந்து 10வது நாள் வைகாசிப் பௌர்ணமியன்று முடிவுபெறும். பெரியாழ்வாரின் பரம்பரையில் வந்த வேதபிரான் பட்டர்கள் வேதாந்த தேசிகரால் இயற்றப்பட்ட கோதாஸ்துதி என்ற வடமொழிப் போற்றியைச் சார்த்துவர். அதனால் கோதாஸ்துதி உற்சவம் எனப் பெயர் பெற்றது. 10ம் நாள் திருவாராதனம் நடந்து பூம்பிஞ்சுகளாக உள்ளவற்றால் உண்டாக்கப்பட்ட கலவைப் பிரசாதம் அனை வருக்கும் வழங்கப்படும். இம்மாதத்திலேயே நம்மாழ்வார் உற்சவமும் நடைபெறுகிறது.

பெரியாழ்வார் உற்சவம் :

ஆனி மாதம் ஸ்வாதி நட்சத்திரத்தில் பெரியாழ்வார் பிறந்ததால் 10 நாள்கள் உற்சவம் நடைபெறும். 10 நாள்களிலும் பெரியாழ்வார் விதவிதமான வாகனங்களில் எழுந்தருளி எல்லா வீதிகளிலும் வலம் வருவார்.[1]

"முப்பழ விழா"என்னும் இதுவும் இம்மாதத்திலேயே ஆனிப் பௌர்ணமியன்று நிகழ்கிறது. சித்திரையில் பூத்தது, வைகாசியில் காய்த்து ஆனியில் கனிகிறது. அதனை ஆண்டவனுக்கு - ஆண்டாள் ரங்கமன்னாருக்கு – ஒரு நன்றிக் கடன் செலுத்தும் வகையில் செய்யும் திருவிழாவாகவே முதல் படைப்பை முதல்வனுக்கு அளிக்கும் விழாவாகக் கொண்டாடப்படுவதாகக் கருதலாம்.

திருத்தேர்

ஆடி மாதம் திருத்தேர் நடைபெறுகிறது. முதலில் அங்குரார்ப்பணம். அங்குரார்ப் பணம் என்பது தேங்காய் தொட்டு, தொட்ட காரியம் துலங்க வேண்டும் என்பதற்காக வும், அக்காரியம் சிறக்க ஊரில் உள்ள அனைத்துச் சமூகத்தினரையும் அழைத்து அவர்களையும் தேங்காய் தொட வைப்பது முறையாக உள்ளது. ஆனால், தற்காலத்தில் நிருவாக அலுவலர் அந்த சரகத்தினர் வசிக்கும் பகுதிகளுக்குச் சென்று வெற்றிலை பாக்கு வைத்து அழைக்கும் பழக்கம் நிலவுகிறது. அந்த மரியாதை ஒரு குறிப்பிட்ட சமூகத்தினருக்குக் கிடைக்காவிடில் அவர்கள் தேர் வடம் பிடிக்க வருவதில்லை. அடுத்து த்வஜோரோகணம் என்னும் கொடியேற்றம் நிகழ்கிறது.

பஞ்ச கருட சேவை

ஐந்தாம் நாள் ஐந்து கடவுளர்களும் மக்களுக்கு திருவீதிகளில் எழுந்தருளி உலா அளிக்கின்றனர். ஸ்ரீ ஆண்டாள் பெரிய அன்னவாகனத்திலும் பெரியாழ்வார் சின்ன அன்ன வாகனத்திலும் வீதி உலா வருவர். இவ்வூர் ரங்கமன்னாரும், வடபத்ர சயனரும், ஸ்ரீ சுந்தரராஜப் பெருமாளும்[2] திருவண்ணாமலையிலிருந்து சீனிவாசப் பெருமாளும், திருத்தண்காவிலிருந்து திருத்தண்கால் அப்பனும் என ஐந்து பேரும் ஐந்து கருட வாகனங்களில் காட்சி தருவர். எல்லா நாட்களிலும் வீதி உலாவில் முன்னே ரங்க மன்னார் செல்ல பின்னால் ஆண்டாள் தொடர்வது வழக்கம். ஆனால் இன்று மட்டும் சற்று மாறுபட்ட வகையில் முன்னால் ஆண்டாள் செல்கிறாள்.

உள் அலங்காரம் முடிந்து கோபுரவாசல் கதவு திறந்ததும் பெரியாழ்வார் முதலில் வெளியே வருகிறார். இது எதிர்சேவை என அழைக்கப்படுகிறது வந்தவுடன் திரும்பி நின்று கொண்டு பாதை எல்லாம் சரியாக இருக்கிறதா என முன்னும் பின்னும் நடந்து பார்த்துக் கொண்டு பின்னால் தன் குழந்தையாகிய ஆண்டாளை தலையாட்டி வாயென அழைக்கிறார். ஆனால், பக்தர்கள் மனதில் இது குழந்தையின்பால் அக்கறை கொண்ட தாய்ப் பாசத்துடன் ஒப்பிட்டுச் சொல்லப்படுகிறது. தலையாட்டலுக்காக வாகனத்தை இரண்டு முறை குலுக்குகின்றனர். உடன் ஆண்டாள் வெளிவர, ஐவரும் ஒருவர் பின் ஒருவராகத் தொடர அனைவரும் மாடவீதிகள் வழியே சென்று கந்தாடை வீதிவழியே கோபுர வாசலை அடைந்து மீண்டும் ரத வீதிகளில் பவனி வருகின்றனர்.

சயனக் கோலமும் நெல் அளப்பும்

7ஆம் நாளன்று ஆண்டாளும் ரெங்க மன்னாரும் அருகில் உள்ள கிருஷ்ணன் கோயிலுக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். பகலில் வீதி சுற்றிக் களைத்த இருவரும் ஊர்க் கோடியில் உள்ள தங்களின் இல்லத்தில் இளைப்பாறுகின்றனர். ஆண்டாளை அமர வைத்த கோலத்தில் அழகுபடுத்தி, அரங்கரை மடியில் படுக்க வைக்கின்றனர். இந்தக் கண்கட்டு வித்தையைத் தங்களின் கை வண்ணத்தால் பட்டர்கள் செய்கின்றனர். சயனத் திருக்கோலம் காணப் பல ஊர் மக்களும் வருகின்றனர். **இந்த அலங்காரம் குறிப்பிட்ட இந்நாள் உற்சவத்தில் பல நூறு ஆண்டுகளாக நடப்பதாக அர்ச்சகர்கள் தெரிவிக்கின்றனர்.**

பின்னர் இரவு கண்ணாடிச் சப்பரத்தில் வடக்கு மாடவீதிக்கு இருவரும் வருகின்றனர். அங்கு தான் முன்பெல்லாம் ஒரு மண்டபத்தில் தனக்குச் சேர வேண்டிய நெல்லினை அளந்து எடுத்துக் கொள்வது நிகழுமாம். ஆனால் இன்று அது – அக்காட்சி தேய்பிறையாகி – சாஸ்திர சம்பிரதாயமாக மண்டபத்தில் அமர்ந்து பேருக்கு நெல் அளப்பு நிகழ்ந்து முடிவதாகக் கூறப்படுகிறது.

8ஆம் நாளில் அருகில் உள்ள ஏழு ஊரினைச் சார்ந்த நாயக்கர்கள் உபயம் நடைபெறுகிறது.

9ஆம் நாளில் பெரிய தேரினில் ஆண்டாளும் ரங்கமன்னாரும் எழுந்தருளியிருக்கத் தேர் வடம் பிடித்து இழுப்பது நிகழ்கிறது. தேர் மிகப் பெரிய தேர் ஆதலால் தேர்நிலை வந்து சேர வாரக் கணக்கிலும் ஆகுமாம். தேரில் இருக்கும்போது ஆண்டாளுக்கும் மன்னாருக்கும் பூவாலேயே அலங்காரம் செய்யப்படுகிறது. தேர் நிலைக்கு வந்த அன்று வெள்ளிக்கிழமை கொறட்டில் உள்ள திருமலை நாயக்கருக்குப் பரிவட்டங்கட்டி மரியாதை செலுத்தப்படுகிறது. அன்று அரையரால் முத்துகுறி உற்சவமும் பின்னர் தீர்த்தவாரி விடாயாற்றி போன்றவை நிகழ்கின்றன.

இவ் ஆடி மாதத்தில் நடக்கும் திரு ஆடித் திருநாள் பற்றிக் கல்வெட்டு ஒன்று குறிக்கிறது. ஆனால் அதனில் தேர் பற்றிய செய்திகள் இல்லை. முதன்முதலாகத் தேர் பற்றிய செய்தி கி.பி. 1700ல் தான் குறிக்கப்படுகிறது. அதனில் தேர் ஒன்று கொடுக்கப் பட்டதாக குறிக்கப்படுகிறது. முதலில் குறித்த கல்வெட்டில் இத்திருவாடிப் பூரத் திருநாளிற்குத் கொடுத்தவற்றையும் அதற்காக மாங்குடி ஆன சுந்தரத்தோள் நல்லூரைக் கொடுத்ததையும் பார்க்கிறோம்.

உறியடி :

ஆவணி மாதத்தில் ஸ்ரீ ஜெயந்தி அன்று ஸ்ரீ ஆண்டாள் ரங்க மன்னாரும், வடபெருங் கோயிலுடையானும், கிருஷ்ணர் ஆகிய மூவரும் புறப்பாடாகிச் சென்று வழுக்கு மரமும் உறியடி உற்சவமும் நிகழும். அன்றும் உறியடி முடிந்தபிறகு நாலாயிரத்தில் இருந்து கிருஷ்ணன் தொடர்பான நிகழ்ச்சிகள் வரும் பாடல்கள் அரையரால் சேவை சாதிக்கப்படுகிறது. இதே மாதம் வடபெருங் கோயிலுடையானுக்குப் பவித்ரோத்ஸவமும் நடைபெறுகிறது. 7ஆம் தினத்தில் கருடோத்ஸவமும் பெரியாழ்வார் அன்ன வாகனத்திலும் எழுந்தருளி காட்சி தருவது வழக்கம்.

படியேத்தம்

புரட்டாசி மாதம் ஆண்டாளுக்கு முக்கியமான உற்சவம். நவராத்திரி உற்சவம் ஆகும். ஆண்டாளுக்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகைப்பட்டு சார்த்தப்பட்டு, திருவீதிஉலா நிகழ்வுறும். பின்னர் அரையரின் படியேத்தம் நிகழ்வுறும். பின்னர் சந்நிதியில் எழுந்தருளும்போதும் படியேற்றம் நிகழ்வுறும். 'படியேற்றம்' என்பது ஒரு குறிப்பிட்ட தத்துவத்தின் அடிப்படையில் அமைந்ததாகலாம். படி+ஏற்றம் எனப் பொருள் கொண்டால் தம்பிரான்களால் இயற்றப்பட்ட – பெருமாள் தொடர்பான – பாடல்களை இயற்றுவித்தல், பாடுதல் எனப் பொருள்படும். இயற்றல் → ஏற்றல் → ஏற்றம். இது நடைபெறும் முறை யினாலும் பெயர் வந்து இருக்குமோவென எண்ணத் தோன்றுகிறது. ஆண்டாள் தூக்குவோரின் தோளிலிருக்க அரையர் குனிந்து மண்டியிட்டுக் கொண்டு, மேலிருக்கும் ஆண்டாளுக்கு கீழிருந்து (படியிலிருந்து) பாடல்களைப் பாடுவதைக் குறிக்கலாம். அடுத்த முறை தோளினிலிருக்கும் ஆண்டாளைச் சற்று கீழே இறக்கி பிடிப்பர். அரையர் மீண்டும் குனிந்து சேவை சாதிப்பார். இம்மாதிரி 3 தடவை நிகழும். ஒவ்வொரு தடவையும் உயர்த்திப் பிடிக்கப்படுவதால் படியேற்றம் என்ற பெயர் பெற்று இருக்கலாம்.

விஜயதசமி அன்று மன்னார் குதிரை வாகனத்தில் பாரிவேட்டை நிகழ்த்துகின்றார். இது வெள்ளறை மண்டபத்தில் நிகழ்கிறது.

இம்மாதமே கோவிந்தராஜப் பெருமாள் திருவண்ணாமலையில் 4 சனிக்கிழமை இரவுகளில் மலையைச் சுற்றி ஊர்வலமாக வருதல் உண்டு. இதனை நாட்டுப் பாடலும் சுட்டுகின்றது.

ஊஞ்சலும் பச்சை வடமும்

ஆண்டாளுக்கு ஐப்பசி மாதத்தில் ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். முதல் ஆறு நாள்களிலும் ஏழாம் நாள் திருப்பூசத்தன்றும் ஊஞ்சலில் அமர்த்தி நாலாயிர சேவை நடைபெறும். பௌர்ணமியன்று வடபெருங் கோயில் உடையானுக்கு ஊஞ்சல் நடைபெறும். தீபாவளியன்று, அர்ச்சகர், விண்ணப்பக்காரர் என்னும் அரையர் முதலான முதல் தீர்த்தக்காரர்களும், கைங்கரியக் காரர்கள் முதலானவர்களும் ஆண்டாளுக்கு காணிக்கை செலுத்துவர். ஆண்டாள், ரங்க மன்னார், பெரியாழ்வார், கருடாழ்வார் அனைவரும் வெள்ளிக்கிழமை கொறட்டில் எழுந்தருள, மற்ற ஆழ்வாராதிகள் கீழே எழுந்தருளி யிருப்பர். எல்லாரும் எழுந்தருளியிருக்க ஆண்டாளுக்குப் பச்சை வடத் திருப்பரி வட்டம் சார்த்தி வணங்கச் செய்து திருவீதியுலா வருவர். பச்சை திருப்பரிவட்டத்தில் அலங்கரிக்கப்பட்டு வணங்கப்படுவதால் இது பச்சை வட உற்சவம் என்னும் சிறப்புப் பெயரால் வழங்கப்படுகிறது.

கைசிக ஏகாதசி 108 போர்வைப் பாடு

கார்த்திகை மாதம் நிகழ்வுறும் இவ்விழா "கோபால விலாசம்" என்ற பகுதியில் நிகழ்வுறும். ஆண்டாளுடன் ரங்க மன்னாரும் அன்று இங்கு எழுந்தருள்வர். ஒவ்வொரு பாசுரமும் சாதித்து முடிந்த பிறகு ஒவ்வொரு போர்வையாக இந்த உற்சவர் மேல் போர்த்தப் படும். முடிவில் முகம் மட்டும் தெரியுமாறு இருக்குமென்கின்றனர்.

'அக்கும்புலியின்' என்னும் திருமொழியும் 'எங்கணையே' என்னும் திருவாய் மொழியும் சாற்றப்பட்டு முடிவில் வேதபிரான் பட்டர் கைசிக புராணத்தை வாசிப்பார்.

சொக்கப்பனை

கார்த்திகை அன்று ஆண்டாளும் ரங்கமன்னாரும் கோபுர வாசலில் சென்று காத்திருக்க, வடபெருங் கோயிலுடையான் உள்ளிருந்து வெளியே வந்தவுடன் சொக்கப்பனை ஏற்றும் நிகழ்ச்சி நிகழும். பின்னர் ஆண்டாள் கோயிலின் முன்னாலும் நிகழும். பின்னர் வடபெருங் கோயிலுடையான் சந்நிதிக்கு எழுந்தருளித் திருமஞ்சனமான பின்னர் திருமங்கை மன்னன் தொடர்பான 'வாடினேன் வாடி' என்றும் பாசுரங்கள் அனைத்தும் பாடப்படும்.

உடன் அருளிப்பாடு நிகழும். அருளிப்பாடு, என்பது அன்றையிலிருந்து தை வெள்ளி வரையில் ஊரில் யாரும் கோயிலைத் தவிர, 4000 பாடல்களையும் பாடக்கூடாது என்பது கட்டுப்பாடாகும். ஏனெனில் அரையரின் பகல்பத்து இராப்பத்து உற்சவங்கள் அன்றைக்கு மறுநாள் முதல் நிகழ்வதாகும். கார்த்திகை மாதத்தில் நிகழும் உற்சவம் பற்றிக் கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகின்றது. (576/1926)

".....கீரக்களூர் குலதீப மங்கலம், நமக்கு முன்பே கார்த்திகை மாஸத்தில் துவஜாரோஹண மகோத்ஸவத்துக்கு லக்கண தெண்டநாயக்கர் விட்டு நடந்து வரும்...."

எனக் கார்த்திகை மாதத்து துவஜாரோகணத்தைக் குறிக்கின்றது. ஆனால் என்ன விழா என்ற குறிப்பு இல்லை.

பத்துகளும் அமிர்த மதனமும்

மார்கழி மாதத்தின் சிறப்பான நிகழ்ச்சிகளில், அரையர் சேவை நிகழ்ந்து வரும். இவ்வூரில் பகல்பத்து இராப்பத்து முக்கியமான நிகழ்ச்சியாகும்.

மார்கழி மாதம் பிறந்தது முதல் திருப்பள்ளியெழுச்சி நடைபெறுகிறது. பின்னர் வைகுண்ட ஏகாதசிக்கு முன் பத்து நாள்களில் பகல்பத்தில் முதலீராயிரமும், 2ம் இராப் பத்தில் பின்னீராயிரமும் அரையரால் சேவை சாதிக்கப்படுகிறது.

அமிர்த மதனம் என்பது சிறப்பான நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது.[3]

திருநெடுந்தாண்டகத்தில் உள்ள பாடல்கள் நடித்து, அபிநயித்துக் காட்டப்பட்டு அதன் விளைவாக அமிர்தம் எடுத்து இன்றைக்கு கோயிலுக்கு வழங்கப்படுகிறது. அன்று திருமால் மோகினி அவதாரத்தினில் காட்சி அளிப்பார்.

எண்ணெய்க்காப்பு உற்சவம்

ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள குறிப்பிடப்படும் சில உற்சவங்களில் ஒன்று இந்த எண்ணெய்க் காப்பு உற்சவமாகும்.

உற்சவப் பொதுச்சடங்குகள்

பொதுவாக எட்டு நாள்கள் நடந்தாலும் எட்டு நாள்களில் பொதுவான சில சடங்குகள் உள்ளன.

1)கற்பூரம் காட்டல், 2) போர்வை படிகளைதல், 3) திருவாபரணம் படிகளைதல், 4) திருவடி விளக்குதல், 5) அர்க்ய பாத்ய ஆச்மன்யம் பண்ணுதல் 6) தந்தாவனம், ஜிஹ்வா சோஜனம் பண்ணல், 7) திருத்தொடை சமர்ப்பித்தல், 8) கண்ணாடி காட்டல் ஆகியவை ஆகும்.

ஆண்டாள் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஒரே ஓட்டமாக வந்து பெரிய கோபுரத்தடியில் தன்மீதிருக்கும் போர்வையைக் களைந்து இறைவனுக்குத் தன்னழகைக் காட்டிவிட்டு பல மண்டபங்களில் கோஷ்டி விநியோகம் செய்துவிட்ட பின் திருமுக்குளக்கரையில் உள்ள எண்ணைக் காப்பு மண்டபத்தினை அடைவாள்.

இங்கு வரும் முன் சௌரியும், குறிப்பிட்ட சில ஆபரணங்களும் போர்வையும் சார்த்தப்பட்டிருக்கும்.

இங்கு வந்தபிறகு கற்பூரம் காட்டப்பட்டு 3 போர்வைகளும், 3 தடவை ஆபரணங் களும் படிகளையப்படும்.[4]

அடுத்து பல் விளக்குதலாகிய தந்தாவனமும், ஜிவ்ஹா சோஜனம் என்னும் முகம் கழுவுதலும் நிகழ்கின்றது.[5]

பின்னர் 16 வகை சோடசோபச்சாரத்துடன் திருவாராதனம் நிகழும். அதன் பின்னர் அலங்காரமும் சௌரியும் சார்த்தப்படும்.

இதற்கு அடுத்து ஸ்தலத்தார் கவி சேர்ப்பார்கள். 2 அர்ச்சகர்களும் 4 பரிசாரகர் களும் ஒவ்வொரு நாளும் எண்ணைக் காப்பிற்கு தேவைப்படுகின்றார்கள்.

திருத்துடையல் : வெள்ளிக் கிண்டியில் நீரை எடுத்துக் தங்கக் கும்பாவில் சேர்த்து துளசியால் தொட்டு வாய், முகம், கை கால் ஆகியவற்றில் துடைத்துப் படிக்கத்தில் விடுகின்றனர்.

இதற்கு அடுத்து வெற்றிலை பாக்குக் கொடுத்தல் நிகழ்கிறது.

ஆண்டாளுக்கு வெற்றிலை பாக்கு கொடுத்தல்

ஏலக்காய், ஜாதிக்காய், கிராம்பு, ஜாதிபத்திரி, பாக்கு இலவங்கச் சாமான்கள் சேர்த்து அடைப்பக்காரன் நீட்ட, அதனை வாங்கி வாயருகே வைத்திருந்து– வாயில் ஊட்டி எடுக்கிறார்கள். பின்னர்க் காளஞ்சிக்காரனின் காளஞ்சியில் போடப்படுகிறது.

பின்னர் மீண்டும் பல் துலக்கி, முகம் கழுவி வாய் துடைத்துத் திருத்தொடை சமர்ப்பித்து கண்ணாடி காட்டுகிறார்கள்.

எண்ணெய் தேய்த்தலும் முழுக் காட்டலுமாகிய சௌரித் திருமஞ்சனம்

முதல் அர்ச்சகர் தலையை அவிழ்த்து உதறிய பின்னர் எண்ணெய் பதம் போடப் படுகிறது. பின்னர் பச்சைக் கற்பூரம் போன்ற வாசனைத் திரவியங்கள் கலந்த எண்ணை யால் பதப்படுத்துதல் நிகழ்கிறது. தங்கச்சிடுக்கு ஊசியால் தலையைச் சொடுக்கு எடுத்து, தங்கச் சீப்புப் போட்டு சௌரி வாரப்படுகிறது. இரண்டாக வகிர்ந்து மீண்டும் எண்ணை தட்டப்படுகிறது. இவ்வாறு மூன்று முறை செய்த பிறகு புருவம் துடைத்து வெற்றிலைப் பாக்குக் கொடுத்து வாய்துடைத்துக் கொண்டை அலங்காரம் பண்ணி ஸ்நபன மண்டபத் திற்குக் கொணரப்படுகிறது.

அங்கு புஷ்பக் கொண்டை சார்த்தி வேதங்கள் ஒத 9 கும்பங்களில் இருந்து நீர் விடப்படுகிறது. இதனில் வாசனைத் திரவியங்கள், பால், இளநீர், எலுமிச்சம் பழமும் சுத்த நீரும் கலந்து தலை அலசிப் பின்னர் அலங்காரம் நடைபெறுகிறது.

அம்மானை

வாகனம் புறப்படும் முன் பஞ்சாங்கம் வாசிக்கப்படுகிறது. ஸ்தலத்தார் அம்மானைக் காயைக் கொடுக்க ஆண்டாள் விளையாடும் ஐதீகத்தில் அர்ச்சகர் விளையாடுகிறார். கண்ணாடி காண்பித்து, வெற்றிலை பாக்கு கொடுத்து புறப்படும் முன் உதட்டிற்குச் சிவப்புச் சாயம் பூசப்படுகிறது. பின்னர் கோஷ்டி விநியோகம் ஆகி புறப்பட்டு சந்நிதி அடைகிறது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோலத்திலும், வாகனத்திலும் வருதல் நிகழ்கிறது. 4ம் நாள் சேஷ வாகனத்தில் முத்தங்கி சேவையும், 6ம் நாள் மோகினித் திருக்கோலத் திலும், மூக்குத்தி சேவையும் நிகழ்கிறது.

எல்லா நாள்களிலும் பொதுவாகக் கிழக்குப் பார்த்தபடி எண்ணெய்த் திருமஞ்சனம் நடக்க 8ம் நாள் மணவாள மாமுனிக்காக மேற்குப் பார்த்தபடி திருமஞ்சனமும் எண்ணெய்க் காப்பும் நிகழ்கிறது. மணவாள மாமுனிகள் வேண்ட அதற்காக ஏழுநாள் உற்சவம் 8ம் நாளும் தொடர்ந்ததாகக் கூறப்படுகிறது.

இம்மார்கழி மாதத்து உற்சவம் பற்றி இரண்டு கல்வெட்டுகள் குறிக்கின்றன. (538, 571/1926) 1546ல் குலசேகரதேவனான பராக்கிரமபாண்டியன் தான் பிறந்த மார்கழி மிருகசீரிஷத்து நாளில். " கலசமாடி . . . (திரு) மஞ்சனம் கொண்டருளுகிறதுக்கு சிறப்பு அமுது செய்யிற வகைக்கு, திருவீதியில் எழுந்து அருளுகிறதுக்கு சாத்துப்படி சாத்துப்படி த்ரவ்யம், திரு முன்பந்தத்துக்கு" நிலம் கொடுத்த செய்தியைக் குறிக்கிறது.

கி.பி 1476ம் ஆண்டில் சுந்தரத்தோளுடையான் மகாபலி வாணாதிராயன் மாதா ஸ்ரீரங்க நாயகியார் இம்மார்கழி மாதத்துத் திருப்பொன்னூசலுக்கு

"இத்திருநாளுக்கு வேண்டும் அமுதுபடி கறியமுது, சாத்துப்படி, திருப்பரிவட்டம், திருமாலை, திருவிளக்கு, மஞ்சள் காப்பு உட்பட நைவேத்யங்களுக்கு[ம்] அக்கார வடிசிலுக்கும்"

சொக்கன் ஏந்தல் என்ற சுந்தரத்தோள் நல்லூரைத் திருவிடைஆட்டமாகக் கொடுத்ததைச் சுட்டுகின்றது. (571 /1926)

கனு உற்சவம்

தைமாதம் நிகழும் நிகழ்ச்சிகளில் முக்கியமானது இதுவாகும். ஆண்டாளுக்குக் கனிகளும் மற்றும் கரும்பு போன்றவை சமர்ப்பிக்கப்படும். அன்று அரையரின் முத்துக்குறி உற்சவம் நடைபெறும். இதுவே சிறப்பான உற்சவமாக இம்மாதம் நடத்தப்படுகிறது.

முத்துக்குறி என்பது ஆண்டாளுக்குக் குறத்தி ஒருத்தி குறி சொல்வது போலவும், இரண்டாக வந்தால் காரியம் நிறைவேறும் என்பதாகவும், தனியாக ஒற்றையில் வந்தால் காரியம் நிறைவேறாது என்பது போலவும் கூறப்படும் குறவஞ்சி முறையைத் தழுவியது ஆகும்.

ஆண்டாள் திருக்கல்யாணம்

இது பங்குனி உத்திரத்து அன்று நிகழ்கிறது. த்வஜாரோரகணம் தொடங்கித் தேங்காய் தொட்டு 10ஆம் திருநாளில் ஆண்டாளின் திருக்கல்யாணம் நிகழ்கிறது. வீதிப் புறப்பாடும் ரங்கமன்னார் பரதேசம்[6] போதல், ஆண்டாள் தனியாக திருவீதி எழுந்தருளல் ஆகியவை நிகழ்ந்து, சுப முகூர்த்தத்திலே மூன்று முறை மாலை மாற்றி வைதீக முறைப்படி ஓமம் ஓதி திருமாங்கல்யம் அணிவித்தல் நடைபெறுகிறது. இது பெரும்பாலும் இன்றைய வைதீக சடங்குகளையொட்டி நடைபெறுபவையாகும்.

இவை தவிர அந்த நாட்களில் மாத நட்சத்திரங்களில் அவ்வாழ்வார்களுக்கும் விழா நடக்கிறது. வைகானச ஆகமப்படி 10 நாள்கள் திருவிழா நடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது.[7]

பொதுவாக, இவை இயற்கையோடு இயைந்த பருவத்திற்கு ஏற்றபடி, (வசந்த உற்சவம் எண்ணெய்க் காப்பு உற்சவம் முதலியன) அந்தந்த பொருட்களைக் கொண்ட அலங்காரமும் மற்ற பொருட்களும் படைக்கப்படுவது சிறப்பாக நோக்கத்தக்கது.

வைத்தியநாதசாமி கோயில்

நாள் வாழிபாடு

நாயன்மார்களால் பாடப் பெறாத இந்த சிவத்தலம், 'மகுடாகமம்' பின்பற்றப்படும் ஒரு கோயிலாகும். இதனிலும் இறைவனுக்குக் காலை வேளை முதல் அர்த்தஜாமம் வரை ஆறுகாலப் பூஜை நிகழ்கிறது.

திருவனந்தல் என்றழைக்கப்படும் பூஜை காலை 6.30 மணிக்கு நிகழ்கிறது (அனந்தநிலை மாற்றி எழுப்புவதாகும்).

"உஷா பூஜை என்பது காலை 6.30 மணிக்குப் பிறகு 7.30 மணிக்குள் நிகழ்கிறது.

காலசந்தி என்ற ஒன்று தினமும் 9 மணிக்கும் சிறு காலைச் சந்தி என்பது 9.30க்கு நடக்கின்றது.

உச்சிக்காலம் 11.00 மணிக்கு நிகழ்ந்து 11.30 மணியளவில் கோயில் நடை அடைக்கப்படுகிறது. பின்னர் மாலை 4.30யிலிருந்து 5 மணிக்குள் கோயில் நடை திறக்கப்படுகிறது.

"**சாயரட்சை**" மாலை 5.30 மணிக்கு நிகழ்கிறது. பின்னர் அர்த்தசாமம் இரவு 8.30 மணிக்கு நிகழ்கிறது.

ஒரு கல்வெட்டு (530/1926) பிற்காலப் பாண்டியன் ஜடாவர்மன் திரிபுனச் சக்கரவர்த்தி குலசேகரதேவன் காலத்ததாகும். அதனில் சகம் 1357 குறிக்கப்படுகிறது.

அதனில், திருமல்லி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் உடையார் படிக்காசு வைத்தருளிய நாயனாருக்கு நாம் கைற்பித்த திருவர்த்தசாம பூஜைக்கு அமுதுபடி நாநாழிக்கும், கறியமுது, நெய்யமுது சாத்துப்படி, திருவிளக்கு, திருமாலை, திருப்பரிவட்டம்" ஆகிய வற்றுக்காக நிவந்தமளித்த செய்தி சுட்டப்படுகிறது.

இப்படி நாள்தோறும் நடக்கும் பூசைகளுக்காக நிவந்தமளிக்கப்பட்டதையும் ஒரு கல்வெட்டு குறிக்கிறது. (517/1926)

சுமார் 14, 15ஆம் நூற்றாண்டின் எழுத்தமைதியை உடைத்தாய இதனில்,

1. .....
2 திருமல்லி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் உடை
3 யார் திருக்கற்றளீஸ்ர முடியார் கோயில் தா
4 னத்தாற்கு இன்னாயினார் தேவதானத்திலும்
5 கோயிலில் நாச்சியார் தேவதானத்திலும் எறுசேவகப்
6 பிள்ளையார் தேவதானத்திலும் நாலு படைப்பிள்ளையார்
7 தேவதானத்திலும் முன்பு பூஜைக்கும் ....."

என்று குறிக்கிறது. இவ்வாறு நாள் வழிபாடுகள் நிகழ்கின்றன. இந்நாள் வழிபாடுகளில் அபிஷேகத்திற்கு மஞ்சள்பொடி, மாப்பொடி, திருமஞ்சன திரவியம், ராயபுரிச் சர்க்கரை, இளநீர், பால், நல்லெண்ணை ஆகியவை பயன்படுத்தப்படுகின்றன. இறுதியில் தீபாராதனை காட்டப் படுகிறது.

வார வழிபாடு

ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அன்று மாலை அபிஷேகம் ஆராதனை நடந்து இரண்டாம் வெளித் திருச்சுற்றில் உலா வருகிறார்.

மாத வழிபாடுகள்

பிரதோஷத்தில் வெள்ளி ரிஷப வாகனத்தில் பிரதோஷ மூர்த்தி திருச்சுற்று மாளிகையில் திருவுலா வருகிறார். அதேபோல், பௌர்ணமிக்கு முதல் நாளும், நித்யோற்சவர் திருவுலா உண்டு.

மாதக் கார்த்திகைகளில் வள்ளி தெய்வயானை சமேத முருகன் புறப்பாடு நடைபெற்றுப் பின்னர் தீர்த்தவாரி நடைபெறுகிறது. மாதப் பிறப்புகளில் சந்திரசேகரர், விசாலாட்சியும், அதேபோல் அமாவாசை காலையும் புறப்பாடு உண்டு. சித்திரை பௌர்ணமி அன்று உட்பிரகாரத்தில் சந்திரசேகரரும் விசாலாட்சியும் சுற்று வருகிறார்கள். சித்திரை பரணியில் கங்காளமூர்த்திக்குத் திருச்சுற்று நடைபெறுகிறது.

பிரம்மோற்சவம்

வைகாசி மாத புனர்பூசத்தில் கொடியேற்றம் நிகழ்ந்து விசாக நட்சத்திரத்தில் தீர்த்தவாரியும் முதல்நாள் தேரும் நிகழ்கிறது.

நடராசருக்கு அபிஷேகம் ஆனி மாதத்தில் நிகழ்கிறது.

ஆடித்தவசுவின்போது அம்பாள் உட்பிரகாரத்தில் புறப்பாடு நிகழ்கிறது. அதேபோல் ஆடிப்பூரத்தன்றும் அம்பாள் திருவீதி உலா வருகின்றாள்.

மீண்டும் நடராசருக்கு ஆவணி மாதம் அபிஷேகம் நடைபெறுகிறது.

நவராத்திரி கொலு ஒன்பது நாளும் அம்பாளும் சுப்பிரமணியரும் புறப்பாடு நிகழ்கிறது. 10ஆம் நாள் பாரிவேட்டைக்கு சுப்பிரமணியர் குதிரை வாகனத்தில் புறப்பாடு நடைபெறுகிறது.

கந்த சஷ்டி உற்சவம் ஐப்பசி மாதம் நடக்கிறது. 5 நாளும் நடந்து 6ம் நாள் சூரசம்ஹாரம் நான்கு மாடவீதிகள் மூலையிலும் நிகழ்கிறது.

கார்த்திகை சோம வாரங்களில் 108 சங்கு அபிஷேகங்களும், அதே வெள்ளிகளில் மாலை சண்முகரும் சுப்பிரமணியரும் ரிஷப வாகனத்தில் திருவீதியுலா வருவது வழக்கமாக உள்ளது.

திருவெம்பாவை உற்சவம் மார்கழியில் நடப்பதுடன் திருவாதிரை அன்று நடராஜர் சிவகாமியின் திருவீதியுலா நிகழ்கிறது.

தண்டியல் புறப்பாடு

தைமாதம் அம்பாள் திருமலை நாயக்கரால் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் தண்டியலில் திருவீதியுலா நிகழ்கிறது.

வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர் புறப்பாடு மாசி மாதம் சஷ்டியில் நிகழ்கிறது.

பங்குனி உத்திரத்தில் நடராஜருக்கும் சண்முகருக்கும் அபிஷேகம் நடக்கிறது.

குருபூஜைகள்

ஒவ்வொரு மாதமும் அவரவரின் திருநட்சத்திரங்கள் நிகழ்கிறது.

சித்திரை – சதயத்தில் – அப்பருக்கும், வைகாசி – மூலம்– சம்பந்தருக்கும், ஆனி – மகம் – மாணிக்க வாசகருக்கும், ஆடி–சுவாதி–சுந்தரருக்கும், குருபூஜைகள் நிகழ் கின்றன. அந்நாள்களில் மாலையில் இவர்களுக்கு அபிஷேகம் நடந்து 2ஆம் திருச்சுற்று உலா வருகிறார்கள்.

அடிக்குறிப்புகள்:

1. இந்த சுவாதி நாளை மனத்துட் கொண்டுதான் வீர மார்த்தாண்ட வர்மன் சுவாதி நாளில் சிறப்புத் திருமஞ்சனமும் திருவீதி உலாவும் வைத்து உள்ளான் போலும்.
2. சுந்தர ராஜன் என்னும் உற்சவ விக்ரகம் அருகில் உள்ள காட்டழகர் கோயிலைச் சார்ந்தது.
3. அமிர்தம் + மதனம் எனக் கொண்டால் அமிர்தத்தினை தேவர்களும், அசுரர்களும் கடைந்து எடுத்த நிகழ்ச்சியாகும். அதன் நினைவாகச் செய்யப்படும் ஒரு உற்சவமாக இரு கருதப்படுகிறது.
4. இது உறக்கத்திலிருந்து மனிதன் போர்வையை உதறிவிட்டு எழும் நிலையாகக் கருதலாம்.
5. இது மனிதன் பல்துலக்கி முகம் கழுவுதலைக் குறிக்கும் என்பர்.
6. மாப்பிள்ளை அழைப்பு போன்றது
7. இத்தகவலைக் கூறியவர் லெ.அ. அலங்கார பட்டர்.

7. கவின்மிகு கலைகள்

அ. சிற்பக்கலை – கற்சிற்பங்கள்

ஸ்ரீவில்லிபுத்தூரில் வடபெருங்கோயிலுடையான் கோயிலுக்கும், ஆண்டாள் கோயிலுக்கும் இடையில், கோயிலுக்கு உரித்தான நந்தவனம் ஒன்று உள்ளது. இந்த நந்தவனம் "திருஆடிப்பூர நந்தவனம் " என்று வழங்கப்படுகிறது. இங்கு ஆண்டாளுக்கு எனஒரு சிறு கோயில் உள்ளது. இந்த நந்தவனத்தில் ஒரு கழுத்துப்பகுதி உடைந்த நிலையிலுள்ளது. இங்கு நந்தவனக் கிணறு தோண்டும்போது இச்சிலை பின்னமான நிலையில் கிடைத்து.[1] அதனை எடுத்து இங்கு வைத்து உள்ளார்கள்.

இந்தச் சிலை கல்வெட்டில் குறிப்பிடப்படும் சேனை முதலி எனப்படும் விஷ்வக்சேனர் சிலையாகும். அந்த சேனை முதலியாரே பின்னப்பட்டதால் பூமியில் புதையுண்டோ அல்லது புதைக்கப்பட்டோ இருக்கலாம் என்று கருதலாம்.

சிற்ப அமைதி சற்று அகன்று நீண்ட உருண்டையான முகமும் அணிகலன்கள் முறையாக இருக்கும் தன்மையும் யக்ஞோபவீதம் பட்டையாக வலது கையின் மீது செல்லும் தன்மையும் மேலே சற்று பெருத்து இடை சற்று சிறுத்து இருப்பதாலும், பல்லவர் காலத்து கலைப் பாணியை நினைவுறுத்துவதாலும், இதன் காலம் சுமார் கி.பி. 9ஆம் நூற்றாண்டு எனக்கருதலாம். "சேனை முதலியார் சாவகாச அந்தராளப் பித்தியில் இருந்த கல்வெட்டு புறச் சாந்தனையிலே மறைகியால்" எனக் குறிப்பிட்டுள்ள சேனை முதலியார் சிற்பமாக இருக்கலாம். (533/1926)

ஆண்டாள் கோயில்

ஆண்டாள் கோயிலில் கொடிக்கம்ப மண்டபத்திலும் அதன் இடப்புறமுள்ள ஏகாதசி மண்டபம் என்றழைக்கப்படும் கொடிக்கம்ப மண்டபத்திலும் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் சுமார் 4 அடிக்கு மேல் தூணில் சிற்பங்கள் உள்ளன. இவை சுமார் 6 அடி உயரத்திற்கு மேலுள்ளன. இந்த 18 சிலைகளில் 8 சிலைகள் ஏகாதசி மண்டபத்திலும், 10 சிலைகள் கொடிக்கம்ப மண்டபத்திலும் உள்ளன. சுமார் 16ஆம் நூற்றாண்டில் வடிக்கப்பட்ட இச்சிற்பங்களில் நாயக்கர் காலக் கலைப்பாணி மிளிர்கிறது.

கர்ணனும் விஜயனும்

ஏகாதசி மண்டபத்தில் வலப்புறம் தூணில் கர்ணனின் சிலை உள்ளது. தலையில் கிரீடம், முகத்தில் மீசை, மார்பில் சில ஆரங்கள், காலைச் சற்று தூக்கி திரிபங்கத்தில் நிற்கின்றான். அந்தத் தூணில் பின்புறம் தேவகுலப் பெண்கள் சிலர் நிற்பது போலவும்,

இடப்புறம் வீரன் ஒருவன் நின்ற நிலையிலும் இருக்கிறான். அவன் துரியோதனன் என்று கூறுகிறார்கள். இவனுக்கு எதிரில் அவன் (கர்ணன்) எதிரியாகிய மற்றொரு வில்லாளி அர்ச்சுனன் நிற்கிறான். காண்டீபமும் அம்பும் ஏந்தியுள்ள இவன் கரண்ட மகுடமும் தவம் செய்து வந்தவனாதலால் நீண்ட தாடியுடனும் நிற்கிறான். வலப்புறம் வில்லேந்திய வீரர்கள் படைகள் போல் நிற்கின்றனர். இடப்புறம் மீசை முறுக்கிக் கொண்டு வில்லுடைய வீரர்கள் நிற்கின்றனர். கர்ணனும் விஜயனும் எதிர்எதிரில் உள்ளனர்.

அடுத்த எதிரெதிர் தூண்களில் கர்ணனின் தேரோட்டி சாத்தகியும் குகனும் நிற்கின்றனர். அடுத்து ஓங்கிய கையில் வாளும் கேடயமும் கொண்டு தலையில் ஜடாமண்டலம், நீண்ட தொங்கும் மீசை, மார்பில் சில மாலைகளுடன் நிருத்தமுக வீரபத்திரன் காணப்படுகிறான்.

கீழே மோகினி உருவமும், இடப்புறம் நாட்டிய கரணங்காட்டும் பெண்ணும், பெண்ணின் கூந்தலைப் பிடித்து அவளை வெட்ட வாளோங்கிக் கொண்டிருக்கும் ஒருவனும் புடைச் சிற்பங்களாக உள்ளன. அந்தக் கிழவன் பெண்ணின் மார்பைப் பற்றிக் கொண்டிருக்க அவளோ தனது செருப்பைக் கழற்றி அவனை அடிக்க முற்படுகிறாள்.

எதிரில் உள்ள ஊர்த்துவ முக வீரபத்திரன் கத்தி கேடயத்துடன் காட்சியளிக்கிறான். பின்னால் அனுமனும், இடப்புறம் நாட்டிய மகளும், வலப்புறம் இராமனும் உள்ளனர்.

ரதியும் மன்மதனும் அடுத்து எதிரெதிர் தூண்களில் உள்ளனர். ரதி அன்னத்தின் மீதேறி மலர் ஒரு கையிலும் ஆடி ஒரு கையிலும் ஏந்திக் குத்துக் காலிட்டு ஒரு கால் தொங்க அமர்ந்து வருகிறாள். மன்மதன் தேரில் வருகிறான். தேரில் நான்கு சக்கரங்கள் உள்ளன. கரும்பு வில்லேந்தி மலர்க்கணை தாங்கி வருகிறான். அவனது கரும்பு வில்லில் 3 கிளிகள் உள்ளன.

கொடிக்கம்பத்துச் சிற்பங்கள்

மோகினி உருவம் மோகிக்க வைக்கும் வண்ணம் பாம்புபோல் இருக்கும் தலையலங் காரத்துடன், கைகளால் இடை ஆடையை நெகிழ்த்தும் முறையில் உள்ளாள்.

வலப்புறமும் இடப்புறமும் தாடி வளர்ந்த இரு முனிவர்கள் திருமாலாகிய மோகினியை அருள்வேண்டி நிற்க, அவளின் புற அழகைக் கண்டு மோகிக்கும் அசுரன் ஒருவன் வாய் பிளந்து நிற்கிறான்.

இரு கைக் காளி சின்முத்திரையும் சூலமும் காட்டி மோகினிக்கு எதிரே நிற்கிறார்.

அகோரவீரபத்திரர் நடனமாது, வீணையேந்திய சரஸ்வதி ஆகியனவும் அழகுற வடிக்கப் பட்டுள்ளன. இராமன் சிற்பமொன்று மீசையுடன் வடிக்கப்பட்டுள்ளது. இலக்குவன் சிலை உள்ளது. இதனில் இலக்குவன் கையில் கத்தியைப் பிடித்துக் கொண்டு இடக்கரத் தில் பெண்ணின் தலையைப் பிடித்துக் கொண்டு அறுக்கும் நிலை காட்டப்பட்டுள்ளது. இது அயோமுகி வதையாக இருக்கலாம்.

இராமர் சிலைக்கு எதிரேயிருக்கும் சிலையை விஸ்வகர்மா என்னும் தச்சர் என்று கருதப்படுகிறது.

பொதுத் தன்மைகள்:

இந்த சிற்பங்களுள் சில பொதுத்தன்மைகள் காட்டப்படுகின்றன. வில்லுடன் தொடர்புடையோர் பலர் உள்ளனர். இராம இலக்குவர், அர்ஜுனன்–கர்ணன், குகன் (வேடன்), மன்மதன் (மலர் அம்பு எய்துவோன்).

கிருஷ்ணன் கோயிலில் ஆண்டாள் கோயிலில் காணப்படும் சிற்பங்களைப் போலவே அகோர வீரபத்திரரும், நிர்த்த முக வீரபத்திரரும் உள்ளனர்.

பாவைக்கூத்து:

இங்கிருக்கும் ஒரு சிலை பாவைக்கூத்து என்னும் பதினோராடலில் ஒரு வகையை விளக்குகின்றது. சிலப்பதிகாரம்

" செருவெங் கோல மவுணர் நிலவத்
திருவின் செய்யோளாடிய பாவையும் "

எனக் குறிக்கிறது.

இச்சிற்பம் கழுத்தினில் கெட்டிச் சங்கிலிகளும் கைகளில் வளையல்களும் கெட்டி ஆடைகளும் அணிந்து காணப்படுகிறது.

குடைக்கூத்து :

இது முருகன் ஆடிய ஆடல் ஆகும். இந்தச் சிலை அதனைக் குறிப்பதாக இருந்தாலும், கைப்பகுதி உடைந்து செப்பனிடப்பட்டு உள்ளது. செப்பனிடப்பட்டபோது முருகன் ஆடுவது என்பதால் குடை வைத்திருந்த (சிறிய அளவினதாக இருந்திருக்க வேண்டும்) இடத்தில் முருகனுக்கு உரிய வேல் போன்ற கருவியினைக் கொடுத்து இருக்கிறார்கள்.

இந்தச் சிலைகளின் காலம் 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பது தெளி வாகிறது. 1571ல் தான் கோயில் கட்டப்பட்டது. சுமார் 50 ஆண்டுகள் கழித்து இம் மண்டபம் எடுக்கப்பட் டிருக்கலாம்.

இவற்றில் பொதுவாக கிருஷ்ணனின் தொடர்புடைய கதைக்கான சிலைகள் உள்ளன. பின்புறம் கூடு போன்ற அமைப்பு உள்ளது. மேலும், ஸ்ரீ வில்லிபுத்தூர் சிற்பங் களைப் பற்றிக் கூற வேண்டுமென்றால் 10ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டு வரை பல சிற்பங்கள் கிடைக்கின்றன.

9 ஆம் நூற்றாண்டின் விஸ்வக்சேனராகிய சேனை முதலியார் சிற்பம் முற்காலக் கலைக்கு உதாரணமாகும். இடைப்பட்ட காலத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் கோயிலைப்

பொறுத்தவரை பல திருப்பணிகள் நடந்துள்ளன. ஆகவே இடைக்காலச் சிற்பங்கள் காணக் கிடைக்கவில்லை.

16ஆம் நூற்றாண்டின் கட்டடப் பாணியினூடே அக்காலத்திய பல சிற்பங்களை நாம் காண்கிறோம்.

ஆண்டாள் கோயில், கொடிக்கம்ப ஏகாதசி மண்டபத்தின் சிற்பங்கள் கலைத் தன்மைக்கும் எழிலுக்கும் சிறந்த சான்றாக உள்ளன.

மரச்சிற்பங்கள் கேரள பாணியைத் தழுவிக் கட்டப்பட்டுள்ள எழிலைக் காண் கிறோம்.

இக்காலத்தின் பிற்பகுதிச் சிற்பங்களில் பண்டைக் கூத்து முறையைத் தழுவிய சிற்ப அமைதிகளைக் கிருஷ்ணன் கோயில் சிற்பங்களில் காண்கிறோம். அடியவர் சிற்பங்களைப் பொறுத்தவரை ஒரு சிறப்பம்சத்தினைக் காண்கிறோம். தூண்களின் ஓரங்களில் கைதூக்கிக்கொண்டு சிற்கும் பல புடைச் சிற்பங்களுக்கு நடுவே, தனது வடிவைப் போலவே பல உருவங்களிலும் எழிலாக விளங்குகிறார் திருமலை நாயக்கரும் முத்தியாலுவும்.

மூவரையான் சிற்பங்கள் 16ஆம் நூற்றாண்டின் கலைக்குச் சான்று பகன்றாலும், பல வரலாறு உணர முடியாத வருத்தத்தை ஏற்படுத்துகிறது. 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் கோபுரத்தில் வடிக்கப்பட்டிருந்த சுதை உருவங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

முடிவாக, பல திருப்பணிகளிலும் மாறுபாடுகளாலும் பல அழிந்து போயிருந் தாலும், ஸ்ரீவில்லிபுத்தூர் சிற்பங்கள் சிற்பக் கலைக்கூடமாக இருப்பதனை மறுக்கவோ மறக்கவோ இயலாது. இவை காலத்தால் பிற்பட்ட சிற்பக் கலைகளாக இருந்தாலும், அனைத்தும் எழிலும் அழகும் வாய்ந்தன என்பதில் ஐயமில்லை.

மரச்சிற்பங்கள்

ஸ்ரீவில்லிபுத்தூரில் மரச்சிற்பங்கள் குறிப்பாக மூன்று இடங்களில் காணப்படு கின்றன. 1) கோபால விலாசம், 2) கஜலட்சுமி மண்டபம், 3) தேர்ச் சிற்பங்கள்

கோபால விலாசம்

கோபால விலாசம் என்னும் இப்பகுதி வடபத்ரசாயி கோயிலின் கருவறைக்கு எதிரே உள்ள மேற் பகுதியில் உள்ளன. மேலே படியேறிப் போனதும் வலப்புறமுள்ளது. "ய" போன்ற அமைப்பில் அமைந்துள்ளது. வெளிப்புற அமைப்பில் 80 சிற்பங்களும், உட்புற பகுதியில் 70 சிற்பங்களும் சில பூ வேலைப்பாடுடைய சிற்பங்களும் அமைந் துள்ளன. ஒவ்வொரு சிற்பமும் தனித்தனியான துண்டுச் சிற்பங்கள் போல் அமைந் துள்ளன. கீழே மரப்பட்டி அடிக்கப்பட்டு சாய்வாக்கப்பட்டு மேலே மர உத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த கோபால விலாசத்தின் மேற்பகுதி (மேல் கூடு) வண்டியின் கூடு கவிழ்த்தது போல் கேரள முறைப்பாணியில் மண்டபங்கள் போல் அமைந்துள்ளன.

கீழ்ப்பகுதியில் இந்தச் சிற்பங்கள் உள்ள பத்தியும் மேற்பகுதியில் சட்டங்கள் அடிக்கப்பட்டு, மேலே செங்கற்கள் பாவப்பட்டு அவற்றின் மேல் சுண்ணாம்பு பூசப்பட்டும் உள்ளது.

மேலே உள்ள மரச்சட்டங்களில் எவ்விதமான சிற்ப வேலைப்பாடுகளும் காணப் பட வில்லை. கீழேயுள்ள சிற்பங்களின் விரிவுகள் சாறுகளாக்கிக் கொடுக்கப் பட்டுள்ளன.

இவற்றின் பொது அமைப்பு

இவற்றில் ஒரே உருவமும் காட்டப்படும். மேலே ஒன்று, கீழே ஒன்றுமாக இரண்டு சிற்பங்களும் காணப்படுகின்றன. சில இடங்களில் மூன்று சிற்பங்களும் காணப்படுகின்றன. இவற்றின் கீழ்ப்பகுதி அலங்கரிக்கப்பட்ட முழு வேலைப்பாடுடைய அடுக்குகளாகக் காணப்படு கின்றன. இவற்றின் மேலுள்ள பகுதியில் தாமரைப்பூ போன்ற பூ வேலைகள் செதுக்கப்பட்டுள்ளன. சிற்பங்களின் மேற்புறமும் கீழ்ப்புறமும் விளிம்புகள் காணப்படுகின்றன. கீழ்ப்புறம் கற்றூண்களில் காணப்படும் போதிகைகள் போன்ற அமைப்பும் சிலவிடங் களில் காணப்படுகிறது. அவற்றின் மேற்பகுதிகளில் "கோபுரம்" போன்ற அமைப்பு எல்லாவற்றிலும் காணப் படுகிறது. ஒவ்வொரு கோபுரமும் ஒவ்வொரு வகையில் உள்ளது. சிலவற்றில் கோபுரத்தைச் சுற்றி அலங்கார வளைவுகளும் காணப் படுகின்றன. சிலவற்றில் கீழ்ப்பகுதியில் யாளி முகமும், சிம்ம முகமும் காணப்படுகின்றன.

இங்கு காணப்படும் சிற்பங்களைப் பொதுவாக மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1) தெய்வத் தொடர்புடைய உருவங்கள்
2) அடியார்களின் சிற்பங்கள்
3) பாலியல் சிற்பங்கள் (Erotic)

என மூன்று வகையாகக் காணப்படுகிறது.

தெய்வத் தொடர்புடைய உருவங்கள்

1) தெய்வத் தொடர்புடைய உருவங்கள் பெரும்பாலும் திருமால் தொடர்புடைய உருவங்களே காணப்படுகின்றன.

2) தசாவதாரச் சிற்பங்கள் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன.

3) ரதி மன்மதன் இலக்குவன், இந்திரஜித் போர்க்காட்சி, இறைவன் பூதேவி ஸ்ரீதேவி சமேதராய் இருக்க, எதிர் திசைகளில் (பக்கங்களில்) பெரிய திருவடியும், சிறிய திருவடியும் வணங்குதல் நரசிம்ம ஸ்தாகன மூர்த்தி போன்ற பொதுச் சிற்பங்களும் , கஜலட்சுமி மேலும் நடுவில் பார்வதியும், கீழே சரஸ்வதியும் இருப்பது போன்ற சிற்பங்களும் உள்ளன.

அடியவர் சிற்பங்கள்

அடியவர் சிற்பங்கள் சுமார் 10க்கும் மேல் காணப்படுகின்றன. இவர்கள் அனைவரும் நின்ற நிலையில் மேடையை நோக்கியும், அருகினில் உள்ள சிற்பங்களின் உருவங்களை நோக்கியும் வணங்கிய வண்ணம் உள்ளனர்.

இவர்களின் பக்கவாட்டு உருவங்களே காட்டப்பட்டுள்ளன. இவர்களின் தலையில் குடுமியும் ஜடாபாரம் போன்ற அமைப்பும் காணப்படுகிறது. இவர்கள் அஞ்சலி ஹஸ்தத் துடனே உள்ளனர். ஆடைகளில் பலவகையான சிற்ப வேலைப்பாடுகள் காட்டப்பட் டுள்ளன. ஒரே பத்தியில் மூன்று நான்கு பேரும் உள்ளனர் (panel). சில சிறிய உருவங்களாகவும் சில பெரிய உருவங்களாகவும் காட்டப்பட்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட சிற்பத்தில் ஒரு மன்னன் ஒரு அரசனுக்கு முடிசூட்டுவது போன்ற அமைப்புக் காட்டப் பட்டுள்ளது.

காமச் சிற்பங்கள்

கோயில்களில் என்ன காரணத்திற்காக இக்காமச் சிற்பங்கள் வைக்கப்படுகின்றன என அறிய முடியாவிடினும், சிற்பங்கள் வைப்பது என்பது இயல்பான ஒன்றாக, இந்தியக் கோயில்களின் சிறப்பம்சமாகக் காணப்படுகிறது. இக்காமச் சிற்பங்கள் ஆணும் பெண்ணும் கொஞ்சும் நிலை, தழுவும் நிலை, உடலுறவு கொள்ளும் நிலை என்று பல நிலைகளில் காணப்படுகின்றன.

சிற்பங்களில் உருவமைதி

இச்சிற்பங்கள் பொதுவாக அணிகலன்கள் சற்று மிகையாகவே அணிந்துள்ள தன்மை தோன்றுகிறது. கைகளில் கடகமும் வளையல்களும் மேற்கைகளில் மகரவாய் என்பது போன்ற அணிகலன்களும் காட்டப்பட்டுள்ளன. இடைகளில் தனியாகத் துண்டுகள் போன்றவற்றைக் கட்டியுள்ளது சில சிற்பங்களில் காணப்படுகிறது. மனித உருவங்களில் முன், பின் குடுமிகளும், கொண்டைகளும் காணப்படுகின்றன. சிலவற்றில் தலையில் பரிவட்டம் போன்ற அமைப்பு காணப்படுகிறது. இடுப்பிலிருந்து கணுக்கால் களுக்கு மேல் வரையில் கணத்த தடிமனான ஆடைகள் காணப்படுகின்றன. ஒருவேளை இவை ஆடைகளில் அலங்காரங்களைக் காட்டுவதற்காக அமைக்கப்பட்டனவோ என்ற எண்ணம் தோன்றுகிறது. சில சிற்பங்களில் காதுகள் போன்ற உறுப்புகள் சற்று பெரிய தாகவே காட்டப்பட்டுள்ளது. பங்கங்கள் ஏக பங்கமாகிய சமபங்கம், துவிதபங்கம், த்ரிபங்கம், அதிபங்கம் ஆகிய முறைகளிலும் காணப்படுகின்றன. ஆடைகள் தார்ப் பாய்ச்சி கட்டின முறையினிலேயே பெரும்பாலும் காணப்படுகின்றன. அமர்ந்த நிலைச் சிற்பங்களில் பெரும்பாலும் பத்ரபீடமும் பத்மபீடமும், இரண்டும் இணைந்த பீடங் களாகக் காணப்படுகின்றன. உடலமைப்புகளில் சிலவற்றில் அளவுமானங்கள் சரியாகவும் (Proportionate) சிலவற்றில் சரியில்லாமலும் காணப்படுகிறிது.

சற்று கனத்த உடைகள், கொண்டையமைப்பு, அதிகமான அணிகலன்கள், சற்றுப் பெருத்த முன் தள்ளியிருக்கும் வயிற்றமைப்பு, கன மானம் அளவில்லாத் தன்மை,

உடல் பகுதியில் அதிகமான வளைவுகள் ஆகியவை கொண்டு இவை 16ஆம் நூற் றாண்டு நாயக்கர் காலத்தைச் சார்ந்தவை எனக் கருதலாம்.

இச்சிற்பங்களின் இடைவெளியில் தமிழ் எழுத்துகள் செதுக்கப்பட்டுள்ளன. ''தெ மெ யக'' என்றால் தென்மேற்கே 10வது எனவும், கிக கிழக்கு முதல் சிற்பம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்பிற்குரியது. எழுத்துகள் 16ம் நூற்றாண்டைச் சார்ந்துள்ளவை.

யாரால் கட்டப்பட்டிருக்கலாம் என்ற கேள்வி நம் மனதில் எழுகின்றது. இந்த கட்டடக் கலை அமைப்பு கேரளக் கட்டடக் கலையினைத் தழுவிச் சரிந்த கூரை போன்ற அமைப்பு உள்ளது. வென்று மண்கொண்ட பூதலவீர ஸ்ரீ மார்த்தாண்டன் மூத்த திருப்பாப்பூரின் 2 கல்வெட்டுகள் கிடைக்கின்றன. 16ம் நூற்றாண்டில் இவர் காலத்தில் இங்கு ஒருமுறை கருவறை, அர்த்தமண்டபத்துச் சுவர் புதுப்பிக்கப்பட்டு மாடக் கோயிலாக மாற்றப்பட்டுள்ளது. (TAS Vol XIV 3, 4/ 1106) அனேகமாக இவனாலேயே, இவன் காலத்திலேயே கட்டப்பட்டிருக்கலாம். சேரர் பகுதிக் கலையாகக் கருதுவதில் தவறில்லை.

கஜலக்ஷ்மி மண்டபம்

இம்மண்டபம் ஆண்டாள் கோயிலில் வெளிப் பிரகாரத்தின் வலப்புறம் உள்ளது. ஒரு கஜலக்ஷ்மியின் உருவம் பொறித்த கற்பலகைச் சுவரில் பொதிக்கப்பட்டுள்ளது. அதன் முன்புறம் இம்மண்டபம் உள்ளதால், இதனை கஜலக்ஷ்மி மண்டபம் என்று அழைக்கிறார்கள்.

சதுரமான நான்கு தூண்களைக் கொண்ட இம்மண்டபம் மேற்பகுதி திறந்த நிலையில் உள்ளது. தூண்களில் 7 வெவ்வேறு மாதிரியான அமைப்பு உடைய தனித் தூண்கள் உள்ளன. [1] இவை மேலேயும் கீழேயும் பலகைகளால் இணைக்கப்பட்டு உள்ளன. ஒரு தூண் சுருண்ட புரி உடையதாயும், மற்றொரு தூண் குழிந்த புரி உடையதாயும் அமைந்துள்ளன. இதுபோல் ஏழுதூண்களும் தனது கனத்திலும் புரி அமைப்பிலும் மாறுபட்டு உள்ளதால், தட்டினால் வெவ்வேறு வகையான ஓசைகளைக் கொடுக்கின்றன.

இதன் மேற்பகுதிகளில் அரங்கர் பள்ளி கொண்ட நிலையில் சிற்பமும், பெரிய திருவடி, சிறிய திருவடி சிற்பங்களும் முன்பகுதியில் மட்டும் உள்ளன. இவற்றின் கால அமைதி கி.பி. 18ம் நூற்றாண்டினை ஒத்ததாகக் காணப்படுகிறது.

திருத்தேர்கள்

விழாக்கள் என்ற அமைப்பின் ஒரு பகுதியாக மனிதன் தன்னைக் காத்து வரும் தேவனைத் திருவீதியில் வலம் கொண்டு செல்கின்றான். அதற்காகத் தேர்கள் செய்யப் பட்டு உள்ளன.

இத்தேரினைச் சுற்றிலும் பல சிற்பங்கள் செதுக்கிப் பொருத்தப்பட்டுள்ளன. நான்கு வெளிச் சக்கரங்களும் 2 உள் சக்கரங்களும் பெற்றுள்ள இத்திருத்தேரின் மேற்

பகுதியில் கடவுளர் உருவங்களுடன் இருந்தாலும் அஷ்ட திக்பாலகர்கள் எவ்வெத் திசைகளில் இருக்க வேண்டுமோ அவ்வத்திசைகளில் செதுக்கப்பட்டுள்ளனர்.

கீழ்ப்பகுதியில் தேர் காக்கும் பலிபூதங்களும் ஓரிரண்டு, இதர சிற்பங்களும் காணப்படுகின்றன. இத்தேரின் அளவினை 43 x 36 x 35 அடி எனக் குறிப்பிடுகிறது.[1] தமிழகத்திலேயே உள்ள தேர்களில் திருவாரூர்த் தேருக்கு அடுத்த பெரிய தேர் இதுவே யாகும்.

இது கொல்லம் 1025ஆம் (கி.பி. 1849) ஆண்டு வானமாமலை ஜீயரால் கொடுக்கப்பட்டது என்கிறது Gazettier குறிப்பு. தமது ஆய்வு நூலில் வானமாமலை ஜீயர் மடத்தால் சில திருப்பணிகள் செய்யப்பட்டதைக் குறிக்கிறார். அவற்றுள் இது ஒன்றாக இருக்கலாம் என்ற எண்ணம் வருகிறது. ஆனால் இது குறித்து இங்குள்ள மடத்தினில் ஏதும் குறிப்புகள் காணப்படவில்லை .

வளையம் தரும் வரலாற்றுச் செய்தி :

இந்தத் தேரில் உள்ள கயிறு கோக்கும் வளையத்தில் (2 வளையங்களில்) சில எழுத்துகள் தென்படுகின்றன. ஒரு வளையத்தில் துருப்பிடித்து அழிந்துவிட்டது. மற்றொன்று கயிறு மாட்டப்படுவதால் சிறிது சிறிதாக அழிந்துவரும் தன்மையைக் காண்கிறோம்.

1) இது ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் ௲௭௱௭௰௨ன் மேல் செல்லா நின்ற கொல்லம் ௲௨௰௫ம் ௵ சௌமிய ஆண்டு ஆவணி ௴ குருவாரமும் .....

2) திரையோதெசியும் உத்திராட நட்சத்திரமும் கூடின சுபையோக சுபதினத்தில் ..... பெற்ற திருநாள் ஆண்டாள் திருவுள்ளம்.....

3 ..... காகம்கெ ..... ம் பட்டர் சுவாமிகள் கயாபதி .....

4) ஆண்டாள் சன்னதிக்கடப்பட வச்சது" என்று சுட்டுகிறது.

கொடம் சுட்டும் வரலாறு

திருத்தேர் கொல்லம் 1025-ஆம் ஆண்டில் கொடுக்கப்பட்டது என்பதற்கு மற்றொரு சான்றும் உள்ளது. அதனில் கீழ்க்கண்டவாறு வெட்டப்பட்டு உள்ளது.

> "நாச்சியர் திருத்தேர் கொடம் வானமாமலை பட்டர்பிரான் ஜீயர் கயிங்கரியம் ௲௨௰௫ம் ௵ ஆவணி ௴ ௧௨ உ தூக்கிக் கண்டதுபடி ௪௰ துல்யம் ஆழ்வார் திருநகரியில் வாற்ப்பு".

இந்தக் குடம் தேரின் மீது ஸ்தூபம் போல் வைக்கப்படும் குடமாகும். ஒரு முறை தேர் இழுவையின்போது மேலிருந்து சரிந்து விழுந்து உயிர்ச்சேதம் ஏற்பட்டுவிட்டதால், தற்காலத்தில் தேர் மீது ஏற்றப்படுவதில்லையாம். இதன் எடை 40 (ராத்தல் தோலா ?) என்று குறிக்கப்படுகிறது. வெங்கலத்தால் செய்யப்பட்டுள்ள இதை 3 பாகங்களாகப் பிரிக்கலாம்.

இத்திருத்தேரின் மரச்சிற்பங்களை,

1) தெய்வத் திருவுருவங்கள்
2) திசா பாலகர்கள்
3) காமச் சிற்பங்கள் (Erotic sculptures)
4) தேர் காக்கும் குள்ள பூதங்கள் என நான்காகப் பகுக்கலாம்.

கி.பி. 1700ல் கலக்குட்டியாப் பிள்ளை மகன் திருஞானசம்பந்தம் பிள்ளை என்பவர் தமது கர்த்தாக்களுக்குப் புண்ணியமாகத் தேர் ஒன்று கொடுத்துள்ளதைக் கல்வெட்டு குறிக்கிறது. (559/1926)

ஆ. செப்புத் திருமேனிகள்

செம்பு உலோகத்தால் செய்யப்பட்ட திருவுருவங்கள் செப்புத் திருமேனிகள் என்று வழங்கப்படுகின்றன. செப்புத் திருமேனிகள் மூல பிம்பங்களாகவும், உற்சவ விக்ரகங் களாகவும் இரண்டு வகைப்படும். இங்கு குறிப்பிடப்போவது உற்சவ விக்கிரகங்களாக இருக்கும் திருமேனிகளையே ஆகும்.

மகாவிஷ்ணு

வடபத்ரசாயி கோவிலின் கருவறையில் எழுந்தருளச் செய்யப்பட்டிருக்கும் மகாவிஷ்ணு ஸ்ரீதேவி பூதேவி சகிதராய் தனித்தனி பத்ர பீடங்களில் நிற்கின்றனர். இவரது அமைப்பு தலையில் கிரீட மகுடமும், காதில் மகர குண்டலமும், மார்பில் சற்றுப் பெரிதாகச் செல்லும் பூணூலும், கணுக்காலுக்கு மேல் உள்ள ஆடையும், பின்புறம் சுருண்ட கூந்தல் முடிகள் தோளில் விழுந்து புரளும் வண்ணமும் நீண்டு உருண்டை யான முகம் உடையவராக இருக்கின்றார். மேலிரு கரங்களில் சக்கரம், சங்கும், கீழிரு கரங்களில் அபய, வரத முத்திரைகளைத் தாங்கியும் அமைந்துள்ளது. சிலையின் சுருண்ட முடியமைப்பும், முக அமைப்பும் நமக்குப் பிற்காலச் சோழர் காலத்தினைக் காட்டுகின்றன. இதன் காலம் சுமார் 11ஆம் நூற்றாண்டாகும். இதனுடன் இணைந்த ஸ்ரீதேவி பூதேவி உருவங்கள் அதே கால அளவு அதே அழகுடன் அமைந்துள்ளன.

இலக்குமி நாரரயணர்

இலக்குமியைத் தன் இடது தொடையில் ஏந்தியவண்ணம் நான்கு கரங்களுடன் பத்ரபீடத்தின் மீதுள்ள பத்ம பீடத்தில் அமர்ந்து உள்ளார். தலையில் கிரீடமும், காதுகளில் மகர குண்டங்களும், மார்பில் புரிநூல், உதரபந்தமும் கொண்டுள்ளார். நான்கு கரங்களில் மேலிரு கரங்கள் சக்கரம், சங்கு ஏத்தியும், கீழிரு கரங்கள் அபயம், இலக்குமியை அணைத்தும் காணப்படுகின்றன. இலக்குமியின் வலக்கரம் நாராயணரின் இடுப்பை அணைத்த நிலையிலும், இடக்கரம் மலர் தாங்கியும் உள்ளது. இது தற்காலத்தில் புழக்கத் தில் இல்லாததாகத் தோன்றுகிறது. இதன் காலம் 14ஆம் நூற்றாண்டின் பிற்காலம் ஆகும்.

ஆண்டாள்

சற்று உருண்டையான முகமும் இரு கரங்களும், காதில் பத்ர குண்டலமும் கொண்டு ஆண்டாள் பத்ம பீடத்தின் மேல் நிற்கின்றாள். வலக்கரம் தொங்கு கரமாக வும், இடக்கரம் சிம்மகரண முத்திரையிலும் உள்ளன. இதன் காலம் சுமார் கி.பி. 14ஆம் நூற்றாண்டாகலாம்.

ராஜமன்னார் என்றழைக்கப்படும் இச்சிலை உருண்டையான முகமும் சற்று அகன்று விரிந்த நாசியும் கொண்டு இருக் கரங்களுடன் பத்ரபீடத்தின் மேல் உள்ள பத்ம பீடத்தில் நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளது. இவரின் காலம் சுமார் கி.பி. 14–15 ஆம் நூற்றாண்டாகலாம்.

நர்த்தன கிருஷ்ணன் :

'ஸ்ரீ ஜயந்தி கிருஷ்ணன்' என்றழைக்கப்படும் செப்புத்திருமேனி பீடமும் பத்ர பீடத்தின் மீது உள்ள பத்ம பீடத்தில் ஒரு காலைத்தூக்கி நடனமிடும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. தலையில் தூக்கியிட்ட கொண்டையும் நெற்றிச்சுட்டியும், காதுகளில் பத்ர குண்டலமும், வாகு வளையமும் மார்பில் சன்னவீரம், உத்ரபந்தம் அலங்கரிக் கின்றன. காலில் சலங்கையும் கழலும் எழில் கூட்டுகின்றன.

சற்று அகன்று பரந்த உருண்டையான முகமும் கைகள், உடல்களில் காணப் படும் அணிகள் ஆகியவற்றைக் கொண்டு இத்திருமேனி 15ஆம் நூாற்றாண்டு எனக் கருதலாம்.

சுந்தரராராஜப் பெருமாள்:

சுந்தரராராஜப் பெருமாள் என்றழைக்கப்படும் இம்மகாவிஷ்ணு உருவம் சமபங்கத் தில் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளார். இவர் நான்கு கரங்களுடன் மேலிரு கரங்களில் சக்கரம் சங்கு ஏந்திக் கீழிரு கரங்கள் வீதம் கட்டிய வலிம்பித முத்திரை காட்டிக் காணப் படுகின்றன. கலையமைதி கொண்டு இதன் காலம் 15ஆம் நூற்றாண்டாகலாம் என்ற முடிவிற்கு வருகிறோம்.

சேனை முதலியார்

பத்ரபீடத்தின் மீது கிரீடமும் அணிந்து காதுகளில் மகர குண்டலமும், வாகுமாலை, புரிநூல் உதரபந்தமும் அணிந்து அபய, சிம்மகரண முத்திரை காட்டி இரு கரங்களுடன் அமர்ந்துள்ளார். காலம் கி.பி. 15 ஆம் நூற்றாண்டு.

ஸ்ரீ ஸ்ரீநிவாசர் :

நான்கு கரங்களுடன் நின்ற நிலையில் காணப்படும் இச்செப்புத் திருமேனி கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

ஆடவல்லான்

ஜடா மகுடமும் அதனில் பிறையும் அழகான நாசியும், உதட்டில் எக்காளச் சிரிப்பும் மகர, பத்ர குண்டலங்களும், கழுத்தில் ஒன்றைச் சங்கிலியும் பாதங்களும், இடுப்பில் உதரபந்தமும் தொடை வரை தோலாடையும் உடைய தூக்கிய, முயலகன் மீது ஊன்றிய பாதங்களும் இந்த நாற்கை நடசராசரின் எழில்மிகு சிற்பம் ஸ்ரீவைத்திய நாதசுவாமி கோயிலில் உள்ளது.

நான்கு கரங்களுள் மேற்கரங்களில் டமருகம், அர்த்த சந்திரமும், கீழ்க்கரங்களில் அபயம், கஜ ஹஸ்தமும் உள்ளன.

இறைவனின் பின்புற சடை சுருண்டு தோளின் காணப்படுகின்றன. சிகைச் சக்கர அமைப்பு காணப்படவில்லை. திருவாசி பிரிக்கத் தகுந்ததாயிருக்கிறது. கலையமைதி கொண்டு இதனை 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்த செப்புத் திருமேனி என்று கூறலாம்.

சிவகாமி

மேற்குறித்த நடராசரின் அருகே விளங்கும் சிவகாமி 11ஆம் நூற்றாண்டிற்கு உரியதாகும். வலக்கரத்தில் மலரேந்தியும் இடக்கரம் தொங்குகரமாகவும் உள்ளது.

இக்கோயிலில் 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிரதோஷமூர்த்தியான சந்திரசேகரர், உமை ஆகிய திருமேனிகளும் உள்ளன.

இ. கட்டடக் கலை

கட்டடங்கள் என்னும் பொதுப் பிரிவின்கீழ் கோயில்கள், அரண்மனைகள், மண்டபங்கள், கோட்டைகள் ஆகியவற்றை அடக்கலாம்.

கோட்டை

ஸ்ரீவில்லிபுத்தூரில் கோட்டை ஒன்று இருந்தமை குறிக்கப்படுகிறது. அக் கோட்டையின் ஒரு சில எச்சங்கள் பெயரளவில் விளங்குகின்றனவேயன்றி கோட்டைப் பகுதிகளைக் காண முடியவில்லை. கோட்டை இருந்த இடத்தினைக் குறிக்கும் "கோட்டைப்பாடி" என்பதும், கோட்டை முன்பகுதி வாயில் இருந்ததைக் "கோட்டைத் தலவாசல்" என்றும், கோட்டைப் பகுதிக்குள் இருந்த காளியம்மனைக் கோட்டைக் காளியம்மன் என அழைப்பதும் கொண்டு கோட்டை இருந்த இடத்தினை உணர்கிறோம்.

வடபெருங்கோயில்

இன்றைக்கு வடபத்ரசாயிகோயில் என்று அழைக்கப்படும் கோவிலே பண்டு குறித்த நாராயணன் கோயிலாக இருக்க வேண்டும். பெரியாழ்வார் தம் பாசுரங்களில்,

"மின்னனைய நுண்ணிடையார் விரிகுழல் மேல் நுழைந்த வண்டு
இன்னிசைக்கும் வில்லிபுத்தூரின் இனிதமர்ந்தாய்.....
யெய்துவித்த இருடிகேசா முலையுணாயே" (பெரி. திரு. 2:2:6)

என நாராயணனைக் குறிக்கின்றார்

மீண்டும்,

"உன்னுமாறுன்னை யொன்று மறியே னோவாதே நமோ நாராயணவென்றே
வன்மையாவதுன் கோயில்வாழும் வைட்டணவ னென்னும்" (பெரி.திரு. 5:1:3)

என்று குறிக்கிறார்.

ஆண்டாள் குயிலைத் தூதுவிடும்போது

"மென்னடை யன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூருறைவான்

(நாச்சியார் திருமொழி 5:5)

எனக்குறித்து மேலும்,

"பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப் புணர்வதோராசையினால்"

(நாச்சியார் திருமொழி 5:7)

எனப் பள்ளிகொண்ட நிலையினையும் குறிக்கின்றார்.

இப்பள்ளி கொண்ட பெருமானைப் பற்றி 10ஆம் நூற்றாண்டில் அரசாண்ட சோழன் தலைக் கொண்ட வீரபாண்டியன் கல்வெட்டு "ஜலசயனத்துக் கிடந்தருளிய பரமஸ்வாமி" எனப் பள்ளி கொண்ட நிலையைக் குறிக்கின்றது. (தெ.க.தொகுதி XIV, எண் 91)

ஆக இவற்றின் மூலம் பெரியாழ்வார் காலம் முதல் இருந்த கோவிலென்று தெரிகிறது. பெரியாழ்வார் பாண்டியன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்து வாழ்ந்தவர் என்பதும் அவன் காலம் கி.பி. 815 முதல் 862 வரை ஆகும். ஆக 9ம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே இத்திருக்கோயில் இருந்துள்ளது எனத் தெரிகிறது.

இவ்வொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த கோயில் பின்னால் பலரின் ஆட்சி மாற்றம் பெற்று நாடு உண்டான நிலையில் பல்வேறு திருப்பணிகளால் என்ற பெயரில் மாற்றம் பெற்றுள்ளன.

இக்கோயில் கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், 2 திருச்சுற்றுகள் கோபுரங்கள் ஆகியவற்றைப் பெற்றுள்ளது.

இன்று மாடக்கோயிலாகத் திகழும் இது. பண்டு கருவறையைக் கீழேயே பெற்று இருந்திருக்கிறது. மகாமண்டபத்தின் ஒரு பகுதி அடைக்கப்பட்டு பின்னால் லட்சுமி நரசிம்மர் உருவம் வைக்கப்பட்டுள்ளது.

மகாமண்டபம் :

காலத்தால் முற்பட்ட இரண்டு கல்வெட்டுகள் மகா மண்டபத்திலேயே உள்ளன. ஒன்று தற்காலத்து லட்சுமி நரசிம்மர் சுதை உருவத்திற்கு வலப்புறமும் இடப்புறமும் உள்ளதாகும். மற்றொன்று மகாமண்டபத்து அதிஷ்டானத்தில் உள்ள கல்வெட்டாகும். (285, 286 /1956)

கோயில் கட்டப்பட்ட காலத்தில் மகாமண்டபம் சுவர்கள் ஏதும் இல்லாத நிலையில் வெறும் தூண்கள் நிறைந்த மண்டபமாகவே இருந்திருக்கும்.

மகாமண்டபத்தின் மேற்புற பித்திகளில் அரைத்தூண்கள் போன்ற அமைப்பு காணப்பட வில்லை. மாறாக அவை கற்கள் பிதுங்கியது போன்று காணப்படுகிறது. இம்மகா மண்டபத்தின் இரண்டு புறச் சுவர்களிலும் சோணாடு கொண்டு வழங்கி யருளிய – சுந்தர பாண்டியன் கல்வெட்டுகளே உள்ளன.

இம்மண்டபத்தின் அதிஷ்டானத்தில் ஜகதி கம்பு, கண்டம், கம்பு பட்டிகை ஆகியவையும் எவ்வித அலங்காரமும் இல்லாத சுவரும், அவற்றின் மேல் மாடக் கோயிலாக மாற்றப்பட்ட காலத்து எழுப்பப்பட்ட காலத்துச் சுவர்களும் உள்ளன. இம்மகா மண்டபத்து அதிஷ்டானம் மட்டும் பழைய நிலையில் இருந்திருக்கிறது.

கருவறையும் – அர்த்த மண்டபமும்

கருவறையும் அர்த்தமண்டபமும் ஒரே காலத்துக் கலையாகத் தோற்றமளிக் கின்றன. அதிஷ்டானத்தில் ஜகதி, முப்பட்டைக், குமுதம், கம்பு, கண்டம், பட்டிகை ஆகியவையும் பித்தியில் உள்ள அரைத்தூண்களில் பாதம், தாடி, குடம், கண்டம், பலகை வாழைப்பூ, போதிகையின் தொடக்கநிலை அரும்பத் தொடங்கிய நிலை ஆகியவற்றைக் காண்கிறோம்.

வெற்று கோஷ்டங்களும் காட்டப்பட்டு இருக்கின்றன. இவற்றைக் கொண்டு கி.பி. 15, 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கலாம் என உணர்கிறோம்.

கூரை வளைவு போன்ற பிரஸ்தர கொடுங்கையின் கூடும், முகமும் காட்டுவதும் காலத்தை உணர துணையாகின்றன. இவற்றைக் கல்வெட்டுகளின் அடிப்படையில் ஆயும் போது நமக்கு ஒன்று தெளிவாகின்றது. கருவறையின் வடக்குப் புற அதிஷ்டானத் தில் உள்ள திரிபுவனசக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் எனத் தொடங்கும் கல்வெட்டு, முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தது ஆகும் (533/1926) இவன் காலம் கி.பி. 1268 - 1311 ஆகும்.(இக்கணக்கீடு பாண்டியர் வரலாறு T.V.S பண்டாரக்காரைத் தழுவியது) இவன் கல்வெட்டு அங்கு இருப்பதால், அதன் அதிஷ்டானப் பகுதி 13ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தது எனக் கொள்ளலாம். மற்ற கல்வெட்டுகளும் 15 நூற்றாண்டு, 16ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தனவாக உள்ளன. மேலுள்ள பித்திப் பகுதியில் கல்வெட்டொன்றும் காணப்படாமையால் இது 16ஆம் நூற்றாண்டில் மாற்றப்பட் டிருக்கலாம். மேலுள்ள கருவறையும் 16 நூற்றாண்டின் சின்னங்களாகத் தூண்களில் வாழைப்பூ, போதிகை பெற்று உள்ளன. ஆக 16ஆம் நூற்றாண்டில் இது **மாடக் கோயிலாக** மாற்றப் பெற்றபோது மேல் பகுதி மட்டும் செப்பனிடப்பட்டு உயர்த்திக் கட்டப்பட்டுள்ளது.

இப்படி மாடக் கோயிலாகக் கட்டப்பட்ட போதுதான் கனம் தாங்குவதற்காகவும் கீழ்ப்பகுதி அடைக்கப்பட்டு தாங்கு சுவர்கள் எழுப்பப்பட்டு இருக்க வேண்டும்.

முன்னால் உள்ள கோபால விலாசம் என்னும் பகுதியும் இக்காலத்தில்தான் மரச் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுக் கூடாரம் கட்டப்பட்டுள்ளது.

விமானம்

சாலை விமானமாக அமைக்கப்பட்டுள்ளது. தென்புறம் தட்சிணாமூர்த்திக்கு பதில் வண்ணம் தீட்டப்பட்ட சிவபெருமான் உருவும் மேற்கில் யோக நரசிம்மரின் உருவமும், வடக்கில் இலட்சுமி நரசிம்மரின் உருவமும் சுதையுருவங்களாக உள்ளன. இவை அண்மையில் நடந்த திருப்பணியின் போது புதுப்பிக்கப்பட்டு உள்ளன.

கட்டடக்கலை அமைப்பை ஊன்றி நோக்கும் போது,

1) பத்தாம் நூற்றாண்டில் கருவறையும் அர்த்த மண்டபமும் நன்னிலையில் இருந்து உள்ளன.

2) மகா மண்டபம் சுற்றுச் சுவர்கள் இல்லாமல் வெறும் திறந்த மண்டபமாக இருந்துள்ளது.

3) 13ஆம் நூற்றாண்டில் சோணாடு வழங்கி அருளிய சுந்தர பாண்டியன் காலத் திலாவது சற்று முன்னாவது மகா மண்டபம் சுற்றுச் சுவர் எடுத்து மூடப்பட்டுள்ளது.

4) கருவறையின் அதிஷ்டானப் பகுதி இக்காலத்திலேயே அதாவது கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலேயே எடுக்கப்பட்டுள்ளது.

5) மீண்டும் 16ஆம் நூற்றாண்டளவில் கருவறை அர்த்த மண்டபம் ஆகிய பகுதிகளின் சுவர்கள் மாடக் கோயிலாக ஆக்கப்படுவதற்காக உயர்த்திக் கட்டப்பட்டு மகாமண்டபத்தில் தாங்கு சுவர்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பன ஊகிக்க முடிகிறது.

உள்திருச்சுற்று

சோணாடு வழங்கியருளிய சுந்தர பாண்டியன் கல்வெட்டுகள் உள்ளன (554, 555, 556, 557, 558 / 1926) இவை எல்லாம் சுமார் 13ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவை யாக இருப்பதனால் அனேகமாக கோயில் ஏற்பட்ட காலத்தினிலேயே இவையும் ஏற்பட் டிருக்க வேண்டும்.

தூண்களும் கூரையும்

இது கூரையால் மூடப்பட்டும் தூண்களால் தாங்கப்பட்டும் கீழே கற்கள் பாவப்பட்டும் விளங்குகிறது.

தூண்களின் வாழைப்பூப் போதிகை, மேல் தட்டில் உள்ள தூண்களை ஒத்து உள்ளதாலும், புடைப்புச் சிற்பங்கள் 16ஆம் நூற்றாண்டின் சிற்ப அமைதியைப் பெற்று

இருப்பதாலும், மாடக் கோயிலாக மாற்றப்பட்ட 16ஆம் நூற்றாண்டில் கல் பாவப்பட்டு தூண்கள் நிறுத்தப்பட்டு, மேற்கூரை போடப்பட்டிருக்கிறது என்று கருதலாம்.

இரண்டாம் திருச்சுற்று மதில்

இம்மதில் கி.பி. 1536ஆம் ஆண்டுவாக்கில் (சகாப்தம் 1458) கோஜடில வர்மரான திரிபுவன சக்ரவர்த்தி கேனேரின்மை கொண்டான் இறந்த காலம் எடுத்த பெருமாள் குலசேகர தேவர் கோதண்டராமன் எடுத்தான் எனக் குறிக்கிறது (526/1926)

கிணறு

இம்மதிலின் வலப்புறம் ஒரு இடத்தில் கிணறு உள்ளது. அவ்விடத்தில் சற்று மதில் வளைந்து செல்கிறது. கிணற்றினை சுற்றி வளைந்து செல்லுமாறு செய்யப் பட்டிருப்பதால், அக்கிணறு மதிலைக் காட்டிலும் காலத்தால் முற்பட்டதாக இருக்கலாம்.

சக்கரத்தாழ்வார் சந்நிதி ஒன்று இங்கு உள்ளது. இது பிற்காலத்து அமைப்பினைப் பெற்றுள்ளது. 17ஆம் நூற்றாண்டில் எடுக்கப்பட்டதாக இருக்கலாம். தலபுராணத்தில் சக்கரத்தாழ்வார் தனது பாவம் தீர்வதற்காகத் திருக்குளத்தில் மூழ்கி வணங்கினார் எனக் குறிப்பிடப்டும் செய்தி இங்கு கருத்தில் கொள்ள வேண்டும்.

மேற்குக் கோபுரம்

பின்னால் இடிந்த நிலையில் கோபுரமொன்று உள்ளது. ஒரு மாடம் மட்டும் எஞ்சி யுள்ளது. கோபுர அதிஷ்டானம் கண்டம் முப்பட்டை, குமுதம் பட்டிகை ஆகியவற்றைப் பெற்றுள்ளது.

இதனில், உள்ள கல்வெட்டு இதை சகம் 1637 (கி.பி. 1715) ஜெய வருடம் தை மாதம் ததியாராதனம் திருமலையப்பங்கார் என்பவரால் எடுக்கப்பட்ட செய்தியைச் சுட்டுகின்றது. (A.R.E. 562/1926)

துவஜஸ்தம்பம்

கருவறை வாயிலுக்கு முன்னால் ஒரு துவஜஸ்தம்பம் இருக்கிறது. அதிலுள்ள கல்வெட்டு, திருத்தேரும், கொடிமரமும் கலக்குட்டியாப் பிள்ளை மகன் திருஞான சம்பந்தப்பிள்ளை தமது கர்த்தாக்களுக்குப் புண்ணியமாக கி.பி. 1700ஆம் ஆண்டில் (சக 1622 விஷு ஆவணி 28) எடுக்கப்பட்டதாகக் குறிக்கிறது.(559/1926) அதோடு மட்டுமல்லாமல் அதன்மேல் தாமிரத் தகடும் பூட்டி அதன் மேலும் எழுதப்பட்டுள்ளது.

பெரிய கோபுரம்

பெரிய கோபுரம் என்றழைக்கப்படும் இக்கோபுரம் ஸ்ரீவில்லிபுத்தூருக்கு வருவோரை வாவென்று அழைக்கிறது. இக்கோபுரத்தில் ஒரு பாடல் ஒன்று உள்ளது. அது இதன் உயரத்தினைக் குறித்து இதற்கிணை,

" அம்பொன் சிகரம் மேரு ஒன்றே" எனக் குறிக்கிறது. (A.R.E. 560/1926)

இராஜகோபுரத்தில் அதிஷ்டானம் முதலிய பகுதிகள் காணப்படுகின்றன. வெற்று கோஷ்டங்களும் காட்டப்பட்டுள்ளன. சிலவற்றில் சிங்கமும் யாளியும், யானையும் சிங்கமும் விளையாடுவது போன்ற சிற்ப வேலைப்பாடுகள் காட்டப்பட்டுள்ளன. சில இடங்களில் மனித அமைப்புகள் காட்டப்பட்டுள்ளன.

இது முற்கூறப்பட்ட திருச்சுற்று மதிலுடன் இணைந்த அமைப்பாகவே உள்ளதால் இதன் காலம் கி.பி. 1536 எனக் கொள்ளலாம்.

கோபுரம் இல்லாமல் திருச்சுற்று மதில் எடுப்பது இயல்பு. ஆனால், மதில் இல்லாமல் கோபுரம் மட்டும் என்பது இயல்பாகப் படவில்லை.

மதில், கோபுரம் ஆகியவற்றின் இணைப்பும் ஒன்றாக, சரியாக இணைந்துள்ளன. கோபுரத்தில் உள்ள இருக்கோதுமந்தணர் பாடல் எழுத்துகளில் உள்ள கோ–கொ போன்ற எழுத்து வடிவங்களையும் 16ஆம் நூற்றாண்டினைச் சார்ந்ததாகவே உள்ளது. எனவே இதனை இறந்த காலம் எடுத்த பெருமாள் குலசேகரன் திருமதில் கைங்கர்யம் செய்யும் போது (561/1926) இதனையும் எடுத்திருக்கலாம்.

இதன் உயரம் 196 அடி என தல மகாத்மியம் சொல்லுகிறது. (ஸ்தல மகாத்மியம் பக்கம் 38) ஆனால் அரசுக்குறிப்போ 192 அடி என்கிறது. (Ramanathapuram District Gazettier)

சூடிக் கொடுத்த நாச்சியார் கோயில்

ஆண்டாள் கோயிலின் இன்றைய கருவறைக் கட்டட அமைப்பு கி.பி. 14ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அதிஷ்டானத்திற்கு மேலே உள்ள பகுதி சற்று மாறுபட்ட வகையில் உள்ளது.

முன்னால் உள்ள மணிமண்டபம் அதனை அடுத்துள்ள மகாமண்டபம், கரு வறையை இணைக்கும் அர்த்த மண்டபம் ஆகிய பகுதிகள் இக்கோயிலில் உள்ளன.

உள்திருச்சுற்று மாளிகையும், வெளி திருச்சுற்று மாளிகையும் உள்ளன.

கருவறை, அர்த்த மண்டபம், மகா மண்டபம், மணிமண்டபம் ஆகிய நான்கும் ஒரே மேற்கூரை உடையனவாக உள்ளன.

மகா மண்டபம்

மகா மண்டபத்தில் உபானம், கம்பு, கண்டம், கம்பு, அதற்கும் மேல் கொடுங்கை போன்ற வளைவுடைய பகுதி ஆகியன அமைந்துள்ளது. அவற்றில் சிறிது கூடு போன்ற அமைப்பு அமைக்கப்பட்டு பூ வேலைப்பாடுகள் உள்ளன.

அதிஷ்டானம் உபானத்தின் மேல் பத்மம், கம்பு, பத்மம், கம்பு ஜகதி, பத்மம், கண்டம், பத்மம், குமுதம், பத்மம், பட்டிகை, பத்மம் கம்பு ஆகிய பகுதிகள் உள்ளன.

வெளிப்புறம் பித்தியில் (சுவரில்) தோன்றும் அரைத்தூண்களில் வேதிகை இன்றி பாதம் முதலே தொடங்கப்பட்டுள்ளன. முப்பட்டையாக இருக்கும் இவற்றில் நாக பந்தம் காணப்படுகிறது. கலசமும் தாடியும் பத்மமும், பலகையும் காணப்படுகிறது.

இவ்வமைப்புகள் 15, 16ம் நூற்றாண்டின் அமைப்புகள் எனக் காட்டுகின்றன.

அர்த்தமண்டபமும் கருவறையும்

அர்த்தமண்டபத்திலும் அதிஷ்டானப் பகுதியில் மகாமண்டபத்து அமைப்பே காணப்படுகிறது. அதன் மேலுள்ள பகுதியில் மீண்டும் சிறிய அளவில் அதிஷ்டானம் போன்ற அமைப்பு காணப்படுகிறது.

கொடுங்கைகள் கூரையைச் சரித்து மூங்கில் சட்டங்கள் போன்ற அமைப்புடன் உள்ளன. இவற்றின் மேல் யாளி வரிசை காணப்படுகிறது. யாளி வரிசையின் இடப்புறம் பூதம் காணப்படுகிறது. யாளி வரியின் முடிவில் மகர வாய் போன்ற அமைப்பும் காணப் படுகிறது.

கபோதம் அல்லது கொடுங்கையில் கூடுகள் காணப்படுகின்றன. அவற்றின் சிலவற்றில் முகங்களும் காட்டப்பட்டுள்ளன. மூலை திரும்புமிடங்களில் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு கூடுகள் உள்ளன.

அகன்ற மகாமண்டபத்திலும், குறுகிய அர்த்தமண்டபத்தின் இரண்டு பகுதி களிலும் சாவகாச அந்தராளம் போன்ற அமைப்பு காட்டப்படுகிறது. அவற்றில் 16ஆம் நூற்றாண்டுகளின் எழுத்தமைதியில் "சதாசேவை" என எழுதிப் பொறிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டட அமைப்பைக் கல்வெட்டின் துணைகொண்டு ஆயும்போது,

கோயிலின் கர்ப்பகிருக பித்தியிலும் அர்த்தமண்டபப் பித்தியிலும் மகாமண்டபத் தின் அதிஷ்டானப்பட்டிகை பகுதியிலும் கட்டட தொடர்புடைய 3 கல்வெட்டுகள் காட்டப் படுகின்றன. அவற்றில் முறையே சூடிக் கொடுத்தருளிய நாச்சியார் கர்ப்ப கிருகம் (564/1926) அர்த்தமண்டபம் (585/1926) மகா மண்டபம் (586/1926) சுந்தரத் தோளுடை யான் மகாபலி வாணாதிராஜன் ஸார்வ பௌமன் தர்மம் என்று கல்வெட்டு காணப் படுகிறது.

இம்மன்னன் பிற்காலப் பாணர்களின் இனத்தைச் சார்ந்தவன் இவன் திருமாலிருஞ் சோலையைத் (அழகர் மலை) தலைமையிடமாகக் கொண்டு ஆண்டவன்.

சார்வபௌமன் என்ற பட்டம் பெற்ற மன்னன் ஒருவனே. இவன் கி.பி. 1476 முதல் 1528 வரை ஆண்டவன் எனக் குறிப்புக் கூறுகிறது.

ஆக இவன் தனது தர்மம் எனக் குறித்து உள்ளதால், இவை இவனது காலத்தில் எடுக்கப்பட்டதாகக் கருத வேண்டியுள்ளது.

இவன் காலத்திற்கு முற்பட்ட கல்வெட்டுகள் பல இதன் அதிஷ்டானப் பகுதிகளில் உள்ளன (563, 564, 567, 572, 575, 577 and 578 / 1926).

மேற்பகுதி இவன் காலத்தில் கட்டப்பட்டிருப்பதாலும், கீழ்ப்பகுதியில் இவனுக்கு முன்னோர் பலரின் கல்வெட்டுகள் இருப்பதாலும், கீழ்ப்பகுதி முன்பும், மேற்பகுதி பின்பும் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இப்பகுதியில் உள்ள கல்வெட்டுகளில் மிகவும் பழமையானது இதே பாணர் குல மன்னன் கஜவேட்டைகண்டன் மதுராபுரி மாநாயகன் திருமாலிருஞ்சோலை நின்றானான மாவலி வாணாதிராயன் ஆவான். இவன் கி..பி. 1428 முதல் கி.பி. 1452 வரையில் ஆண்டுள்ளதாகத் தெரிகிறது. இவனது சக 1350 சௌமிய சித்திரை 5ம் தேதியைக் குறிக்கும் கல்வெட்டு ஒன்று இங்கு உள்ளது. (A.R.E. 572/1926)

இவன் காலத்தில் வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று இங்கு உள்ளதால், இவன் காலத்திலோ, அல்லது இவனது காலத்திற்குச் சற்று முன்போ, இவை கட்டப்பட்டிருக்க வேண்டும்.

அதிஷ்டானம் வரையான கீழ்ப்பகுதி – 15ஆம் நூற்றாண்டிலும் அதற்குச் சற்று முன்பும் திருப்பணிகள் செய்யப்பட்டு பித்தி முதலியவை அடங்கிய மேற்பகுதி – 16ஆம் நூற்றாண்டாகிய ஸார்வ பௌம வாணாதிராயன் காலத்திலும் தொடர்ந்து செய்யப்பட்டு இருக்கிறது என்ற முடிவிற்கு வரலாம்.

விமானம்

வேசர விமானமாகச் சுதையால் எடுக்கப்பட்டுள்ளது. கிரீவப் பகுதி மிகச் சிறியதாக உள்ளது. விமானம் முழுவதும் வர்ணம் பூசப்பட்டு உள்ளது.

சுதை உருவங்கள்

இதனில் திருப்பாவையின் 30 பாசுரங்களைக் குறித்து விளக்கும் வகையில் வரிசை மாறாமல் சுதை உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன.

முதல் (உள்) திருச்சுற்றில்

முதல் திருச்சுற்றின் தென்கிழக்கு மூலையில் இலக்குமி நாராயணர் சந்நிதியும் ராமர் விக்கிரகம் வைக்கும் சந்நிதி வடகிழக்கு மூலையிலும், சுந்தரராஜன் விக்கிரகம் வைக்கும் சந்நிதி வடமேற்கு மூலையிலும், சேனை முதலியார் சந்நிதி வடகிழக்கு மூலை யிலும் இருந்து பின்னால் மாற்றிக் கட்டப்பட்டுள்ளன என்ற செய்தி கிடைக்கின்றது. (இத்திருப்பணி 1926ஆம் ஆண்டில் சிந்தாமணி செட்டியாரால் செய்யப்பட்டதென்ற செய்தியும் கிடைக்கின்றது.) இந்த உள்திருச்சுற்று 16ம் நூற்றாண்டினதாகக் கருதப் படுகிறது.

முன்கோபுரம்

இக்கோபுரம்அதிஷ்டானத்துக்குக் கீழே உப பீடம், மேலே முப்பட்டைக் குமுதம், பட்டிகை ஆகிய பகுதிகளைப் பெற்று உள்ளது. மண்டபத்தின் மேற்புறம் பாண்டியன் இலச்சினை ஆன இரு கயல்களும் ஒரு செண்டும் இடையில் உள்ளன.

இதனில் வெளிப்புறம் சகம் 1481ஆம் ஆண்டைக்(கி.பி.1559) குறிக்கும் ராமராஜ விட்டல தேவ மகாராஜா என்னும் விஜய நகரப் பிரதிநிதியின் கல்வெட்டு காணப்படு கிறது. (585/1926)

கல்யாண மண்டபம்

கோபுரப்பகுதிக்கு முன்னால் உள்ள கல்யாணமண்டபம் கோபுரம் எடுக்கப்பட்ட அதே காலத்தில் எடுக்கப்பட்டிருக்க வேண்டும். யாளி யானை மீது நின்று கொண்டு துதிக்கையால் கோத்துக் கொண்டு இருப்பது போல் பல தூண்கள் உள்ளன. இவற்றில் அடியார் சிலரின் புடைச் சிற்பங்களும் பூவேலைப்பாடுகளும், மிருகங்கள், பறவைகள் போன்றவற்றின் உருவங்களும் உள்ளன. வாழைப்பூ போதிகை நான்கு தொங்கும் நிலையிலும், காட்டப்பட்டுள்ளது. இதன் மேற்பகுதியில் 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஓவியங்கள் உள்ளன.

பந்தல் மண்டபம்

இதன் முன்னால் உள்ள பகுதி பந்தல் மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இப்பந்தல் மண்டபத்தின் கூரையைக் கூம்பு வடிவாக வேய்ந்தது போல் அமைத்து உள்ளதால், பந்தல் மண்டபம் என்று அழைக்கப்படுகிறது.

இது மிகவும் உயரமான தூண்களால் தாங்கப்படுகிறது. எக்காலம் என்று அறிய எந்தச் சான்றும் இல்லை. ஆனால் கேரளக் கட்டட அமைப்பைத் தழுவியுள்ளதால் இதை 18ஆம் நூற்றாண்டினதாகக் கொள்ளலாம்.

சுக்கிரவாரக் கொறடு

இது மகாமண்டபத்தின் உள்ளே உள்ள ஒரு சிறு மண்டபம் ஆகும். வெள்ளிக் கிழமைகள் தோறும் ஆண்டாளும் ரங்கமன்னாரும் இக்கொறட்டில் ஊஞ்சலில் காட்சி தருவதால் வெள்ளிக்கிழமை கொறடு என்ற பொருளில் வழங்குகின்றது.

இது கல்லால் கட்டப்பட்டு மேலே செம்புத் (பித்தளைத்) தகடு போர்த்தப்பட்டு விளங்குகின்றது. அதன்மேல் தங்க முலாம் பூசப்பட்டு உள்ளது.

இதனில் திருமலை நாயக்கர் தன் தேவியாருடனும் அவன் சகோதரர் முத்தியாலு நாயக்கர் தன் துணைவியருடனும் ஆண்டாளின் தாசராக கைகூப்பிய படி நிற்கின்றனர்.

இதன் காலம் திருமலை நாயக்கரின் காலமாகக் கொண்டால் கி.பி. 16ஆம் நூற்றாண்டாகக் கருதலாம்.

வைத்தியநாதசாமி கோயில் கட்டடக்கலை அமைப்பு

கருவறையும் அர்த்தமண்டபமும்

இன்றைக்கு சுயம்புலிங்கமாக எழுந்தருளியிருப்பதாகச் சொல்லப்படும் வைத்திய நாத சுவாமி கோயில் கருவறை, அர்த்த மண்டபம், முன்மண்டபம் என்ற பகுதிகளை உடையது.

கருவறையும் அர்த்தமண்டபமும் ஜகதிப் படையிலிருந்தே இன்றளவில் உள்ளன. அதிஷ்டானத்தில் ஜகதிக்கு மேல் முப்பட்டை குமுதம் கம்பு, கண்டம், கம்பு, பட்டிகை, கம்பு, பத்மம், கம்பு என்பனவும்

அரைத்தூண்களில் கம்பு, பாதம், இடைக்கட்டு கலசம், தாடி, பலகை, வீரகண்டம் போன்றவையும் காணப்படுகின்றன. கொடுங்கைப் பகுதிகளில் கூடுகள் வெற்றுக் கூடுகளாகவும், சிலவற்றில் நடுவில் சிறிது கொத்தப்பட்டும் காணப்படுகிறது. அரைத் தூண் கலசப்பகுதியில் முத்துச்சரம் கோத்துத் தொங்கவிட்டது போன்ற அமைப்பும் உள்ளது.

தேவ கோஷ்டங்கள் என்ற தனியமைப்பு காணப்படவில்லை. ஆனால், பிற்காலத்தில் அவற்றைச் சற்று இழுத்துக் கட்டி தனிச்சந்நிதிகளாகவே ஆக்கப்பட்டுள்ளன. இவற்றில் தெற்கு நோக்கி தட்சிணாமூர்த்தியும், மேற்கு நோக்கி லிங்கோத்பவரும், வடக்கு நோக்கி துர்க்கையும் நிறுத்தப்பட்டுள்ளனர்.

10 ஆம் நூற்றாண்டு பெருமாள் கோயில் கல்வெட்டில் இவ்வூர்த் திருக்கற்ற ளீஸ்வரமுடையார்க்கும் என்று குறிப்பிடப்படுவதாலும் (தொ.இ.க. தொகுதி XIV எண். 91) கட்டடக்கலை அமைதியும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக் கலைப் பாணியில் இருப்பதால் கருவறையும் அர்த்தமண்டபமும் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை எனக் கருதலாம்.

மகா மண்டபம்

மகாமண்டபத்தின் பகுதியில் இன்றைக்கு ஜகதி கண்டம் பட்டிகை ஆகிய அங்கங்களே உள்ளன. அரைத்தூண்கள் பட்டையான அமைப்புடன் சில இடங்களில் வாழைப்பூத் தொங்கலின் தொடக்க நிலையும் காணப்படுகிறது. இதன் மேல் கூடுகளும் கபோதப் பகுதியில் காணப்படுகிறது.

பாண்டியன் ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேகரதேவனின் கல்வெட்டு ஒன்று கருவறையின் மேற்குப்புறத்தில் உள்ளது (522 /1926) இது "பூவின் கிழத்தி மேவி வீற்றிருப்ப" என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இம்மெய்க் கீர்த்தியினை உடையவன் முதலாம் ஜடாவர்மன் குலசேகரன் என்பனாவான். இவன் சுமார் கி.பி., 1190லிருந்து 1218வரை ஆண்டவன். இவனது மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இங்கு கிடைக்கின்றது.

மற்றொரு கல்வெட்டு கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவல்லப தேவரின் 32வது ஆட்சி (கி.பி. 1162) ஆண்டினைச் சார்ந்தது (521/1926).

இக்கல்வெட்டுகளின் அடிப்படையில் 10 அல்லது 11ஆம் நூற்றாண்டில் மகா மண்டபம் கட்டப்பட்டிருத்தல் வேண்டும் எனக் கருதலாம்.

தேவி சந்நிதி

மன்னன் யாரென உணர முடியாத கோனேரின்மை கொண்டானின் கல்வெட்டு ஒன்று உள்ளது.. (517/1926). ஆனால் இதன் காலம் 13–14ம் நூற்றாண்டு எழுத்தமைதி யைக் கொண்டுள்ளது. இக்கல்வெட்டில் " இக்கோயில் நாச்சியார் தேவதானத்திலும்" என்ற குறிப்பு வருகிறது. இந்த நாச்சியார் தேவதானம் குறிக்கப்பட்டுள்ளதால், முன்பே அம்பாள் சன்னதி இருந்திருக்க வேண்டும். ஆனால், அப்பழைய அமைப்பு முற்றிலும் மாற்றிப் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டட அமைப்பு 15ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்ட கலைப்பாணியில் உள்ளது.

விரிந்த வாழைப்பூத் தோரணங்களும் எவ்வித அலங்காரங்களும் இல்லாது நீண்டிருக்கும் சுவர் அமைப்பும் இதனை உறுதி செய்கின்றன.

நடன சபை

தேவி சந்நிதிக்கும் வைத்தியநாதர் சந்நிதிக்கும் இடையில் உள்ள மண்டபத்தில் சோமாஸ்கந்தர் மண்டபம் என்ற பகுதி உள்ளது. இதனில் சோமாஸ்கந்தரின் செப்புத் திருமேனி வைக்கப்பட்டுள்ளது. இதன் தூண்களில் காணப்படும் அமைப்புகள் 16ஆம் நூற்றாண்டில் சிறப்பாக அமைக்கப்பட்ட விரிந்த நாகபந்த அமைப்புடன் உள்ளது. தற்போது சோமாஸ்கந்தர் வைக்கப்பட்டிருந்தாலும் இதுவே நடன சபையாகும்.

முதல் (உள்) திருச்சுற்று

உள்திருச்சுற்றில் வலப்புறமாக வந்தால் 63 நாயன்மார்கள் உருவங்கள் உள்ளன. 18ஆம் நூற்றாண்டின் ஓவியத்தில் இவை குறிக்கப்பட்டிருத்தலால் அவற்றிற்கு முன்னர் இருக்க வேண்டும்.

செவிசாய்க்கும் விநாயகர்

செவிசாய்க்கும் விநாயகர் என்ற விநாயகர் சந்நிதி இத்திருச்சுற்று மாளிகை யின் தென்மேற்கு மூலையில் உள்ளது. உருவ அமைப்பு 15ஆம் நூற்றாண்டினுடையதைப் போல் உள்ளது.

நடராஜர் சந்நிதி

வடகிழக்கு மூலையில் நடராஜர் சந்நிதி உள்ளது. கல்லில் வடிக்கப்பட்ட இவ் ஆடவல்லான் கி.பி. 15, 16ம் நூற்றாண்டினைச் சாந்தவராதல் வேண்டும்.

நவக்கிரகங்கள் சந்நிதியும் இங்கு காணப்படுகிறது.

வெளித் திருச்சுற்றுமாளிகை ஏதுமில்லாமல் திறந்த வெளியாக இருந்த இடத்தில் தற்காலத்தில் வடமேற்கு மூலையில் முருகனும், தென்மேற்கு மூலையில் விநாயகரும் எழுந்தருளப் அமைக்கப்பட்டிருக்கிறார்கள்.

கோபுரம்

முன்னாள் உள்ள கோபுரம் 132 அடி உயரமானது . இக்கோபுரமும், பெருமாள் கோயில் கோபுரமும் ஒரே கட்டட அமைப்பு போல் உள்ளதால், 16ம் நூற்றாண்டில் இக் கோபுரமும் எழுந்ததாகலாம். ஒன்பது நிலை மாடமாக அமைந்துள்ள இக்கோபுரத்தில் முதல் நிலையில் மட்டும் இரண்டு தூண்கள் தாங்குகின்றன.

கிருஷ்ணன் கோயில்

கிருஷ்ணன் கோயில் என்று அழைக்கப்படும் இக்கோயில் 16ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாக ஒரு கல்வெட்டின் மூலம் அறிகிறோம் . (593/1926)

புனர்வசு நட்சத்திரத்தில் பிறந்த வீரப்பநாயக்கரின் புண்ணியத்திற்காகவும், நலத்திற்காக வும் ஜடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்திகள் பெருமாள் அதிவீரராம ஸ்ரீவல்லப தேவனால் கட்டப்பட்டது. கட்டப்பட்ட ஆண்டு 1493 (கி.பி.1571) ஆங்கீரஸ வருடம் உத்தராயணம், வசந்த ருதுவில், சித்திரை 26ல் பஞ்சமி திதியில் உத்திர நட்சத்திரம் திங்கட்கிழமை கட்டப்பட்டது எனக் கல்வெட்டு குறிக்கிறது.

இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், முன்னால் திறந்த மணிமண்டபம் ஆகியவை உள்ளன. தேவகோஷ்டஅமைப்பு இல்லை. அதிஷ்டானம், முப்பட்டை குமுதம், கண்டம், பட்டிகை போன்ற அமைப்புகளுடன் காணப்படுகிறது. வேசர விமானத்தினைப் பெற்றுள்ளது தற்காலத்தில் புதுப்பிக்கப்பட்ட சுதை உருவங்களைப் பெற்றுள்ளது.

கோவிலோடு தொடர்புடைய நகரம் வில்லிபுத்தூர். ஆகவே சமயத் தொடர்புக் காகப் பல மண்டபங்களை ஆங்காங்கே கட்டியுள்ளனர்.

திருமலை நாயக்கரின் உருவத்துடன் கூடிய எண்ணெய்க் காப்பு மண்டபம், சிங்கம்மாள் தெரு மண்டபம் நாடகச்சாலை தெற்கு மண்டபம் ஆகியவை கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வானமாமலை ஜீயர் உபய மண்டபம் வானமாமலை ஜீயர் மடம் என்பதனுள் உள்ளது. ஆண்டாள் எண்ணெய்க் காப்பின் எட்டாம் நாள் இங்கெழுந்தருளிச் சிறிது நேரம் காட்சி நல்குவது வழக்கம்.

திருமலை நாயக்கர் அரண்மனை

பிற்காலத்திய மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் பெரும்புகழ் பெற்றவர் திருமலை நாயக்கர். இவர் ஸ்ரீவில்லிபுத்தூரில் சிறிய அரண்மனையைக் கட்டியுள்ளார்.

இக் கட்டடம் முழுதும் சுதையால் கட்டப்பட்டது. மதுரை சொர்க்க விலாசம், ரங்க விலாசம் போல் இது இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

முதல் பகுதியில் ஒரு திண்ணையும் உள்ளே ஒரு தாழ்வாரம் போன்ற நீள அறையும் உள்ளன. வலப்புறம் அறையும் உள்ளது. உள்ளே சென்றால் நான்கு உயரமான தூண்களைக் காணமுடிகிறது. இங்கே இன்று நீதிமன்றம் நடக்கின்றது. மேற்பகுதி சாலைக்கூடு போன்ற அமைப்புடன் காணப்படுகிறது.

இரண்டாம் பகுதியில் ஒரு திண்ணையும் பின்னர் தாழ்வாரம் போன்ற பகுதியும் காணப்படுகிறது. அடுத்து ஒரு கூடம் காணப்படுகிறது. இதனைப் பதினான்கு தூண்கள் அலங்கரிக்கின்றன. மேல்பகுதி கூடாரம் போன்று உள்ளது. இதனில் பூவேலை ஓவியங்கள் காணப்படுகின்றன.

மதுரை அரண்மனை போலவே இங்கும் உயரமான தூண்கள் காட்டப்பட்டு உள்ளன. தூண்களுக்குள்ளே இதனிலும் அதுபோன்றே உயரமான கற்கள் இருந்திருக்க வேண்டும். வட்டமான தூண்களே (Cylindrical) காணப்படுகின்றன. முகப்பில் அலங்கார வளைவுகளோ சுதைச் சிற்பங்களோ மேற்பகுதியோ காணப்படவில்லை.

2. ஓவியக்கலை

ஓவியச் செய்தி

ஸ்ரீவில்லிபுத்தூரில் இரண்டு இடங்களில் காலத்தால் பிற்பட்ட, ஓவியங்கள் காணப்படு கின்றன.

1) ஆண்டாள் கோயிலில் இராமாயண ஓவியங்களும்,

2) வைத்திய நாதசுவாமி கோயிலில் ஸ்தல புராணக் காட்சிகளும் ஓவியங்களாகத் தீட்டப் பட்டுள்ளன.

இரண்டு கோயில் ஓவியங்களையும், முறையே பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி, 18ஆம் நூற்றாண்டு என முறைப்படுத்தலாம்.

ஆண்டாள் கோயில் இராமாயண ஓவியங்கள்

ஸ்ரீவில்லிபுத்தூரும் இராமாயணமும்

இவ்வூருக்கும் இராமாயணத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதனை நாம் காண்கின்றோம். மாபாரதம் தமிழ்ப்படுத்திய இவ்வூரில் இராமகாதை ஏற்றம் பெற்றிருந்ததற்குச் சான்றுகள் உள்ளன.

கோனேரின்மை கொண்டான் கல்வெட்டு ஒன்று 122 பங்குகள் கொண்ட ஓர் ஊர் சேரனை வென்றான் சதுர்வேதி மங்கலம் என்ற பெயரால் அமைக்கப்பட்டதையும்,

அவ்வூரில் 108 அந்தணர்களுக்கு 108 பங்கு போக மீதமுள்ள 14 பங்குகளில் ஒரு பங்கினை 'இராமாயண விருத்தி'க்காகக் கொடுத்ததையும் குறிக்கின்றது.. (533/1926)

சோணாடு வழங்கியருளிய சுந்தர பாண்டியன் கல்வெட்டுகளில் "ஸ்ரீ ராம விண்ணகர ஆழ்வார்" என்று இராமரின் கருவறை இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. (ARE 554. 556/1926) தற்காலத்தும் ஆண்டாள் கோயிலின் வெளித் திருச்சுற்றில் ராமர், இலக்குவன், சீதை அனுமன் செப்பு விக்கிரகங்கள் உள்ளன. இப்படிப் பல்வகையிலும் இவ்வூர் இராமாபணத்துடன் தொடர்பு உள்ளதாக இருக்கிறது.

ஆண்டாள் கோயிலில் கோபுரத்தின் முன்னால் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கல்யாண மண்டபம் என்ற பகுதி உள்ளது. அதற்கு வலப்புறம் ஒட்டக மகால் என்ற பகுதியும் இடப்புறம் திருக்கோயில் அலுவலகமும் உள்ளன. அம்மண்டபத்தின் கூரை உள் பகுதியில் இராமாயணக் காட்சிகள் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளன.

கதை கருவறைப் பக்கமிருந்து தொடங்கி வலப்புறமிருந்து இடப்புறம், இடப்புற மிருந்து வலப்புறம் என்று தொடர்ந்து கதை அமைப்புடன் திகழ்கின்றன. ஒவ்வொன்றும் ஒரு பத்தி என்று குறிக்கப்படுகிறது. ஒவ்வொரு பத்திக்கும் ஆறு அல்லது ஏழு முதல் குறைந்த அளவாக மூன்று காட்சிகள் வரை ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.

ஓவியத்தின் மேல்புறத்தில் வசனம் எழுதப்பட்டுக் கீழே வசனத் தொடர்புடைய ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.

சுமார் 40 பத்திகளில் ராமாயணம் முழுவதும் தீட்டப்பட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. ஆனால் முன்னால் சில பகுதிகளும், பின்னால் பெரும்பகுதியும் அழிந்துள்ளவை போக எஞ்சிய பகுதிகளின் மூலம் கதைத் தொடர்பை உணர முடிகிறது. விஸ்வாமித்திரர் இராம இலக்குவர்களைக் காட்டிற்கு அழைத்துச் செல்வது முதல் அவர்களின் திருமணம் வரை தொடர்ந்து காட்சிகள் உள்ளன. முதல் இரண்டாம் பத்திகள் பெரும்பாலும் அழிந்துவிட்டன.

மூன்றாம் பத்தியில் வசிட்டர் இராம இலக்குவர்களுக்குப் பாடல் சொல்லிக் கொடுத்த ஒன்றே காணத் தக்கதாய் உள்ளது. நான்கு மாணவர்கள் அமர்ந்துள்ளனர். வசிட்டர் ஒரு கையினை ஞான முத்திரையில் வைத்திருக்கின்றார். "வசிட்டர் அட்சற அப்பியாசம் பண்ணினது" எனக் குறிக்கப்பட்டுள்ளது.

4ஆம் பத்தியும் சுத்தமாக அழிந்துவிட்டது. 5ஆம் பத்தியும் முழுதும் அழிந்து உள்ளது. இராம இலக்குவர்கள் குதிரையில் போவதுபோல் உள்ளதால் குதிரை ஏற்றம் கற்றுக் கொடுத்ததாக இருக்கலாம்.

6ஆம் பத்திகள் 6 உருவங்கள் அமர்ந்த நிலை உருவங்கள் மட்டும் காணப்படு கிறது. அவர்களின் கீழ்ப்பகுதி மட்டுமே தெரிகின்றது. அனேகமாக அவர்கள் இராம சகோதரர்களாகவும், வசிட்ட, தசரதர் ஆகியோர் அமர்ந்து உரையாடும் காட்சியாக இருக்கலாம்.

அடுத்த காட்சியில் மந்தரை என்னும் கூனி நடந்து செல்கின்றாள். அவளின் மேல் ஒரு பறவை பறக்கின்றது. சகோதரர் நால்வருக்கும் பின்னால் விஸ்வாமித்திரர் நின்று பறவையைச் சுட்டிக் காட்டியபடி உள்ளார். இக்காட்சியின் மூலம் மந்தரையை இராமன் வேண்டுமென்று குறிவைத்து அடிக்க நினைக்கவில்லை என்ற கருத்தினைச் சுட்ட வருகிறான் ஓவியன் என எண்ணலாம்.

7ஆம் பத்தியில் எழுத்துக்களே காணப்படவில்லை. பெரும்பாலும் படங்களை வைத்துத்தான் கதைத் தொடர்பை உணர வேண்டியுள்ளது. கோசலையிடம் இராம இலக்குவரை விசுவாமித்திரர் கேட்டதுபோல் முதல்காட்சி உள்ளது. இரண்டாம் காட்சியில் இடப்புறக் கொண்டை போட்டபடி இராம இலக்குவர் வில்லேந்தி நடக்கின்றனர். மூன்றாவது காட்சியில் இராம இலக்குவர் விசுவாமித்திரரின் தொடை மீது படுத்திருப்பது போலிருக்கின்றது. ஆறு ஒன்றினைக் காட்டி ஏதோ சொல்வது போல் உள்ளது.

எட்டு ஒன்பதாம் பத்திகள் முழுவதும் அழிந்து உள்ளன. 10வது பத்தியில் விஸ்வாமித்திரர் யாகம் செய்வதைக் குறிப்பதால் மேலும் காட்டில் தாடகை பற்றிய செய்திகளைக் கூறி யாகசாலை அமைத்தது குறித்ததாகவும் இருக்கலாம்.

தாடகை வதம் 10வது பத்தியில் 3 காட்சிகள் இருக்க ஒரு காட்சிக்கு மட்டுமே வசனம் உள்ளது.

முதல் காட்சியில் இராம இலக்குவர்க்கு முனிவர் குழாத்துடன் அமர்ந்து விஸ்வாமித்திரர் உபதேசம் பண்ணுவதுபோல் உள்ளது. அது அனேகமாகத் தாடகையின் இயல்பினைக் கூறுவதாக இருக்கலாம். இரண்டாம் காட்சியில் அம்பால் அமைந்த கூடாரத்திற்குள் அமர்ந்து கொண்டு யாகம் செய்வதும் வெளியே இராம இலக்குவர் தாடகையை எதிர்த்துப் போரிடுவதுமாக உள்ளது. ("விசுவாமித்திரற் யாகம் பண்ணினதும ப(ஸ) பண்டத்தைக் கொண்டு போகிற போது..... என முடிவுறாமல் உள்ளது.) மூன்றாம் காட்சி விஸ்வாமித்திரர் இராம இலக்குவர்களுக்கு ஆசி வழங்குவதுபோல் உள்ளது.

11வது பத்தியில் பெரும்பகுதி அழிந்து உள்ளது. ஆறு ஒன்று காட்டப்பட்டுள்ளது. தாண்டிப்போய் கரையினில் மரத்தடியில் படுத்து உறங்குவது போல் உள்ளது. கூட விஸ்வாமித் திரரும் சித்தரிக்கப்பட்டிருக்கின்றார். வசனங்கள் ஏதுமில்லை.

அகலிகை சாப விமோசனம்

12வது பத்தியில் முதல் காட்சியாக கௌதமர் அகலிகையை வணங்கச் சொன்னதும் அவர் வணங்கியது[2] கௌதமர் தனது ஆசிரமத்திற்கு கூட்டி வருதல்[3] அங்கே அனைவரும் பேசிக் கொண்டு இருத்தல்[4] மிதிலைக்கு வரும்போது ஜனகர் வந்து வணங்கி அழைத்துச் செல்லல்[5] சுதாநந்தர், ஜனகர், மந்திரி முதலானோர் அவர்களை மிதிலைக்குக் கூட்டிவந்தது,[6] சீதை இராமனைக் (கீழே) மேடையிலிருந்து பார்த்தது[7] ஆகியவை காட்சிகளாக உள்ளன.

11வது பத்தியில் பல ஓவியங்கள் அழிந்திருந்தன. 12வது காட்சியில் கௌதமர் அகலிகையை வணங்கச் சொன்னது குறிக்கப்பட்டுள்ளது. ஆக விடுபட்ட இடங்களில்

இராமன் நடந்து வருவது, அவனது கால் கல்லாய்க் கிடக்கும் அகலிகைமேல் பட்டு சாப விமோசனம் பெறுவது. கௌதமர் வருதல் ஆகிய காட்சிகளாக இருக்கலாம்.

வில் முறிப்பும் திருமணமும்

12வது பத்தியில் ராமனைப் பார்த்த சீதை 13வது பத்தியில் அழகில் மயங்கி கீழே விழுகிறாள்.[8] பின்னர் மூர்ச்சை தெளிந்து எழுந்து இராமனின் புகழைத் தன் தோழியருடன் பேசிக் கொண்டிருக்கிறாள்.[9] சதானந்தர் விஸ்வாமித்திரர் ஜனகர் முதலியோர் இராமரை வில் முறிக்க செல்லும்படி பேசிக் கொண்டு இருந்ததும்,[10] இராம இலக்குவர் கேட்டுக்கொண்டு இருந்தது.[11] சனகர் வில்லினைக் கொண்டு வரச் சொல்லுதலும்[12] வில்லைக் கொண்டு வந்ததுமான[13] ஆறு காட்சிகள் அடுக்கடுக்காகக் காட்டப்பட்டுள்ளன. இதனை அடுத்த பத்தியில் வில் முறித்த காட்சி காட்டப்படுகிறது.

13ம் பத்தியில் வில்லைக் கொண்டு வந்ததுடன் நின்ற கதை தொடர்கிறது. 14ம் பத்தியில் 7 காட்சிகள் காட்டப்பட்டுள்ளன.

வில்லும் அஞ்சற்காரனின் ஓலையும்

வில் கொண்டு வந்ததைக் கண்ட 56 தேசத்து போட்டிக்கு வந்திருந்த அரசர்கள் மூர்ச்சையானதும்[14], ராமலட்சுமணர் மட்டும் வில்முறித்ததும்[15], முனிவர்கள் அவன் வலிமைக்காகத் தோத்திரம் பண்ணியதும்[16], விஸ்வாமித்திரர் சதானந்தரிடத்துப் பேசிக்கொண்டு இருந்து செய்தியை ஓலையில் எழுதி அனுப்பியதும்[17], அஞ்சல்காரன் ஓலையைக் கொண்டு அயோத்திக்கு புறப்பட்டதும்[18], வழியில் கங்கைக் கரை முனிவர்களுக்கு இராமரின் கல்யாணச் செய்தியைச் சொல்லிவிட்டுச் சென்றதும்[19], அவன் கங்கை ஆற்றை நீந்தி அக்கரை அடைந்ததும்[20] ஆகிய காட்சிகள் காட்டப்பட்டுள்ளன.

அஞ்சல் பெற்றதும் புறப்பாடும்

15வது பத்தியிலும் 6 காட்சிகள் காட்டப்பட்டுள்ளன. முதலில் ஓர் அடியார் ஓவியம் காட்டப்பட்டுள்ளது.அஞ்சல்காரன் கல்யாண ஓலை கொடுத்ததும்[21], ஓலை படித்து மகிழ்ந்ததும்[22], தசரதன் அஞ்சற்காரனுக்குக் கிழி கொடுத்ததும்[23], கோசலை, கைகேயி, சுமத்திரை முதலானோரும் எல்லோரும் திருமணத்திற்காகப் புறப்பட்டதும்[24], தசரதர் தனித்த பல்லக்கில் புறப்பட்டுச் சென்றதுமான[25], காட்சிகளுடன் 15ஆம் பத்தி முடிகிறது.

பயணம் போனவர்கள்

16ம் பத்தியில் 5 காட்சிகள் காட்டப்பட்டுள்ளன. பல ஊர்க்காரர்களும் அவர்களுடன் சென்றது[26], வசிஷ்ட்டர் சென்றது[27], 56 தேசத்து அரசர்களும் சென்றது[28]. எல்லாரும் கங்கையில் ஓடத்தில் சென்றது[29], எல்லாரும் அக்கரையில் கூடாரம் அடித்து இறங்கியிருந்தது[30] ஆகியன கூறப்படுகிறது.

17ம் பத்தியில் மறுநாள் காலை புறப்பட்டு பயணம் தொடர்ந்தது[31], தசரதரை சனகர் எதிர்கொண்டது[32]. வசிட்டரை ராம லட்சுமணர் வணங்கியது[33], தெசரதர் விசுவாமித்திரரை

தண்டம் பண்ணியது[34], தாய் மூவரையும் ராம இலக்குவர் வணங்கி மகிழ்வின் மிகுதியால் அவர்களை அணைத்துக் கொண்டது, மிதிலைக்குள் அனைவரும் வந்தது[35] ஆகியவை காட்டப்பட்டுள்ளன.

17ம் பத்தியில் நாலாம் காட்சியில் (அடிக்குறிப்பு எண் 9) விசுவாமித்திரர் என்ற பெயர் இல்லை.

நிச்சயித்தலும் நலுங்கிடலும்

18ஆம் பத்தியில் 8 காட்சிகள் உள்ளன. முதல் காட்சியில் வசிட்டர், விசுவாமித் திரர், சதானந்தர் முதலான முனிவர்களும், தசரதன், ஐம்பத்தாறுதேசத்து அரசர்களும் கூடி நிச்சயதார்த்தம் செய்தனர்.[36]

இரண்டாம் காட்சி ராம இலக்குவர்க்கு நலுங்கு இட்ட காட்சியாக இருக்க வேண்டும். ஏனெனில் 3, 4ம் காட்சியில் பரத[37] சத்துருகுணர்களுக்கு[38] நலுங்கு இட்டதைப் பற்றிக் குறிக்கின்றது.

5ம் காட்சியில் சீதைக்கு நலுங்கு இட்டதும்[39], 6ம் காட்சியில் இலக்குவன் மனைவிக்கு நலுங்கு இடுவதும்[40], 8ம் காட்சியில் சத்துருகுணன் மனைவிக்கு நலுங்கு இடுவதும்[41], அவர்களின் பெயர்களாக முறையே, ஊர்மிளை, மாண்டவி, சுருத்திற(ய்)[42] என்பன எழுதப்பட்டுள்ளன.

இவ்விடங்களில் உள்ள ஓவியங்கள் பெரும்பாலும் அழிந்த நிலையில் இருப்பதால், நலுங்கிடல் என்பதில் 17ம் நூற்றாண்டின் வழக்கத்தினை உணர முடியாதவர்களாக இருக்கின்றோம். திருமணத்திற்கு முன்பு குறிப்பிடப்பட்டிருப்பதனால் ஒருவேளை புத்தாடை உடுத்து–துணிமணிகளினாலும்– நகைகளினாலும், மையிடல், மெருகூட்டல், நீராட்டல் ஆகியவற்றைக் குறித்திருக்கலாமோவென எண்ண வைக்கின்றது.

19ம் பத்தி முழுவதும் அழிந்து உள்ளது.

20ம் பத்தியில் ஒரு அடியவர் படம் வரைந்து எழுதப்பட்டுள்ளது (இது பின்னால் விளக்கப்படுகிறது) 21வது பத்தியில் பட்டினவாசம் வந்தார்கள் என்ற எழுத்தே காணப் படுகின்றது.

22, 23, 24வது பத்திகளின் நடுவில் சூடிக் கொடுத்த நாச்சியார் ரெங்க மன்னார், கருடாழ்வார் ஓவியம் மிகவும் சிதைந்த நிலையில் உள்ளது.

இராமன் திருமாலின் அவதாரம். திருவரங்கத்து அரங்கன் இங்கு வந்து நித்ய மணாளனாய்[43] கல்யாணக் கோலத்திலே காட்சி தருவதாக ஒரு எண்ணம் நிலவுகிறது. இங்கு திருமணக் காட்சி முடிந்தவுடன் திருமணக் கோலத்திருக்கும் சூடிக்கொடுத்த நாச்சியார்,ரெங்க மன்னார், கருடாழ்வாராக வாசஞ்செய்கின்றார்.

இந்த 24ம் பத்திக்குப் பிறகு 26ம் பத்தியினிலேயே சிறிது ஓவியம் தெரிகின்றது. கதைத் தொடர்பில் தசரதன் மரணம் சம்பவிக்கும் இடம் வந்து விடுகிறது.

தசரதரிடம் வாக்கு கேட்டவுடன் மாண்டசெய்தியும் மனைவியர் அழுததும் சொல்லப் படுகிறது.[44] மீண்டும் 28வது பத்தியில் குகனைச் சந்தித்து கங்கைக் கரை கடந்ததும் குறிப்பிடப்படுகிறது.[45] 29வது பத்தியில் அகத்தியர் அழைத்துக் கொண்டு போன செய்தி சுட்டப்படுகிறது.[46]

மீண்டும் 30வது பத்தியில் எழுத்துகள் மட்டும் தெரிகின்றன. இவை சூர்ப்பனகை மான பங்கத்தைக் காட்டுவனவாகத் தெரிகின்றன. அதனிலும் 4 காட்சிகள் தான் தெரிகின்றன. முதல் காட்சியில் சூர்ப்பனகை மணம் புரிந்து கொள்ள வேண்டலும்[47], இலக்குவன் அவள் மூக்கு முலையை அரிந்து விடுவதும்[48], சூர்ப்பனகை வந்து கரன் துச்சனனிடத்தில் கூறியது[49], அவர்கள் அங்கு சென்று யுத்தம் செய்தது[50] போன்ற துண்டு வசன வாசகங்களே எஞ்சுகின்றன.

இதன்பின் பகுதியில் உள்ள பெரும்பாலான பகுதிகள் அழிந்துவிட்டன. கதைத் தொடர்பு இத்துடன் முடிகிறது.

வரைந்தோனும் கொடுத்தோனும்

15வது வரியின் (பத்தி) தொடக்கத்தில் ஒரு சிறிய அடியாரின் உருவம் உள்ளது.

வெள்ளைத் தலைபாகை கட்டி நெற்றியில் நாமமிட்டு ஜிப்பா போன்ற நீண்ட அங்கி அணிந்து தார்ப்பாய்ச்சி கட்டின வேட்டியுடன் அஞ்சலி ஹஸ்தத்தில் நின்று கொண்டிருக்கிறார். இடையில் துண்டு கட்டியுள்ளார். கீழே எழுத்துகள் உள்ளன.[51]

அதனில் குறிக்கப்படும் ரெங்கப்ப நாயக்கர் ஓவியம் வரைந்தவனாக இருக்கலாம்.

மீண்டும் 20வது பத்தியில் ஒரு அடியவர் அஞ்சலி ஹஸ்தத்தில் பட்டை போட்டுக்கொண்டு தலையில் முண்டாசு கட்டிய வண்ணம் நின்ற நிலையில் இருக்கின்றார். கீழே எழுத்துகள் குறிக்கப் பட்டுள்ளன.[52]

அதன்கீழே மீண்டும் ஒரு வரிசை எழுத்துகள் உள்ளன.[53] 20ம் பத்தியில் ஓவியம் வரைய நான்கு பத்திகட்கு ஐந்து பொன் கூலி கொடுத்ததைக் குறிப்பதால்[54] அனேகமாக 17 முதல் 20 வரையிலான பத்திகள் அவனால் வரைவிக்கப்பட்டது என்பதும் வரைந்தவன் பொளசுகாரண மகாபுத்திர பிள்ளை என்றும் கருத்துக்கு வரலாம்.

பொளசுகார் என்னும் ஊர் ராமலிங்காபுரம் ரெட்டிப்பட்டிக்கு இடையே உள்ளது என்று கூறப்படுகிறது.

நிற அமைதிகள்: நிறங்களைப் பொருத்தவரை தாவர நிறங்களே பயன் படுத்தப்பட்டுள்ளன எனக் கருதலாம் நிறங்கள் வெள்ளை பழுப்பு, கருப்பு, மஞ்சள், பழுப்பான பச்சை ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலைகள் கருநீலம் கலந்த நிறத்திலும், கிளைகள் மஞ்சள் அல்லது பழுப்பு வண்ணத்தில் உள்ளன. நெருப்பு பழுப்பு கலந்த மஞ்சள் வண்ணத்தில் உள்ளது.

யானைகள் பழுப்புக் கலந்த மஞ்சள் நிறத்திலும், யானைகளின் முகபடாம் மஞ்சள் நிறத்திலும் உள்ளன. சில யானைகள் பொன்னிறம், பச்சை, பருப்பு ஆகிய வண்ணத்திலும் காட்டப்படுகிறது.

ஆறுகள் குளங்கள் ஆகியவை வெண்மை நிறத்திலும் மீன்கள் கருப்புக் கோடுகளாலும் வரையப்பட்டுள்ளன. மீன்கள் நீரில் இருக்கின்றன என்பதைக் காட்டு வதற்காக ஆறுகளை வெள்ளை நிறத்தில் வரைந்து இருக்கலாம்.

படகுகள் பழுப்பு நிறத்தில் கருப்புக் கோடுகள் கட்டம் போட்ட கடைகள் போல் உள்ளன.

பின்வண்ணமாக (Backgrounds) பழுப்பு பச்சை வெள்ளை ஆகிய நிறங்கள் இடத்திற்குத் தக்கவாறு கொடுக்கப்பட்டுள்ளன.

உருவங்களுக்குப் பெரும்பாலும் செம்பழுப்பு நிறமும் தாடிக்கு அடர்பழுப்பு நிறமும் கூந்தல் போன்றவற்றிற்குக் கருவண்ணமும் கொடுக்கப்பட்டுள்ளது.

உருவமைதிகள்

உருவங்கள் பெரும்பாலும் பக்கவாட்டு அமைப்பினிலேயே (Sideview) காட்டப் பட்டுள்ளன. உருவங்கட்கு இடப்புறம் கொண்டை காட்டப்பட்டுள்ளது. நடக்கும் நிலை கால்களை அகட்டி வைத்து நிற்கும்போது இரண்டும் சேர்ந்த நிலையும் காட்டப்பட் டுள்ளது. உட்கார்ந்து இருக்கும் போது உடல் நேர்நிலையிலும் முகம் திருப்பிய நிலை யிலும் காணப்படுகிறது. சில உருவங்களில் நிறைய அணிகள் காட்டப்படுகின்றன. உருவங் கள் சரியான அளவுமானங்கள் இல்லாமல் உள்ளது. உருவங்களின் உடைகளில் கோடுகள் காணப்படுகின்றன. புள்ளியுள்ள சேலை அமைப்புகள் பெரும்பாலும் காணப்படவில்லை. ஆண் உருவங்கள் எல்லாம் வேட்டியைத் தார்ப் பாய்ச்சிக் கட்டிய நிலையினிலேயே உள்ளன. கங்கை போன்ற ஆறுகள் இரண்டு நேர்கோடு களுக்கு இடையில் கால்வாய் போல் காணப்படுகிறது. அவற்றில் மீன்களும் ஆமைகளும் நீந்துவது போல் காட்டப் படுகிறது. கூடாரம் என்பது வெறும் நான்கு கால்கட்கு நடுவே கவிழ்த்து வைக்கப்பட்ட பரந்து அகன்ற கூடுபோல் உள்ளது. உருவங்கள் கூரையில் வரையப்பட்டு இருப்பதாலும், கலை நிகழ்ச்சிகளாக இருப்பதாலும், உருவங்கட்கு நேர்பார்வை தவிர்த்து பக்கவாட்டு உருவமே காட்டப்படுகிறது.

சொல்லும் எழுத்தும்

சில எழுத்துகள் எழுத்துகளின் வளர்ச்சியில் ஒரு அங்கச் சான்றாக உள்ளது.

க்கு –  –பெ – பே, – கூ கொ – கோ ஆகிய மாறுபட்ட வடிவங்கள் காணப்படுகின்றன.

'கோத்திரம் பண்ணினது' என்பதில் வணங்கி "அபிவாதையே" என்னும் முறை செய்வது போல் காட்டப்பட்டு உள்ளது.

'தெண்டம் பண்ணினது' என்பதில் சலாம் அடிப்பது போன்ற முறை காணப் படுகிறது. கல்யாண பத்திரிகையைக் கல்யாண 'ஓலை' என்றழைக்கும் மரபும், பேச்சு மொழிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஓவியம் மற்றும் எழுத்துகளின் இத்தன்மைகளும் இடப்பக்கக் கொண்டை யும், நிறங்களின் அமைப்பும், உருவ ஒருமைப்பாடு இல்லாத (Non-Proportional) அமைப்பும் 17ம் நூற்றாண்டினதாகக் கருதலாம். கீழிருக்கும் எழுத்துகளும் அதனை உணரத் துணைபுரிகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூரில் மடவார்விளாகம் என்னும் சிவன்கோயில் அமைந்துள் பகுதி யில் வைத்தியநாதசாமி கோவில் கொடிக் கம்ப மண்டபத்தில் அக்கோயிலின் தலவரலாறு இருபத்து நான்கும் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

தலபுராணங்கள் என்பவை 16ம் நூற்றாண்டிற்குப் பின்னர்தான் பெரும்பாலும் தோன்ற ஆரம்பித்தன. அதன்படி 16ம் நூற்றாண்டின் தலபுராணத்தை 18ம் நூற்றாண்டில் ஓவியங்களில் வரைந்து உள்ளனர்.

தல புராணம் 24 திருவிளையாடல்களை விளக்குகின்றது. ஸ்ரீவில்லிபுத்தூர் மடவார் விளாகம் என்னும் புதுவைத் தலவரலாறு என்ற தேவதானத்து வெளியீட்டி லிருந்து இந்தப் புராணங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வைத்தியம் பார்த்தது தொடர்பான வைத்தியநாதர் வரலாற்றைக் கூறுவதாக உள்ளது.

இந்த 24 திருவிளையாடல்களும் ஓவியமாகத் தீட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இன்று கருவறைப் பக்கமிருந்து காணக் கிடைப்பன. துர்வாசருக்குத் திருநடனக் காட்சி அளித்தது வரைதான் உள்ளது. கீழே எழுத்துமூல விளக்கங்களும் மேலே ஓவியமும் வரையப்பட்டுள்ளது.

ஓவிய விளக்கங்கள்

முதல்படத்தி முழுவதும் சிவபெருமான் புதுவையில் எழுந்தருளியுள்ள காட்சியும், புதுவை வனமாயுள்ள காட்சியும் சுட்டப்படுகிறது. இறைவன் எழுந்தருளியிருக்கும்போது[55] மூவர் வணங்க, ஒருவன் மத்தளம் வாசிக்க, ஒருவன் தாளம் போன்ற கருவியைத் தட்ட, இரு பெண்கள் நடனமிடுகின்றனர். காமதேனுவுக்கும் நந்திதேவருக்கும் நடுவில் மலை இருக்கிறது. முனிவர் பலர் வணங்கிய நிலையில் உள்ளனர். மலை ஆயிரந்தலை ஆதிசேடனால் தாங்கப்படுகிறது. மலையில் வான்கோழி, (மயில்) யோகம் செய்யும் முனிவர், வானில் கின்னரர், சிங்கம், யோகம் புரியும் ஆண் பெண், ஐராவத யானை, எண்டிசை யானைகள் போன்றவை காட்டப்பட்டுள்ளன. நேர் வலது புறத்தில் மூன்று அடியார் உள்ளனர்.

இரண்டாம் பத்தியில் முதல் காட்சி அழிந்து உள்ளது. இக்காட்சியில் தீர்த்தம் தோன்றிய வரலாறு உள்ளது. சிவன் சிவகங்கையை உண்டாக்கினது காட்சியாகத்

தீட்டப்பட்டு உள்ளது.[56] இதன் கடைசியில் சூரியனுக்கு முத்தி கொடுத்த திருவிளையாடல் தொடங்குகின்றது.[57]

ஓவியத்தில் இரண்டு தனியறைகள் போன்ற அமைப்புகள் உள்ளன. ஒன்றில் சிவலிங்கம் மாலை சார்த்தப்பட்டு விரிந்த கண்ணுடன் உள்ளது. மற்றொன்றில் சூரியன் ஒளிவட்டத்துடன் காணப்படுகிறார்.

அடுத்த காட்சியில் சிவன் தனியாக பீடத்தில் அமர்ந்திருக்க தலையில் இருந்து சிவகங்கை குளத்தில் விழ அருகில் குடைக்கீழ் சூரியன் நிற்கின்றார்.

சூரியன் ஒளிவட்டத்துடன் நீரில் நிற்க அருகில் கோவில் காட்டப்பட்டுள்ளது.

3ம் பத்தியில் சிவலிங்கத்தை கிரணங்களினால் சூரியன் அபிடேகம் பண்ணு வதில்,[58] அவரது கரத்திலிருந்து மஞ்சள் கற்றை கொட்டுவது போல் உள்ளது. இந்தக் கிரணங்களினால் வன்னி மரங்கள் முளைப்பது காட்டப்பட்டுள்ளது.[59] லிங்கத்தினைச் சுற்றி ஐந்து வன்னி மரங்கள் மஞ்சள் நிறத்திலும் இலைகள் கரும்பச்சை நிறத்திலும் உள்ளன. அவரை சிவன் பத்மாசனத்தில் அமர்ந்து மலர்களைத் தூவி அர்ச்சிப்பது போல் உள்ளது. இது சிவனை அர்ச்சனை செய்தது ஆகும்.[60]

அடுத்த காட்சியில் தேவி, சிவன் சிவகங்கை மட்டும் காட்டப்பட்டுள்ளனர். அதன் மூலம் சிவபெருமானை லிங்க வடிவில் பூசித்த இறைவன் அவனுடன் கலந்து ஐக்கிய மான செய்தி சுட்டப்படுகிறது.[61]

4ம் பத்தியில் துருவாசர் செயல்கள் காட்டப்படுகின்றன.

சிவனும் உமையும் கயிலாயத்தில் எழுந்தருளியிருக்க அவ்விறைவன் துருவாசரை நோக்கி புதுவைக்கு வா எனக் கட்டளையிடுவது போல் உள்ளது.[62]

அடுத்த காட்சியில் துருவாசர் புலித்தோல் ஆடையும் நீண்டதாடியும் பழுத்த சடையுமாக ஒவ்வொரு வன்னி மரமாகத் தேடுவது போல் உள்ளது.[63] கடவுளைக் காணாமல் கீழே விழுந்து கிடக்கிறார் துர்வாசர்.[64]

பின்னர் தவம் செய்வதே ஏற்றது என்று எண்ணி ஒற்றைக்காலில் நின்றபடி இரு கைகளிலும் அக்ஷமாலையைப் பிடித்தபடி அரைகுறையாக மூடிய கண்ணுடன் தவம் செய்யும் காட்சியில் நிற்கின்றார்.[65] வெள்ளைப் பின்வண்ணத்தில் தேவியுடன் லிங்கம் இருக்கும் காட்சி உள்ளது.[66]

அடுத்த காட்சியில் துருவாசரின் இரண்டு உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. ஒன்று கீழே கிடப்பதாகவும் மற்றொன்றில் தலைமேல் கை குவிப்பதாகவும், அவர் கீழே விழுந்து வணங்கிய நிலையையும் சித்தரிக்கின்றது.[67]

5ம் பத்தியில் துருவாசர் பூசித்த முறை கூறப்பட்டுள்ளது.

முதல் காட்சியில் எழுத்துகள் அழிந்து இருந்தாலும், துருசர் மூக்கைப் பிடித்துக் கொண்டு சிவகங்கையில் முழுகுவது போல் உள்ளது. இரண்டு ஆமைகளும் சில மீன்களும் காட்டப்பட்டுள்ளன.[68] இரண்டாம் காட்சியிலும் எழுத்துகள் அழிந்து உள்ளன. அவர் உத்குடிகாசனத்தில் அமர்ந்து யோகம் செய்வது போல் உள்ளது. 3ம் காட்சியில் இருமரங்களின் நடுவில் குளமும் தாமரை மலர்களும் தண்டாய்ந்த தாமரை மலர்கள் தோளிலும் பூப்பறிக்கக் கைநீட்டுவது போலுமுள்ளது.[69] 4ம் காட்சியில் சிவலிங்கத்திற்கு பூசை பண்ணுவது போலும், இரண்டு குடுமியினை உடைய ஆண்கள் தலையில் கூடை யினை வைத்துக் கொண்டு தாங்கிப் பிடித்து நிற்பது போலுமுள்ளது.[70] 5ம் காட்சியில் படமில்லாமல் துருவாசருக்கு சாந்தகுணங் கொடுத்ததும்[71], அவர் சாந்தசொருபியாய் ஆன செயலும் குறிப்பிடப்படுகிறது. இதன் பிறகு புராணத் தொடர்பில்லாத ஓவியம் வரையப்பட்டு உள்ளது.

கோயிலில் 18ம் நூற்றாண்டு வரைபடம்

18ம் நூற்றாண்டில் இருந்த கோயில் வரைபடமாக, ஓவியமாக இங்குத் தீட்டப்பட் டுள்ளது. பல பகுதிகள் அழிந்த நிலையில் இருந்தாலும் காண்பவர் கண்ணைக் கவர்வதாக உள்ளது.

கருவறையும் அதன் இடப்புறம் சண்டேசுவரர் சந்நிதியும், செப்புத் திருமேனி களாம் சோமாஸ்கந்தர் வைக்கும் மண்டபமும், தேவி சந்நிதியும், நந்திகளும் உள் திருச் சுற்றில், தெற்கு மூலையில் செவிசாய்க்கும் விநாயகரும் வடக்கு மூலையில் ஆறுமுகனும், கீழ் மூலையில் நடராஜர் சந்நிதியும், நவக்கிரக சந்நிதியும், மேற்கில் அறுபத்து மூவர் உருவங்களும் வைக்கப்பட்டுள்ளன. வெளிப்பிரகாத்தில் பல அடியவர்கள் நிற்றலும், பெண்டிர் கோலாட்ட மிடலும், மன்னர் பலரின் வரிசையும் தென்படுகின்றன. மடைப்பள்ளி சிறிய வெண்மையானதாகக் காட்டப்பட்டுள்ளது. கோபுரமும் அதிக ஆடம்பரமில்லாமல் காட்டப்பட்டுள்ளது.

இவற்றில் மண்டபத்துத் தூண்கள் சிறிய கட்டங்களாகக் காட்டப்பட்டுள்ளன. பின்னால் வரிசையாக உள்ள விநாயகர், ஜுரதேவர் போன்றோரின் உருவங்கள் காட்டப் படவில்லை. பல அடியவர் உருவங்களில் முஸ்லீம் போன்ற தலைப்பாகையும் உடையு மணிந்த மனிதன் ஒருவன் காட்டப்படுகிறான்.

இவை 18ம் நூற்றாண்டில் கோயில் இருந்த நிலையினைத் தெளிவாகக் காட்டப் பயன்படுகின்றன.

இதனை அடுத்து நடுவில் உள்ள பகுதியில் இக்கோயிக்கு உரித்தானதாக இருந்த 5 தேர்கள் மிகவும் சிதிலமான நிலையில் காட்டப்பட்டிருக்கிறது. மற்றொரு மூலையில் கோயிலின் தேவி அன்னவாகனத்தில் வீதி உலா வருவதையும் பக்தர்கள் கை கூப்பி நிற்றலும் காட்டப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்து உள்ள ஓவியங்கள் முழுதும் இல்லாமல் அழிந்து உள்ளன.

வசனங்கள் – மயக்கங்கள் – சொற்கள்

படங்களுக்கு உள்ள வசனங்கள் பெரும்பாலும் பேச்சுத்தமிழ் நடை விரவி உள்ளன. ளகர, லகர, ழகர மயக்கங்கள் காணப்படுகின்றன.

நமஸ்காரம்	–	நமக்காரம்
தவம்	–	தவசு
மகத்துவம்	–	மகுத்துவம்

போன்ற பேச்சு நடையினையும் காண்கின்றோம்.

வரைவித்தோர்

இந்த ஓவியங்களை வரைவித்தோரின் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன. முதல் பத்தியை வீரப்பப் பிள்ளை என்பவரும்[72] 2ம் பத்தியை பொன்னம்பலப்பிள்ளை என்பவரும்[73] மூன்றாவது பத்தியையும் அவரேயும்[74] 4வது பத்தியை பெரியசாமிப்பிள்ளை என்பவரும்[75] 6வது பத்தியை அம்பல வாண செட்டி[76] என்பவரும் வரைவித்து உபயம் பண்ணியுள்ளனர். இவர்கள் பெயர்கள் மரங்களிலும், தனிக்கட்டங்களிலும் குறிக்கப்பட்டுள்ளன.

உபயகாரர்களும் மடமும்

இந்தக் கோயிலுக்கு அருகே பிள்ளைமாருக்குச் சொந்தமான மடம் ஒன்று இருந்தது என்றும், அதன் கட்டடங்கள் பின்னால் அழிந்துவிட்டன என்று கூறப்படுகிறது.[77] ஊராட்சி ஒன்றிய அலுவலக வாசலில், சூரிய சந்திரன் கண்ணாடி ஆகிய மங்கலப் பொருட்களுடன் சூலக்கல் ஒன்று கிடைக்கின்றது[78] அதனில்

> "(ப)ரஞ் சோதிய்
> பண்டாரமடம் "

என்று குறிக்கப்படுகிறது. இதன் காலம் சுமார் 16–17ம் நூற்றாண்டு எனக் கணிக்கலாம். ஆகவே சுமார் நூற்றாண்டு காலம் இம்மடம் இருந்து உள்ளது என்பதும், அது பின்னால் அழிந்துவிட்டது என்பதும், அதனில் காணும் பண்டார மடமும், ஓவியத்தில் காணும் சிரீ பண்டாரம் ஆகியவைகளைச் சார்ந்தவர்களாக இருக்கலாம்.

'ஸ்ரீ பண்டாரம்' என்னும் சொல் கோயில் தர்மகர்த்தாவினைக் குறிப்பதாக இருந்தால் இவ்வோவியங்களைக் கோயிலைச் சார்ந்த தர்மகர்த்தாக்கள் பலர் தீட்டியிருக்கின்றனர் எனக் கொள்ளலாம்.

வண்ணமும் காலமும்

கருப்பு, நீலம், காவி, பழுப்பு வெள்ளை, மஞ்சள் சாம்பல், கரும்பச்சை, இலைப் பச்சை ஆகிய வண்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இதன் காலத்தைக் கணிக்க நமக்கு எழுத்துகள் ஓவியங்களின் பக்கவாட்டுத் தன்மை, சில ஓவியங்களில் கொண்டை, முஸ்லீம் அரசன் போன்ற அலங்கார, மராட்டிய

சௌராட்டிரர்ப் பெண்களைப் போன்று கீழே விசிறி மடிப்பு வைத்துக் கட்டப்பட்ட புடவைகள் ஆகியவை நமக்கு 18ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்பதனைத் தெளிவாக விளக்கு கின்றன.

வண்ணங்களில் அழுத்தத் தன்மையும், குறிப்புகளில் இயல்பான பேச்சு நடையும் காணப் படுகின்றது.

அடிக்குறிப்புகள்:

1. Gazettier – Ramanatha puram District
2. கெவுதமர் ஆகலியை தெண்டம் பண்ணி விச்சு.....தோத்திரம் பண்ணினது
3. கெவுதமர் ஆசிரமத்துக்கு கூட்டி வறுஇராற்
4. கெவுதமர் ஆசிரமத்தில் பேசிக்கொண்டு இருந்தது
5. மிதுலாபுரி பட்டிணத்துளு(க்கு) வறுகுறு போதுசெனக மகாராசா வந்து தெண்டபம் பண்ணினது.
6. சதாநந்தரம் செனக மகாராசாவும் மந்திரியும் மிதிலா.....து கூட்டி வந்தது.
7. சீதை அம்மன் கீழ மேடையில் இருந்து பார்த்து .....பத்து உ
   13ம் பத்தி
8. சீதை அம்மன் மேடையில் சுவாமியைப் பார்த்து மூர்ச்சையானது
9. சீதையம்மன் ராமசுவாமியுடன் சரிதம் பேசிக் கொண்டு இருந்தது
10. சதா நந்தரம் விஸ்வாமித்திரம் செனகமகா சாவும் வில்லு
11. ராமசாமியும் லட்சுமணருங் கேட்டுக்கொண்டிருந்தது.
12. செனக மகாராசா அரிகர.....னுடதல வில்லை[கொ] ண்டுத் தாறச் சொண்ணது.
13. .....திங்கிலியர் வில்லை எடுத்துக் கொண்டு வந்தது.
14. வில்லுதூணி(கண்டு) அம்ப(த்தாறு தேசத்)து ராசாக்கள் மூச்சையானது
15. ராமல் லட்சுமணர் வில்லு முறித்தது
16. விசுவாமித்திரர் சதாநன்தர் முதலான ரிஷிகள் வில்லி முறித்த(தே)பாது தோதிரம் பண்ணினது
17. விசுவாமித்திரர் சதாநன்தர்..... இடத்து கொண்டு பேசிக்கொண்டு எழுதி அனுப்பு விச்சது.
18. அஞ்சகாரன் ஓலை வாங்கி கொண்டு அயோத்தி பயணம் பெறப்பட்டது.

19. கோட்டை வாசல்கடந்து போ[ய்] கங்கைக் கரையில் இறுந்த ரிஷிகள் எங்கே போரீயளென்று கேட்டது. ராமற்கு கல்யாண ஓலை கொண்டு போரேன் சொன்னது.

20. கெங்கைக் கரையை நீந்தி அக்கரைப்பட்டது.
<u>15ம் பத்தி</u>

21. அயோத்தி கோட்டை வாசல் தாண்டி தசரத மகாறாசா கயில் தெண்டம் பண்ணிக் குடுத்தது உ கலியாண ஓலை

22. தெசரத ராச(ர) மிந்திரி கலியா
ண ஓலை வாங்கினது
வசிட்டர் தெசரதற பாத்து..... கரை சுமந்தரி – முதலான
பேறும் வந்து கொண்டு கலியாண ஓலையை வாசித்துக்கொ
ண்டுசந்தோஷப்பட்டது உ

23. தெசரதற் கலியாண ஓலை கொண்டு வந்தவற்கு பெறும் கிழிக் குடுத்து அவனை மேல்பட்டிணப் பிரவேசம் பண்ணி அனிப்பிவச்சது

24. கல்யாணத்துக்கு மிதிலாபுரி பெறப்பட்டது. கோசலை கையிகேசி சுமத்திரை முதன(எ)ல்லாரும் பெபறப்பட்டார்கள்.

25. தெசரதற் பல்லாக்கு பெறாப்பட்டது உ.

26. சகல ஊறுக்களு (மவர்களு) டன் பெறப்பட்டது.

27. வசிட்டர் ரதத்தில் பெறப்பட்டது.

28. அம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் கலியாணத்துக்குப் பெறப்பட்டது.

29. சகலமான பேறும் கங்கையில் ஓடம் ஏறிப்போனது

30. சகலமான பேறும் அடிக்கரையில் கூடாரம் அடித்து எறங்கி இறுந்தது

31. மறுனாள் உதயம் பயணம் பெறப்பட்டது

32. தெசரதனார் செனக மகாராசாயெதுரே வந்து கண்டது

33. வசிட்டரை ராம லெட்சுமணர் வந்து தெண்டம் பண்ணினது

34. தெசரத மகாராசா (விசுவாமித்திர) ரை தெண்டம் பண்ணினது

35. மிதுலாபுரி கோட்டைக்குள் சகலமான பேறும் வந்து யெறங்கினார்கள்

36. அன்பத்தாறு தேசத்து மகாராசாக்கள்..... தரிசன.....

37. வசிட்டர், விசுவாமித்திரர், சதானந்தர் தெசரத
மகாராசா செனக மகாறாசா
அன்பத்தாறு தேசத்து மகாராசாக்களுங்கூடி
கலியாணம் பேசி நிச்சியம் பண்ணினது

38. பரதரு.....

39. சத்துருகுணருக்கு நலுங்கு யி றுத்தது

40. சீதையம்மனுக்கு (ந) லுங்கு யிட்டது

41. உர்மிளைக்கு நலுங்கு யிடறது

42. மாண்டவிக்கு நலுங்கு யிடறது

43. சுருத்திற..... (ந)லுங்கு யிடறது.

44. ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்தல மகாத்மியம் – பக்கம் 5

45. தசரதர் சமாசாரம் கேட்டவுடனே மரணமானது அம்மன்மாருகள் அளுது கொண்டது

46. கங்கை கரையில் குகன் வந்து கண்டு ஓடம் கடத்திவிட்டது

47. சுவாமியும் அம்மனும் லச்சுமனரும் வனத்தில் போரபோது அகஸ்தியர் பேசி ..... அணைத்துக்கொண்டு போய் ஆசிரமத்தில் பேசிக் கொண்டது

48. லட்சுமணர் யிடத்தில் சூர்ப்பநகை வந்து..... தமையனார் என்னை கலியாணம் பண்ணச் சொல்லிச் சொன்னது

49. சூரப்பநகையை லட்சுமணர் மூக்கு முலையை அறுத்தது.

50. கரண் தூசனன் திரிதிரசுயிடத்தில் வந்து சூரப்பநகை வந்து அலரிக்கொண்டு வந்து சொன்னது.

51. பஞ்சவடியில் கரனும் துசனனும் திரிதரனும்பதி
னாலுயாயிரம் நகை..... க்க ராமசுவாமி – மேலு

52. யெடைய.....க ர(ங்)கமனா யக்கர் குமாரர் ரெங்கப்ப நாயக்கர்

53. பொளி சுக ரண மஹாபுத்தர பிள்ளை உ

54. ஆள்வார் திருநகரி வேலாயுதப் பெருமாள் பிள்ளை குமாரன் வீரபத்திர பிள்ளை உபயம் நாலு பத்திறா அஞ்சு பொன்.

மடவார் வளமார் திருக்கோயில் ஓவிய அடிக் குறிப்புகள்

55. புதுவைத் தலத்தில் முப்பத்து முக்கோடி தேவதையள் நாற்பத்தெண்ணாயிரம்..... க்கிப்போகதுடனே திருவோலக்கமாய் சுவாமியும் அம்பாளும் எழுந்தருளியிருக்கிற போது.....

56. சுவாமியு மம்மனும் புதுவையினெழுந்து போன
வுடனே அம்
மன்சாமியைப் பார்த்து சகலரும் பொருட்ட
[ாக மதிக்கு]தீர்த்தமுண்டாக வேணு
மென்று கேட்டவுடனே சி[வ] கெங்கை[யை]
விடு
த்து கையழுத்தி சிவகங்கை யாக்கினது

57. முதலாவது சூரியனுக்கு முத்தி கொடுத்த திருவிளையாடல். கயிலை படிலெழுந்
தருளியிருந்த பூலோகத்தில் புதுவைப்பா..... ழுந்தருளி வையெ.....னது.

58. புதுவை நாயகரை சூரிய பகவான் கிரண வி[ந்து]னாலே
அபிடேகம் பண்ணினது.

59. அபிடேகம் பண்ணின கிரண
விந்து நாலு திசையும் பரந்து
வன்னி ம[ரம]ாய் முளைத்தது

60. அந்த வன்னி வனநாதரை
சூரிய பகவான் சிவாற்சனை
பண்ணினது

61. சூரிய பகவான் சிவாற்சனை மகத்து
வத்தினாலே சிவலிங்கத்திலே அய்க்கமானது.

62. 2 ஆவது துருவாசர் பூசை பண்ணின திருவிளையாடல் கயிலாசத்தில் சாமியு மம்மனும்
மெளுந்தருளி யிருந்து துருவாசரை பூலோகத்தில் வந்து பூசியென்று திருவுளம்பற்றி

63. சுவாமி திருவுள்ளபடி
க்கு துருவாசர் வன்னி
வனதிலெ வந்து சா[மி]யைத்
தேடினது

64. வன்னிய வனத்தில்
சாமியைக் காணாம
ல் கீளே விளுந்துபி
ரண்டது.

65. சாமியை காணோ
மென்று துருவாசர்
தவசு பண்ணினது

66. துருவாசருக்கு சாமிதெரி
சனை[யாய்] கட்டளையிட்டது

67. துருவாசர் கோத்தி
ரஞ் செய்து நமக்கா
ரம் பண்ணினது.

68. .. சிவ (கெங்கை)...
ஸ்நாநம் பண்ணினது

69. துருவாசர் ..... மரைப்பூ வேண்ண என்று ..... திருவுளமிரங்கி சிவகங்கையிலே ..... தண்டாய்ந்து தாமரைப்பூ வெடுத்தது

70. துருவாசர் சிவபூ(சை) பண்ணினது

71. .....வது துருவாசருக்கு சாந்த குணங் கொடுத்த திருவிளையாடல்.

72. சிரீபண்
டாரம் வீ
ரப்ப பிள்
ளை உபை
யம்

73.. பொன்ன[ம்]
பலம் பிள்[ளை]
பையம்

74. பொன்னம்
பல பிள்ளை
உபையம்

75. பெரியசாமி பி
ள்ளை உபையம்

76. 4வது அம்பல வாணன் செட்டி
உபயம்

77. ஆண்டாள் கோவிலுக்குஅருகே வடக்கு மாடவீதியில் சிறிய கடை வைத்திருக்கும் திரு. கடற்கரையான் என்னும் வாலிபர் உறிய தகவல்

78. இது என்னால் பாவையிடப்பட்டு படியெடுக்கப்பட்டது.

8. அரையர் சேவை

நாதமுனிகள் வீரநாராயணபுரத்தில் வாழ்ந்த காலத்தில் திருநகரியில் இருந்து வந்த பக்தர்கள் சிலர் இறைவனை வணங்கி 'ஆரா அமுதே' என்னும் திருவாய்மொழிப் பாடலைப் பாடினர். அப்பாடலில் லயித்த நாதமுனிகள் திருவாய்மொழி 1000 பாட்டுகள் உடையது எனவும், நம்மாழ்வாரால் பாடப்பெற்றது எனவும், அறிந்து, அதனைத் தெரிந்து கொள்ளக் குடந்தைக்குச் சென்றார்.

அங்கு அவருக்கு 1000 பாடல்களைத் தெரிவிப்பார் இல்லாததால் ஆழ்வார் திருநகரிக்குச் சென்றார். அங்கும் அவருக்குச் சொல்லிக் கொடுப்போர் இல்லாமையால், பராங்குசதாசன் என்பவர் சொன்னபடி, 'கண்ணிநுண்சிறுதாம்பு' எனத் தொடங்கும் பாடல்களைப் பன்னீராயிரம் முறை பாடினார். நம்மாழ்வாரும் மதுரகவி ஆழ்வாரும் யோகத்தில் இருந்தவருக்கு தோன்றி நாலாயிரத்தையும் கொடுத்து அதனைச் சிறப்பிக்கு மாறு வேண்டினர்.

நாலாயிரத்தின் பாடல்களை ஓதி உணர்ந்த நாதமுனிகள் அவை வெறும் இயற் பாடல்கள் மட்டும் அல்ல. இசையும், நாடகமும் இணைந்து பரிமளிக்கும் முத்தமிழ் என்பதை உணர்ந்தார்.

அவரது உறவினர்களாகவும், சீடர்களாகவும் இருந்து வந்த கீழையகத்தாழ்வான், மேலையகத்தாழ்வான் என்பவர்களுக்கு தேவகானத்தோடு பயிற்றுவித்து, இயல் இசை நாடகம் என்னும் மூன்றையும் இணைத்து நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைப் பயிற்றுவித்துத் திருவரங்கம், திருவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி, என்னும் ஊர்களைத் தலைமை இடமாகக் கொண்டு நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தை இறை அனுபவத் துடன், மனித மனங்களுடன் ஒன்றிடச் செய்து, பக்தியில் திளைக்கச் செய்தார். அது தொடங்கி ஒவ்வொரு வைணவத் திருத்தலத்திலும் இயல் இசை நாடகப் பாணியில் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைப் பரப்பி மனங்களை ஒன்றிடச் செய்யும் செயல் நடைபெற்றது.

பகவத் அனுபவத்தில் திளைப்பதற்கு மனத்தை ஒன்றிடச் செய்ய வேண்டும். அதனைச் செய்வதற்கு தத்துவங்களை, இயல்களாக ஆழ்வார்கள் மாற்றினர். அதனுடன் இசையைச் சேர்த்து நாடகப் பாணியில் ஒன்றாக்கித் தலைமை சான்ற பகவத் அனுபவத் தைத் தரும் நிகழ்ச்சியாக உருவாக்கியவர் ஸ்ரீநாத முனிகள். அதற்கு தலைமையான சேவை – அரசர் சேவை – அரையர் சேவை என்ற பெயர் வழங்கலாயிற்று.

இந்த 'அரையர் சேவை' என்பது மாற்று அரங்கங்களில் நடைபெறுவதில்லை. பெருமாள் சன்னதியிலோ, ஆண்டாள், தாயார் சன்னதி முன்போ மட்டும் நடத்தப்படும்.

அரையர் சேவையில் முதலில் நாலாயிரத்தை உரிய இசையுடன் ஓதுவர். ஓதிய பிறகே ஏற்ற இறக்கங்களுடன் அபிநயம் பிடித்து நடன அமைப்புகளுடன் காட்டப்படும். இவை அனைத்தையும் அலங்காரத்துடன் ஒருவரே அபிநயத்தும் காட்டுவார். இத்தகு சிறப்புமிக்க, தலைமை சான்ற 'அரையர் சேவை' என்னும் நிகழ்ச்சி தற்போது திருவரங்கம், திருவில்லிபுத்தூர், ஆழ்வார் திருநகரி ஆகிய ஊர்களில் மட்டும் நடை பெறுகிறது.

அரையர் சேவை என்பது இறைப்பணியைத் தன்னலம் கருதாது செய்வது. வைணவத்தில் சுமார் 1000 ஆண்டுகட்கு மேலாக, இறைப் பணியையே கருத்தாகக் கொண்டு தன்னலம் கருதாத பணியாக இன்றளவும் செய்து வரும் தன்மையைக் காண்கிறோம்.

ஆனால், அரையர்கள் மனமுருகித் தங்களுக்கு வகுத்துக் கொண்ட ராகத்தில் நாலாயிர திவ்வியப் பிரபந்தப் பாடல்களைப் பாடி அபிநயித்து, நடித்தும் காட்டும் வன்மை பெற்றவர்கள்.

அரையர் - பொருள் விளக்கம்:

'அறையர்' என்றும் இவ்வரையர்கள் எழுதப்படுகின்றனர்.

'அறைதல்' என்றால் ஆழச்சொல்லுதல் எனப் பொருள்கொள்ளலாம். அறையர் என்றால் ஆழமாக அழுத்தமாகச் சொல்லுபவர் என்று பொருள் கொள்ளலாம். நாலாயிரப் பாடல்களை அழுத்தமாகத் தெளிவாக அடுத்தடுத்துச் சொல்லுவதால் இப்பெயர் வந்திருக்கலாம்.

'அரையர்' என்னும் சொல் அரசன் என்னும் பொருளில் வழங்குகிறது என்கிறார் வெங்கடராமன்.[1] திருவாய்மொழி போன்ற நாலாயிரத்துப் பாடல்கள் பாடுவதில் இவர்கள் அரசர்கள் என்பதால் இப்பெயர் வந்திருக்கலாம் எனக் கருதுகிறார்.

அரையர்கள் ஆழ்வார்களின் பிரதிநிதிகளாகக் கருதப்படுவதுண்டு. இவ்வரை யர்கள் மட்டும் ஆழ்வார் பாடல்களைப் பாடும்போது "தனியன்" என்ற சாத்துமுறைப் பாடல்களைப் பாடவேண்டியதில்லை.[2]

இவ்வரையர்கள் மட்டும் இறைவனுக்குமுன் தங்கள் தலையிலிருக்கும் 'குல்லா'வினைக் கழற்ற வேண்டியதில்லை.[3]

அரையர் என்னும் சொல்லுக்கு "பெருமாளுக்கு திவ்விய பிரபந்தம் விண்ணப்பிக் கும் சுவாமிகள்" என நாலாயிரத் திவ்வியப் பிரபந்த அகராதி கூறுகிறது. 'விண்ணப்பஞ் செய்தல்' என்றால் எடுத்துக்கூறல் எனப் பொருள். இவர்களின் தொழில் அடிப்படையாகத் தோன்றி நாலாயிரத்தினை இறைவனுக்கு –விண்ணப்பிக்கும்– அறையும் செயல் செய்யும் அரையர்கள் எனப்பொருள் கொள்ள வேண்டும்.

எவ்வாறாயினும் இவர்களுக்கு அறையர் என்பதும், அரையர் என்பதும், இரண்டுமே பொருத்தமாகவே உள்ளது.

றகர ரகர மயக்கம் தமிழகத்தில் உண்டு என்றும், கி. சேகர் எடுத்துக் கூறுகின்றார்.[4] இதுவே அறையர் > < அரையர் என்று மாறியிருக்கலாம் என்கிறார். அரையர்களுக்கு அப்பெயர் வந்த வரலாற்றை கோயிலொழுகு குறிப்பிடுகின்றது.[5]

"திருமொழி திருவாய்மொழித் திருநாளிலே நன்றாக ஸேவித்து அழகிய மணவாளப் பெருமானை மிகவும் உகப்பிக்க, பெருமாளும் உகந்தருள ஒருத்தருக்கு மதியாத தெய்வங்கள் மனமுறைவாணப் பெருமாளரையர் என்றும், ஒருத்தருக்கு நாதவினோத அரையர் என்றும், திருநாமம் சாதித்து ..... "நம்பாடுவானை வீட்டிலே விட்டுவா" என்று தன் சேனாதிபதியை ..... அது முதலாக, பாடுவாருக்கு அந்த இரண்டு பட்டப்பேரும் அரையர் என்கிற விவகாரமும் நடந்து வருகிறது....."
"அரையர் என்கிற திருநாமமும் அந்த ப்ரபுத்வ ஸுசகமான குல்லாவும் தொங்கல் பரிவட்டமும் ஸாதித்தருளினது பாடுவார்க்கேயல்லாமல் பரிஜனங்களுக்கில்லை என்கிறது.[6]

இதனில் ஒரு தெளிவான கருத்து உருவாகிறது.

1) இறைவனால் கொடுக்கப்பட்ட பெயர் அரையர் என்பது.

2) பாடுவார் என்பது இவர்களுக்கே சிறப்புப் பெயர்.

3) ப்ரபுத்வ ஸுசகமான – என்பது ராஜ அடையாளமான – மேன்மை தங்கிய அடையாளமான எனக் கொள்ள வேண்டும். அரையர் > அரைசர் > அரசர் என்று ஒரு பொருள் கொள்ளலாம். ஆகவே, அரையர் என்னும் பதமே சரியானது. முதனிலையானவர், தலைமையானவர் என்ற பொருளிலேயே அவருக்குக் குல்லாய் கொடுக்கப்பட்டது என்று தெரிகிறது.

அரையர்களின் பெயர்

அரையர்கள் பண்டை நாள்களில் ஊர்ப்பெயருடன் சேர்த்தே வழங்கப்பட்டிருத் தலைக் காண்கிறோம். ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர்

திருக்கண்ணபுரத்தரையர் திருக்குறுங்குடி அரையர், ஸ்ரீவில்லிபுத்தூரரையர்[7] என்று ஊர்ப் பெயருடன் இணைத்தே சொல்லப்படும் தன்மையைக் காண்கிறோம். இவை தவிர இவைகளில் அவ்வூர் இறைவனின் பெயரையும் சூடிக் கொள்ளும் மரபும் தெரிகிறது.[8]

அரையர் திருமாளிகை

அரையர்கள் தங்களது இல்லங்களைத் திருமாளிகை, என்றே அழைக்கின்றனர். செல்வம் உறையும் வீடு, இறைவன் உறையும் இல்லம் என்ற பொருளில் இவ்வாறு வழங்கியிருக்கலாம்.

தென்கலைச் சிறப்பு :–

இவ்வரையர்கள் எல்லோரும் வைணவத்தில் தென்கலைப் பிரிவினைச் சார்ந்த வர்கள். எனினும், முதலாம் குலோத்துங்கன் காலம் முதல் மணவாள மாமுனிகள் காலம்

வரை வைணவம் என்ற பொதுப் பொருளில் இவர்கள் இருந்ததால் வைணவத்தின் பொதுச் சொத்து இவர்கள் என்று கருதப்படுகிறார்கள்.

அரையர் சிற்பம்

அரையரின் சிற்பம் ஒன்று திருவரங்கத்தில் இருப்பதாகக் கருதப்படுகின்றது. பெரிய கைத்தாளமும் தலையில் குல்லாயுடனும் இவர் காட்டப்பட்டுள்ளார்.

அரையர் பயிற்சி

18 ஆண்டுக் காலம் நாலாயிரப் பாடல்களை ஓதி ஓதி, அதனில் தங்களது நாவன்மையைப் பெற்று, அதன் மூலம் அபிநயங்களையும் ஜதிகளையும் நாட்டிய முத்திரை போன்றவற்றை இவர்கள் பெறுகிறார்கள். இப்பதினெட்டு ஆண்டுக் காலப் பயிற்சியின் பிறகே இவர்களின் அரங்கேற்றம் நடைபெறுகிறது.

ஒவ்வொரு திருமால் கோயிலிலும் இருந்து வந்த இவ்வரையர்கள் இன்று படிப்படியர்கக் குறைந்து விட்டனர்.

திருக்குறுங்குடியில் மேல மாடவீதி முழுவதும் அரையர்கள் இருந்ததாகவும், தற்காலத்தில் அங்கு ஒருவர் கூட இல்லை என்றும் செய்திகள் கிடைக்கின்றன. அவர்களின் கைத்தாளங்கள் தற்சமயம் மணியாக உள்ளன என்றும் கருத்து நிலவுகிறது.

இப்படி வைணவத் தலங்கள் தோறும் இருந்து வந்த அரையர்கள் இன்று கோயில் என்றழைக்கப்படும் திருவரங்கத்திலும், ஸ்ரீவில்லிபுத்தூரிலும், ஆழ்வார் திருநகரியிலும், மட்டுமே உள்ளனர். திருவரங்கத்தில் 2 அரையர்களும் ஸ்ரீவில்லிபுத்தூரில் திருமாளிகைகளும், ஆழ்வார் திருநகரியில் ஒரு திருமாளிகையும் உள்ளன.

கோத்திர மாற்றம்

ஒரு ஊரில் 2 அரையர்கள் உள்ளனர் என்றால் இருவரும் வெவ்வேறு கோத்திரத்தினராய் இருப்பர். ஒரே கோத்திரம் உடையவர்கள் இருப்பது இல்லை. இவர்கள் தொழில் கோயிலோடு தொடர்புடையதாயிருப்பதால், கோயிலில் சேவை தடைபடக்கூடாது என்பதால் ஒருவர் வீட்டில் நல்லவை அல்லவை நிகழ்ந்தால் இறை சேவையில் தடை ஏற்படாமலிருக்க வெவ்வேறு கோத்திரத் தினராய் அமைந்து உள்ளனர்.

அரையரின் ஆடை அலங்காரம்

அரையர் பன்னிரண்டு திருமண் தரித்துப் பஞ்சகச்சம் (தார்ப்பாய்ச்சு) கட்டி, முழங்கால் வரை மடிந்த மேற்பட்டும் இடையில் கட்டிக் கொள்வர். தலையில் குடுமி உண்டு, அதன் மீது கிரீட மகுடம் போன்ற குல்லாவைத் தரிக்கின்றார். அதனில் தென்கலை நாமம் போடப்பட்டிருக்கும். இறைவனுக்குச் சூட்டப்படும் பரிவட்டத்தினைக் குல்லாவைச் சுற்றிக் கட்டிக் கொண்டபின் அதன் குஞ்சத்தை இடது தோள் வழியே பின்னால் விட்டுக் கொண்டு நிற்கிறார்.

கையிலே இரண்டு வெங்கலத் தாளங்கள் உண்டு. காலினில் சதங்கைகளோ வேறு ஒலியெழுப்பிகளோ கிடையாது. அதுபோல பாடுகையில் கையினால் எழுப்பப்படும் ஒலி தவிர வேறு வாத்தியங்கள் (Background sounds) கிடையாது. இதனைத்தான் கோயி லொழுகு

"ப்ரபுத்வ சூசகமான குல்லாவும், தொங்கல் பரிவட்டமும்"

என்று குறிக்கிறது.

அரையர் வரலாறு

அரையர் என்ற ஒரு தனிப் பிரிவினர் பற்றி நமக்கு முதலில் கிடைக்கும் கல்வெட்டுச் சான்று கி.பி. 1085ஆம் ஆண்டின் முதற்குலோத்துங்கன் காலத்தது.[9] அதனில், இக்கோயில் ஆழ்வாருக்கு திருவாய்மொழித் திருப்பள்ளியெழுச்சி செய்யக் கடவோமாக வும் என்று கூறிய ஐந்து பேரினைக் காண்கிறோம். இதனில் 2 வகையினர் காணப்படுகின்றனர். நம்பி என்னும் பெயருடையோர் நால்வர் அரையர் என்பவர் ஒருவர் என அரையர் பற்றிய முதல் குறிப்பு இக்கல்வெட்டிலேயே காண்கிறோம்.

அரையர் யாராக இருக்கலாம்

அமணமும் பௌத்தமும் இருண்ட காலம் என்றழைக்கப்பட்ட காலத்திலே செழித்தோங்கி யிருக்க, அம்மதங்களை அழிக்கப் புறப்பட்டவர்கள் ஆழ்வார்களும், நாயன்மார்களும். இவர்கள் வீதிதோறும் சைவ வைணவப் புகழினைப் பாடல் மூலம் பாடிப் பரப்பினர். அப்படி வைணவத்தில் பாடிப் பரப்பிய வகையினருள் நாட்டிய அபிநயத் துடன் பாடிப் பரப்பிய வைணவர்களுள் ஒருவகையினராக இருக்கலாம்.

ஆழ்வார் ஏன்?

இவர்களுக்கு (அரையர்களுக்கு) ஆழ்வார் என்ற சிறப்பு பெயரும் காணப்படு கிறது. "கோயிலொழுகும் திருவரங்கப் பெருமாளரையரை ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் என்றே அழைக்கிறது.[10] (கோயிலொழுகு, பக். 35)

அரையர் என்பது அரசரின் திரிபு என முன்பு கண்டோம். இந்த அரையரே பின்னாள் களில் வைணவம் சிறப்புற்றோங்கிய நிலையில் நாலாயிரத்தைப் பாடிக்கொண்டு வீதி களில் செல்வது குறைந்த பின் கோயிலில் இறைவன்முன் பாடி அதனை அபிநயத்துடன் செய்விக்க முற்பட்டிருக்கலாம். அதுமுதல் இறைபக்தியிலே ஆழ்ந்த அவர்களுக்கு ஆழ்வார் என்ற பட்டமும் கொடுத்து இருப்பர் எனக் கருதலாம்.

ஆக ஆழ்வார் என்று முன்பு பொதுவாகக் கொடுத்து வந்த பெயர் பின்னர் பன்னிரண்டு பேருக்கே நிலைத்திருக்க வேண்டும். மீண்டும் முந்தைய ஆழ்வார் போலவே ஒரு குழுவினர் நடித்து வாழ்ந்ததால் அவ்வகை (ஆடல்–பாடல் அபிநயங்களில்) அரை யர்க்கும் ஆழ்வார் என்றே பெயர் வழங்கியிருக்கின்றது.

4) பின்னர் ஒவ்வொரு ஊரிலுமிருந்த வைணவ ஆடல் பாடல் மிக்க கலைக் குழுவினருக்கு ஆழ்வார் என்னும் பெயர் மெல்ல மறைந்து அரையர் என்று நிலைத்து இருக்க வேண்டும்.

ஸ்ரீவில்லிபுத்தூர் அரையர் சேவை

ஸ்ரீவில்லிபுத்தூரைப் பொறுத்தவரை அரையர்கள் இன்றி எந்தத் திருவிழாவும் நடைபெறாது.

இங்கு இரண்டு அரையர் திருமாளிகைகள் உள்ளன.[11] 1) ஒருவர் ஸ்ரீனிவாச ரங்காச்சாரி அரையர், 2) மற்றொருவர் ஸ்ரீனிவாச அரையர்,[12] இவர்கள் வழிவழியாக இங்கு பணிபுரிந்து வருகின்றனர். நாலாயிரம் முழுவதையும் பாடுகின்ற இவர்கள் வியாக்கியானஞ் செய்ய 'தம்பிரான்படி' என்ற உரையைப் பயன்படுத்துகின்றனர்.

தம்பிரான்படி

"தம்பிரான்படி" என்பது விளக்க உரையாகும். இது இன்றளவும் அரையர்களிடம் ஏட்டுச் சுவடியாகவே உள்ளது. தம்பிரான்மார் என அழைக்கப்படும் அரையர்களால் நாலாயிரம் முழுமைக்கும் எழுதப்பட்டு, அவை சிறிது சிறிதாகக் குறைந்து இன்று சில பாடல்களுக்கே உள்ளன.

மக்கள் எளிமை கருதி இவ்வூர் அரையர்களை முறையே சிகப்பு அரையர், கருப்பு அரையர் என நிற அடிப்படையிலேயே குறிக்கின்றனர்.

இத்தம்பிரான்படி நாத முனிகள் காலந்தொட்டே இருந்து வரும் வியாக்கியானம் என்றும் தொன்மையான வியாக்கியானம் இதுவே என்றும் குறிப்பிடுகிறார் இவ்வரையர்.

இனி அரையர் சேவையில் சிறப்பானவற்றைக் காண்போம்.

சித்திரை வசந்த உற்சவத்தில் 'திருமடல்கள்' அரையர் சேவையாக உள்ளன. முதல் 9 நாள்களும் நடைபெறுகிறது. இது இதேமாதம் உடையவரின் திருநட்சத்திரமான திருவாதிரை அன்றும் 4000 பாடல்களும் சேவாகாலமாக நடைபெறுகிறது.

வைகாசி: நம்மார்வார் உற்சவத்தில் 10 நாள்களிலும் 4000 சேவா காலம் அரையரால் செய்விக்கப்படுகிறது.

ஆடிப்பூரம் அன்று அரையர் 'முத்துக்குறி' உற்சவம் நடைபெறுகிறது. முத்துக்குறி ஸ்ரீவில்லிபுத்தூருக்கே உள்ள சிறப்பான அரையர் சேவையாகும். வேறு எவ்வூரிலும் இல்லாத சேவையாகும்.

முத்துக்குறி என்பது குறத்தி ஒருத்தி குறி சொல்வது போல் குறவஞ்சிபாணியில் அமைவது ஆகும். இந்நிகழ்ச்சியில் திருமங்கை ஆழ்வாரின் 'மின்னுருவாய்' என்ற பகுதியே எடுத்துக் கொண்டு பாடி நடித்து அபிநயிக்கப்படுகிறது.

முறத்திலே முத்துக்களை வைத்துக்கொண்டு இரண்டிரண்டாகப் பிரித்து வருவர். முடிவில் இரண்டு வந்து தட்டில் ஒன்றும் இல்லையென்றால் காரியம் சித்தியாகும். இல்லா விடில் மறுமுறையும் எண்ணப்படும். இவ்வகையில் அமைந்தது முத்துக்குறி யாகும்.[1] இது நமது சங்க இலக்கியங்களில் உள்ள புள்ளியிட்டு கோலமிழைத்துக் குறிபார்க்கும் தன்மையை ஒத்துள்ளமை எண்ணத்தக்கது.

ஆவணி கிருஷ்ண ஜெயந்தியின்போது நாலாயிரத்தில் உள்ள கண்ணன் தொடர் பான பாசுரங்கள் இசைக்கப்படுகிகினறன. அதனிலும் பெரியாழ்வார் பாடல்களே இசைக்கப்படுகின்றன.

புரட்டாசியில் நவராத்திரி கொலு உற்சவத்தின்போது படியேத்தம் நடைபெறு கிறது.

ஐப்பசி மாதம் தீபாவளியன்று இவ்வரையர்கள் முதலாய முதல் தீர்த்தக்காரர்கள் ஆண்டாளுக்குக் காணிக்கை அளிக்கிறார்கள்.

கார்த்திகை அரையர் சேவையுடன் ஆண்டாளும் ரங்க மன்னாரும் 108 போர்வை களை மேலே சார்த்திக் கொள்ளுவர்.

மார்கழி மாதம் பகல் பத்து, இராப்பத்து உற்சவங்கள் நடைபெறுகின்றன.

வைகுண்ட ஏகாதசியின் முதல் 10 தினங்கள் பகல் பத்தில் முதலீராயிரமும், பின் 10 தினங்களில் பின்னீராயிரமும் அரையர் சேவையாகச் சாதிக்கப்படும்.

அமிர்த மதனம்:

திருநெடுந்தாண்டகத்தில் உள்ள அமிர்த மதனம் என்ற பகுதியினை 10ஆம் நாள் அன்று அரையர் சேவிக்கிறார். அன்று மோகினி அலங்காரத்தில் இறைவன் எழுந்து அமிர்தத்தை தேவர்களுக்குக் கொடுத்ததுபோல், அமிர்தம் அரையரால் கடைவது போல் அபிநயிக்கப்பட்டு, அமிர்தம் எடுத்து அனைவருக்கும் வழங்கப் படுகிறது.

பிரியாவிடை

எண்ணெய்க் காப்பு உற்சவத்திற்கு முதல் நாள் ஆண்டாளை வடபெருங் கோயிலுடையான் சந்நிதிக்கு எழுந்தருளச் செய்து, தளிகை சமர்ப்பித்து, 2¾ நாழிகை கதவைச் சார்த்திவிடுவர். ஆண்டாள் அரங்கனிடம் பிரியாவிடை பெற்று பாவை நோன்பு நோற்கச் செல்வதாக கருதுகின்றனர். அரையர் பின்னர் சென்று திருப்பாவை முதல் பாடலை அங்கு வியாக்கியானம் செய்து பிரியாவிடையைப் பெற்று ஆண்டாளுக்கு பதில் அரையர் – வருவதாகக் கூறப்படும்.

பின்னர் ஒவ்வொரு நாளும் எண்ணெய்க் காப்பு உற்சவத்தின் போது அரையருக் கும் பங்குண்டு. பாசுரங்கள் பாடி சிறப்புச் செய்கின்றார். தை மாதம் முத்துக்குறி உற்சவம் நடைபெறுகிறது.

மாசிமாதம் அரையர்க்கு மங்களாசாசனம் குறைவு. மிருகசீருஷ நட்சத்திரத்தில் திருக்கச்சி நம்பிகளுக்கும், புனர்பூசத்தில் குலசேகர ஆழ்வாருக்கும் மங்களாசாசனம் நடைபெறுகிறது.

பங்குனியில் திருக்கல்யாண உற்சவம் முடிந்தவுடன் மங்களா சாசனம் நடை பெறுகிறது.

இவ்வாறு ஸ்ரீவில்லிபுத்தூரைப் பொறுத்தவரை அரையர் சேவை என்றால் திருவிழா – திருவிழாவென்றால் அரையர் சேவை என்ற தன்மை ஏற்பட்டுவிட்டது.

அடிக்குறிப்புகள்:

1. தினமலர் 17.10.78 கட்டுரை
2. இச்செய்தியைச் சொன்னவர் பி. சீனிவாச ரங்காச்சாரியார் (அரையர்)
3. கோயிலொழுகும் இதனை 'குல்லா' என்றே கூறுகிறது. ஆனால் இது கிரீட மகுடம் போல் துணியால் ஆனது.
4. திருச்சி மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்க மலர்
5. கோயிலொழுகு பக்கம் 34
6. கோயிலொழுகு பக்கம் 35
7. இவை ஸ்ரீவில்லிபுத்தூர் அரையர்கள் சொன்னவற்றிலிருந்து பெற்ற செய்திகள்
8. இன்றும் ஸ்ரீவில்லிபுத்தூரில் முன்பிருந்த அரையர் பெயர் வடபத்ரசாயி அரையர் என்றும், இன்று அவரது பேரனுக்கு இப்பெயர் இடப் பட்டிருப்பதையும் காண்கிறோம்.
9. Alwars and Divya Prabandam hymns in Sri rangam Temple as gleaned from Epigraph by Dr. R. Nagaswamy – கல்வெட்டு, இதழ் 11
10. கோயிலொழுகு பக்கம் 34
11. இச்செய்தி ஸ்ரீவில்லிபுத்தூர் அரையரிடமிருந்து பெறப்பட்டது.
    படியேத்தம் என்பது படிப்படியாக தோளிலிருந்து ஆண்டாளைக் கீழிறக்கி மீண்டும் மீண்டும் சிறிதுசிறிதாக இறக்க அரையர் மட்டியிட்டுக்கொண்டு பாசுரம் சாதித்தலாகும்.

9. கிளிக்கட்டு

ஸ்ரீவில்லிபுத்தூரில் தற்காலத்து நிலவிவரும் கலைகளில் ஒன்று கிளிக்கட்டு என்பதாகும். பச்சைக் கிளியினைப் பாற்கடல் வண்ணனிடம் தூது போக்கினாளாம் சூடிக்கொடுத்தருளிய நாச்சியார். அதற்காக ஆண்டாளின் திருக்கரத்தினில் அன்றாடம் அமரும் ஒரு நல்வாய்ப்பைப் பெற்றது கிளி. அதற்காக தினந்தோறும் ஒரு கிளியினைக் கட்டி ஆண்டாள் உற்சவ விக்கிரகத்திற்கு அளிக்கின்றார்கள் என்பது ஊரில் கூறப்படும் கருத்தாகும்.

வெறும் மரவள்ளிக் கிழங்கின் இலைகளை மேலும்மேலும் சுருட்டி அதன்மேல் நாரால் சுற்றி மீண்டும் இலைகளையும் தழைகளையும் சுற்றி சிவப்பு அரளி, வெள்ளை அரளிகளை இறக்கைக்குக் கொடுத்து, உள்ளிருக்கும் நார் வெளித் தெரியாமல் கட்டப்படுகிறது. அதன் சிவந்த மூக்கினுக்கு மாதுளம் பூவின் ஒட்டினை எடுத்து மூக்கினைப் போல் வெட்டி வைத்துக் கட்டப்படுகிறது. கருப்பான கண்களுக்கு காக்காய்ப் பொன் என்பதனை வைத்துச் சுருட்டி நிறம் கொடுக்கின்றார்கள்.

ஒரு கிளி உருவாவதற்கு சுமார் மூன்று முதல் மூன்றரை மணி நேரம் ஒரு தனி மனிதனின் நேரத்தினை பயன்படுத்தி தயார் செய்யப்படும். இக்கிளி அன்று மாலை ஆண்டாளின் திருக்கரத்தினை அலங்கரிக்கின்றது.

இந்தக் கிளி, பரமனைப் பாடுவதாகக் கூறப்படும் இக்கிளி, பண்டைய பெயராக இருந்து இருக்கும் 'பகவதி விண்ணகரம்' என்பதில் உள்ள 'பகவதி'யின் தாக்கமாக இருக்குமோவென எண்ணத் தோன்றுகிறது.

கொற்றவையின் ஒரு பெயராக 'பகவதி' என்பது உள்ளது. கொற்றவைக்கு கிளியும் பந்தும் சேர்த்துக் கூறுவது என்பது சிலப்பதிகாரத்திலும், பிற தமிழ் நூல் களிலும் காணப்படும் ஒன்றாகும் என்கிறார் பி.எல். சாமி அவர்கள்[1].

அப்படிக் கிளி இருப்பதனைத் தத்துவப்பூர்வமாகக் கொடுப்பதுதான் இந்த இலைக் கிளியோ என்று எண்ணத் தோன்றுகிறது.

தற்கால ஸ்ரீவில்லிபுத்தூர் கலைகளில் இந்தக் கிளிக்கட்டு சிறப்பிடம் வகித்து – உண்மைக்கிளி போல் உட்கார்ந்திருக்கும் திருக்கோலத்தை நம்மால் மறக்க இயலாது.

இவை எல்லாவற்றிற்கும் முடிவாக.....

ஸ்ரீவில்லிபுத்தூரார் வரலாற்றிலோ, கலையிலோ, தொல்பொருளிலோ, சமய வாழ்விலோ எந்த ஊருக்கும் பின்தங்கியதாக இல்லை.

வரலாற்றிற்கு முற்பட்ட காலம் முதல், தற்காலம் வரை பெரும்பாலும் தொடர்ந்த இடைவிடாத வரலாற்றினையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் கொண்டுள்ளது. பழங் கலைகளுக்கு இலக்கியமாகத் திகழும் ஊர் ஸ்ரீவில்லிபுத்தூரேயாகும்.

அடிக்குறிப்புகள்:

1. தமிழ் இலக்கியத்தில் தாய்த் தெய்வ வழிபாடு – பி.எல். சாமி ஆராய்ச்சி இதழ் மலர் 3, இதழ் 2 பக்கம் 222

10. விஷ்ணுசித்தன்

பாண்டியன் கொண்டாட வந்த பட்டர் பிரான்

தென்பாண்டி நாடு வைணவ சமயத்திற்குப் பெரும் இடம் தந்துள்ளது. சங்க காலத்தில் சமணம் சிறந்திருந்த மல்லி முதலிய மதுரைப் பகுதிகளில் வைணவமும், சைவமும் 6ம் நூற்றாண்டு வாக்கில் எழுந்த எழுச்சியினால் சமண பௌத்தங்கள் வீழ்ந்து வைணவ -- சைவங்களின் எழுச்சி மேலோங்கலாயிற்று.

முதலாழ்வார்கள் மூவரின் எழுச்சிக்குப் பின் 9ஆம் நூற்றாண்டில் பெரியாழ்வார் தோன்றினார்.

ஆழ்வார் என்பவர் தங்களது சிந்தையைத் திருமாலின்பால் ஆழ்த்திக் கொண்ட வர்கள். இவர்களைப் பற்றிச் சொல்லும்போது

"ஞானம் செழிக்கும் தங்களுடைய இடமான வைகுந்தத்தை விட்டு, இந்த இருள் தரும் மா ஞாலத்தில் அவதரித்து, உலகம் உய்யும் கைங்கரியத்தில் ஆழங்கால் பட்டமை கொண்டும், மண்ணுலகில் அவதரித்து, உண்டியே, உடையே உகந்தோடும் இம்மண் ணுலகத்தாரோடு கூடுவதன்றி பகவானுடைய பக்தியிலே ஆழ்ந்திருந்தமையாலும் ஆழ்வார் எனப்பட்டனர்[1] என்கிறார்.

பெயர்

விஷ்ணுசித்தன் என்பது இயற்பெயராகும். பட்டர்பிரான் என்பது செய்த தொழி லால் வந்த பெயராக இருக்கும். வேயர் குலம் என்னும் சோழியரில் பிறந்தவராவார். ஆனி மாதம் சுவாதி நட்சத்திரத்திலே அவதரித்த புண்ணியர். கருடாழ்வாரின் அம்சமாகத் தோன்றினார் என்கிறது திவ்விய சூரிசரிதம்.

திருப்பல்லாண்டுடன் இணைத்துப் பெரியாழ்வார் திருமொழியாக 473 பாசுரங் களைப் பாடியுள்ளார்.இவை முதலாயிரத்தில் இடம் பெறுகின்றன. மொத்தமாக 19 திருத் தலங்களைப் பாடியுள்ளார்.

குடும்பம்

முகுந்தர் என்பவருக்கும் பதுமை என்பாளுக்கும் ஐந்து குமாரர்கள் தோன்றினர். அவர்களில் ஐந்தாவது திருக்குமாரராகத் தான் விஷ்ணு சித்தர் தோன்றினார்.

வாழ்வு

இளமையிலேயே வைணவ சம்பிரதாயப்படி உபநயனம் முதலியவற்றினால் புனிதம் பெற்று விவாகமும் நிகழ்ந்தேறியது. ஆயினும் சித்தத்தை விஷ்ணுவின்பால் செலுத்திய

இவ்விஷ்ணு சித்தன் நைஷ்டிக பிரம்மசரியத்தினைக் கடைப்பிடித்து தனது சொத்துக்கள் அனைத்தினையும் பகவானுக்கே அர்ப்பணித்துத் தன் நிலத்தைத் திருநந்தவனமாக்கி ஜாதிமலர்களையும், திருத்துழாயினையும் பயிரிட்டுப் பல மாலைகள் கட்டி இறைவனுக்கே அர்ப்பணித்தார் என "திவ்ய சூரிசரிதமும் குரு பரம்பரை"யும் கூறுகின்றன.

பெயர்

இவர் தன்னைத் தொல்புகழான் பட்டர்பிரான் புதுவை மன்னன் (2.2.11), 2) புதுவைக்கோன் (23.13), 3) பட்டர்பிரான் (2.4.10) 4) பட்டர்பிரான் விட்டு சித்தன் (9.11.5), 4) மறைவாணன் பட்டர்பிரான் (4.1.10) 5) வேயர்தங்குலத்து உதித்த விட்டுசித்தன் (5:4:11) என்றும் குறிக்கிறார்.

ஆண்டாளும் வேயர்புகழ் வில்லிபுத்தூர் கோன் கோதை" (நாச்சியார் திருமொழி 1:10) என்று கூறுகிறார்.

இவ்வாறு வாழ்ந்து வந்த பெரியாழ்வாருக்கும் பூமிப்பிராட்டியின் அம்சமாக ஆண்டாள் அவரது நந்தவனத்தில் , துளசிச் செடியின் கீழ் கிடைத்தாள் என குரு பரம்பரை யும், திவ்ய சூரிசரிதமும் சுட்டுகிறது.

கிழியறுத்தது

மதுரையை ஸ்ரீவல்லபதேவன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவன் ஒருநாள் நகர் சோதனைக்காக வெளியே சென்றான். மாறுவேடத்தில் இருந்த அவன் ஒவ்வொரு வரையும் யாரென வினாவினான், எல்லோரையும் பற்றிக் கேட்டான், உணர்ந்தான், அப்பால் சென்றான்.

ஒரு வேதிகையின் புறத்தில் மறைவல்லான் ஒருவன் உறங்கிக் கொண்டிருந் தான். அவனை நோக்கி ஆரையா நீயிவ்வூர்க்குப் புதியவனென்ன வினாவினான். அதற்கவன்

சீரையாய் சனகிகேள்வன் செய்ததேதுவின் – கண்டோய்
வூரையாள்பவனே போவல் வேதியன் ஒருவன் – யானே[2]

என்றாராம்.

தன்னை உணர்ந்து கொண்டவனைக் கண்டதும் மன்னன் என்னை நீயுணர்ந்தது எவ்வாறு? என்று கேட்டான்.

இது எளிது. எல்லாவற்றையும் முன்னே உணர்ந்து கொள்ளலாம். முதுமைக்கு வேண்டியதை இளமையில் செய்தால் எல்லாம் எளிதே என்று கூறினான்.

அவனது "வருஷாத்தம் " என்னும் மேற்கண்ட கருத்தின் பாடலை உணர்ந்த மன்னன் மறுநாள் தனது மந்திரியாகிய செல்வநம்பியை அழைத்து மறுமைக்கு செய்ய

வேண்டியது என்ன என்று வினாவியதாகவும், மந்திரியோ எல்லாச் சமயத்தினரையும் அழைத்து வேத சம்பந்தமான சித்தாந்தம் எதுவென அறிதலே சாலவும் சிறந்தது என்றான். மன்னனும் மகிழ்ந்து,

"பொன்னினிற் கிழியொன்றாங்கே பொள்ளெனவுயரத்தூக்கி
யின்னதிங்கெவர் வாதத்தினிற்று வீழ்ந்திடினுமந்த
மன்னெடுஞ் சமயத்தேவே மறையுறுபொருளதாமே!"[3]

என்று கூறி கிழி கட்டினான். 16 வகை மதத்தார்களும், பலரும் வந்து வாதிட்டுத் தோற்றனர்.

வடபெருங் கோயில் உறைவான் ஆணையால் அங்கு வந்து சேர்ந்தார் விஷ்ணு சித்தர் அவர் பரத்துவ நிர்ணயத்தை நிலைநாட்டிப் பொற்கிழி பெற்றார். மகிழ்ந்த மன்னன் அவரை யானையிலேற்றி வீதியுலாச் செய்தான். இறைவனே ஸ்ரீதேவி-பூதேவி சமேதராராய் தோன்றினார். அவனுக்குக் கண்படுமோவென எண்ணினார் விஷ்ணுசித்தர். யானை மீதிருந்த மணிகளைக் கையிலேந்தி

''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம் கொண்ட திண்டோள்''

மணிவண்ணனுக்குச் சேவடியில் தனது பாடல்களையும் பரிசையும் சமர்ப்பித்தார்.

இதே கதையைத் தான் குரு சரிதமும், திவ்யசூரி சரிதமும் தங்களுக்கு உரிய பாணியிலே சொல்லுகின்றன.

ஆழ்வாரின் பக்திநிலை :

இவரது பாடல்களில் காணப்படும் பக்திநிலை என்பது வாத்சல்ய சக்தி என்பதன் பாற்படும். ஒரு தாய் தன் மகனைக் கண்ணுங் கருத்துமாகக் கவனிக்கும் நிலை இங்கு தென்படுகிறது.

தன்னைக் கண்ணனின் தாய் யசோதை ஆகவும், இறைவனை மகனாகவும், தன் வீட்டினை நந்தகோபன் இல்லமாகவும், ஸ்ரீ வில்லிபுத்தூரை கோகுலமாகவும் கருதிக் கொண்டு பாடும் தன்மை அவரது பாடல்களில் காணப்படுகின்றன.

கண்ணனைப் பாதாதிகேசாந்தமாக முதல்பத்து மூன்றாந் திருமொழியில் வருணிக்கிறார்.[4]

மாணிக்கங்கட்டி வைரமிடைக் கட்டி
ஆனிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறு தொட்டில்
பேணியுனக்கு பிரமன் விடுத்தான்
மணிக்குறளனே தாலேலோ!"[5] என்பது

பின்னால் வரும் பிள்ளைத் தமிழ் நூல்களில் கூறியிருப்பதிலெல்லாம் எதைக் கூறலாமோ அதைக் கூறுகிறார்.

வைணவ ஆழ்வார்களுள் இறைவனுக்கே பல்லாண்டு கூறிய விஷ்ணுசித்தனின் காலம் ஓரளவு உறுதியாகியுள்ளது. பெரியாழ்வார்,

"சொன்னவில் கூர்வேற் கோன்நெடுமாறன் தென்கூடற்கோன்
தென்னவன் கொண்டாடும் தென்திருமாலிருஞ்சோலையே"[6]

எனப் பாடுகிறார். ஆகக் கோன்நெடுமாறன் காலத்தவர் பெரியாழ்வார் என்பது உறுதி யாகிறது.

கோன் நெடுமாறன் யார்?

மு. இராகவையங்கார் தமது ''ஆழ்வார்கள் கால நிலை''யில் மாறவர்மன் இராஜ சிம்மனே இவன் என்றும், காஞ்சிவாய்ப் பேரூரில் பராந்தக நெடுஞ்சடையன் விஷ்ணு விற்குக் குன்ற மன்னதோர் கோயில் எடுக்கக் காரணம் இவன் தந்தை பெரியாழ்வாரால் வைணவனாக்கப் பட்டதுதான் என்றும் இவன் தன்னை பரமவைஷ்ணவன்தானாகி" என்றும் கூறிக் கொள்ளுகிறான் என்கிறார்.

ஆனால், கோபிநாதராவும், நீலகண்ட சாஸ்திரியும் இவன் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்தவர் என்ற முடிவிற்கு வருகின்றனர்.[7] குருபரம்பரையும் இவனை ஸ்ரீவல்லபப் பாண்டியன் என்ற மன்னன் காலத்ததாகக் கூறுகிறது. ஆக நெடுமாறன் – வல்லபன் என்ற இரண்டு பெயர்களும் உடைய பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகளைக் கண்டால் உண்மை விளங்கும். ஸ்ரீவில்லிபுத்தூருக்கு அருகில் உள்ள சாத்தூர் வட்டத்திலுள்ள எருக்கங்குடிக் கல்வெட்டு ஒன்று, "கோன் நெடுமாறன் செந்தனிக் கோல் சிரீவல்லபன்" எனக் குறிப்பதைச் சுட்டுகிறார் இரா.நாகசாமி.

அதனில் குறிக்கப்படும் வென்றிகளும், சின்னமனூர், தளவாய்புரம் செப்பேடுகள் குறிக்கும் வென்றிகளும் ஒன்றாக இருப்பதால் ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்தைச் சார்ந்தவரே பெரியாழ்வார் என்பதை உணர்கிறோம்.

ஆக 9-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகிறார். பெரியாழ்வார் 85 ஆண்டுகள் வாழ்ந்தவ ராதலால் 800 முதல் 885 வரையாக இருக்கலாம் எனக் கருதுகிறார். கல்வெட்டுத் துணையுடன் பார்க்கும்போது பெரியாழ்வார் காலம் இதே சரியெனத் தோன்றுகிறது.

இன்றைய ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் 13ஆம் நூற்றாண்டின் மாறவர்மன் குலசேகரனின் கல்வெட்டு ஒன்றில் பெரியாழ்வாருக்காகத் திருவிடையாட்டம் கொடுக்கப் பட்ட செய்தி சுட்டப்படுகிறது. (533/1926)

இன்றைய பெரியாழ்வார் பரம்பரையினர்

இன்றைக்கு வேதபிரான்பட்டர்கள் என்று அழைக்கப்படும் பெரியாழ்வார் குடும்பத் தினர் 2 பேர் இருக்கின்றனர். இவர்கள் கோயில் திருவிழாக்கள் சிலவற்றில் ஆண்டா ளுடன் தொடர்புடைய பல விழாக்களில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். ஆண்டாள் கோயில் சந்நிதித் தெருவிலேயே இவர்கள் வீடுகள் உள்ளன. இவர்களை 26–7–79ல் கண்டு பேசி தொகுத்த விவரங்களின் சாரம் இவை

பெரியாழ்வாருக்குப் பின் 224 தலைமுறைகள் தாண்டிவிட்டனர். மனைவி யிருந்தும் மகனில்லாத இவரது அண்ணன் நான்குபேரின் வழிவந்தவர்கள் இவர்கள்.

செவிவழிச் செய்திகள் இரண்டு

இன்று ஆண்டாள்கோயில் இருக்குமிடமே பண்டு பெரியாழ்வார் திருமாளிகை என்றும், கண்ணாடிக் கிணறே ஆண்டாள் சூடி அழகு கண்ட கிணறு என்றும் கூறப் படுகிறது.

முதல் தர்மகர்த்தா

ஆண்டாள் அழகிய மணவாளனை மணந்து இருவரும் அந்தர்த்தானமான பின்பு, பெரியாழ்வாரே ஆண்டாளையும், அழகிய மணவாளனையும் பெரிய திருவடியையும் எழுந்தருளப் பண்ணி தன் ஆஸ்தியெல்லாம் அக்கோயில் பணியிலே அர்ப்பணித்து விட்டார். அவரே இக்கோயிலின் தர்மம் செய்த முதல் தர்மகர்த்தா என்றும் கூறப் படுகிறது.[8]

அடிக்குறிப்புகள்:

1. வைணவ வினா விடை – என்.எஸ். தாத்தாச்சாரியார் – தொகுப்பு
2. திவ்யசூரிசரிதம் – விஷ்ணுசித்தர் வைபவம் பாடல் 27
3. " " வைபவம் பாடல் 35
4. பெரியாழ்வார் முதல்பத்து மூன்றாம் திருமொழி
5. " " – 4 ம் திருமொழி
6. பெரியாழ்வார் திருமொழி 4 : 2 : 7
7. சான்றாதாரம் – கல்வெட்டு இதழ் ஒன்பது – பக்கம் 7, 8
   பிற்காலத்துக் கல்வெட்டு ஒன்றில் விஷ்ணுசித்தன் என்ற பெயரை உடைய பலபேரைக் காண்கிறோம்.

8 இக்கருத்து ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்தலமகாத்மியத்திலும் குறிக்கப்படுகிறது. பக்கம் 32

11. சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

மல்லி நாடாண்ட மாமயில்

வடநாட்டிற்கு ஒரு மீரா! தென்னகத்திற்கும் தமிழகத்திற்கும் ஓர் ஆண்டாள். கண்ணனின்பால் காதலைச் செலுத்தி இவ்வுலக வாழ்வே இறை முதலாம் கண்ணனுக்கு என எண்ணத்தைச் செலுத்தி வாழ்ந்தவர்கள்.

சைவத்திற்கு நாயன்மார் வரிசையில் காரைக்காலம்மை, வைணவத்திற்கு ஆழ்வார்கள் வரிசையில் ஆண்டாளம்மை.

ஆண்டாள் என்னும் காரணப்பெயர் இறைவனை ஆண்டு மணவாளனாக ஏற்று வாழ்ந்தவள் என்னும் பொருளில் வழங்கப்படுகிறது. 16ஆம் நூற்றாண்டில் இயற்றப் பட்டதாகக் கூறப்படும் குரு பரம்பரை கூட 'ஆண்டாள்' என்று குறிப்பிடாமல் கோதை அல்லது "சூடிக் கொடுத்தருளிய நாச்சியார்" பிரபாவம் என்றே சுட்டுகிறது.

எல்லாக் கல்வெட்டுகளிலும் சூடிக் கொடுத்தருளிய நாச்சியார் என்றே குறிக்கப் படுகிறது. தான் சூடிய மாலையை இறைவனுக்குக் கொடுத்ததால் சூடிக் கொடுத்த நாச்சியார் என்று பெயர் பெற்றார்.

கோதை என்னும் இயற்பெயர் வடமொழி ஸ்லோகங்கள் தொடங்குமிடங்களி லேயே குறிக்கப்படுகிறது. கல்வெட்டுகளில் ஆண்டாளும் தன் பாடல்களில் கோதை என்றே சுட்டுகிறாள்.

பகவதி விண்ணகரம் என்பதிலுள்ள பகவதி என்னும் பெயர் ஆண்டாளைக் குறிக்கவே எழுந்ததாகும் எனக் கூறி ஆண்டாள் பிள்ளைத் தமிழில் காமநோன்புப் பருவம் 5ஆம் பாடலில்

"நுண்ணறிவுப் புதுவைய பிராமை யேகாம நோன்பினைத் தவிர்க நீயே!

என அபிராமி எனக் குறிக்கப்படும் மரபினைக் காண்கிறோம்.

வளர்ச்சியும் வாழ்வும்

குரு பரம்பரையும், திவ்ய சூரி சரிதையும் ஆண்டாள், நந்தவனத்தில் திருத்துழாய்ப் பாத்தியில் கிடைத்ததைக் கூறுகின்றன.

"அவ்வமயம் அக்குழவி ஐந்து வயதுக் கன்னிகையாய் ஸர்வாபரண பூஷிதையாய் ஆழ்வாரை நமஸ்கரித்து, தந்தையே யான் உமது மகள் இத்துளசி எனது தாய் என்று நவின்று மீண்டும் குழவியானாள்" என்கிறது ஸ்ரீவில்லிபுத்தூர் மகாத்மியம்.

பின்னர் பெரியாழ்வார் அக்குழந்தையை வளர்க்குங்காலை சிற்றில் சிதைத்துப் பருவமும் பெற்று சிறு சோறு சமைத்து, வளர்ச்சிப் பருவமடைந்தாள். கண்ணன்பால் ஆறாகக் காதல் கொண்டு அவனை அடையத் திருப்பாவை பாடி, பாவை நோன்பு நோற்று, அரங்கம் அடைந்து, திருவரங்கச் செல்வனைச் சேர்ந்து அவன் திருவடிகளிலே இணைந்தாள்.

ஆண்டாள் வாழ்ந்தாளா?

ஆண்டாள், பெரியாழ்வாரின் கவிதை உள்ளத்தின் கற்பனைப் படைப்பே என்று சிலர் கூறகின்றனர். ஆண்டாள், பெரியாழ்வார் பாடல்களில் உள்ள சில சிறு அடிகளை ஒப்புமையாகக் கொண்டு பெரியாழ்வாருக்கு ஏற்றந் தருவதற்காகச் கூறுகின்றன.

ஆனால், ஆண்டாள் வாழ்ந்து உள்ளதற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் கோயிலே ஆதாரம். அக் கோயிலுக்கு முன்னுள்ள ஸ்ரீ ரங்கம் கல்வெட்டு ஆதாரம் (39/ 1948-49).

ஆண்டாள் பாடல்கள்

திருப்பாவை முப்பது பாடல்களும் நாச்சியார் திருமொழி என்னும் 14 திருமொழி களும் இன்றளவில் நமக்குக் கிடைப்பனவாக உள்ளன. ஆண்டாள் திருவரங்கம், திருக்கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை, ஸ்ரீவில்லிபுத்தூர், திருவேங்கடம், துவாரகை, வடமதுரை, திருவாய்பாடி (கோகுலம்), திருப்பாற்கடல் ஆகிய 9 திவ்ய தேசங்களைப் பாடியுள்ளாள்.

ஆண்டாளின் பக்தி நிலை

உயிர்களுக்கும் இறைக்கும் இடையே உள்ள உறவை அறிவது சம்பந்த ஞானம் எனப்படும். இந்த சம்பந்தம் பலவகைப்படும் என்பர்[1].

தன்னொத்த சிறுவனாகத் தஞ் சிற்றில் சிதையேல் என ஆண்டாள் தம் பாடலில் வேண்டுகிறாள்[2]. கூடலிழைக்கும் தன்மையையும்[3] கனவு நிலை உரைத்தல் (வாரண மாயிரம்) போன்ற தன்மைகளில் பாடியுள்ளதைக் காண்கிறோம்.

இறைவனுக்காக நோன்பு நோற்று கார்த்தியாயனி விரதமிருந்ததைத் திருப்பாவை சுட்டுகிறது.

பெரியவாச்சான் பிள்ளை தனது உரையில் பின்வருமாறு கூறுகிறார்:

"ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப்பாடியாகவும், அங்குள்ள பெண்கள் இடைப் பெண்களாகவும், தானும் அவர்களில் ஒருத்தியாகவும், வடபெருங் கோயிலே ஸ்ரீ நந்தகோபர் திருமாளிகை ஆகவும் உள்ளுறங்குகிறவன் ஸ்ரீ கிருஷ்ணனாகவும் அனுஷ நட்சத்திரத்துத் தன்னுடைய திருவுள்ளம் திருவாய்ப்பாடியிலே குடிபோய் பாவனாப்ரக்ருவித்தாலே அநுகாரம் முற்றி அவை தானேயாய் இடைநடையும் இடை முடியும் இடைப்பேச்சும் முடை நாற்றமுமாய் விட்டது

கோபிகை பாவத்தில் ஆண்டாள்

ஆண்டாள் பாடல்களில் கோபிகை பாவங்களைக் காண்கிறோம் என்கிறார் என்.என். பட்டாச்சாரியார் மற்றும் தமிழறிஞர் மு. அருணாசலம்.

She is a real Gopi; The real is no merely assumed என்கிறார்.

ஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூரை ஆயர்பாடியாகக் கொண்ட நிலையில் தன் பாடல்களை கோபியர் நிலையில் எவ்வாறு அமைத்துப் பாட வேண்டுமோ அவ்வண்ண மெல்லாம் நினைந்து

"மத்தளங்கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமநிரை தாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன்வந்து என்னை
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி நான் !"

போன்று இறைவனை மணாளனாக எண்ணித் தம் பாடல்களில் கோபியர் போல அமைத்துப் பாடியுள்ளமையால் கோபிகை பாவத்தைப் பெற்று உணர்ந்து, மகிழ்ந்து, வருந்தி, இளைத்து, பாடலுடன் இணைய வைக்கிறார்.

ஆண்டாள் பற்றிய இலக்கியங்களாக குருபரம்பரை, திவ்ய சூரி சரிதம் இரண்டும் புராண மரபில் ஆண்டாளைப் பற்றிச் சுட்டுகின்றன. ஆண்டாள் சந்திர கலாமலை, ஆண்டாள் பிள்ளைத் தமிழ் ஆகிய இரண்டும் ஆண்டாள் பெயரில் எழுந்த இலக்கியங்களாகும்.

ஆண்டாளின் கதையைத் தெலுங்கில் 'ஆமுக்யத மால்யதா' என்ற நூல் விளக்கு வதாகக் குறிக்கிறார். இது கிருஷ்ணராய தேவரால் எழுதப்பட்டதாகும்.

கல்வெட்டுகளில்.....

திருவரங்கத்தில் உள்ள திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்கனுடைய கல்வெட்டு (1i9/38-49) கி.பி. 1083ல் மலைநாட்டைச் சார்ந்த ஒருவன் (பெயர் தெரிய வில்லை) சூடிக் கொடுத்தாள் திருநந்தவனம் என்ற பெயரில் நந்தவனம் அமைத்ததைச் சுட்டுகிறது.

விக்கிரமச் சோழன் காலத்தில் ஆண்டாள் திருநந்தவனம் என்ற பெயரில் நந்தவனம் இருந்ததைச் சுட்டுகிறது. (119/ 1947-48)

சோணாடு கொண்டு – வழங்கியருளிய சுந்தர பாண்டியன் காலத்து ஸ்ரீவில்லி புத்தூரில் பகவதி விண்ணகரம் என்ற பெயரில் ஆண்டாள் கோயிலை ஸ்ரீகண்ட பட்டவாஜ பேயாஜியார் அமைத்தது முன்பே கூறப்பட்டுள்ளது.

பிற்காலப் பாண்டியர், நாயக்கர் விஜய நகரர், பாணர், முதலிய மன்னர்கள் கொடுத்த கல்வெட்டுகள் பற்றியும் முன்னரே குறிப்பிடப்பட்டு உள்ளது.

கல்வெட்டுகளில் சூடிக்கொடுத்த நாச்சியார் என்ற பெயரே பெரும்பாலும் குறிக்கப்பட்டுள்ளது. கோதை என்ற இயற்பெயர், தமிழ்ப்பெயர், 'கோதா' என வடமொழி ஆக்கம் பெற்று வடமொழி ஸ்லோகங்களில் உள்ளது.[4]

ஆண்டாள் என்ற காரணப் பெயர் மாற்றம் கல்வெட்டுகளில் பெரிதும் இல்லை.

ஓவியங்களில் ஆண்டாள்

ஆண்டாள் குறித்த ஓவியங்கள் அதிகமிருப்பதாகத் தெரியவில்லை.

ஸ்ரீவில்லிபுத்தூர் 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இராமாயண ஓவியங்களின் நடுவில் ஆண்டாள் ரங்க மன்னார் திருமணக்கோலம் பெரும்பகுதி சிதைந்துவிட்ட நிலையில் இருகும் இது ஆண்டாள் குறித்ததாகும்.

ஸ்ரீவைகுண்டத்தில், 19ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஆண்டாள் ஓவியங்கள் இருப்பதாகச் செய்திகள் கிடைக்கின்றன.

ஆண்டாள் கோயிலின் உள்திருச்சுற்றில் தற்காலத்தில் 1950க்கு பிறகு தஞ்சை மராட்டிய பாணியில் கல் பதிக்கப்பட்ட கண்ணாடி ஓவியங்கள் உள்ளன.

வழிபாடு, கோயில்கள் செப்புத் திருமேனிகள்

ஆண்டாள் வழிபாடு இன்றளவில் தமிழகத்தின் எல்லா வைணவச் கோயில் களிலும் உள்ளன. ஆண்டாளுக்கெனத் தனி சந்நிதிகள் அழகர்மலை, திருவரங்கம், கும்பகோணம், சாரங்கபாணிக் கோவில், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில், திருப்பதி, காஞ்சி எனப் பல திவ்விய தேசங்களில் காலத்தால் பிற்பட்ட கட்டட அமைப்பை உடையனவாய் உள்ளன.

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் சிற்ப, விக்கிரகங்கள் ஐந்து உள்ளன. அவை கீழ்க் காணுமாறு அமைந்துள்ளன.

சூடிக்கொடுத்தார் :

கருவறையில் இருக்கும் திருவுருவத்திற்குச் சூடிக்கொடுத்தார் என்ற பெயர். இது "படாச்சாசனம்" என வழங்கும் சுதையால் ஆகியது.

திருமல்லிவளநாடி:

கௌதுக பேரம் என வழங்கப்படும் இவ்வெள்ளியினாலாகிய விக்ரகத்திற்கு திருமல்லிவள நாடி என்ற பெயர் வழங்கப்படுகிறது.

புதுவையாண்டாள்:

தாமிரத்தாலாகிய இது ஸ்நாந அல்லது ஸ்நபனபேரர். புதுவையாண்டாள் என்று வழங்கப் படுகிறது.

வீதிகண்டருள்வார் :

இது உத்ஸவ காலங்களில் வெளிக் கொண்டு வரப்படும் உத்ஸவ பேரர் 'திருப்பாவை பாடினார்' என வழங்கப்படுகிறது.

வேயர் பயந்த விளக்கு :

அன்றாட நாள் பலி (பூசை)க்காகத் திருச்சுற்றை வலம் வரும் நித்தியோத்சவர் 'வேயர் பயந்த விளக்கு' எனப்படுகிறார்.

வைணவத்தில் ஆண்டாள்

'Andal is the only woman poet among the Alwars' என்கிறார் மு. அருணாசலம். திருவாடிப் பூரத்திலே செகத்துதித்தவளாகிய இவளுக்கு ஆழ்வார் வரிசையிலும், நாச்சியார்கள் வரிசையிலும் இடமுண்டு. இவளது திருக்கைத்தலம் பற்றியபின் கோதாரங் கன் ஆனார் அரங்கர். "சுரும்பார்குழற்கோதை" "தென்னரங்கம் தொழும் தேசியள்", 'கோதாதேவி' என்றெல்லாம் அழைக்கப்படும் ஆண்டாள் அரங்கன் கைப் பிடித்ததாகக் கருதப்படுவதால் நாச்சியார் வரிசையில் இடம் பெற்றாள்.

வைணவத்தில் முதலாயிரத்தில் இவளது 173 பாசுரங்கள் இடம் பெற்றுள்ளன.

மானிடப் பெண்ணாய் வாழ்ந்தவள் மணாளனாய் மாதவன் கரம் பற்றியதால் தெய்வமாகக் கருதப்பட்டுப் பலவிடங்களிலும் சந்நிதி பெற்ற தன்மையைக் காண்கிறோம். வைணவத்தில் சுட்டப்படும் ஒரே குறிப்பிடத் தக்க முதன்மைப் பெண் என்பதே இவள் சிறப்பாகும்.

முடிவாக:

"கோதை பிறந்த ஊர்
கோவிந்தன் வாழுமூத்
சோதி மணிமாடம்
தோன்றுமூர் – நீதியால்
நல்ல பத்தர் வாழுமூர்
நான்மறைகளோதுமூந்
வில்லிபுத்தூர் வேதக்
கோனூர்"

எனக் கூறி ஸ்ரீவில்லிபுத்தூரின் வரலாற்றுப் புகழை நிலைபெறச் செய்வோம்.

அடிக்குறிப்புகள்:

1. ஸ்ரீ வில்லிபுத்தூர் ஸ்தல மகாத்மியம் பக்கம் 30
2. நாச்சியார்திருமொழி – 2ஆம் திருமொழி
3. நாச்சியார்திருமொழி – 4ஆம் திருமொழி
4. கோதா என்ற வடமொழிக்கு வாக்கைக் கொடுப்பவள் என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ள தன்மையைக் காண்கிறோம். தேசிகர் கோதாஸ்துதி என்ற பெயரில் கிரந்தம் ஒன்றினை இயற்றியுள்ளார்.

12. கல்வெட்டு வாசகங்கள் ...

வைத்தியநாதசாமி கோயில் இடம் : கருவறை வடக்குச் சுவர்

இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை: 519/1926

1. கோச்சடை பந்
2. மரான திரு பவனச்சக்க
3. ரவத்திகள் ஸ்ரீ வீரபாண்
4. டிய தேவர்க்கு
5. யாண்டு இரண்டாவ
6. தின் எதிர் ஏழாவது
7. அற்பசி மாதம் இருப
8. த்து மூன்றாந் தியதி பூ
9. வு வெகூஷத்து திருயோதஶி
10. யும் நாயிற்றுகிழமை
11. யும் பெற்ற வுதக தின
12. நாள் வடவாசி நாட்டு பைம்பொழிலில் இருந்
13. து திருவாய் மொழிந்தருளிநபடி திருமல்லி நாட்டு
14. சீ வில்லி புத்தூரில் உடையார்
15. படிக்காசு வைத்தருளிய நாய
16. னார் கோவில் பதிபாரமூலப்பட்டுடைய பஞ்சாச்சாரிக
17. ள் தெய்வகன்மிகளுக்கு சிமாஹேஶ்வரர்க்கு நாய
18. னார்க்கு நாள்தோறும் வச்ச சந் .....

வைத்தியநாதசாமி கோயில் இடம்: கருவறை வடபுறப் பட்டிகை

இ.க.ஆ. அறிக்கை : 520/ 1926

1. ஸ்வஸ்திஸ்ரீ [கோச்ச]டையபன்மரான த்ரிபுவனச் சக்ரவத்திகள் வீரபாண்டிய தேவற்கு யாண்டு இரண்டாவதின் எதிர் ஏழாவது அற்பசி மாதம் இருபத்து மூன்றாந்தியதி பூர்வபக்ஷத்து த்ரயோதஶியும் நாயிற்றுக்கிழமையும் பெற்ற அத்தத்துநாள் வடவாரி நாட்டு பைம்பொழிலில் இருந்து திருவாய் மொழிந்

2. தருளினபடி மல்லிநாட்டு சீவில்லிபுத்தூரில் உடையார் படிக்காசு வைத்தருளிய நாயனார் பதிபாதமூலப்பட்டுடைய பஞ்சாசாரிகள் தெய்வகன்மிகளுக்கும் ஸ்ரீ மாஹெஶ்வரகண்காணி செய்வார்களுக்கும் நாயினார்க்கு நாள்தோறும் உச்சிச் சந்தி வீரபாண்டியன் சந்தியாக

3. அமுது செய்ய . . . . . த்து நாள் ஒன்றுக்கு அமுது செய்ய அமுது படிப்பித்ததில் நம்பியாற்கு அளக்கும் அமுதுபடி இருநாழியும் கறிஅமுது உட்பட்ட பலவெஞ்ச நங்களுக்கும் மேற்பூசைத் திருப்பரிவட்டமும் திருமாலை இலைஅமுது அடைக்காய் அமுது எண்ணைக்காப்பு திருநந்தாவிளக்கு உட்பட்ட பலநிமந்தது

4. க்கும் . . . . . பாண்டியபுரத்தில் தென்கரையில் தேவதானமாக விடக் கற்பித்த நிலம் பத்து மாவுக்கு விட்ட பதினொன்றாங் கண்ணாற்றில் பெருங்காலுக்குக் கிழக்குத் திருமடைப்போக்கு இவ்வூர்படி இருபத்தோரடி கோலால் அளந்துவிட்ட நிலம் பத்து மாவும் இவ்வூரில் காணி ஆள்வாருடன் விளையுமா

5. . . . . உட்பட்ட தேவதானம்மாக விட்ட அளவைக்கு இந்நிலம் பத்துமாவும் தன் நான்கெல்லையும் திருச்சூலக்கல்லு நாட்டிக் குடுத்த அளவுக்குக் கற்பித்த மருசாதி மூட்டுகல நாள் ஒன்றுக்கு அஞ்சுபணம் தெண்டமாக செலவறுக்கும் படியும் கற்பித்த அளவுக்கு இம்மருசாதியாலே கல்லிலு

6. ம் [செம்பிலும் வெட்டிக்கொ]ள்க இப்படிக்கு இவை கஞ்சநென்மலி உடையான் அழகாரையான் காலிங்கராயன் எழுத்து யாண்டு உக்கு எதிராவது நாள் எயந துஷ்ய ஸ்வஸ்திஸ்ரீ

வைத்தியநாதசாமி கோயில் இடம் : கருவறை தெற்குச்சுவர்

இ.க.ஆ.அறிக்கை : 526/ 1926

1. ஸ்வஸ்திஸ்ரீ கோமாறவன்மரான திரிபு
2. வனச்சக்ரவதிகளெம்மண்டலமுங் கொ
3. காண்டருளிய ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்
4. டுவது அருளிச்செயல் ஸ்ரீ வில்லிபுத்தூர்
5. உடையார் திருக்கற்றளீஸ்வரமுடைய நாயனார் கே[ா*]
6. யிலிற்தானத்தாற்கு இவ்வூர் ஸ்ரீ பராங்குசப் பே
7. ரேரியிலே இந்நாயனார் தேவதானமான நிலத்
8. திலே இக்கோயிலுக்குத் திருப்பணிப்புற
9. மாக இருபத்தேழாவது ஆனிமாத முதல்
10. இறையிலியாக ஊர்ப்படி ஐஞ்சுமா நில
11. ம் குடுத்தோம் இப்படிக்கு சந்திராதித்தவ
12. ற் செல்வதாகக் கல்லிலும் செம்பிலு
13. ம் வெட்டுவித்துக் குடுத்தத் திருப்பணிப்
14. புறமாக இவ்வோலை கண்டபொழுதே இந்
15. நிலம் ஆண்டார் வாமதேவர் வசம் நீ
16. க்கிக் குடுக்க இவை கோமளூருடையான் எ
17. முத்து நிலம் ஐஞ்சு மாவுக்கு துஞ்ஞ ஸ்வ
18. ஸ்திஸ்ரீ II

வைத்தியநாதசாமி கோயில் இடம்: கருவறை தெற்குப்பக்க இடைநாழி

இ.க. அறிக்கை : 530/ 1926

1. ஸ்வஸ்திஸ்ரீ கோஜடிஇவ உறான திரூப்வனச்சூவத்திகள் ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு உ(ரு)ள எதிர் சா(ரு)

2. வைகாசி மீ உ அபரபக்ஷத்து திரூயோஉசியும் புதன்கிழமையும் பெற்ற ஸிஉ சீஷஉத்து நாள் திருமல்லிநாட்டு

3. சீவில்லிபுரத்தார் உடையார் படிக்காசு வைத்தருளிய நாயனாற்கு நாம் கைற்பித்த திருவற்தசாம பூஜைக்கு

4. அமுதுபடி நாநாழிக்கும் கறியமுது, நெய்யமுது சாத்துப்படி திருவிளக்கு திருமாலை திருப்பரிவட்டம் பல நித்தநியமங்

5. களுக்கும் ஏழாவது பகர நாமுதலுக்கும் நாம் விட்ட செங்குடிநாட்டு பற்றில் வடகோம்பி தென்தேசம் விதத் திசையன் குளம்

6. இவமைக்கு பெருநான்கு எல்கையாவது கீழெல்லை போத்தநேரியில் நிந்த கல்லுக்கும் மேற்கு தென்எல்கை ஆவது ரா . . . . . இடை

7. க்கு வடக்கு மேல்எல்கை வாலபுரளிப்புரவுக்குத் தீட்டு வடஎல்கை கலியக் கோட்டை . . . . . .

8. கு ஆக இப்பெருநான்கு எல்லைக்கு உட்பட்ட நஞ்சை, புஞ்சைக்குத் . . . . . தாடித் தோட்டம் பட்டடை மற்று

9. ம் எமப்பேர்ப்பட்ட ஸஉஸ்த வ்ராதிகளும் இரண்டாவது . . . . . மதிலுக்கு தேவதானம் ஆகக் கையாண்டு கல்லிலு

10. ம் செம்பிலும் வெட்டிக் கொள்க. . . . . சொல்லிக் கற்பித்த இம்மரியாதியாலோ இவ்வோ

11. லைப்படியே கொண்டு இன்னாள் முதல் இப்பற்று தேவதானம் ஆகக் கைய்யாண்டு கொண்டு

12. பூசையும் நடத்திப் போகவும் பாற்க இவை மாதங்குற உடையான் எழுத்து ©

(இக்கல்வெட்டில் வடக்கு, தெற்கு போன்றவற்றில் வரும் ''க்கு'' ''(மீ)'' என்னும் குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது இது போல ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள பல கல்வெட்டுகளிலும் 17,18ம் நூற்றாண்டின் ஓவியங்களிலும் பயன்படுத்தப் பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது)

பெருமாள் கோயில் இடம் : கருவறை வடக்குச் சுவர்

இ.க.ஆ. அறிக்கை - 533/1926

1. ஸ்வஸ்திஸ்ரீ ப்ரஸாதஞ் செய்தருளின திருமுகப்படி கல்வெட்டு சேனை முதலியார் கோயிலுக்கு . . . . . மேற்கு சுகராஸித்தியால் வெட்டின கல்வெட்டு இக்கோயிலில் [புறச்சாந்த]னையாலே மறைகியால் இதுபடியெடுத்துக் கல்வெட்டினபடி த்ரிஸப் வனஸ்க்ரவத்திகள் கோனேரின்மைகொண்டான் திருமல்லி நாட்டு ப்ரஹ்மதெயம் ஸ்ரீ வில்லிபுத்தூரில் ப்ராஹ்மணர் பேரயூர் பரமபடுகை இவ்வூர் ஸமஹரித்து வேதஸா[ஸ்த்ர*]ம் போய் பாதாதாக . . . . . மருங்கும் சதுர்வெதி ஸட்டர்கள் பேர் நூற்றெட்டுக்குப் பங்கு நூற்றெட்டும் வேத வ்ர

2. த்தி பங்கு நாலும் ஸ்ரீ ராமாயணவ்ரத்தி பங்கு ஒன்றும் மஹாபாரத வ்ரத்தி பங்கு ஒன்று சோதிஷவ்ரத்தி பங்கு [ஒன்றும்] வைதவ்ரத்தி பங்கு ஒன்றும் பணிசைவ்ரத்தி பங்கு ஆறும் ஆகப் பங்கு நூற்றிருபத்துரண்டுக்கு ஸ்ரீ வில்லிபுத்தூர் நான்கெல்லைக்கு உட்பட்ட நன்செய் புன்சைகளுக்கு செய்யும் நத்தமும் நத்தப்பாடும் தோட்டமும், தோட்டக்கொல்லைகளும் குளமும், குளப்ப[ரப்பும்] கிணறுகளும் மற்று மெற்பேற்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளும் மிருபத்துமூன்றாவது நாள் எண்பது வரை தேவதானம் திருவிடையாட்டம் பள்ளிச்சந்த வடபெருங்கோயில்

3. உடையார்க்கும் சூடிக்கொடுத்தருளிய நாச்சியாருக்கும் பெரியாழ்வாருக்கும் இவ்வூர் ப்ராஹ்ம[ண*]ர் பக்கல் விலைபடிமாஞ் . . . . . யுங் கொண்டும் தாநம் பெற்று முண்டானவை நீக்கி நன்செய் புன்செய் கருஞ்செய் நத்தமும் நத்தப்பாடும் தோட்டமும் தோட்டக்கொல்லைகளும் குளமும் குளப்பரிப்பும் கிணறுகளும் மற்றுமெப்பேர்ப்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளும் முன்னுடையாரும் விடம் பெருமு மூலம் முதலில் தவிர்த்து ஒருதெ[த*]ாரு புரவாக்கி வடபெருங்கோயிலுடையானுக்கு சூடிக் கொடுத்தருளிய நாச்சியார்க்கும் பெரியாழ்வார்க்கும் திருவுடையாட்டமாக்கு நம் பேரால் சே

4. ரனை வென்ற பாண்டியச் சதுர்வேதிமங்கமென்று ஸ்ரீ ரமம் வைக்கப் பெற வேணுமென்று மிப்படி வைக்குமிடத்து ப்ராஹ்மண காராண்மையும் வடபெருங் கோயிலுடையானுக்கும் சூடிக் கொடுத்தருளிய நாச்சியார்க்கும் பெரியாழ்வார்க்கும் கடமையந்தராயமாக பொன்வரி, வாசல்பேறு லாஞ்சனைப்பேறு வெட்டிப்பாட்டம் ஸங்கிவிக்ரஹப் பேறு தறியிறை காசு செக்கிறை, தட்டொ லிப்பாட்டம் இடையன்வரி இனவரி மற்று மெற்ப்பேற்பட்ட ஸமஸ்த ப்ராப்திக்கு மிடிக்கப்பெற வேணுமென்று காலிங்கராயன் சொன்னமையால் திருமல்லிநாட்டு ப்ரஹ்மதெயம் ஸ்ரீ வில்லிபுத்தூர் ப்ராஹ்மணர் பேரையூர் பாழ்படுகையால் இவ்வூர் ஸமஹரித்து வேதமர்யாஸ்த்ரமும் போல் பர்யகாதகளாயாருக்

5. கும் சதப்வெதி ஸட்டர்கள் பேர் நூற்றெட்டுக்குப் பங்கு நூற்றெட்டும் வேஉவ்ருத்தி பங்கு நாலும் ஸ்ரீ ராமாயணவ்ருத்திபங்கு ஒன்றும் மஹாபாரத வ்ருத்திபங்கு ஒன்றும் ஜோதிஷவ்ருத்தி பங்கு ஒன்றும் வைஉவ்ருத்தி பங்கு ஒன்றும் பணிசை வ்ருத்தி பங்கு ஆறும் . . . . . நூற்றிருபத்திரண்டுக்கும் ஸ்ரீ வில்லிபுத்தூர் நான்கெல்லைக்குமுட்பட்ட நன்செய் புன்செய் கருஞ்செய் நத்தம் நத்தப்பாடும் தோட்டமும் தோட்டக்கொல்லைகளும் குளமும் குளப்பரப்புரம் கிணறுகளும் மற்றுமெப்பேற்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளும் இருபத்து மூன்றாவது நாள் எண்பது வரையுள்ள தேவதான திருவிடையாட்டம் பள்ளிச்சந்தம் வடபெருங்கோயில் உடையானுக்கும் சூடிக் கொடுத்தருளி நாச்சயாருக்கும் பெரி

6. யாழ்வாருக்குமிவ்வூர் ப்ராஹ்மணர் பக்கல் விலை கொண்டும் தாநம் பெற்று முண்டானவை நீக்கியுள்ளன நீக்கியுள்ள நன்செய் புன்செய் கருஞ்செய்யும் நத்தமும் நத்தப்பாடும் தோட்டமும் தோட்டக்கொல்லைகளும் குளமும் குளப்பரப்பும் . . . . . மற்றுமெப்பேற்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளுமுன்னுடையாரும் பழம் பெரு . . . . . முதலில் கழித்து பெயரொடு புரவாக்கி வடபெருங் கோயிலுடை யானுக்கும் சூடிக் கொடுத்தருளிய நாச்சியாற்கும் சேரனை வென்ற பாண்டியன் சதுர்வேதிமங்கலமென்று ப்ராமம் வைக்கப்பெற வேணுமென்று சொன்னபடியாலே இப்படி வைக்குமிடத்து ப்ராஹ்மண

7. ர் காராண்மையால் வடபெருங்கோயில் உடையானுக்கும் சூடிக் கொடுத்தருளிய நாச்சியார்க்கும் பெரியாழ்வார்க்கும் நம் கடமையந்தராயம் பொன்வரி விநியோகமும் வெட்டிப் பாட்டமாக . . . . திருவாழிக்கல்லுநாட்டி சந்த்ராதித்தவக் செல்லக் கடவதாகக் கல்லிலும் செம்பிலும்வெட்டிக் கொள்கவென்று . . .

பெருமாள் கோயில் இடம்: கருவறை வடக்குச் சுவர்

இ.க.ஆ. அறிக்கை - 535, 536/ 1926

1. ஸப்ஹஸ்தப் ஸ்வஸ்திஸ்ரீ மொஜடிஇ வஜ்ஜராந த்ரிஹப்வனச்சக்ரவத்தி கோநேரின்மை கொண்டான் ஸ்ரீ பெருமாள் குலஶேவரதெவற்கு யாண்டு உய ஆவது எதிர் விபவ ஸம்வக்ஸரத்தப் உக்ஷிணாயனத்தப் ஸிம்ஹநாயற்று யரு உ [பத்ய*]மியும் ஸப்ருவாரமும் பெற்ற அஸ்வதி நக்ஷத்திரத்தினாள் திருமல்லிநாட்டு ஸ்ரீ வில்லிபுத்தூரில் னயினார் வடபெருஞ்கோயில் பள்ளி கொண்டருளிய பரமஸ்வாமிகளுக்கும் சூடிக் கொடுத்தருளிய னாச்சியார்க்கும் நம் பிறந்தனாள் திருவோணத்திருநாள் வடபெருங்கோயில் பள்ளி கொண்டருளிய பரமஸ்வாமிகள் மாஸந்தோறும் தலைசம

2. . . . . திருமஞ்சநங்கொண்[டநா]ற்க்காலை . . . . . அமுதுபடி தேங்காய் தஸீர் . . . . தேங்காய் க நெய்யமுது உழக்கு திருமஞ்சனத்துக்கு எண்ணைக் . . . . . உழக்கு குழமடக்குச் சாத்துப்படியும் . . . சாத்துப்படிக்கும் சாத்துப்படி . . . . பரஅ . . . பரிவட்டத்துக்கு சேலை உ இலையமுது நஈ அடைக்காய் உஈ சிறப்புக்கு அமுதுபடி . . . கறியமுது யகஈ உப்பமுது ச மிளகமுது உ நெய்யமுது னானாழி தயிரமுது பழவமுது திருவீதியிலெழுந்தருளுவதற்கு சாத்துப்படித் திராயத்துக்கும் . . . . . நக . . க்கு நெய்னாளு மரக்கால் திருவீதியிலெழுந்தருளிக் . . . . . உண்டாந சுவாஜிரங்களுக்கு . . . . . .[ெ*]வந்திரங்களுக்கும் ஆக இவ்வ . . . . . ப்படியே மாதந்தோறும் நடக்கும் படிக்கு னாம் விட்ட திருவிடையாட்டமாவது திருமல்லிநாட்டு மேல்பிடாகை வாழைக்குளமுட்பட்ட யந்நாக்கு பெருனான்கெல்லை . . வது கீழெல்லை படிக்காசு வைத்தானின் நக்கலுக்கும் கோயிற்குளத்துக்கும் காயாகுடியாற்றுக்கும் மேற்கு தெந்நெல்கை ஆதியூர் வடகடைக்கோம்புக்கும் வெங்காநல்லூர் எல்லைக்கும் . . . . . வடக்கு கருமலைக்கு கிழக்கு வடவெல்கை மேலைப்பார்ப்பான் குளத்துக்கும் தெற்கு ஆக இன்னாந்கெல்லைக்குட்பட்ட வாழைக்குளமும் இதுக்குட்பட்ட புநக்குளங்களும் ஆக இதன் கீழுண்டான பழவல புது . . லந்த தஞ் . . . . . இதயத் தலைத்தட தன்படுபொழறை மின்படுபள்ள . . . [னா]க்கிந கிணறு மேன்னோக்கின மரமும் . . . நஞ்செய் புன்செய் மாவடை மரவடை நித்ய நிக்ஷெபஜஇ பஷாணத்து கூடி க்ஷ

3. ணாமாதி ஸிஷ்டாஸா ஷ்டாகும் நப்பட்ட சுஷஹொமஜெ . . . . . ஜஸ்வாதி . . . ருக்கும் ணாங் கொள்ளும் கோமுறையாயுள்ள தெல்லாந் தவிர்த்து இன்னாள் முதளுக்கு மாநாமா க அ ஸ்ராக்கவ . . . சிலையிலும் வெட்டிக் கையாண்டு கொள்ளவும் பாற்க இவை வேரூடையாந எழுத்து ஸெதக ஸ்ரதாந ஹொஜ்ஜநகர ஸ்ராஹ்ய தெவஹாத தாவ ப்தஸரா உடைஹஇ ||- ஸ்வஸ்திஸ்ரீ மொஜடிஇவஜ்ஜராந த்ரிஹுவனச்சக்ரவத்தி கோநேர்மை கொண்டான் பராக்ரம பாண்ட்ய தேவற் தேவநாரான குலஶேகர தேவர்கு சகாஸ்தஇ சூசஈசுயருல் மேல் செல்லா நின்ற . . . ஸம்வக்ஸரத்தப் உக்ஷணாயநத்து ஸரம ருதுவில் துஇாரவி யஅ பூவ்வபக்ஷத்து ப்ரமமையும் ஸுக்ரவாரமும் ஸௌ . . . யொதமும் ஸிம்மதாண . . . பெற்ற விசாகத்து [நாள்] திருமல்லினாட்டு ஸ்ரீ வில்லிபுத்தூர் சூடிக்கொடுத்தருளிய னாச்சியாற்க்குத் திருவிடையாட்டமாக கொடுத்த . . . . . .

பெருமாள் கோயில் இடம்: கருவறை தெற்குச் சுவர்

இ.க.ஆ. அறிக்கை - 540/ 1926

1. அருளிச்செயல் திருமல்லிநாட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியார் சூடிக் கொடுத்தருளிய நாச்சியார் கோவில் தான உடையத்தார்க்கு செயது[கநாட்டு சங்கரநாராயணன் வென்று மண்கொண்ட பூதல வீரஸ்ரீவீர உதைய மார்த்தாண்ட வன்மர் திருப்பாப்பூர் மூத்தவராய நம் திருமல்லிநாட்டு நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் நித்தல் திருவாராதனம் கொண்டு எழுந்தருளியிருக்கும் நாச்சியார் சூடிக் கொடுத்தருளிய நாச்சியார்க்கு வீரமார்த்தாண்டன் சந்திப்பூசையும் மாதந்தோறும் சோதித்திருநாளுக்கு சிறப்பும் திருமஞ்சனமும் நடத்தி எழுந்தருளு பிறப்படுகிற வகைக்கும் எழுநூற்று ஒரு பதாயாண்டு நாள் முதலுக்கு திருவிடையாட்டமாக விட்ட சத்திப்பள்ளம் பிராந்தக நல்லூர் உள்ளிட்ட பற்றுக்கு பெருநான்கு எல்லை ஆவது மானாமங்கலத்துக்கு புரவுக்கு கிழக்கு ஆற்றுக்கு தெற்கு ஆழாழ்காலுக்கு மேக்கு ஆற்றுக்கு வடக்கு இந்நான் கெல்லைக்குள் உட்பட்ட பற்றில்[முன்]

2. கொண்டு மற்றும் நாம் கொள்ளும் கோமுறைபாடு எப்பேற்பட்ட ஸமஸ்த ப்ராப்தி[களை*]யும் திருவிடையாட்டமாக்கி கையாண்டு கொண்டு வீரமார்த்தாண்டன் மடமான திருவேங்கடத்தான் மடத்தில் நாளொன்றுக்கு முப்பத்து மூன்று ப்ராஹ்மணற்கு நமஸ்காரத்துக்கும் ஜீயாள் ஸ்ரீவைஷ்ணவற்கள் அமுதுசெய்யும் படியும் சந்த்ராதித்தவக செல்வதாகவும் கல்லிலும் செம்பிலும் வெட்டி நாம் கற்பித்த வண்ணமே வீரமார்த்தாண்டன் சந்திப்பூசையும் சோதிநாள் சிறப்பும் திருமஞ்சநம் நடத்தி எழுந்தருளி பிறப்படுகிற வகைக்கும் திருவிடையாட்டமாக கையாண்டு போதும்படியும் மேற்படி கொல்லம் எளக ம் ஆண்டு ஆடி மீ யசு பூவ்ருபக்ஷத்து பஞ்சமியும் புதனாலும் பெற்ற உத்திரத்து நாள் நாட்டாற்றுப்போகரு வள்ளியூரில் ஸெவஸிவாமணி ஸட்டந அகத்தில்

3. நாம் விடாயிருக்கக் கற்பித்த வளவுதூர் தாங்களும் இந்நாள் முதல் இ[த்*]தரகு பிடிபாடாக இவ்வகைப்படியே கையாண்டு கொள்ளும்படியும் பாற்க இது தரவாகும் இவை இப்படிக்கு இராமன் இராமன் எழுத்து

பெருமாள் கோயில் இடம்: மண்டபத் தெற்குச் சுவர்

இ.க.ஆ. அறிக்கை - 548 / 1926

தெ.இ.க. தொகுதி XIV எண். 91

1. ஸ்வஸ்திஸ்ரீ சோழன்றலைக் கொண்ட கோவீரபாண்டியற்கு பதின்மூன்று இதனெதிராண்டு திருவழுதி வளநாட்டு பெருங்குளத்து ஸத்ரஸயங்கர மூவேந்த வேளாநாயின வேளான் பரஞ்சோதிக்கு மல்லிநாட்டு ப்ரஹ்மதெயம்

2. வில்லிபுத்தூர் உஹாஸஹெயோம் கூட்டஞ்சார்த்திக் கூட்டக் குறைவின்றித் திருக்கற்றளி உஹாதெவர் கோயிலிற் கூடியிருந்து இவ்வூர் ஜலஸயநத்துக் கிடந்தருளின பரமஸ்வாமிக்குமிவ்வூர்த் திருக்கற்றளி ஈஸ்வர ஸட்டாரகர்க்கு மற்று

3. மிஸ்ரநங்களிற்றான் வேண்டுந் யஜ்ஞஞ் செய்துகொள்ள இத்தேவர்களுக்காக இறையிலி விற்றுக்குடுத்த ஸூமியாவது எங்களுக்குப் படாகை மாறப்புத்தூர் இரம்பாட்டமும் கொடிவீடுமுப்பட வரையிற் சுற்று முற்று முண்ணில மொழி

4. வின்றி விற்றுக்குடுத்தோம் உஹாஸஹெயோம் இதனுக்குக் கீழெல்லை மணிகூடத்தெல்லையால் மேலுந்தென்னெல்லை ஸ்ரீ காந்தமங்கலத்துக்கு எல்லையில் மேலும் வடக்கு மேலெல்லையில் ஸ்ரீ காந்த மங்கலத்துக் குலவாய்க்கு

5. த்திர நிதி எல்லைக்குங் கிழக்கு வடவெல்லை ஆற்றாத் தெற்குமிவ்வியைந்த பெருநான்கெல்லையிலகப்பட்ட ஸூமியும் கிணறுகளும் குளமும் குளத்தலையும் குடியிருக்கைகளும் காவுங்

6. கைந்நடு மரமும் பனையும் புற்றுந் தெற்றியும் மின்படு பள்ளமும் தென்படு பொதும்பும் கூதமும் மற்றும் உடும்போடி ஆமைதவழ்ந்ததெப்பேர்ப்பட்டதும் எம்மிலிசைந்த விலைப்பொருளு

7. ம் எற்றைக்குமிப்பூமிக்கு வேண்டுமிறை த்ரவ்யமுங் கையிலேயாகக் கொண்டு என்றுமெற்ப்பேற்ப்பட்ட இறையும் எச்சோறும் வெட்டிவேதினையும் கொள்ளாதிதாகவும் இப்பரிசியைந்து விற்றுக் குடு-

8. த்தோம் வில்லிபுத்தூர் உஹாஸஹெ ஸத்ரஸயங்கர மூவேந்த வேளாநாயின வேளான் பரஞ்சோதிக்கு இப்பரிசின்னிப்பவிரண்டு சீ கோயிலுள் தான் வேண்டுந் யஜ்ஞஞ்செய்து ஸ்ரூலேவெ செய்து கு

9. டுத்தா . . . னிலாரெனும் பூமியுள்ளிட்ட தேனுமுடையமென்றிவ் வெல்லைகளிலகப் பட்டன எப்பேர்ப்பட்டனவுந் தடுத்து சுநாஸவித்துக் கொள்வாரில் தனிச்சு விவ்ரம பண்ணியாரைப் பேரால் யரு பொன்

10. னுஞ் சபையோமாய் பண்ணில் நூய செஞ்நூற்றப்பொன்னுந் தாங்கள் வேண்டுங் கோயிலேய் ஸ்தூஜனங்களு தேவர்களு தாநிகர் முதலாக[வும்] தான்தாம் வேண்டும் கோவில் தண்டமிட்டால் இட்ட தண்டமும் . . .

11. ச்சிலி இறுத்துப் பிற்றையும் இப்படி அனுபவித்துக்கடவோமாக யிசைஞ்சு இம்மா

12. றப்புத்தூர் குளத்தின் வடகடை மேக்கு நோக்கி மித்திரன் னிதிக் குளத்துக்கு மேலை ஏரிக்[குள

13. ங்கரை*] . . . கொள்வதாகவும் குளத்தி . . . அகப்புல் புதுக்கவும் . . . ட்டுக்குடுப்பதாகவும்

14. இசைஞ்சு அகரயநூ மங்கலமென்று பேரிட்டு இறையிலி விற்றுக் குடுத்தோம் வில்லிபுத்தூர் மகா ஸபையோம்

15. சத்திருபயங்கர மூவேந்த வேளானான வேளான் பரஞ்சோதிக்கு III

பெருமாள் கோயில் : இடம்: த்வஜஸ்தம்பத்தின் மீது

இ.க.ஆ. அறிக்கை - 559/ 1926

1. சகாப்தம் ௬௬௨௰௨ மேல் செல்லா நின்ற விஷு ௵ ஆவணி ௴

2. ௨௰௮ கருத்தாகளுக்குப் புண்ணியமாக வடபத்திரசாகி

3. ௵ கொடிமரம் திருத்தேர் பிரதிட்டை காலக்குட்டி

4. யாபிள்ளை குமாரன் திருஞானசம்பந்தப்பிள்ளை உபயம்

மேற்படி த்வஜஸ்தம்பத்தின் மீது தாமிரத்தகடு போர்த்தப்பட்டுள்ளது. அதனில் கீழ்க்காணும் செய்தி உள்ளது.

1. சஹாப்தம் ௬ . . .

2. [கொ]ல்லம் விஷு ௵ ஆவணி ௴ ௰௮ ௨ கருத்தாக்களுக்

3. கு புண்ணியமாக வடபத்திறசாகிக்கு கொடி

4. மரம் ப்றதிஸ்ட்டை காலகுட்டியாபிள்ளை மகன் தி

5. ருஞானசம்பந்தம் பிள்ளை உபயம்

பெருமாள் கோயில் இடம்: முதல் கோபுரத்திலுள்ள பாடற் கல்வெட்டு

இ.க.ஆ. அறிக்கை : 560 / 1926

1. ''இருக்கோது மந்தணர் சூழ்புதுவாபுரியெங்கள்பிரான்

2. மருக்கோதை வாழும் வடபெருங்கோயில் மணிவண்ணனார்

3. திருக்கோபுரத்துக் கிணையம் பொன் மேருச்சிகரமொன்றே

4. பருக்கோதலாமன்றி வேறுவமானப் பணிப்பில்லையே

- பெருந்தொகை பக்.10

11. பெருமாள் கோயில்

இடம் : தெற்கு பக்க நுழைவாயில்

இ.க.ஆ. அறிக்கை : 561/1926

1. . . . . இத்திருமதில் சக சூசாருய அ . . . . . .

2. கோஜடிஉ வ2ூரான தி ஹு வன ச்சூ வதி ூ கோனேரின்மை

3. கொண்டான் இறந்தகாலம் எடுத்த பெருமாள் குலசேவ ப ெவர்

4. கோ2ணூ ாஉன் திருமதிள் கைங்கரியம்

பெருமாள் கோயில்

இடம்: மேற்கு கோபுரம்

இ.க.ஆ. அறிக்கை : 562 / 1926

1. சகாவ்ழ சூள ாருய ள இதன் மேல் செல்லா நின்ற செய வ ை தை மீ க . . .

2. இக்கோபுரம் ததியாராதநழ திருமலையப்பங்கார் உபையம்

பெருமாள் கோயில்

இடம்: ஆண்டாள் சன்னதி கருவறை வடக்கு சுவர்

இ.க.ஆ.அறிக்கை : 563/ 1926

1. ப ீ ஹஉஸ்ரீ வனதசு ஸ்ரீ விஷ்ணுசித்த ஹீசு ஜமதக ாமந . . . ஸ்ரீ ப ாமராஜஸ்ரு தெ2உ தாயாஉவ ப ாஸநழ ஸகாவ்ழ சூநள சயரு ன் மேல் செல்லா நின்ற நங்குமாரன் குலசேகர தேவனுக்கு யாண்டு உ வது கந்நி ஞாயற்று பத்தொன்பதாந் தியதியும் அமரபக்கத்து உஸரியும் ப ர் கூ வாரமும் பெற்ற ஆயில்யத்து நாள் ஹாஷ்வாஜ மொத்து வொயாயந

2. ப ப்த்து சாத்தனூர் ஸ்ரீ கூ ஷ்ண ஹ டனுக்கு திருமல்லிநாட்டு சீவில்லிபுத்தூர் சிபராங்குசப் பேரேரியில் சிவிலவன் மடைப்போக்கில் மேல் கட்டளையில் இவனுக்கு ான கிளாயியூம்புக் குடுத்த நிலம் ஒருமா இன்னிலம் ஒரு மாவும் நம்முடைய அடுக்களைப் பிறத்தோடே சேத்துபட்டு நம்முடைய செல[வுக்கு]

3. குடுக்க வேணும் என்று நங்குமாரன் குலசேகரதேவன் நம்முடன் சொல்லுகை

யில் நம்முடைய அடுக்களைப்பிறத்தோடே சேத்து இன்னிலம் ஒருமாவும் தான இறையிலியாகக் கையாளும் படி கற்பித்த அளவு குடும் மரியாதியாலே ஆ சந்திராஜித்த வரைத்த ப்ரவேசமே இன்னிலம் ஒருமாவும் ஜான

4. இறையிலியாகக் கையாண்டு போகவும் இவை விஷ்ண சித்த ப்ரியது எழுத்து

ஆண்டாள் சன்னதி இடம்: கருவறை தெற்குச் சுவர்

இ.க.ஆ. அறிக்கை : 568/ 1926

1. ஸ்ரீஸ்ரீ நாச்சியார் சூடிக் கொடு
2. த்தருளிய நாச்சியார் ஸ்ரீ ஸ்ரீஸ்ரீ சு
3. ந்தரத் தோளுடையார் ஸவ்யஸாசி
4. ஸாஸ்வதி ஸாணாயிராஜா பிள்ளை யஜ்ஜி

ஆண்டாள் சன்னதி இடம்: கருவறை வடக்குபக்கச் சுவர்

இ.க.ஆ.அறிக்கை : 573 / 1926

1. ஸ்வஸ்திஸ்ரீ ஸகாப்தம் சூநான் மேல் செல்லா நின்ற துன்முகி வருஷம் வைகாசி ய உ ஸ்ரீமது மூவராய கண்டன் இராஜ"சர் கண்டன் மதியாத மன்னர் மணவாளன் சமரகோலாகலன் வீரகஞ்சுகன் புவனேகவீரன் பூபாலகோபாலன் பட்டமானங் காத்தான் ஸ்ரீமது திருமாலிருஞ்சோலை நின்றானான மாவலி வாணாதிராயர் குமாரர் சுந்தரத்தோளுடையரன் மழவராயர் மாதாக்கள் ஸ்ரீரங்கநாயகியார் கொடுத்த யஜ்ஞசாதனப் பட்டையம் திருமல்லிவளநாட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் நாச்சியார்க்கு . . . தருளிய . . . . . மார்கழி மாசத்தில் என்னுடைய குறை அறுப்புப் பூக்கொண்டு அருளும் படிக்கு திருப்பொன்னூசலும் உண்டு ஆக்கி இத்திருநாளுக்கு வேண்டும் அமுதுபடி கறியமுது சாத்துப்படி திருப்பரிவட்டம் திருமாலை திருவிளக்கு மஞ்சள் காப்பு உட்பட வேண்டும் நைவேத்யங்களுக்கும் அக்காரவடிசிலுக்கும் உட்பட்ட வகைக்கு நாயினார் எனக்கு அடுக்களைப்புறம் ஆகத் திருவுளம் பற்றி அருளின வீரநாராயண வளநாட்டுக்கு ராயூர் பற்றில் சொக்கன்

2. ஏந்தல் ஆன சுந்தரத்தோள் நல்லூர் நான்கெல்லையும் பூர்ணமையும் புதவாரமும் விசாகமும் பெற்ற புண்ணிய காலத்திலே திருமாலிருஞ்சோலை மலையில் தலையருவிக்கரையிலே அழகர் எழுந்தருளுகையில் ஸஹிதியிலே ஸஹிராணா உஉக

ஜாரராவூவ்வுமாகத் திருவிடை ஆட்டம் ஆக விட்ட அளவுக்கு இம்மரியாதியாலே சொக்கன் ஏந்தல் ஆன சுந்தரத்தோள் நல்லூர் பேராண் கெல்லைக்கு உட்பட்ட நஞ்சைய் புன்செய்யும் கீணோக்கின கிணறும் மேணோக்கிய மரமும் எப்பேற்பட்ட ஸஸ்தை ப்ரா . . . ருமலை . . . . . கஸ்தஹயிஆகக் கொண்டு . . . ஆன திருவிடை ஆட்டம் ஆகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கையாண்டு கொள்ளவும் ஶப்ஹஸ்தைப்

ஆண்டாள் சன்னதி இடம் : வடக்குச் சுவர்

இ.க.ஆ. அறிக்கை 576/1926

1. அருளிச்செயல் திருமல்லிநாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் நாச்சியார் சூடிக் கொடுத்தருளிய நாச்சியார் கோயிலில் தானமயத்தாற்க்குச் செயதுங்க நாட்டு சங்கரநாராயண வென்று மண்கொண்ட பூதல வீர வீரஉதைய மார்த்தாண்ட வர்மரான திருப்பாப்பூர் மூத்தவராய நாம் திருமல்லி நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவாராதனை கொண்டருளி இருந்தருளும் நாச்சியார் சூடிக்கொடுத்தருளிய நாச்சியார்க்கு வீரமார்த்தாண்டன் சந்திப் பூசையும் மாதம்தோறும் சோதிநாளுக்குச் சிறப்பமுதும் திருமஞ்சனமும் நடத்தி எழுந்தருளி புறப்பிடுகிற வகைக்கும் எழுநூற்று ஒருபதாமாண்டு கார்முதலுக்குத் திருவிடையாட்டமாக விட்ட சத்திப்பள்ளம் பராந்தகநல்லூருள்ளிட்ட பற்றில் முன்னாள் தேவதானந் திருவிடையாட்டம் தான ஸ்ரோஸாஹ உட்பட்ட வகை நீங்கலாகக் கைய்யாண்டு கொண்டு மற்றுங் த[ந்தி*]ரங் கொள்ளும் கோமுறைபாடு யெற்பேற்பட்ட ஸஸ்தை ப்ராவ்திகளும் திருவிடையாட்டமாகக் கையாண்டு கொண்டு வீரமார்த்தாண்டன் சந்திப்பூசை ப்ரஸாதம் உண்டாந்து

2. வீரமார்த்தாண்டன் மடமான திருவேஂகட ஜாஸந மடத்தில் நாளொன்றுக்கு முப்பத்துமூன்று ப்ராஹ்மணற்கு நமஸ்காரத்தப்க்கு . . . வைஷ்ணவர்கள் அமுது செய்யும் படிக்குஞ் சந்த்ராதித்த[வல்செல்*]வதாக கல்லிலுஞ் செம்பிலும் வெட்டி நாம் கற்பித்த வண்ணமே வீரமார்த்தாண்டன் சந்திப் பூசையும் சோதிநாளிச் சிறப்பும் திருமஞ்சனமும் நடத்தி எழுந்தருளிப் பிறப்பிடுகிற வகைக்கும் திருவிடையாட்டமாகக் கையாண்டு கொண்டு போதும்படி கொல்லம் எழுநூற்று ஒன்பதாமாண்டு ஆடிமாதம் பதினாராந் தியதி வப்வ்ருவக்ஷத்து பஞ்சமியும் புதனாட்டையும் பெற்ற உத்திரத்து நாள் நாட்டாற்றுப் போக்கு வள்ளியூரில் சிவப்பிராமணர் சைவசிகாமணி பட்டர் அகத்தில் நாம் விடாய் இருக்க கற்பித்த அளவுக்கு தாங்களும் இன்னாள் முதல் இத்தரகு பிடிபாடாக இவ்வகைப்படியே கைய்யாண்டு கொள்ளும் . . . . படியும் பாற்க இது தரவாகும் இவை இப்படிக்கு இராமன் இராமன் எழுத்து ஶப்ஹஸ்தை

ஆண்டாள் சன்னதி இடம்: மண்டபத் தெற்குச் சுவர்

இ.க.ஆ. அறிக்கை : 583/ 1926

1. ஸ்ரீ ஸூக்தி நாச்சியார் சூடிக் கொடு
2. த்தருளிய நாச்சியார் சஹ்ரஸ்ரணம்
3. சுந்தரத் தோளுடையார் ஸாவது ஸா
4. ஹஸ்தி பாணாயி

ஆண்டாள் சன்னதி இடம் : மண்டபத் தெற்குச் சுவர்

இ.க.ஆ. அறிக்கை : 584/ 1926

1. ஸ்ரீ ஸூக்தி நாச்சியார் சூடிக் கொடுத்தருளிய
2. நாச்சியார் ஸஹஸ்ரணம் சுந்தர
3. த் தோளுடையார் ஸாவது ஸாக ஹ
4. ஸ்தி வாணாயி ராஜா

ஆண்டாள் கோயில் தேரின் கயிறு கோக்கும் வளையத்தில் உள்ள எழுத்துகள்

1) இது ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் க்ருஷ்ணயஜுன் மேல் செல்லா நின்ற கொல்லம் க்ஷயகூம் ஆ செளமிய ஆண்டு ஆவணி மீ குருவாரமும் .....

2) திரையோதெசியும் உத்திராட நட்சத்திரமும் கூடின சுபையோக சுபதினத்தில் ..... பெற்ற திருநாள் ஆண்டாள் திருவுள்ளம்.....

3 ..... காகம்கெ ..... ம் பட்டர் சுவாமிகள் கயாபதி .....

4) ஆண்டாள் சன்னதிக்கடப்பட வச்சது" என்று சுட்டுகிறது.

திருத்தேர் மேல் கலசம் போல் வைக்கப்படும் குடத்தில் உள்ள எழுத்துகள்

"நாச்சியர் திருத்தேர் கொடம் வானமாமலை பட்டர்பிரான் ஜீயர் கயிங்கரியம் க்ருஷ்ணயரும் ஆ ஆவணி மீ ந உ உ தூக்கிக் கண்டதுபடி சாய துல்யம் ஆழ்வார் திருநகரியில் வாற்ப்பு".

1) அழகர் தெய்வச் சீலை
இப்பெருமாள் சதாசேவை

2) அலங்காரவல்லி
யார் திருமாலிருஞ்
சோலை ஹாஸி சதா
சேவை

2. நாட்டுப்புறப் பாடல்கள்

நந்தவனம் காவல் காக்கும் இராமசாமி நாயக்கரின் பாடல் வரிகள் நாட்டுப்புறப் பாடல்களாக நமக்கு மகிழ்வைத் தருகின்றன.

ஆடிப்பூர விழாவைப் பற்றிய பாடல்கள் இவை.

அ

மார்கழி எண்ணைக் காப்பு – ஆண்டாள்
மகிழும் திருமுக்குளமாட
மஞ்சள் பொடி எங்கும் கதம்பம்
வாரி முழங்குந் தாயே நீ வருவாயே!
ஜெகஜ் ஜோதி நீயே என்று மருள் புரிவாயே (ஜெகஜ்ஜோதி)

(வேறு)

திருவாடிப் பூரத்துலேய்
மங்கல வாரத்துலேய்
சிறுதுளசியிலேய் அவதரிச்சாயே!
ஜெகஜ்ஜோதி நீயே
யென்றுமருள் புரிவாயே

(வேறு)

பாவைக ளெல்லோருங் கூடி
மார்கழித் திங்களை நாடி
திருப்பாவை முப்பதும் பாடி
பாவை நோம்பு பூத்தி செஞ்சு

(வேறு)

பங்குனி மாசத்துலே
பவரனை உத்தரத்துலே
சீரங்க நாதனை மணங்கொண்ட தாயே
ஜெகஜ்ஜோதி நீயே யென்று மருள் புரிவாயே

வந்தாளும் வைகுண்ட வாசா சீ வரதனே! வெங்கடேசா!
வரத மந்திர நேசா செந்தாமரைப் பாதம் தந்தருளிய சபேசா
ஜகதளமதில் புகழ் திருமகாராசா (வந்தருளும்)

(வேறு)

உன்னையே துணையென்று நம்பினேன் – பிரகாசா!
உயர்ந்திடும் திருவண்ணாமலை ராசா! (செந்தாமரைப்..) (வந்தருளும்)

(வேறு)

கன்னிமாதம் சனிக்கிழமைகள் தோறும் கவலைகள் தீரும் உனதருள் தாரும்
உன்னிரு பாத மலரின் அடிதனில் உகுந்து உகுந்தருளும் .... (வந்தருளும்)

(வேறு)

எருகுல கம்பலன் தனிவளர் நேசா
எதுகுல கோபாலன் துதிமன்னவா
ஏழைக்கு அருளிறங்க வாரும் ... (வந்தாளும்)

* * *

13. துணை நூற்பட்டியல்

1. கல்வெட்டு இதழ் 11

2. நாலாயிர திவ்ய பிரபந்தம்

3. வைணவ வினா–விடை

4. ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்தல மகாத்மியம்

5. தமிழ் இலக்கிய வரலாறு – மது.ச.விமலானந்தம்

6. குரு பரம்பரை

7. திவ்விய சூரி சரிதம்

8. ஆண்டாள் பிள்ளைத்தமிழ் (1904)

9. ஆண்டாள் சந்திரகலா மாலை (1938)

10. மதுரை நாயக்கர் வரலாறு – அ.கி.பரந்தாமனார்

11. An Introduction to the study of Tamil Literature – M. Arunachalam

12. The Mother Goddess – N.N. Bhattacharya

* * *



கிளிக்கட்டு



சூடிக்கொடுத்த சுடர்க்கொடி - கி.பி. 14ம் நூற்றாண்டு - செப்புத்திருமேனி



ஆடவல்லான் - கி.பி. 11-ம் நூற்றாண்டு
(வைத்தியநாதசாமி கோயில்)



சுந்தரராஜப் பெருமாள் (மகாவிஷ்ணு) -
கி.பி. 15-ம் நூற்றாண்டு -
செப்புத்திருமேனி



ரதி



கருவறை வெளிப்புறச்சுவர்
வடபெருங்கோயில்



இராமாயண ஓவியங்கள் - கி.பி. 17-ம் நூற்றாண்டு



இராமாயண ஓவியங்கள் - கி.பி. 17-ம் நூற்றாண்டு



கோதை கோயில்



வடபெருங்கோயில்
திருச்சுற்றுமாளிகை



கோபால விலாசம்
சேரநாட்டுக்
கலைப்பாணியில்
அமைந்த மாத்தாலான
கூரையும்
மரச்சிற்பங்களும்